

# கட்டைவிரல்

**Kaddaïviral**

வசைஒழிய வாழ்வாரே வாழ்வார் இசையொழிய வாழ்வாரே வாழாதவர்.

தக்கார் தகவிலர்என்பது அவரவர் எச்சத்தாற் காணப்படும்,
குறள்

**இன்றைய தனிமரம் நாளைய தோப்பு**

விரல்:1 உருவம்-உள்ளடக்கம்-உத்தி முற்றிலும்மாறுபட்டது. பிரான்சில் பதிவுசெய்யப்பட்டது. காலம்:-01-06-2015

# அடையாளத்தைக் காப்பாற்றத் தவிக்குந் தமிழ்பேசும் மக்கள்!

சிங்களமக்களிடையே புத்தமதம் சிங்களமொழியூடாகப் பரவியதன் காரணத்தால், சிங்களமக்களின் உணர்வில் மொழியும் சமயமும் ஒன்றாகக் கலந்தன. இதனால், புத்தமதம் புத்துயிர்பெற்றது. சிங்களம்மூலம் கல்விகற்று சிங்களத்தில் உள்ள பண்டைய இலக்கியங்களையும், பாளிமொழியையும் படித்த சிங்களக் கலாச்சாரத்தின் பாதுகாவலர் எனக்கூறிக்கொள்ளும் புத்தபிக்குகள் மொழிப்பிரச்சினையில் மிகத்தீவிரமாகச் செயற்பட்டு அரசியலுக்குட் புகுந்தனர். சிங்களமக்கள் இவர்களைக் கடவுளாகக் கருதுவதனால், இலங்கை அரசியலைத் தீர்மானிக்கும் முக்கிய சக்தியாக விளங்கும் இவர்கள், சனாதிபதி சந்திரிக்காவின் தந்தையை, மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசியல் தலைவரைச் சுட்டுக்கொன்றனர். மேற்கூறியபடி பயங்கரவாத நடவடிக்கையில் ஈடுபட்டு, நாட்டில் பயங்கரவாதத்துக்கு அடிக்கல்நாட்டியவர்கள் யார் என்னுங் கேள்வி எழுகிறது.

ஒருநாட்டில் நிலவிவரும் வறுமையை முதலாகக்கொண்டு, மதம்சார்ந்த அரசியல்வாதிகள், தக்கதருணத்தில் அந்நாட்டுக்குட் புகுந்து, ஒடிந்த மனநிலையில் இருக்கும் மக்களை மதமாற்றம் செய்து, மதச்சட்டங்களை இம்மக்களின் மேல் திணித்து, சனநாயகக்குடியரசின் அரசியற் சட்டதிட்டங்களைச் சுக்குநூறாக்கும் நிகழ்ச்சியை நாம் தினமும் காண்கிறோம். இதன் உண்மைநிலையை, இன்று, இலங்கை அரசியலும் மற்றும் இதர நாடுகளின் அரசியலும் தெளிவுபடுத்துகின்றன. எனவே, அரசியலினுள் மதம்புகுவதையும் மதத்தினுள் அரசியல் புகுவதையும் வன்மையாகக் கண்டிக்கலாம்.

# தமிழகத்தில் தலைதூக்கும் வேற்றுமொழித் திணிப்பு?

மத்திய ஆசியாவிலிருந்து வந்த ஆரிய இன ஆளும்வர்க்கம் இந்தியாவை ஆக்கிரமித்தபோது உருவான மொழி சமஸ்கிருதம் (வடமொழி) எனவும், தமிழ் மொழிக்கு நிகரான பண்டைய செம்மொழி எனவும், வேதகாலத்தில், பண்டிதர்கட்கும் உயர்குடியினருக்கும் மட்டும் சொந்தமான பேசும் மொழியாக இருந்ததெனவும் கூறப்படுகிறது. சிறந்த அரும்பெரும் படைப்பாளிகளின் இலக்கியப் படைப்புகள் இம்மொழியில் இருப்பதுடன், கோவில்களில், கடவுளுக்கு மட்டும் புரியக்கூடிய பூசைமொழியாக இருப்பதாகவும் பதினான்காயிரம் மக்கள் மட்டும் இம்மொழியைப் பேசுவதாகவும் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இந்தியமொழிகளுக்கும், வேதங்கள், உபநிடதங்கள் போன்ற இந்தியாவின் அறிவுச் செல்வங்களுக்கும், இந்தியப்பண்பாட்டின் மூலவேர் சமஸ்கிருதம் என வேறோர் அறிக்கை கூறுகிறது.

இந்தியாவின் சுதந்திரத்திற்குப் பின் (1947), இந்தியா என்னும் நாட்டில் பல மொழிகள், இனங்கள், கலாச்சாரங்கள், மதங்களை உள்ளடக்கிப் பன்முகத்தன்மையுடன் 22 மொழிகள் தேசியமொழிகளாக அரசியல்அமைப்புச்சட்டத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. இதில் சமஸ்கிருதமும் ஒன்றாகும்.

1947க்குப்பின், வாஜ்பாய் தலைமையில் ஆட்சி அமைத்த பாரதிய ஜனதாக்கட்சி (கூட்டணி) இரண்டாயிரம் ஆண்டை சமஸ்கிருத ஆண்டாக அறிவிக்க முனைந்தபோது பல எதிர்ப்புகட்கு நடுவில் இத்திட்டம் கைவிடப்பட்டது. மீண்டும், 2014இல், பெரும்பான்மைப் பலத்துடன் மோடி தலைமையில் ஆட்சியமைத்துள்ள பாரதிய ஜனதாக்கட்சி, 07.08.14 – 13.08.14வரையிலான காலத்தை சமஸ்கிருதவாரமாக அறிமுகப்படுத்தியதைப் பலர் மதவாத அரசியற் கண்ணோட்டத்துடன் அவதானிக்கின்றனர்.

1947இல், சுதந்திர இந்தியாவின் நடுவண்ணரசு இந்திமொழித் திணிப்பை ஏற்படுத்த முனைந்தபோது, இதற்கு எதிராகத் தமிழ்நாடு கொந்தளித்தது. நாடெங்கும் போராட்டங்கள் வெடித்து, தீக்குளிப்புக்களும் ஏற்பட்டன. இதனால், இத்திட்டம் கைவிடப்பட்டது. 2014இல், மீண்டும், மோடியின் தலைமையில் பா.ஜ.க ஆட்சிக்கு வந்ததும் அரசுக்கோப்புகளிலும் சமூக ஊடகங்கள், வலையத்தளங்கள் அனைத்திலும் இந்திமொழியைப் பயன்படுத்த வேண்டி இந்திமொழித்திட்டத்தை வலியுறுத்தியுள்ளதாகத் தகவல். இந்நடவடிக்கையை எதிர்த்துத் தமிழ்நாடு உட்பட இந்திமொழி பேசாத மாநிலங்கள் எதிர்ப்பைத் தெரிவிக்க, இந்திபேசும் மாநிலங்களுக்கு மட்டும் இத்திட்டம் பொருந்தும் எனக்கூறி இது மாற்றியமைக்கப்பட்டுள்ளதாக மேற்கூறிய தகவல் கூறுகிறது.

’’கட்டைவிரல்’’ <<Kaddaïviral>>. பதிவு எண் – ISBN-978-2-9551728-0-3. EAN :9782955172803. Indicatif éditeur :978-2-9551728. 6, Rue de Paradis, Paris 75010, France. selvaddurai.thiviyanathan@orange.fr என்னும் முகவரியில் வசிக்கும் THIVYANATHAN Selvaddurai என்பவரால் உருவாக்கப்பட்டு, வெளியிடப்படுகிறது,
அனைத்துக் காப்புரிமைகள்– திவ்வியநாதன் செல்வத்துரை
வெளியீட்டகம் – THIVYA

## எண்ணுகிறேன் எனவே எழுதுகிறேன்

' ஆயிரந் துளைபோடும் இவ்வித்தையை அருச்சுனனுக்குத்தானே கற்றுக்கொடுத்தேன். ம்.....ம், இவ் வித்தையிற் கைதேர்ந்த இன்னொருவன் இங்கு உள் ளானா? இவனெப்படி இதைக் கற்றுக்கொண்டான்.' துரோணர் வேகமாகச் சிந்திக்கிறார். ' கூடாது, இரண்டு பேர் இவ்வித்தையில் நிபுணத்துவம் பெற்றிருப்பது நாட்டுக்கும் நல்லதல்ல, நமக்கும் நல்லதல்ல, எனவே ஒருவனை...' என்று முணுமுணுத்தபடி ஏகலைவனை நோக்கிச் செல்கிறார் துரோணர்.

' குருவே! வணக்கம், என்பெயர் ஏகலைவன். தங்களை மானசீகக் குருவாக ஏற்றுக்கொண்டு தங்களுக்குத்தெரிந்த அத்தனை வித்தைகளையுங் கற்றுள்ளேன். என்னைத் தங்களின் சீடனாக ஏற்று ஆசீர்வதிக்கும்படி விண்ணப் பிக்கிறேன்.' துரோணரின் காலில்விழுந்து வணங்குகிறான் ஏகலைவன்.

' ஏகலைவா! உன்னை என்சீடனாக ஏற்றுக்கொண்டேன். எழுந்திருப்பாயாக. சீடா! உன்னிடமிருந்து குருதட்ச ணையை எதிர்பார்க்கிறேன். ஆதலால், உனது கட்டை விரலைத் தட்ணையாகத் தருவாயாக.' கட்டைவிரலை தட்சணை கேட்கிறார் துரோணர்.

' கட்டைவிரல்தானே! இதோ இப்போதே கொடுத்துவிடு கிறேன் குருவே! ' கட்டைவிரலைவெட்டி துரோணருக் குத் தாரைவார்க்கிறான் ஏமாந்த சோணகிரி ஏகலைவன். வஞ்சகத்துரோணரின் வார்த்தையில் மயங்கி, அம்பு எய்து எதிரிகளை வெற்றிவாகைசூடும் கட்டைவிரலை இழந்து, தனது வீரத்தைக் குழிதோண்டிப்புதைத்து, தன்னை அழித்துக்கொள்கிறான் கட்டைவிரலால் மட்டும் கை யொப்பமிடத்தெரிந்த ஏகலைவன்.

போட்டி, பொறாமைகள் நிரம்பிவழியும் இன்றைய உலகில், ஒவ்வொரு மனிதனும், தான் வாழும் சமுதாயத்தில் தன்னு டைய இடத்தையும் தன்னுடைய வாழ்வையும் தேடிக் கொள்ள, காப்பாற்றிக் கொள்ளவேண்டுமானால் பலருடன் போட்டிபோட்டுப் போராடி வெற்றிபெற வேண்டியவனாக உள்ளான். கூடவே பல சவால்களை எதிர்நோக்கியு முள்ளான். சவால்விட்டு வெற்றிபெறுவதற்கு அறிகுறியாகக் கட்டைவிரலைக்காட்டுவது இன்று பழக்கமாகி விட்டது. எழுத்துத்துறையில் வெற்றிபெற எண்ணி நான்விடும் சவால்கள், என்னை எதிர்நோக்கிவரும் சவால்கள், வாழ்வை வெற்றிகொள்ள நான்விடும் சவால்கள், சுற்றி யுள்ளவர்களின் அவதூறுகள், கண்டனங்கள் யாவற்றிற்கும் விடையளிக்க, நான் நீட்டுவது கட்டைவிரலை. இக் கட்டைவிரலின் சில இடங்களில், தமிழ்மொழியைச் சாராத எழுத்துக்கள் (சமஸ்கிருத(லிபி) எழுத்துக்கள்) சேர்க்கப் பட்டுள்ளன. இந்நடவடிக்கை வலுக்கட்டாயமாகத் திணிக் கப்பட்டதல்ல. பிரெஞ்சு–சிங்கள மொழிகளில் உள்ள சொற்களை, பெயர்களைத் தமிழ்மொழியிற் படிக்கும் போதும், பேசும்போதும் கிட்டத்தட்ட அம்மொழி களுக்கேற்ற தொனியில் உச்சரித்தால், சிங்களமொழி, பிரெஞ்சுமொழி பேசுவோராற் புரிந்து கொள்ள முடியு மென்னும் நோக்கம் மட்டுமே.

பிரான்சிலிருந்து என்னால் எழுதப்பட்டு, பதிக்கப்பட்ட கட்டைவிரல், தனது சனநாயகக் கடமைகளில் ஒன்றான கருத்துப்பரிமாறல்மூலம் அறியாமை இருளைநீக்கி வெற்றிகொள்ளும் என்பதற்கு அறிகுறியாக மீண்டும் கட்டைவிரலைக் காட்டுகிறேன்.

கட்டைவிரலுக்காக
அன்புடன்
திவ்வியநாதன் செல்வத்துரை
THIVYANATHAN Selvaddurai
பிரான்ஸ் ,**France**

## இது என்றென்றும் இப்படித்தான்

சிங்களவர்கள் எல்லோரும் இனக்கலப்பின் வழித்தோன்றல் கள்.விஜயன்,காசியப்பன்,பராக்கிரமபாகுஉட்பட பல அரசர்கள் தமிழர்களே. சிங்களவர்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர் கள் இல்லை. (நாவலப்பிட்டி Y.M.M.A முஸ்லீம்இளைஞர் சங்கக்கூட்டத்தில். *1939*இல், ஜீ.ஜீ பொன்னம்பலம்.*4–1–2015* ஞாயிறுதினக்குரல். சரவணனின் கட்டுரையிலிருந்து.)

சிங்களஇனத்துக்கும் பௌத்தத்துக்குமுள்ள தொடர்பு பிரிக் கமுடியாதவாறு மிகவும் நெருக்கமானது. சிங்களவரின்றிப் பௌத்தமில்லை, பௌத்தமின்றி சிங்களவரில்லை. சிங்களவ ரின் இலக்கியம் பௌத்த இலக்கியம், சிங்களவரின் வர லாறு பௌத்தத்தின் வரலாறு, சிங்களவரின் கலாச்சாரம் பௌத்தத்தின் கலாச்சாரம், சிங்களவரின் கொடி பௌத்த சிங்களக் கொடியே. (சிங்களுனி புத்தசகன பேரகெனி– சிங்களவரே பௌத்தசமயத்தைக் காப்பாற்றுங்கள்–*1981*)

' சிங்களவரது மூதாதையினரான விஜயனின் பரம்ப ரையினர் ஆரியச்சிங்களவர், தமது தாய்நாட்டை விட்டுப் புறப்படு முன்னர் தமது இதயத்தாலும் சிந்தனையாலும் சிங் களவராய் இருந்தனர். இலங்கையில் புத்தம்புதிய நாகரீகத் தைத் தோற்றுவிக்கவும், வளம்படுத்தவுமே ஆரியப்பண்பாடு இங்கு கொண்டு வரப்பட்டது.' (புத்தகோயில் கிளர்ச்சி – பக்கம் *31*)

'சிங்களம் மட்டும் சட்டம் வரலாற்றுக் குறைபாடுகளைச் சீர்செய்வதற்கு அத்தியாவசியமானது. இந்நாட்டை அந்நிய சக்திகள் ஆக்கிரமித்தகாலத்துக்கு முன்னர் சிங்களமொழி பெற்றிருந்த இடத்தை நாம் மீண்டும் பெறுவது இத் தீவின் அபிவிருத்தி வரலாற்றில் முக்கிய கட்டமாகும்.' (பிலிப் குணவர்த்தனா– ஹன்சாட், *14–6–1958*)

' சிறுபான்மையினரை வலிந்து சிங்களமொழியை ஏற்கும் படி நிர்ப்பந்திப்பது இனக்கலவரத்துக்கு வழிவகுக்கும். இம்மக்கள் தமக்கு அநியாயம் நடப்பதாக உணர்ந்தால் இவர்கள் நாட்டிலிருந்து பிரிந்துபோகத் தீர்மானிக்கலாம்.' (லெஸ்லி குணவர்த்தனா–ஹன்சாட், *8–6–1956*)

' தமிழருக்கு அதிகாரப்பரவலாக்கம் தருவதை, சமஷ்டி அமைப்பைக் கொண்டுவருவதை எதிர்க்கிறோம். சமஷ்டி அமைப்பு இந்தியாபோன்று பிரிவினையை வளர்க்கவே உதவும்.'(ரோகண விஜயவீரா–84)(மேற்காட்டப்பட்டுள்ள தர வுகளிற்சில குமாரி ஜெயவர்தனாவின் இலங்கையின் இனவ ர்க்கமுரண்பாடு என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டவை)

சிறீலங்காவில் மிகவும் செல்வாக்குமிக்க வணிகபரம்பரை யைச் சேர்ந்தவர்கள் முஸ்லீம்கள். இவர்களுக்கு எதிராகச் செயற்படுவது 'பொதுபலசேனா' என்னும் மதக்கடும்போக் கமைப்பாகும். சனநாயகப்படி இப்படியான அமைப்புக் களைத் தடைசெய்வது கடினம். இவர்களும் சனநாயகத் துடன் இணைந்துள்ளார்கள். தமிழ்த்தேசியக்கூட்டமைப் பும், 'பொதுபலசேனாவும்' சமமானஅமைப்புக்கள். இவர் களில் எவரையும் தடைசெய்ய முடியாது. 'பொதுபல சேனா' சனாதிபதித் தேர்தலில் அரசாங்கத்துடன் இருப்ப தாகக் கூறினாலும், சனாதிபதி அப்படிக்கூறவில்லை. தமிழ்த் தேசியக்கட்சியைப்போல், சிங்களவர்கள், முஸ்லீம்கள் சார் பிலும் தீவிரஇனவாதக்கட்சிகள் உள்ளன. எந்தவொரு மதத்தை அல்லது இனத்தைப்பற்றி அவதூறாகப் பேசு வோரை 20வருடங்கள் சிறையிலடைக்க வேண்டும். இவர்களுடைய சொத்துக்களை அரசுடமையாக்க வேண் டும். இதற்குப் பொருத்தமான சட்டமொன்றை அரசியல மைப்பில் உள்வாங்க வேண்டும்.

(சிங்கப்பூரில் இயங்கும் அரசியல்வன்முறை மற்றும் பயங் கரவாதஆராய்ச்சி மையத்தின் நிருவாகத்தலைவர்பேராசிரியர் ரோஹான் குணரத்ன – ஞாயிறு தினக்குரல் *07.12.2014*.)

# அடையாளத்தைக் காப்பாற்றத் தவிக்குந் தமிழ்பேசும் மக்கள்!

ஒட்டுமொத்த இலங்கைத்தீவுக்கு இலங்காபுரி, லங்கா, ஈழம் என்னும் பெயர்கள் பண்டைக்காலம் தொட்டு நிலவி வருகின்ற போதிலும், இலங்காபுரி என்னும் பெயர் இராமாயண காப்பியத்தின் உத்தரகாண்டத்தில் எழுதப்பட்டிருப்பதாக அறிஞர்கள் கூறுவதையும், <<கடன்பட்டார் நெஞ்சம்போற் கலங்கினான் இலங்கைவேந்தன்>> என்னுஞ் சொற்றொடர் இன்றும் தமிழ்பேசும் மக்களிடையே நிலவிவருவதையும் நோக்கலாம்.

இலங்கைவேந்தன் இராவணனின் லங்காநகர் (லங்கா என்னுஞ் சொல்லை வடமொழிச் சொல்லாகக் கருதவாய்ப்புண்டு) வாயுபுராணத்திற் கூறப்பட்டுள்ள திருக்கோணேசர் மலையில் அமைந்திருந்ததாகவும், இதிகாசம், புராணம், மற்றும் கல்வெட்டுக்களிற் பொறிக்கப்பட்டுள்ள திரிகூடகிரி மலை என்பது இன்றைய திருக்கோணேசர்மலையைக் குறிப்பதாகவும், இத்திரிகூடகிரி மலையில் அமைந்திருந்த லங்காநகர் இன்றைய திருக்கோணேசர்மலையில் அமைந்திருந்ததெனவும் ஆய்வொன்று கூறுகிறது. (தவல்– அறிஞர் என்.கே.எஸ்.திருச்செல்வம், கட்டுரை.) மேலும், இராவணன் சிறந்த சிவபக்தனெனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

புனையப்பட்ட கதைகளையும் இடைச்செருகல்களையும் பிற்சேர்க்கைகளையும் வரலாறாக எடுத்து, இவற்றை அரசியல் மூலதனமாக்கி, இரத்த ஆறு ஓடவைத்து மக்களை முற்றாக அழித்துச் சுகபோகவாழ்வு நடத்தும் அரசிய லாளர்களைப் பல நாடுகளிற் காணலாம்.

வரலாற்றிற் கூறப்பட்ட இலங்காபுரி, லங்கா என்ற பெயரே இன்று சிங்களமொழியைப்பேசும் மக்களினால் ஸ்ரீலங்கா எனவும், தமிழ்மொழியைப்பேசும் மக்களினால் இலங்கை எனவும் நிரந்தரமாக அழைக்கப்படுகிறது. அய்ரோப்பியரினால் (Sailan, Ceylan, Ceylon) எனவும் அழைக்கப்பட்டது.

இலங்கை என்பது இரு ஆறுகளுக்கிடையில் எஞ்சிநின்ற நிலப்பரப்பு எனவும், இலங்கியதால் இலங்கை எனவும், கடைத்தமிழ்ச்சங்கம் நிலவிய கபாடபுரத்து நிலப்பரப்பின் எஞ்சியபகுதி இலங்கை எனவும் அழைக்கப்பட்டது. (தகவல்– தமிழறிஞர் பல்கலைப்புலவர் க.சி.குலரத்தினம், செந்தமிழ் வளர்த்த செம்மல்கள்.)

இதன்மூலம் இந்நிலப்பரப்பில் வாழ்ந்தவர்களைத் திராவிடர்களாகவும் அல்லது தமிழர்களாகவும் அழைக்க வாய்ப் புண்டு.

வரலாறு, புவியியல் அடிப்படையில் இருந்த இந்நிலப்பரப்பின் ஒருபகுதியில் வேறொரு புதிய சமூகக்குழுவொன்றைச் சேர்த்துக்கொள்ளவேண்டிய சூழ்நிலை இம்மக்களுக்கு ஏற்பட்டது. இந்தியாவின் குஜாராத் மாநிலத்தில் இருந்த <<லாடா>> நாட்டின் மன்னன் தன்னாட்டுக்கு உதவாத தன்மகன் சிங்ஹலவிஜயனையும் அவனது தோழர்கள் எழு நூறு பேரையும் கப்பலில் ஏற்றி நாடுகடத்தியதாகவும் விஜயனும் தோழர்களும் இம்மண்ணை வந்தடைந்ததாகவும், இவனின் வருகையுடன் இலங்கையில் சிங்களமக்களின் கதை ஆரம்பித்ததாகவும் கூறப்படுகிறது.

இலங்கை, ஈழம் என்னும் பெயரால் அழைக்கப்பட்ட போதிலும், பாரிய நிலப்பரப்பை, தமிழ்மொழி பேசும் மக்களை அடக்கியிருந்த வடஇலங்கைஇராச்சியத்தை, பின்னாளில் ஈழம் என அழைத்ததாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. வட இலங்கைஇராச்சியத்தின் தலைநகர் சிங்கை என்னும் பெயரால் அழைக்கப்பட்டது. வன்னிப்பெருநிலப்பரப்பில் அமைந்த பூநகரியில் (பூநாறி எனவும் கூறுவர்), சிங்கைநகரிலிருந்து ஆட்சிபுரிந்த கலிங்கநாட்டினனான உக்கிர சிங்கனின் மகன், நரசிங்கன் <<ஜெயதுங்கபரராசசிங்கன்>> என்னும் பெயருடன் ஆட்சிக்கு வந்தான். இவனின் ஆட்சிக்காலத்தில், யாழ்பாடி என்னும் பாணர் குலத்தவனொருவன் பரிசுபெறுவதற்காக அரசவைக்கு வந்து இவனது திறமையைக் காட்டியதாகவும், மகிழ்ந்துபோன அரசன் தற்போது <<கரையூர், பாசையூர்>> என அழைக்கப்படும் அக்கால மணல்மேட்டைப் பரிசாகக் கொடுத்ததாகவும், இப்பாணர்கள் குடியேறிக் குடிப்பரம்பலைப்பெருக்கியதனால் யாழ்ப்பாணம் எனப்பெயரேற்பட்டதாகவும், பின்பு, குடாநாடு முழுவதையும் இப்பெயர் கொண்டு அழைப்பதாகவும் வரலாறு. (தகவல்– கலாநிதி. க. குணராசா, ஈழத்தவர்வரலாறு.)

இலங்கையின் ஆட்சியதிகாரத்தை 13ம் நூற்றாண்டுவரை சிங்களமன்னர்களும் தமிழ்மன்னர்களும் மாறிமாறி வைத்திருந் ததாகவும், 16ம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் (கி.பி 1505இல்) போர்த்துக்கேயர் இங்கு வந்தபோது இந்நிலப்பரப்பில் 5 இராச்சியங்கள் இருந்ததாகவும், யாழ்ப்பாணஇராச்சியம் தமிழ்மன்னர்களாலும், கண்டிஇராச்சியம் (மட்டக்களப்புப் பிர தேசம் அம்பாறை உட்பட) நாயக்கத்தமிழ்மன்னர்களாலும், கோட்டை, சீதவாக்கை, இரய்கம என்னும் 3 மேற்குக் கரையோரஇராச்சியங்கள் சிங்களமன்னர்களின் ஆட்சிக்குட்பட்டிருந்ததாகவும், இலங்கையின் பெரும்பகுதியில் தமிழராட்சி நடைபெற்றதாகவும் வரலாறு. (தகவல்– கலாநிதி க.குணராசா, ஈழத்தவர்வரலாறு.)

17ம் நூற்றாண்டில் (கி.பி 1658இல்), ஒல்லாந்தர், போர்த்துக்கேயரிடமிருந்து ஆட்சியைக்கைப்பற்றிய பின், கண்டி இராச்சியம் தவிர்ந்த மட்டக்களப்புக்கரையோரம் உட்பட்ட அனைத்துக்கரையோரங்களையும் தமது நிருவாகத்துக்குள் கொண்டுவந்து, இலங்கையின் வடக்குப்பகுதியையும் கிழக்குப்பகுதியையும் தமிழர் வாழும் ஒருபிரதேசமாக ஒரு பிரிவாக்கி, யாழ்ப்பாணப்பிரதேசம் எனப்பெயரிட்டதாக மேலும் இவ்வரலாறு தெரிவிக்கிறது. இதன் கதவின்வழியாக <<யாழ்ப்பாணத்து மக்கள், யாழ்ப்பாணத்தவர், யாழ்ப்பாணத்து முறையில் >> என்னும் குறியீடுகள் இலங்கைவாழ் தமிழ்மக்களிடையே நிலவிவருவதை அவதானிக்கலாம்.

1796 முதல் 1802 வரை இலங்கையின் கரையோரப்பகுதிகளை ஆளத்தொடங்கிய ஆங்கிலேயர், அடுத்துவந்த <<அமியன்ஸ்>> உடன்படிக்கை மூலம் ஒல்லாந்தர்களை இலங்கையைவிட்டு நிரந்தரமாக வெளியேற்றிவிட்டு, 1883இல்
⟶

இதன் நிருவாகவசதிக்காக கோல்புறூக் திட்டத்தின்படி 5 மாகாணங்களாக வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு, மத்தி எனப்பிரித்து ஆண்டுவந்தார்கள். தெதுறுஓயாவிலிருந்து, யான்ஓயாவரைக்கும் வடபகுதிமாகாணமெனவும் (இன்றைய வடமாகாணப்பிரிவிலும் பார்க்க இரண்டு மடங்கு பெரியது), யான்ஓயாவிலிருந்து கும்புக்கன்ஓயாவரையிலான கிழக்குப்பகுதி கிழக்குமாகாணமெனவும் பிரித்தார்கள். 1946ம் ஆண்டில், இலங்கையை 9 மாகாணங்களாக வகுத்தபோது, தமிழ்பேசும் மக்கள் வாழ்கின்ற வடக்குப்பிரதேசம் ஒரு மாகாணமாகவும், கிழக்குப்பிரதேசம் ஒரு மாகாணமாகவும் குடிசார் அடிப்படையில் நிருவாகப்பிரிவுகளாக்கப்பட்டன.

போர்த்துக்கேயர் இலங்கையைக் கைப்பற்றியபோது சிங்களஇராச்சியம், தமிழ்இராச்சியம் என இரு இராச்சியங்கள் இருந்ததையும், அய்ரோப்பியருடைய வருகையின்பின் இவ்விராச்சியங்கள் நிருவாகநலனுக்காக ஒருங்கிணைக்கப்பட்டு (20ம் நூற்றாண்டுவரை) ஆளப்பட்டதையும், 1948இல், ஆங்கிலேயர் நாட்டைவிட்டுச் செல்லும்போது சிங்களமொழி ஆட்சியாளர்களிடம், இணைக்கப்பட்டபடியே நாட்டைக் கையளித்துச்சென்றதையும் சமகால வரலாற்றின் வாயிலாகத் தெரிந்துகொள்ளலாம்.

போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற்கு முன், ஆரியச்சக்கரவர்த்திகள் என்னும் பெயரில் யாழ்ப்பாணத்தைத் தமிழரசர்கள் நீண்ட காலம் பரம்பரை பரம்பரையாக ஆண்டு வந்தனர். அதிற் பரராசசேகரன் என்னும் அரசனின் காலம் சிறப்பு வாய்ந்ததாகக் கூறுவர். இவனுடன் உடன்பிறந்தவனான செகராசசேகரனின் மருமகன் அரசகேசரி காலத்தில், யாழ்ப்பாணத்து நல்லூரில், தமிழ்ச்சங்கம் இருந்தது. நல்லூர் இராசதானியின் சங்கத்தில் புலவர்கள் பலர் உறுப்பினர்களாக இருந்து தமிழ் இலக்கண, இலக்கியங்கள், சோதிடம், மருத்துவம் முதலியவற்றுடன் பல்வேறு கலைத்துறைகளையும் வளர்த்து வந்ததாக வரலாறு. இக்காலத்து மக்கள்தொகையில் அதிக பெரும்பான்மையினர் இந்துசமயத்தவர்களாகவும், கலை, இலக்கியங்கள் யாவும் இந்துசமயத்தின் வாயிலாக எழுந்ததாகவும் அமைந்திருந்தன.

வடஇலங்கையின் இராச்சியத்தின் ஆட்சி அதிகாரம் கலிங்க அரசர்கள் கைகளிலும், தென்னிந்திய அரசர்களான பாண்டியர், சோழர் கைகளிலும், பல சிங்கள அரசர்களின் கைகளிலும் பல படையெடுப்புக்களினால் மாறிமாறி இருந்ததாகவும் சரித்திரம் கூறுகிறது.

வன்னிப்பெருநிலப்பரப்பில் அமைந்த பூநகரிப்பிரதேசம் சோழரின் ஆட்சிக்குட்பட்டிருந்த காலத்தில், இன்று, இப்பகுதியிலுள்ள நல்லூர் எனச் சோழரால் பெயர் சூட்டி அழைக்கப்பட்ட இடம் காலத்தால் முந்திய பழைய நல்லூர் எனக் கூறப்படுகிறது. இப்பெயரே பின்னாளில் (தற்போதும்) யாழ்ப்பாணப்பகுதியில் வழங்கிவரும் நல்லூர் என அறியலாம்.

தற்கால, இந்நல்லூருக்கு அண்மையில் அமைந்துள்ள நாயன்மார்க்கட்டு என்னுமிடத்தில், மேற்கூறப்பட்ட அரசகேசரி என்பவர் தமிழிலும் சமஸ்கிருத்திலும் தேர்ச்சிபெற்ற அறிஞராக வாழ்ந்துவந்தார். இவர், தனது 'இரகுவம்சம்' என்னுங் காவியத்தை (வடமொழியிற் காளிதாசர் இயற்றிய 'இரகுவம்சத்தின்' தமிழ் மொழிபெயர்ப்பு) நல்லூர்த் தமிழ்ச்சங்கத்தில் பரராசசேகரன் முன்னிலையில் அரங்கேற்றினார். (தகவல்– பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை, இலக்கியவழி.) இதை இந்தியாவில் தமிழ்நாட்டில் திருவாரூர்ப் புலவர்கள் முன்னிலையில் அரசகேசரி புராணநடையாகப் பாடி அரங்கேற்றியதாக 'யாழ்ப்பாண வைபவமாலை' கூறுகிறது.

1560இல், மன்னாரில் வந்திறங்கிய போர்த்துக்கேயர் மன்னார்க் கோட்டையைக் கட்டுவதற்கு இந்துசமயக் கோவிலான பாடல்பெற்ற திருக்கேதீஸ்வரக் கோவிலை இடித்தார்கள். சமயநடவடிக்கையில் தலையிட்டு சிவாலயங்களை இடித்து, கிறீஸ்தவக்கோவில்களைக் கட்டுவித்ததாகவும், பரராசசேகர மன்னனின் இரண்டாவது மனைவியின் மகன் பரநிருபசிங்கம் உயிருடன் இருக்கும்வரை நல்லூரிலும் கீரிமலையிலும் இருந்த கோவில்களை வாக்குக்கொடுத்ததன்படி இடிக்காது பாதுகாத்த போர்த்துக்கேயர், இவருடைய மறைவிற்குப் பின் மகனும், ஆலோசனைத்தலைவனுமாகிய பரராசசிங்கமுதலியின் மரணத்துக்குப்பின் இடிக்காது விட்டிருந்த ஆலயங்களை இடித்ததாக 'யாழ்ப்பாண வைபவ மாலை' கூறுகிறது. * பின்னாளில், பரநிருபசிங்கம் கத்தோலிக்க கிறீஸ்தவசமயத்தை தழுவியவர். போர்த்துக்கேயரின் மதம் கத்தோலிக்க கிறீஸ்தவசமயம்.

இந்துநாகரீகத்தமிழ்மக்களின் உயர்குடியினரால் தீண்டத்தகாதவர்கள் என ஒதுக்கப்பட்ட கல்வியறிவற்ற, நலிந்த மக்களை போர்த்துக்கேயர் தமது மதம் பரப்புதலின்மூலம் கிறீஸ்தவர்களாக்கினர். சிலருக்கு மாதந்தோறும் பணங்கொடுத்தும் சிலருக்கு உயர்பட்டமான 'டொன்' பட்டமும் பதவியும் போர்த்துக்கேயப்பெயரும் கொடுத்துத் தங்களுடைய ஆட்சிக்குத் தடையற்றவர்களாக, நம்பிக்கைக்குப்பாத்திரமானவர்களாக, யாழ்ப்பாணப்பிரதேசத்தில் இவர்களைப் பரம்பரைபரம்பரையாக வாழச்செய்ததாகச் செய்தி. இந்நேரத்தில், யாழ்ப்பாணப் பிராமணர்களில் 150பேர் உட்பட, யாழ்ப்பாண அரச குடும்பத்தினர் பலர் கிறீஸ்தவர்களாக மதமாற்றம், கலாச்சாரமாற்றம் செய்யப்பட்டனர். ஆட்சிமொழியாகப் போர்த்துக்கேயம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

கிறீஸ்தவ மதகுரு ஒருவர், இந்துமதத்தவரான தமிழ்பேசும் வறிய பெண்ணுக்கு, 'மாதாந்தம் குறிப்பிட்ட தொகைப் பணம் தருகிறேன். இனிமேல் நீ விபூதி பூச வேண்டாம்! சைவசமயக் கோவில்களுக்குப் போகவேண்டாம்! என்னுடைய கோவிலுக்கு ஞாயிற்றுக்கிழமைதோறும் வா!' எனக் கூறிப் பணங்கொடுத்ததாகவும், இப்பெண் போதகரின் சொற்படி நடந்ததாகவும், சித்திரை வருடப்பிறப்பு வந்ததும் இவள் ஊர் வழக்கப்படி வருடப்பிறப்புக்கு வீட்டுப்பொங்கலை நடத்தாது விட்டுவிட்டதாகவும் செய்தி. அடுத்த மாதம், அவ்வூர் அம்மன் கோவில் வருடாந்தப் பொங்கலை நடத்தாது விட்டால் தனது உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுவிடும் என்னும் அச்சத்தினால் அப்பொங்கலை ஒருவாறு நடத்தி முடித்ததாகவும், இதனை அறிந்த இப்போதகர் அடுத்த மாதத்திலிருந்து இப்பெண்ணுக்குப் பணங்கொடுக்கவில்லை எனவும் கூறப்படுகிறது. (படிக்க – முதலியார் குல. சபாநாதன் அவர்கள் பரிசோதித்து எழுதிய ஆராய்ச்சிக் குறிப்புகள் அடங்கிய 'யாழ்ப்பாண வைபவமாலை')

→

இந்துமதத்தைக் கடைப்பிடித்து வந்த தமிழ்பேசும் மக்களின் வாழ்வில் மாற்றம் ஏற்பட நாகரீகமாற்றமும், அடையாள மாற்றமும் ஏற்பட்டது. இவ்வடையாளமாற்றமும், நாகரீகமாற்றமும் ஏற்படுமென முன்கூட்டியே உணர்ந்த சங்கிலிய ரசன் இவற்றைக் காப்பாற்றப் போர்த்துக்கேயரை எதிர்த்துப்போரிட்டான்.

பரராசசேகர மன்னனின் பட்டத்து ராணியில்லாத ஒரு மனைவிக்குப் பிறந்த மகன் சங்கிலியன், 'வைப்பாட்டியின் மகன்' என்னுங் கறை போக்க மூத்தசகோதரர்களை (பட்டத்துராணியின் மகன்மாரை) அழித்து அரசனானான் எனவும், போர்த்துக்கேயருடன் கடும் போர் புரிந்தான் எனவும், அவர்களுடன் தொடர்பு கொண்டோரைத் தண்டித்த ஆளுமைமிக்க ஆட்சியாளன் எனவும், நாட்டுணர்வு, தீர்க்கதரிசனம், கடும்போக்குக் கொண்டவன் எனவும் அன்னிய ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடிய சுதந்திர வீரனெனவும் கூறலாம்.

யாழ்ப்பாணஇராச்சியத்தின் நிலை மேற்கண்டவாறிருக்க, வன்னிநாடான பனங்காமத்தில், கைலாயவன்னியன் போர்த்துக் கேயர் ஆட்சிக்காலமான (1644 – 1658)வரையும், பின்பு, ஒல்லாந்தர் காலமான (1658 – 1678)வரையும் ஆட்சி செய்த தாகவும், போர்த்துக்கேயர் ஆட்சிக்காலத்தில் 14வருடங்கள் போர்த்துக்கேய ஆளுநரைச் சந்திக்கவில்லையென்பதும் வரலாறு.

ஒரு சமூகத்தின் நாகரீகத்தை நகர்த்திச் சென்று காலத்தைக்காட்டும் கண்ணாடி இலக்கியம். இது அழகியல்உணர் வினை வளர்ப்பதுடன் பயன்படக்கூடிய மற்றும் புகழ்தலுக்குரிய நாகரீகத்தை உண்டுபண்ணும் மனிதப் பெறுமானங்க ளை மிகுந்த வலுவுடன் கற்பிக்கிறது. (மனிதச்செயற்பாடுகள், குறிக்கோள்கள், நோக்கங்கள் பற்றிய ஆய்வின் முக் கியத்துவத்தினை உணர்த்துவதே மனிதப்பெறுமானங்கள் எனப்படும்). இலக்கியம் சமூக ஆவணமாகும். இலக்கிய த்தைப் படைப்பதற்கு மொழி அவசியமாகிறது.

தாய்மொழி குழந்தைகளுக்குக் கல்விமொழியாக அமைந்தால், இவர்களுடைய சிந்தனையாற்றல் சிறந்துவிளங்குமென ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். புலம்பெயர்நாடுகளிற் பிறந்த குழந்தைகளின் தாய்–தந்தையர் பேசுந் தமிழ்மொழியானது இக்குழந்தைகளிற் சிலருக்கு வீட்டுமொழியாகவும், சிலருக்கு முற்றாகப்பழக்கமில்லாத மறைந்தமொழியாகவும் இருக்கி றது. இந்நாடுகளின் பாடசாலைகள், கல்விநிலையங்களில் இந்நாடுகளின்மொழிகளைக் குழந்தைகள் கற்பதாலும் (எண்ணுவதற்கு–எழுதுவதற்கு–வாசிப்பதற்கு) அரசசெயலகமொழியாகப் புலம்பெயர்நாடுகளின் மொழிகள் இருப்பதனாலும், இவர்களுக்குத் தாய்மொழிகளாக இம்மொழிகள் அமைகின்றன. வீட்டுமொழியிலும் நாட்டுமொழியிலும்(தாய்மொழி) இக்குழந்தைகள் ஒரேநேரத்திற் சிந்திக்க ஆரம்பித்தால் இவர்களது சிந்தனையாற்றல் மேன்மேலும் அதிகரிக்கும். இம்மொழிகள் இதற்கு உரமாக அமையும்.

குழந்தைப்பருவத்திற் பலமொழிகளை இவர்களுக்குக் கற்பித்தால் இவர்களது சிந்நனை வளர்ச்சி மூலம் மனிதகுலத்தி ன்அறியாமை இருள்போக்கி அடுத்தகட்ட வாழ்வுநிலை நோக்கி இம்மனிதகுலம் பயணிக்கும். இவ்வகையில் மொழியின் முக்கியத்துவம் என்னால் உணரப்படுகிறது. பலமொழிகளைக் கற்கும்போது அம்மொழிகளைப்பேசும் மக்களுடன் தொடர்பேற்படுகிறது. உலகரீதியிலான கண்ணோட்டத்தின் விரிவாக்கத்தை ஏற்படுத்தவும்,வர்த்தகரீதியிலான நடவடிக்கைகளை மேற்கொண்டு பொருளாதாரத்தை விருத்திசெய்து வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவும், பலதரப்பட்ட நாகரீகங்களை, கலாச்சாரங்களை அறியவும், ஒருவரை ஒருவர் நேசிக்கவும் பலமொழிகளைக் கற்பதன் அவசியம் என்னால் மேலும் உணரப்படுகிறது.

ஒருமொழியைப் பேசும்போதும் எழுதும்போதும் அம்மொழியில் உள்ள சொற்களை உட்புகுத்துவது சிறந்தநடவடிக் கையாக முக்கியதேவையாக அமைகிறது. இன்று, தமிழ்மொழியைப் பேசுவோர் பலர் முக்காற்பங்கு ஆங்கிலமொழிச் சொற்களையும் காற்பங்கு தமிழ்ச்சொற்களையும் கலந்து பேசிவிட்டு, எழுதிவிட்டு தமிழ்மொழியிற் பேசுவதாகவும், எழுதுவதாகவும் கூறுவது கவனிக்கப்படவேண்டியது. மேலும், தமிழ்ச்சொற்களுடன் சமஸ்கிருதச்சொற்களைக் கலந்து பலநூற்றாண்டுகளாக எழுதிவருகிறோம்(நான் உட்பட)இதற்குப் பல செய்தித்தாள்கள், நூல்கள் துணைபோ வதையும் காணலாம். இதுவே இன்றைய தமிழ்மொழியின்நிலை. * சிலமொழிகள் பிறமொழிகளில் இருந்து சிலசொற் களைக் கடனாகப்பெற்றிருக்கின்றன, கொடுத்தும் இருக்கின்றன.

பிரெஞ்சுமொழியை எடுத்துக்கொண்டால், பிரெஞ்சுஅரசு, பிரெஞ்சுமொழி அறிஞர்கள், பிரெஞ்சுமக்கள் மேற்சொல்லப்பட்ட விடயத்தில் மிகவும் கூடியபாகம் கவனமாகச்செயற்படுகிறார்கள். (மிகமிகச் சிறிய அளவிலான விதிவிலக்குகள் உள்ளன.) இதுவே இன்றைய பிரெஞ்சுமொழியின்நிலை.

அரசியல்ரீதியிலான திணிப்பு என்பது, 'அடையாளத்தை' அதற்குரிய பெறுமதியை இல்லாதொழித்து, தான்றோன்றித்தன மாகத் தான் நினைத்தபடி ஆட்சியதிகாரத்தை வலுப்படுத்தி, அடிபணியவைத்து, ஒடுக்குமுறையை ஆரம்பித்து கருத் துரிமையைப் பறித்து, மக்கள் ஆட்சியின் மூலவேரை பிடுங்கிவிடும் நோக்கங் கொண்டது.

மொழிமூலமாக ஏற்படும் அடையாளம் பாதுகாக்கப்படவேண்டுமா? கட்டுக்களை உடைத்துப் புதுமொழி என்னுந்தளத் தில் சங்கமமாகவேண்டுமா? குறிப்பிட்ட ஒரு மொழியின் அரசியல் ஆதிக்கத்தின் கீழ் செயற்பட்டு ஒடுக்கப்பட்டு அடையாளத்தை இழக்கவேண்டுமா? என்னுங் கேள்விகள் தமிழ்பேசும் மக்களிடையே உருவெடுத்தன. மேற்கூறிய நிலை இப்படியிருக்க, மீண்டும், நான் பழைய யாழ்ப்பாண இராச்சியத்துக்கு வருகிறேன். ஐரோப்பியரின் வருகைக்கு முன், கலை–இலக்கியங்கள் யாவும் இந்துசமயப்புலவர்களாற் படைக்கப்பட்டதை முன்பு பார்த்தோம். இவை புராணவிளக்கங்கள், காப்பியங்கள், கடவுள் மீதான பாடல்களாக அமைந்திருந்தன.

(விரல் 2இல் தொடரும்)

பிரான்சிலிருந்து, திவ்வியநாதன் செல்வத்துரை *19.12.2014*

# வெளிநாட்டுக் கண்களுக்கு விருந்தாகும் இலங்கை

அரியணை, முடி, வீரவாள், செங்கோல் அனைத்தையும் அரசின் சின்னங்களாகக் கொண்டு குடிமக்களின் பாதுகாவலனாக, நாட்டின் இறைமையைப் பேணுபவனாக அரச கட்டிலில் இருந்து ஆட்சிசெய்து வந்தவன் அரசன். கடவுளின் வழிவந்தவனெனக் கருதப்பட்ட இம்மன்னன் கடவுளுக்கு அடுத்த நிலையில் வைத்து மக்களால் போற்றப்பட்டவன். இவன் இயற்றும் சட்டங்கள் இவனைக் கட்டுப்படுத்தாததால் உயர்ந்த அதிகாரம் உடைய இவனது ஆட்சி மன்னராட்சி எனப்பட்டது.

மக்களாட்சி அரசஅதிகாரம் என்னும் வரைமுறைக்குள் அடங்குகிறது. இவ்வாட்சி அனைத்து குடிமக்களின் விருப்பங்களை நிறைவேற்றும்படி அமைக்கப்படுவதில்லை என்பதுடன், இவர்களில் அதிகதொகையானோரின் வாக்குகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் அமைக்கப்பட்டுப் பலம்பொருந்தி நாட்டின் நிருவாகத்தைச் செயற்படுத்துகிறது. நாட்டின் சகல உரிமைகளையும் தன்னகத்தே கொண்டு ஆட்சியுரிமைகள் யாவும் குடிமக்களுக்கு உரித்தாவதால் இதனைச் சனநாயக ஆட்சி என்று கூறுவர். இவ்வாட்சியில் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட மக்களின் பிரதிநிதிகளான பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டு உருவாக்கப்படும் அரசாங்கம், இவர்கள் முன், நாட்டின் சட்டங்களினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தனது அரசியற்கடமைகளுக்குப் பொறுப்புள்ளதாகவும் சிறுபான்மை(இன)மக்களின் உரிமை களுக்கும் மனித உரிமைகளுக்கும் தனிமனித உரிமைகளுக்கும் பாதுகாப்பை வழங்குவதுடன், சுதந்திரப்பொருளாதாரச் சந்தையுடன் தொடர்பை வைத்திருப்பதாகவும் அமைகிறது.

மேற்கூறப்பட்ட இச்சனநாயக ஆட்சியில், சமூக - பொருளாதாரரீதியாக சமூகநீதியை நிலைநாட்டும் பொருட்டு அரசியல் வழிமுறையாக அதனை நிலைநாட்டும் முயற்சியில் ஈடுபடும் நிலை சோசலிசம் எனப்படுகிறது. நாடிய இம்முயற்சியானது சமூகத்தைச் சமநிலைப்படுத்தி அல்லது ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்து, சமூகத்தில் நிலவும் அநீதிகளை எதிர்த்து, சிறந்த உலகத்தைக் கட்டியெழுப்பும் நோக்கங் கொண்டதாக சோசலிசம் அமைகிறது.

அனைத்துக் குடிமக்களின் அதிக நன்மை கருதி நாட்டின் மொத்த வளங்களையும் அனைத்து உரிமைகளையும் வளப்படுத்தும்பொருட்டு செயற்படும் அரசு குடியரசு எனப்படுகிறது. இது நாட்டுமக்கள் யாவருக்குஞ் சொந்தமானதுடன் எளிதாக அணுகக்கூடியதாகவும் மக்களின் உடமைகளான அரசசெயலகங்கள், நாட்டு வளங்கள், நாட்டுப்பணத்தின் சின்னம், நாட்டுமொழி, நாட்டுச்சட்டங்கள் யாவுந் தனியார் உடமைகளாவதை எதிர்ப்பதுடன் அரசியற்கட்சிகளுக்கு அடிபணியாது சுதந்திரமாக இயங்குகிறது குடியரசு.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு என அழைக்கப்படும் இலங்கைத் தீவின் நிலப்பரப்பு 65,610சதுர கி.மீ ஆகும். 2012ம் ஆண்டின் குடிமக்கள் மதிப்பீட்டின்படி இந்நிலப்பரப்பில் 20.40மில்லியன் மக்கள் வாழ்கின்றனர். 73.8விகிதம் மக்கள் சிங்களமொழியைப் பேசுவோராகவும் 26.1விகிதம் மக்கள் தமிழ்மொழியைப் பேசுவோராகவும் 10விகிதம் மக்கள் ஆங்கிலமொழியைப் பேசுவோராகவும் இவர்களில் 0.1விகிதமானவர்கள் இம்மொழியைத் தாய்மொழியாகக் கொண்டுள்ள சிறீலங்கா குடிமக்கள் என அன்றாடம் மொழிபேசுவோர் புள்ளிவிபரப்பட்டியலின்படி கணக்கிடப்பட்டுள்ளனர்.

2012ம் ஆண்டுப் புள்ளிவிபரப்படி, இந்நாட்டின் சனத்தொகை 2கோடி 40இலட்சங்களாகும். 74.9விகிதம் சிங்களவர்களும், 11.2விகிதம் இலங்கைத்தமிழர்களும், 9.3விகிதம் இலங்கை முஸ்லிம்களும், 4.1விகிதம் இந்தியத்தமிழர்களும் (மலையகத்தமிழர்), 0.5விகிதம் ஏனையோர்களும் அடங்குவர். இச்சனத்தொகை 1871இன் சனத்தொகையுடன் ஒப்பிடும் போது 8மடங்காக அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

சுதந்திரஇலங்கையில், 'எம்மிடம் நீங்கள் துன்புறுத்தலுக்குள்ளாவீர்கள் என அஞ்சத்தேவையில்லை'. தேசியக்காங்கிரஸ் சார்பிலும் எனது சார்பிலும் சிறுபான்மையின மக்களுக்கு மேற்கூறியதை உறுதிமொழியாக வழங்குகிறேன் என முழக்கமிட்டவர் சுதந்திர இலங்கையின் முதற் பிரதமர் டி.எஸ்.சேனநாயக்கா ஆவார்.

1946இல், ஐக்கியதேசியக்கட்சியை உருவாக்கி, 1947ம் ஆண்டின் பொதுத்தேர்தல் மூலம் சுதந்திர இலங்கையின் முதற்பிரதமராகிய டி.எஸ்.சேனநாயக்கா, தான் வழங்கிய உறுதியை ஒருவருட காலத்திற்குள் மீறி சிறுபான்மையினர் மீது ஒடுக்குமுறையை ஆரம்பித்து வைத்த பெரும்பான்மைச்சிங்களமக்களின் முதல் தலைவர்.

1948.02.04இல், இலங்கைவாழ் பெரும்பான்மையினச்சிங்களமக்களின் கைகளுக்கு இலங்கையின் ஆட்சிப் பொறுப்பு வந்து சேர்ந்தது. பிரித்தாளும் தந்திரம் கொண்டிருந்த பிரித்தானியரின் அதிகாரத்திற்குட்பட்டு 1964வரைக்கும் சிறுபான்மையின மக்கள் மனித உரிமைகளை இழந்திருந்தனர் (திரு.ரணசிங்கா என்பவருக்கு எதிரான லஞ்ச வழக்கின் தீர்ப்பைப் படித்துத் தெரிந்து கொள்க). இந்நேரத்தில், இச்சிறுபான்மை மக்களுக்குப் பிரித்தானிய அரசின் பாதுகாப்பு சிறியளவில் இருந்ததாகவும் கூறப்படுகிறது.

1952இல், டி.எஸ்.சேனநாயக்கா திடீர் மரணமடைந்தார். மரணமடைந்த முன்னாள் முதற் பிரதமரும், டட்லி சேனநாயக்காவின் தந்தையுமான டி.எஸ்.சேனநாயக்கா, இலங்கையின் முதலாவது தேசாதிபதியான சோல்பரி பிரபுவிடம் முன்பு கேட்டுக் கொண்டதன்படி, டட்லி சேனநாயக்கா பிரதமமந்திரியாக ஆட்சிப்பொறுப்பில் அமர்த்தப்பட்டார். ஐ.தே.கவின் மூத்த தலைவர்களில் ஒருவரான ஜோன் கொத்தலாவல, தனக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய பதவியை டட்லி சேனநாயக்கா பெற்றுக் கொண்டதனால் கோபம் கொண்டிருந்தார். 1953இல், 3வது பிரதமராக ஜோன் கொத்தலாவல ஐக்கிய தேசியக்கட்சியின் அரசாங்கத்தின் பிரதமர் பொறுப்பை ஏற்று, யாழ் கொக்குவில் இந்துக்கல்லூரியில் நடைபெற்ற வரவேற்புக்கூட்டத்தில் சிங்களத்துக்கும் தமிழுக்கும் சம உரிமை வழங்கி ஆட்சிமொழியாக்கப் போவதாக தமிழ்பேசும் மக்களுக்கு உறுதியளித்தார். உறுதிமொழி காற்றிற் கரைந்து போனது. (இவரது ஆட்சிக்காலம் 1953 – 1956)

1951இல், ஐ.தே.கஇல் அமைச்சராகவிருந்த எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா சிங்களத்தையும், தமிழையும் ஆட்சிமொழியாக்காமல் ஐ.தே.க காலம் கடத்துகிறது எனக்கூறிக் கட்சியிலிருந்து வெளியேறி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை நிறுவினார். 1956இல், ஆட்சியைக் கைப்பற்றிப் பிரதமமந்திரிப் பொறுப்பை ஏற்ற இவர்,

1. சட்டத்திற்கு முன் அனைவரும் சமம்.
2. உயிர் பாதுகாப்பு, தனிமனித சுதந்திரம்.
3. பேச்சுச் சுதந்திரம்.
4. பத்திரிகை நடத்தும் உரிமை

போன்ற அடிப்படை உரிமைகளை உள்ளடக்கிய புதிய குடியரசுயாப்பைத் தயாரிக்க, 1957இல், நாடாளுமன்றக் குழுவொன்றை நிறுவியதாகவும், 1959இல், இவருடைய படுகொலைக்குப் பின் இத்திட்டம் கைகூடவில்லை எனவும் கூறப்படுகிறது. 1956.06.14இல், இவரால் நடைமுறைப்படுத்தப்பட்ட 'சிங்களம் மட்டுமே ஆட்சிமொழியாகும்' என்னுஞ் →

சட்டத்தால் ஏற்பட்ட விளைவுகள் அனைவரும் அறிந்ததே.

1956ம் ஆண்டுத் தேர்தலிற் கூட்டாட்சி அரசுக் கொள்கையின் அடிப்படையில் 14 தொகுதிகளில் போட்டியிட்டு 10 இடங்களைக் கைப்பற்றிய தமிழரசுக்கட்சியின் தலைவர் எஸ்.ஜே.வி.செல்வநாயகத்துடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தின்படி (பண்டா – செல்வா ஒப்பந்தம் பார்க்க), 1958இல், தமிழ்மொழிச்சட்டம் (சிறப்பு ஏற்பாடுகள்) நிறைவேற்றப்பட்டும், சிறீலங்கா கல்விஅமைச்சின் கல்விச்சான்றிதழ் வழங்கும் முக்கிய கிளையொன்றில் தமிழிற் செய்திப்பலகை இருப்பினும் தரப்பட்டு நிரப்பப்படவேண்டிய கேள்விக்கொத்து ஆங்கிலத்திலும் சிங்கள மொழியிலும் இருப்பதும் தமிழ் மொழியில் இல்லாததும், அதைப்பற்றிய செய்திகளைப்பெறுவதற்கு தமிழிற் பேசக்கூடிய ஊழியர் இல்லாததும் பெருஞ் சங்கடத்தை ஏற்படுத்துவதைக் காணலாம்.

1972இல், நிறைவேற்றப்பட்ட முதலாவது சுதந்திரக்குடியரசின் புதிய அரசியல் அமைப்புத்திட்டத்தின் மூலம் 'அனைத்துச்சட்டங்களையும் சிங்கள மொழியிற் சட்டமாக்கி, ஒவ்வொரு சட்டத்திற்கும் தமிழ்மொழிபெயர்ப்பு இருத்தல் வேண்டும்' என்னும் அங்கீகரிக்கப்பட்ட சட்டம் அங்கில்லாததை உணரலாம். 1978ம் ஆண்டின் அரசியலமைப்புச் சட்டத்தின்படி சிங்களமொழியும் தமிழ்மொழியும் அரசசெயலகமொழிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டன.

1987ம் ஆண்டின் பதின்மூன்றாவது திருத்தச்சட்டத்தின் உறுப்புரை 18 (1-2) மூலம் சிங்களமும் தமிழும் இலங்கையின் அரச செயலக மொழிகளாக, தேசிய மொழிகளாக அமையவேண்டும் எனவும் இணைப்பு மொழியாக ஆங்கிலம் அமையவேண்டுமெனத் திருத்தஞ்செய்யப்பட்டாலும் மேற்கூறியநிலை தொடர்வதைக் காணலாம்.

எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்காவின் படுகொலைக்குப் பின், 1965இல், நாடாளுமன்றத்தில் போதிய உறுப்பினர்தொகை இல்லாத காரணத்தால் ஐ,தே.க, தனது ஆட்சியை அமைப்பதற்கு இலங்கைத்தமிழரசுக்கட்சியை நாடியது. டட்லிசேனநாயக்காவும், எஸ்.ஜே.வி. செல்வநாயகமும் ஒப்பந்தஞ் செய்து கொண்டார்கள். 'தமிழ் மொழி விசேட சட்டமும், மாவட்டசபை அமைப்புச்சட்டமும்' புரிந்துணர்வு அடிப்படையில் ஏற்கப்பட்டன. வடக்கு – கிழக்கு தாயகம் என ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன், அதிகாரப்பகிர்வுக்கு வழிவகுக்கும் வகையில் மாவட்ட சபைகளை நிறுவுவதற்கு டட்லி அரசாங்கம் ஏற்றுக்கொண்டது. மு.திருச்செல்வம் Q.C உள்ளூராட்சி அமைச்சராகப் பதவியேற்றார். ஐ.தே.கவுக்குள் ஏற்பட்ட எதிர்ப்பினாலும், சிறீலங்கா சுதந்திரக்கட்சியின் எதிர்ப்பினாலும் அரசாங்கத்துடன் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக, 1968இல், மு.திருச்செல்வம் பதவி விலக நிர்ப்பந்திக்கப்பட்டார். ஒப்பந்தம் செயலாக்கம் பெறத்தவறிவிட்டது. பலன் கைகூடாதது பெரும்பான்மையினச் சிங்கள ஆட்சியாளரின் பெருந் தவறே. இதுவே, பின்னாளில் ஒன்றரை இலட்சம் மக்களினதும், முப்பதாயிரம் இராணுவத்தினதும் உயிரிழப்புக்குக் காரணமாக அமைந்ததெனலாம்.

1968இல், டட்லி சேனநாயக்கா தலைமையில் ஐ.தே.க ஆட்சி செய்த காலத்தில் நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டு புதிய அரசியல் யாப்புச் சபை மூலம் குடியரசுக்கான யாப்பைத் தயாரிப்பதென முடிவு செய்யப்பட்டு, பிரித்தானியரோடு மிகச்சொற்பமாகவிருந்த தொடர்புகளை அறுத்து, முற்றிலும் சுதந்திரமாகச் செயற்பட மேற்கூறப்பட்ட யாப்பு உருவாக்கப்பட வேண்டும் எனும் அடிப்படையில், அந்நாளில், முக்கியமான தேர்தல் கூட்டணிக்கட்சிகளான சிறீலங்காசுதந்திரக்கட்சி, லங்காசமசமாயக்கட்சி, கம்யூனிஸ்ட்கட்சி போன்றவை முடிவுசெய்தன. (பிரித்தானியர்களால் ஆக்கப்பட்ட அரசியலமைப்பில் அடிப்படை மாற்றங்கள் தேவையென, 1949.12.18இல் முதன்முதலாகக் குரல்எழுப்பியவர் எஸ்.ஜே.வி.செல்வநாயகமென மு.திருச்செல்வம் 'ஈழத்தமிழர்இறைமை' எனும் புத்தகத்தில் பதிவு செய்துள்ளார்.)

1970.05.27இல், நடைபெற்ற 07வது பாராளுமன்றத்துக்கான பொதுத்தேர்தலில், 157 மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட அவையில் கூட்டுமுன்னணி 116 இடங்களைப் பெற்றது. முறையே தமிழரசுக்கட்சி 13 இடங்களையும், தமிழ்க்காங்கிரஸ்கட்சி 03 இடங்களையும், கட்சிசாராதவர் 02 இடங்களையும், ஐ.தே.க 17 இடங்களையும் கைப்பற்றின. ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா கூட்டுமுன்னணியின் ஆதரவுடன் பிரதமராகி, 157 பிரதிநிதிகளுக்கும், மக்கள் பிரதிநிதிகள் அவை உறுப்பினர்களின் கூட்டம் கொழும்பு றோயல் யூனியர் பாடசாலையின் அரங்கமான நவரங்காவில், 1970.06.19இல், நடைபெறுமெனவும் கலந்துகொள்ளுமாறும் அழைப்பிதழ் அனுப்பியிருந்தார்.

இக்கூட்டம், மக்கட்பிரதிநிதிகள் அவை உறுப்பினர்களின் அவை மண்டபத்தில், இவ்வுறுப்பினர்களின் முன்னிலையில் கூடினால், மக்கட்பிரதிநிதிகள் அவைக்கூட்டமாகிவிடும் என்பதாலும், புதிய அரசியலமைப்பை உருவாக்கும் சட்டஉரிமை மக்கட்பிரதிநிதிகள் அவைக்கு இல்லை என்பதாலும், மக்கட்பிரதிநிதிகள் அவைக் கூட்டம் வேறு, மக்கட்பிரதிநிதிகள் அவை உறுப்பினர்கள் கூட்டம் வேறு என்பதை அறிந்திருந்தும், இக்கூட்டம் மேற்கூறப்பட்ட நவரங்கா மண்டபத்தில் கூட்டப்பட்டதெனக் கூறப்படுகிறது.

மக்கள் இக்கூட்டத்தைக் கூட்டுவதற்கு உரிமை வழங்கியுள்ளார்கள் எனக் கூட்டுமுன்னணித் தலைவர்கள் கூறியிருந் தாலும், எஸ்.ஜே.வி.செல்வநாயகம் இக்கருத்தை ஏற்கவில்லை. இருப்பினும், 157 உறுப்பினர்களும் கூட்டத்திற் கலந்துகொண்டனர். மேலும், உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள், வேளாண்மை செய்வோர், சிறுகைத்தொழில் செய்வோர், கடல்தொழில் செய்வோர் என 1700 சிங்கள மக்கள் அம்மண்டபத்திற் கூடியிருந்தனர்.

'இது மக்கட்பிரதிநிதிகள் அவைக்கூட்டமல்ல, மக்கட்பிரதிநிதிகள் அவை உறுப்பினர்கள் கூடும் கூட்டம். 1948இன் அரசியலமைப்பிலிருந்தோ, பிரித்தானிய அரசிடமிருந்தோ புதிய அரசியல் அமைப்பு விதிகளை ஆக்கும் வலிமையும் உரிமையும் பெறப்போவதில்லை' என்று பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவைஉறுப்பினர்கள் முன் தனது பதவியின் ஆரம்ப உரையை நிகழ்த்தினார்.

நவரங்காவில் நடத்திய முதற்கூட்டம் முடிந்ததும் அரசியலமைப்பு ஆக்கஅவை, தனது கூட்டங்களை மக்கட்பிரதிநிதிகள் அவை மண்டபத்துக்கு மாற்றியது.

அரசியலமைப்புச் சட்டவாக்க அமைச்சராக கலாநிதி கொல்வின் ஆர்.டி.சில்வா புதிய யாப்பைத் தயாரிக்கும் பொறுப்பை ஏற்க, பிரதமர் ஸ்ரீமாவோ, 1971,03.15இல், புதிய அரசியலமைப்பு பற்றிய முதலாவது தீர்மானத்தை 'சிறீலங்கா, சுதந்திரமான - இறைமை கொண்ட - தன்னாதிக்கமுள்ள ஒரு குடியரசாதல் வேண்டும்' எனக்கூறி முன்மொழிந்தார். எதிர்ப்பின்றி 157 உறுப்பினர்களும் இத்தீர்மானத்தை ஏற்றுக் கொண்டனர். மிகுதியாக அவையில் முன்வைக்கப்பட்ட ஒற்றையாட்சித் திட்டம், பௌத்த மதப்பாதுகாப்பு, அதன் வளர்ச்சிக்கான திட்டம், அனைத்துச் சட்டங்களையும் சிங்களமொழியில் சட்டமாக்கும்திட்டம் போன்ற 38 அடிப்படைத் திட்டங்களுக்கு எழுதப்பட்ட சட்ட வலு கோரியபோது, தமிழரசுக்கட்சி சார்பில் அதன் உறுப்பினர்கள் சில தீர்மானங்களை எதிர்த்துத் திருத்தம் மேற்கொண்டார்கள். இவர்கள் கோரிய திருத்தங்களை அரசியலமைப்பு ஆக்க அவை வாக்கெடுப்புக்கு விட்டபோது, 88 வாக்குகள் எதிராகவும், 13 வாக்குகள் சார்பாகவும், மூன்றில் இரண்டு பெரும்பான்மையின்றி அரசியல் யாப்புச் சட்டத்தில் உறுதியான இடத்தைப்பிடித்தன. (திருத்தங் கோரிய திட்டங்களில் சில மேலே காட்டப்பட்டுள்ளன.) மொத்தத்தில், இவர்களது கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டு, செவிடன் காதில் ஊதிய சங்குபோலாயின.

⟶

நாடாளுமன்றம் அனைத்து அதிகாரங்களைக் கொண்டிருக்கவேண்டுமெனவும், இங்கு இயற்றப்படுஞ் சட்டங்களிற் குற்றங்குறைகள் ஏற்பட்டாலும் அவற்றைத் திருத்தியமைக்க, தீர்ப்புக்கூற நீதிமன்றத்திற்குக்கூட உரிமை வழங்கப்படமாட்டாது என்னுஞ் சிந்தனையின் அடிப்படையிற் செயல் திட்டங்களை கொல்வின் ஆர்.டி.சில்வா உருவாக்கினார். இந்நடவடிக்கை அடிப்படை உரிமைகளுக்கு நீதிமன்றம் அளிக்கும் பாதுகாப்புக்கு முரணானதெனக் கூறப்படுகிறது. **முக்கிய குறிப்பு** – 1972.10.03இல், தமிழரசுக்கட்சித் தலைவர் எஸ்.ஜே.வி.செல்வநாயகம் தேசியஅரசுப் பேரவையில் தமிழில் ஆற்றிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த உரையைப் படித்தறிக.

1970இல், பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா, தனது கணவரான எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்காவால் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்ட நாடாளுமன்ற அரசியல் யாப்பு அடிப்படை உரிமைகள் விடயத்தையிட்டுக் கவனஞ் செலுத்துமாறு கொல்வின் ஆர்.டி.சில்வாவுக்குக் கடிதம் எழுதியதாகவும், பெரும்பான்மையின பௌத்த சிங்கள மக்களின் அரசியல்ஆதாயங் கருதி இவ்விடயம் கைவிடப்பட்டதாகவுங் கூறப்படுகிறது. சிறுபான்மையினரைப் பொறுத்தவரையில் மேற்கூறப்பட்ட விடயம் ‘திரைந்து போன பாலாக’ மாறியதைக் காணலாம்.

பௌத்தமதத்தைப் பாதுகாப்பது அரசின் கடமையென விதியெழுதி, பௌத்தசிங்கள ஆளும் வர்க்கத்தின் மேலாதிக்கத்தை வலுப்படுத்தி, இலங்கைத்தீவின் வரலாற்றை மாற்றியமைத்த கொல்வின் ஆர்.டி.சில்வா புதிய அரசியல் யாப்பின் மூலம் பௌத்தசிங்கள மேலாதிக்க ஒற்றையாட்சிச் சிந்தனையை மேம்படுத்திய பெருமைக்குள்ளாகிறார்.

பலசாலி வாய் திறந்தால் ஊர் வாய் மூடவேண்டும் என்னும் நிலைக்குள் பெரும்பான்மையின் அதிகார வலிமை சிறுபான்மையின் நியாயமான உரிமைகளைக் கூட விழுங்கிவிடுகிறது.

1977இல், புதிய பிரதமராகப் பதவியேற்ற ஜே.ஆர்.ஜெயவர்த்தனா, 1978இல், இரண்டாவது புதிய குடியரசு அரசியல் யாப்பைத் தயாரித்தபோது, அடிப்படை உரிமைகள், உயர் நீதிமன்றத்துக்குள்ள அதிகாரங்கள், நாடற்றவர்களின் பிரச்சினைகள் உட்பட்ட பல சிக்கல்களை உள்ளடக்கியிருந்தார். 1972இல், நடைமுறைப்படுத்தப்பட்ட ஒற்றையாட்சித் திட்டம், பௌத்தமத பாதுகாப்பு, அதன் வளர்ச்சிக்கான திட்டம், சட்டம் இயற்றுந் திட்டம் ஆகியவற்றை மாற்ற முனையாத சர்வஅதிகாரம் உடைய சனாதிபதி ஆனார். நாடற்றவர்கள் பிரச்சினைக்கு ஓரளவு தீர்வு கண்டு அடிப்படை உரிமைகளுக்கு உத்தரவாதம் அளித்திருந்த போதும், ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது பல உரிமைகளுக்கு இரண்டாவது அரசியலமைப்புத் திட்டம் பாதுகாப்பளிக்கவில்லையெனவும் அரசியல்அமைப்பின் அடிப்படை உரிமைகள் பற்றிய அத்தியாயத்தில் திருத்தம் அவசியம் தேவையெனவும் அறிக்கை ஒன்று தெரிவிக்கிறது.

1986.05.04இல் இருந்து 1986.12.09 வரை, இலங்கையில் வாழும் தமிழ்மொழியைப் பேசும் அனைத்துச் சிறுபான்மைமக்களுக்குப் பாதுகாப்பாக இருக்கவேண்டிய இந்தியஅரசு இலங்கைஅரசோடும் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமையோடும் வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டு மாகாணசபைத் தீர்வுத் திட்டத்தை உருவாக்கியது. இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின்படி இத்திட்டத்தில் முடிவுறாத சில விடயங்கள் பற்றி இரு அரசுகளும் பேச்சுவார்த்தை நடத்துமென ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா இதுபற்றிய பேச்சுக்களை நடத்த மறுத்தார்.

***(இந்தியாவை, இலங்கையில் வாழும் தமிழ்மொழியையும் சிங்களமொழியையும் பேசும் மக்களின் முன்னோர்களின் நாடாகப் பொதுவாகக் கூறலாம்)

முடிவுறாத இரு தீர்மானங்களை அடக்கிய மாகாணசபைச் சட்டத்தை 13வது அரசியல் சட்டத் திருத்தத்தின் மூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றினார் ஜே.ஆர். ஈழத்தமிழர்களின் அடிப்படை அரசியற் பிரச்சினைகளைக் கருவாகக் கொண்டோ, இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்குடனோ இத்திட்டம் உருவாக்கப்படவில்லை. இது பரவலாக முழு இலங்கையின் பெரும்பாலான சிங்கள மாகாணங்கள் உட்பட 09 மாகாணங்களுக்கு வரையறுக்கப்பட்ட முறையில் நிருவாக அதிகாரத்தை விரிவுபடுத்தி, இலங்கை அரசின் நேரடிக்கட்டுப்பாட்டுக்குள் முழு இலங்கையையும் வைத்திருக்க உதவுகிறது.

சனாதிபதி – ஆளுனர் - பாராளுமன்றம் ஆகியவற்றுக்கு அனைத்து அதிகாரங்களையும் வழங்கியதோடு, மாகாணசபை களின் ஆட்சியதிகாரங்களுக்கான சட்டம் இயற்றும் அதிகாரம், நிறைவேற்றும் அதிகாரம் மட்டுப்படுத்தப்பட்டிருப்பதோடு செயற்படுத்துவதற்கு முட்டுக்கட்டையும் போடப்பட்டுள்ளது. அவசரகால நிலையை உருவாக்கி, பயன்படுத்தி சபைகளைக் கலைக்கவும் நிருவாகத்தை செயலிழக்கச் செய்வதற்கும் சனாதிபதிக்கு உரிமைகள் உள்ளதோடு சபைகள் நிறைவேற்றும் சட்டங்களை நிராகரிக்கும் அதிகாரமும் இவருக்குண்டு.

சனாதிபதியின் நிழலான ஆளுனர் முழு நிருவாக அதிகாரங்களைக் கொண்டவராக, சனாதிபதியின் கட்டளைகளை நிறைவேற்றுபவராக, மாகாண முதலமைச்சருக்கும் அமைச்சரவைக்கும் கட்டுப்படாதவராக அரசின் அதிகாரத்தை மாகாணங்களின் மீது திணிப்பவராக இயங்குவார். மொத்தத்தில், மாகாணசபை நிருவாகம் ஆளுனரின் ஆட்சிக்குட் பட்டதாக அமையும்.

பெரும்பான்மையினச் சிங்கள ஆட்சியாளர்களின் ஆதிக்க அரண்மனையான பாராளுமன்றம் மாகாணசபைகளுக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் துறைகள் சம்பந்தமாகச் சட்டமியற்றும் ஆற்றலைக் கொண்டிருப்பதோடு சபைகளைக் கட்டுப்படுத்தும் அதிகாரத்தையும் கொண்டுள்ளது.

இத்தீர்வுத்திட்டமானது பிரதேச பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படையான பல முக்கிய துறைகளை மத்திய அரசின் பொறுப்பில் ஒதுக்கி இருக்கிறது. விவசாயம், கைத்தொழில், மீன்பிடித்துறை, காணிஅபிவிருத்தி, நிருமாண வேலைகள், புனர்வாழ்வு, உள்நாட்டு அரசாங்க சேவை போன்ற முக்கிய துறைகள் மாகாணசபை நிருவாகத்திற்கு உட்படவில்லை. அரச காணிகள் என்னும் போர்வையில் நில உரிமை, காணி ஒதுக்கீட்டு அதிகாரம், மாகாண காவல் துறை, நீதித்துறை, உயர்கல்வித்துறை ஆகியன மத்திய அரசுக்குச் சொந்தமாகின்றன. நீர்ப்பாசனத்திட்டம், தேசிய அபிவிருத்தித்திட்டம் என்னும் வழிகளில், சிறுபான்மையின மக்களின் மாகாணங்களில் பெரும்பான்மையின மக்களைக் குடியேற்றி இவர்களின் குடிப்பரம்பலை அதிகரிக்க இத்தீர்வுத்திட்டம் உதவுகிறது.

இத்திட்டத்திலுள்ள குறைபாடுகளைக் களைந்து நடைமுறைப்படுத்துவதற்கு முன்னாள் பிரதமரும், 08.01.2015இற்குப் பின் இடைக்காலப் பிரதமராகப் பதவியேற்ற ரணில் விக்கிரமசிங்கவும், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனும் செய்து கொண்ட (Internal self government arrangement) உள்ளக சுயாட்சி ஒழுங்கமைப்பு ஒப்பந்த ஆவணத்தில் 26 விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருந்ததாகவும், அதில் மாகாணசபைக்கு காணி, காவல் துறை, நீதிமன்ற அதிகாரங்கள் மற்றும் அம்மாகாணங்களில் சிறியளவில் வரியறவிடும் அதிகாரம் போன்ற விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருந்ததாகவும், பிரபாகரன் உள்ளக சுயாட்சி வழங்கப்படவேண்டும் எனக் கோரியிருந்ததாகவுங் ⟶

கூறப்படுகிறது. தற்போது, வடமாகாண முதல்வர் விக்னேஸ்வரனும் அதைக்கேட்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. அப்போது அதை இழுத்தடிக்காமல் வழங்கியிருந்தால் ஒன்றரை இலட்சம் மக்களும், முப்பதாயிரம் இராணுவத்தினரும் இறக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது.

மேற்கூறப்பட்டபடி சட்டஆக்கம் பெற்ற அரசியல் யாப்புக்களின் இறுக்குப்பிடி இனமுரண்பாடுகளை அதிகரிக்கச் செய்து, ஆயுதப் போராட்டத்தை ஏற்படுத்தி, பல உயிர்களைக் காவுகொண்டு, பலகோடிப் பெறுமதியான நட்டத்தை உண்டுபண்ணியதோடு மட்டுமல்லாது துன்பங்களையும் - துயரங்களையும் வாழ்நாள் பூராவும் ஏற்படுத்தியுள்ளது. போர் விதிகளுக்கு முரணாக, ஈவுஇரக்கமின்றித் தனது நாட்டு மக்களில் ஒன்றரை இலட்சம் பேரைக்கொன்று குவித்துள்ளார் எனக்கூறிப் போர்க்குற்றவாளியாக்கப்பட்டுள்ளார் இலங்கையின் 5வது நிறைவேற்றதிகாரம் கொண்ட முன்னாள்சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ. ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை அவையில் இவர்மேல் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதை அனைவரும் அறிவர்.

தற்போது, இவர்மேல் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குக்கு நியாயங்கோரி முன்னோக்கி ஒரு சாராரும், வழக்கைப் பின்தள்ளி நீதி கிடைக்காமற் செய்வதற்கு ஒரு சாராரும் முன்னிற்பதைக் காணலாம். பலநாடுகள் இதை மனிதஉரிமை மீறல் எனக்குற்றஞ்சாட்டியதாகக் கூறப்படுகிறது. நீதி கிடைக்கவேண்டுமெனக் குரல் எழுப்பிய பலநாடுகள் அரசியல் இலாபங் கருதி அடக்கி வாசிக்கத் தொடங்கியுள்ளதையும், மனிதவுரிமை ஆர்வலர்கள் நீதியை எதிர்பார்த்து நிற்பதையும் அவதானிக்கலாம்.

அளப்பரிய நிறைகளை ஓரரசு கொண்டிருந்த போதிலும், அரசநிருவாகப்பொறுப்புள்ள சிலரது தவறான முடிவுகளால் ஏற்படும் குறைகள் மட்டும் உலகக்கண்களுக்குத் தோன்றுவதால் அவ்வரசு தன்குடிமக்களுக்குத் தீங்கிழைத்ததாகக் கூறலாம்.

ஒரு நிலத்தில் வாழும் மனிதக்குழுவை மக்கள் என அழைப்பர். இவர்கள் பெரும்பாலும் ஒரேமாதிரியான வாழ்க்கைமுறையையும், பொதுமொழி, பொதுமதம் இவர்களின் பெறுமதி ஒன்றாகவும், இவர்களின் ஈடுபாடுகள் ஒத்ததன்மையுள்ளதாகவும் இவர்கள் ஒரேமாதிரியான கடந்த காலத்தைக் கொண்டவர்களாகவும் இருப்பர்.

அனைத்து ஆட்சியதிகாரங்களுடன் தன்னைத்தானே சுதந்திரமாக ஆளக்கூடிய அரசின் நிலப்பரப்பில் வாழும் மேற்கூறப்பட்ட மக்களோடு மிகநெருங்கிய தொடர்புடையது இனம். இவ்வினத்தின் குடியியல் உரிமைகளை குடியுரிமைச் சட்டவிதிகள் மூலம் உறுதிப்படுத்துதல் இனஅடையாளம் எனலாம்.

அனைத்து அதிகாரங்களுடன் தன்னைத்தானே சுதந்திரமாக ஆளக்கூடிய அரசு இல்லாத நிலம், மொழி, மதம், தனியான வாழ்க்கைமுறை போன்ற அனைத்தையும் உள்ளடக்கிய இனங்கள் பல நாடுகளில் இருக்கையில், சில நாடுகளில் இவ்வினங்கள் மட்டுப்படுத்தப்பட்ட அரசியல் அதிகாரங்களுடன் தங்களுடைய நிலங்களில் அரசமைத்து ஆட்சி செய்து வருவதைக் காணலாம்.

அரசியல் - சமூகத்தளங்களில், மக்களை இனம், மொழி, மதம், கலாச்சாரம், பாரம்பரிய மரபுவழி வாழ்க்கைமுறை, நிறம், வேலைவாய்ப்பில் தனது இனத்துக்கு முன்னுரிமை போன்ற காரணிகளை நியாயப்படுத்தி இனங்களைப் பிரித்து அரசை மக்களுடன் நெருங்கமுடியாதவாறு செய்வது ஒடுக்கும் முற்றுமுழுதான தன்னாட்சி அதிகாரமுடைய பெரும்பான்மையின பெருந்தேசியவாதமாகும்.

அரசை மக்களுடன் நெருங்கக்கூடியமுறையில் வரைமுறைகட்குள் எழுதப்பட்ட அரசியல் மற்றும் வரலாற்று ரீதியான பார்வையுடன், மனிதர்கள் தங்களைத் தாங்கள் ஒரு கூட்டத்தை, குழுவைச் சார்ந்தவர்கள் என எண்ணும் நிலையை உருவாக்குவதே சுயநிர்ணயஅரசியல் உரிமைகளற்ற சிறுபான்மையின மக்களின் தேசியவாதமாகும். இவ்வடிப்படையில் நோக்கின் இலங்கைத்தீவின் அரசியற்கோட்பாடுகள், தலைவர்களின் வழிநடத்தல்கள் இத்தீவை அழிவுப்பாதையை நோக்கி இழுத்துச்செல்வதை அவதானிக்கலாம்.

ஒடுக்கும் பெரும்பான்மையினப் பெருந்தேசியவாதிகளால் சிறுபான்மையினத் தேசியவாதிகளிற் சிலரை உள்ளடக்கி இந்தியாவின் உதவியுடன் உருவாக்கப்பட்ட சிறுபான்மையினத்தின் தாயகம் எனக்கூறப்படும் வடக்கு-கிழக்கு மாகாணங்கள் இணைந்த மாகாணசபைத் திட்டம், ஜே.வி.பியினரின் வேண்டுகோளுக்கிணங்க, 16.10.2006இல், முன்னாள் உயர்நீதிமன்ற நீதியரசர் சரத் என்.சில்வாவின் உதவியுடன் 13வது திருத்தச்சட்டத்தில் பிரிவு 17ஏ மூலம் வடக்கு மாகாண சபையென்றும் கிழக்கு மாகாணசபையென்றும் துண்டாடப்பட்டு இரு மாகாணசபைகள் உருவாக்கப்பட்டன.

கிழக்கு மாகாணசபைக்கான தேர்தல் 2008ம் ஆண்டு நடத்தப்பட்டு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில், பிள்ளையான் என அழைக்கப்படும் முன்னாள் ஆயுதப்போராளி சிவநேசதுரை சந்திரகாந்தன் முதலமைச்சரானார். இவர் ஆளும் பெரும்பான்மையின அரசியலுக்குச் சார்பான சிறுபான்மையினத்தைச் சேர்ந்த தமிழ்பேசும் இந்து மதத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

2012இல், நடைபெற்ற தேர்தலில் ஐக்கிய மக்கள் கூட்டமைப்பும் முஸ்லிம் காங்கிரசும் சேர்ந்து ஆட்சியமைக்க முதல்வராக மொஹமட் நஜிப் அப்துல் மஜித் பதவியேற்றார். இவர் பெரும்பான்மையின அரசியலுக்குச் சார்பான சிறுபான்மையினத்தைச் சேர்ந்த தமிழ்பேசும் இஸ்லாமியர் என்பது குறிப்பிடத்தக்கது.

கிழக்குமாகாண ஆட்சியை ஆளும்அரசாங்கத்துடன் சேர்ந்து நடத்திக்கொண்டிருந்த சிறீலங்காமுஸ்லிம்காங்கிரஸ் அண்மைக்காலங்களில் முஸ்லிம்மக்கள்மீது கட்டவிழ்த்து விடப்பட்டிருந்த அநீதிகள்பற்றியும், கொடுமைகள்பற்றியும் தனது கடுங்கோபத்தைத் தெரிவித்திருந்தாலும், 'நாட்டில் நிரந்தரசமாதானத்தை ஏற்படுத்தி நாட்டின் ஒட்டுமொத்த அபிவிருத்திக்கான வேலைத்திட்டங்களைக் காத்திரமான முறையில் நடைமுறைப்படுத்தும் செயல்வீரர் சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ.

காணி, காவல்துறை அதிகாரங்கள் தொடர்பாகப் பல்வேறு கருத்துப்பரிமாற்றங்கள் இடம்பெற்று வருகின்றன. 13வது திருத்தச்சட்டத்தின் மூலம் மக்களுடைய அடிமட்டத்தேவைகளை நிறைவுசெய்யக்கூடிய வகையில் கிழக்குமாகாண சபைக்கு அதிகாரம் தாராளமாக இருக்கிறது. காணிவிடயம் தொடர்பாக மத்திய அரசுக்குச் சிபார்சு வழங்குகின்ற அதிகாரம் கிழக்கு மாகாணசபையிடம் இருப்பினும் இறுதித்தீர்மானம் எடுக்கும் அதிகாரம் மத்திய அரசிடம் உள்ள தனால், இம்மாகாணத்தை வாழ்விடமாகக் கொண்ட மக்கள் பாதிக்கப்படாத வகையில் அதை உறுதிசெய்யும் அதிகாரம் கிழக்குமாகாணசபையிடம் இல்லாதிருப்பது கவலைதரும் விடயமாகும். அபிவிருத்தி குறித்த வேலைத்திட்டங்களுக்குத் தாராளமாக நிதிஒதுக்கீடு செய்யப்பட்டாலும், பெரும்பான்மையினத்தின் நடவடிக்கைகள்மீதான சிறுபான்மையினத்தின் அச்சம் இடைவிடாது தொடர்வதனால் பெரும்பான்மையினத்தைச்சேர்ந்த ஆட்சித்தலைவரான சனாதிபதியுடன் உடன்பட்டுப்போக முடியாது'. இந்நிலையிருந்ததாகக் கிழக்குமாகாண சுகாதார, சுதேசவைத்தியம், விளையாட்டுத்துறை,

கூட்டுறவு, தகவல்தொழில்நுட்ப முன்னாள் அமைச்சர் எம்,ஐ.எம்.மன்சூர் தெரிவித்திருந்தார். அமைச்சர் எம்,ஐ.எம்.மன்சூர், முதல்வர் மொஹமட் நஜிப் அப்துல் மஜித்தின் வழிநடத்தலில் இயங்கியவர் என்பதைக் கோடிட்டுக் காட்டலாம்.

08.01.2015இல், இலங்கையில் ஏற்பட்டுள்ள சனாதிபதி மாற்றத்துக்குப் பின், முன்னாள் சனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் வெற்றிக்காகப் பாடுபட்டு, இறுதிநேரத்தில் சம்பிரதாயத்துக்காகப் பின்னாள் சனாதிபதி மைத்திரிபால சிறீசேனாவுக்கு ஆதரவைத் தெரிவித்த சிறீலங்கா முஸ்லீம் காங்கிரஸ், மகிந்த ராஜபக்ஷவின் தோல்விக்குப் பின்பும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் கூட்டுச்சேர்ந்து, 06.02.2015இல், கிழக்குமாகாணசபையின் ஆட்சியைக் கைப்பற்றியது.

ஆட்சிமாற்றத்துக்கு முன்பு இக்கூட்டமைப்புடன் சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆட்சியமைத்திருந்தது. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் மேல்நிலைக்கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தோல்வியுற்ற சனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் வழிநடத்தலில் இயங்கிவந்தது குறிப்பிடத்தக்கது. இவருடன் முஸ்லிம் காங்கிரஸ் எழுதிய ஒப்பந்தம் செல்லுபடியற்றதெனக் கூறப்பட்டிருந்தும் தொடர்ந்தும் ஆட்சி நடைபெற்று வந்தது.

திருகோணமலை, சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பிரதித்தலைவர் நஸீர் அஹமட், 06.02.2015இல், கிழக்கு மாகாண ஆளுநர் முன்னிலையில் கிழக்குமாகாண முதல்வராகப் பதவியேற்ற நேரத்தில், திருமலையைச் சேர்ந்தவரும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன், முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ஹக்கீமுடன் கிழக்கு மாகாணசபையில் கூட்டாட்சியமைக்க 3தடவைகள் பேச்சுவார்த்தைகள் நடத்தியதாகவும், 3தடவைகளும் இனஅடையாளம் பூசப்பட்டு இம்முயற்சி தடைப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

கிழக்கு மாகாணத்தில் தமிழ்மொழியைப் பொதுமொழியாகவும், பல மதங்களை மதங்களாகவும் கொண்டு வாழும் மக்கள் குழுவில், தமிழ்மொழியை அன்றாட பேச்சுமொழியாகவும் (சிறியளவில் தொனிமாற்றத்துடன்), எழுத்துமொழியாகவும் இஸ்லாம் மதத்தை மதமாகவும் கொண்ட ஒரு மனிதகூட்டம் தன்னை 'முஸ்லிம்' என்னும் அடையாளத்துக்குள் அடக்க வேண்டிப் பல போராட்டங்களை நடத்திச் சிறியளவில் வெற்றியும் பெற்றுள்ளது. இதன்மூலம், இதனை வழிநடத்திச் செல்வோரின் எண்ணப்படி இது தன்னால் தனித்து இயங்கமுடியும் என்னும் நினைப்புடன் குறுகிய கால அரசியல் இலாபங் கருதி தமிழ்மொழியைப் பேசும் மற்றைய மனிதக்குழுக்களுடன் சேர்ந்து தமிழ்பேசும் சிறுபான்மையின மக்கள் என்னுங்கூட்டுக்குள் இயங்க மறுத்து வருவதை அவதானிக்கலாம்.

ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம் என்னும் முதுமொழியை இது நினைவுறுத்துகிறது.

ஒரு காலத்தில், இலங்கையில் மாவட்டசபையைக் கூட உருவாக்கமுடியாத நிலையில், மாகாணசபை உருவாக்கத்துக்காக, அதன் உரிமைகளுக்காக மொழி உரிமைப்போராட்டத்துக்காக, காணிஉரிமைப் போராட்டத்துக்காக ஒரு முஸ்லிம் தலைவரும் பங்கெடுத்துக்கொள்ளவில்லையென கிழக்குமாகாண ஆட்சியமைப்புப் பேச்சுவார்த்தையில் தோல்வியைத் தழுவிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந்தன், சாதாரண அடித்தள முஸ்லிம் மக்களைத் தவிர்த்து, படித்த முஸ்லிம் அரசியல் தலைவர்களைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

வடக்கு – கிழக்கு இணைக்கப்பட்டு சனநாயக முறைப்படி திறமையான முஸ்லிம் முதலமைச்சர் ஒருவர் தெரிவுசெய்யப்படுவாரேயானால் அதனைக் கைநீட்டி வரவேற்கத் தயாராக இருப்பதாகவும், இல்லையெனில் வடகிழக்கில் தமிழ்மக்கள் அதிகமாக வாழும் பிரதேசங்கள் ஒன்றிணைந்த முறையில் அமையக்கூடிய ஒழுங்குமுறை உருவாகுவதற்குரிய சூழ்நிலை ஒன்று வலுப்பெறுமென உறுதியாகக் கூறும் இரா.சம்பந்தன், தமிழ்பேசும் சிறுபான்மையின மக்களுக்கு அதிகாரப்பகிர்வைக் கேட்டபோது முஸ்லிம் அரசியற்கட்சித் தலைவர்கள் உரிமைப்போராட்டத்தில் ஈடுபடாது தட்டிக்கழித்துவிட்டு ஆளும் பெரும்பான்மையின அரசாங்கத்துடன் சேர்ந்து நின்றதாகவுங் கூறியுள்ளார்.

போர்க்காலத்திற் பாதிக்கப்பட்ட தமிழ் - முஸ்லிம் உறவு போர் முடிவடைந்து 5 வருடங்களாகியும் உறவில் மாற்றமேற்படவில்லையெனவும், வரவு – செலவுத் திட்டம் வெற்றிபெற தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு வழங்கிய ஒத்துழைப்பு தமிழ் - முஸ்லிம் உறவைக் கட்டியெழுப்புவதற்கு அத்திவாரமாக அமைகிறதெனவும் மாகாணசபையைப் பொறுத்தவரை அதிகாரப்பகிர்வு என்பது அமைச்சுப்பதவியில் தங்கியுள்ளதால் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பினரும் அமைச்சுப் பதவியைக் கட்டாயம் ஏற்கவேண்டுமெனக் கூறியுள்ளார் புதிதாகப் பதவியேற்ற முதலமைச்சர் ஹபீஸ் நஸீர் அஹமட்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினரில் பெரும்பான்மையோருக்கும் முதல்வர் அஹமட்டுக்கும் முரண்பாடு அதிகரிக்க, பெரும்பான்மைப் பலமுடைய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அஹமட்டின் காலையிழுத்துவிட முதல்வர் தொப்பென முகங்குப்புற வீழ்ந்தார். கிழக்குமாகாணசபை நிருவாகஞ் சீர்குலைந்த நிலையில், சனநாயக நம்பிக்கைகளுக்கு மாறாகச் செயற்பட்ட முதல்வர் என வருணிக்கப்பட்ட முதல்வர் தமிழ்த்தேசியக்கூட்டமைப்புடனும் இதர கட்சிகளுடனும் ஒப்பந்தஞ் செய்து மீண்டும், தன்னிலையைத் துரிதப்படுத்தி, எழுந்து அடுத்த சுற்றுக்கு முதல்வரானார் நஸீர் அஹமட். தற்போது, இவரது வழிநடத்தலில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு அமைச்சுப்பதவியை ஏற்றுக் கூட்டாட்சிசெய்து வருவதை அவதானிக்கலாம்.

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்னும் முதுமொழியை நினைவு கூரலாம்.

அஹமட் பதவியேற்பதற்கு முன்பு, 10.05.2008இல், முதலமைச்சராக சந்திரகாந்தன் இருந்த காலத்திலும், 2012இல், நஜீப் ஏ மஜீத் முதலமைச்சராக இருந்த காலத்திலும் தமிழ் - முஸ்லிம் உறவு பாதிக்கப்படவில்லையெனவும் முதலமைச்சர் பதவி இனஅடையாளமாக வகுக்கப்படவில்லையெனவும் இனம், மதம், கட்சி யாவற்றையுங் கடந்து கிழக்கு மாகாணசபை ஆட்சியில் முஸ்லிம்கள் பங்காளிகளாக இருந்தார்கள் என்பதும் வரலாறு.

கிழக்கு மாகாணசபையின் நிலை மேற்கண்டவாறிருக்க, வடக்கு மாகாணசபைக்கு வருவோமாயின், வடமாகாணத் தேர்தல் அறிவிப்பைக் காலங்கடத்தி, 21.09.2013இல், அரசு சட்டபூர்வமாகத் தெரிவித்தபோது பலர் வேட்பாளர்களாகத் தங்களைப் பதிவு செய்து கொண்டனர்.

செய்தி ஊடகங்களில் மன்னர்போல் உருவகப்படுத்தப்படும் இரா.சம்பந்தன் தலைமையில் இயங்கிவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்காக முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதியும், முன்னாள் சனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசுக்குச் சார்பாகவிருந்த அமைச்சரும், பெரும்பான்மையினத்தைச் சேர்ந்தவருமான திரு.வாசுதேவ நாணயக்காராவின் சம்பந்தியுமான திரு.சி.வி.விக்னேஸ்வரன் முதலமைச்சுக்கான வேட்பாளராக அமர்த்தப்பட்டார்.

மன்னராட்சி அழிக்கப்பட்டு, அன்னிய ஆட்சியை வெளியேற்றி, மக்களாட்சி மூலம் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசாகிய இலங்கை நாட்டில், இந்நாடு குடியரசாக வேண்டுமென ஆரம்பக் குரல் எழுப்பியவர் தமிழரசுக்கட்சித்தலைவர் திரு.எஸ்.ஜே.வி.செல்வநாயகம். இவரால் தலைமை தாங்கப்பட்ட தமிழரசுக்கட்சியின் இன்றைய தலைவர் மாவை சேனாதிராஜா, உறுப்பினரான திரு.இரா.சம்பந்தன் ஆகியோர் முடிசூட்டப்பட்டு மாலையிடப்பட்டு மன்னர்களாக மக்களாட்சியில் மன்னராட்சியை முன்னெடுத்துச் செல்வோராக அழைத்து வரப்பட்ட காட்சியை ஊடகங்கள் படம்பிடித்துக் காட்டியதன் மூலம் உலகமக்கள் முன்னிலையில் இவர்கள் மன்னர்களாக வலம்வந்ததைக் காணமுடிந்தது.

முடிசூட்டப்பட்ட மன்னர் இரா.சம்பந்தனைத் தலைவராகவும், ஆயுதந்தாங்கிய முன்னாள்போராளிகளை உறுப்பினர்களாகவுங் கொண்ட தமிழ்த்தேசியக்கூட்டமைப்புக்காக சி.வி.விக்னேஸ்வரன் முதல்வர் வேட்பாளராக வடமாகாணசபைத் தேர்தற் களத்தில் நிற்குங் காலத்தில், சக வேட்பாளர்களுந் தமிழர்கள் என்னும் ஒற்றுமையுடன் போட்டியிற் கலந்துகொள்ள வேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்திருந்தார்.

→

தமிழரசுக்கட்சியின் மேற்பார்வையில் இயங்கும் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு (தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இலங்கைச் சட்டத்தினால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை) தமிழரசுக்கட்சியின் சின்னத்தில் தேர்தலிற் போட்டியிடுவதனால் கட்சியின் கோட்பாடுகளுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் முரணாக நடந்து கொள்ள முடியாது. முரணாக நடந்துகொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டால் பதவியைக் கைவிட்டு வெளியேறிவிடுவதாகக் கூறியிருந்தார் வேட்பாளர் சி.வி.விக்னேஸ்வரன்.

சமுதாயத்தை மாற்றுவதற்காகவோ, நடைமுறையை மாற்றுவதற்காகவோ இத்தேர்தலைப் பயன்படுத்தவில்லையெனவும், தான் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் மக்களை மாற்றும் என்றும், இதுவரை காலமும் தமிழ்மக்கள் நடுவில் இருந்த வேற்றுமைகள் பெரிதுபடுத்தப்பட்டுள்ளதாகவும், இதனால் வரும் 50வருடங்களில் தமிழ்மக்கள் இலங்கையில் இருந்தார்களா என்னுங் கேள்வியெழக்கூடிய நிலை ஏற்படுமெனவுங் கூறியிருந்தார். 100வருடங்களுக்கு முன், மேற்குக் கரையோரத்தில் சிலாபம், புத்தளம் போன்ற இடங்களில் தமிழ்பேசும் மக்கள் இருந்ததாகவும் இவர்களுடைய காணி உறுதிகள் தமிழ்மொழியிற் காணப்பட்டதாகவும், இன்று, இவர்கள் அடியோடு மாற்றம் அடைந்துவிட்டதாகவுங் கூறும் இவர், மலையகத் தமிழர்களில் பலர் சிங்களமொழியிற் படித்து, அம்மொழியைப் பேசி அவ்வினத்தவருடன் திருமணத்தொடர்பு கொண்டு தங்களுடைய தமிழ்ப்பெயர்களை சிங்களப்பெயர்களாக மாற்றி தமிழர்கள் அல்லாதவர்களாகிவிட்டார்கள் எனத் தனது அனுபவத்தைப் பகிர்ந்துள்ளார்.

மேலும், பெரும்பான்மையின மக்களால் நிருவகிக்கப்படும் அரசு தமிழ்மக்களுக்கு நெருக்கடிகளைக் கொடுப்பதனால், பலர் நாட்டைவிட்டு வெளியேறி பல நாடுகளில் முக்கிய பொறுப்புகளில் கடமைபுரிந்து வருகின்றனர் எனவும், இதனால் இலங்கையில் வாழும் எஞ்சியுள்ள தமிழ்மக்களுக்குக் கடமையாற்ற தன்னைப் போன்றோர் ஒற்றுமையுடன் செயற்பட வேண்டுமெனவும், இவர்களுடைய நிலங்களில் இருந்து இவர்களை வெளியேற்ற அரசு நடவடிக்கை எடுக்காதவாறு அரசியல் நடவடிக்கைகள் இடம்பெறவேண்டுமெனவுங் கூறியிருந்தார். வடமாகாணத்தில் வாழும் வேலையற்ற இளைஞர், இளைஞிகளுக்கும், மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்குந் திட்டங்களை வகுத்து செயற்படப்போவதாகவுந் தெரிவித்திருந்தார் ஆன்மீகவாதி சி.வி.விக்னேஸ்வரன்.

இந்நேரத்தில், இதே மக்கள் குழுவைச் சார்ந்த ஆயுதந் தாங்கிய முன்னாள் போராளிக்கட்சியான ஈழமக்கள் சனநாயகக் கட்சியின் முக்கிய முதன்மை வேட்பாளரான எஸ்.தவராசா தனது தேர்தற் காலஅறிக்கையில், மத்திய அரசுடன் தனது கட்சி கொண்டிருக்கும் இணக்க அரசியற் கொள்கை மூலம் (மத்திய அரசு என்பது பலம்பொருந்திய பெரும்பான்மைச் சிங்கள இனத்தவர்களால் வழிநடத்தப்படுவது) தமிழ்மக்களின் அரசியல் உரிமைகள், நிலத்தின் அபிவிருத்தி போன்றவற்றையும், இலங்கையில் வாழுஞ் சிங்கள, முஸ்லிம் இனங்களோடு ஒன்றுபட்ட இலங்கைக்குள் தமிழ்மக்களும் கௌரவமாக இணைந்து வாழும் நிலையையும் நியாயமான முறையில் பெற்றுக் கொடுப்பதாகக் கூறியிருந்தார். மேலும், தனது கட்சி வடமாகாணத்தில் இணக்க அரசியல் மூலம் நடத்திக்கொண்டிருக்கின்ற அபிவிருத்தி வேலைத்திட்டங்களை எடுத்துக்காட்டாக முன்வைத்த வேட்பாளர் தவராசா, தான்சார்ந்த மக்களின் உரிமைகளுக்கான போராட்டத்தைக் கைவிட்டு உரிமையற்றவர்களாக, உரிமைகளைப் பலிகொடுத்து, சொத்துக்களை இழந்து, வளங்களை அழித்து வாழமுடியாதெனவுங் கூறியிருந்தார்.

தான் இப்போராட்டத்தில் பங்காளியாக இருந்ததாகவும் போராட்டத்தைத் தவறாக வழிநடத்திய தலைமைகள் போராட்டத்தின் வாயிலாகக் கிடைத்த வாய்ப்புகளைக் கைநழுவ விட்டதாகவும், போராட்டத்தின் இலக்கைத் தவறவிட்டதாகவுங் குற்றஞ்சாட்டியுள்ளார்..

மாற்றம் வேண்டிய இலங்கை - இந்திய ஒப்பந்தத்தையும், 08.2000இல், தான் சார்ந்த கட்சியின் பூரண பங்களிப்புடன் தயாரிக்கப்பட்டு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அரசியலமைப்பு மாற்றத்துக்கான வரைவையுந் தவறவிட்டது வருத்தத்துக்குரிய விடயமாகக் கூறினார்.

இதன்நிலை எப்படியிருப்பினும், தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் நடவடிக்கைகள் தமிழ்மக்களின் அழிவுகளுக்கும், இழப்புகளுக்கும் வழிவகுக்கும் எனத் தான் கருதுவதால், இவர்களின் பிற்போக்குத்தனமான அரசியற்போக்கை தானுந் தனது கட்சியும் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை எனவும், தமிழ்மக்களுக்குப் பயனில்லாத எத்தகைய அரசியலையும் அணுகுமுறைகளையும் நியாயப்படுத்தி சமரசம் செய்துகொள்ளத் தான் ஒருபோதும் தயாராக இல்லையெனவுங் கூறியிருந்தார்.

எதுஎப்படியோ, இவர் வடமாகாணசபையின் எதிர்க்கட்சித் தலைவராகத் தமிழ்மக்களால் தெரிவு செய்யப்பட்டார் என்பது வரலாறு.

23.09.2013இல், நடந்து முடிந்த வடமாகாணசபைத் தேர்தலில் அதிகப்படியான தமிழ்மக்களின் வாக்குகளைப் பெற்று முதலமைச்சரானார் சி.வி.விக்னேஸ்வரன்.

'பதின்மூன்றாவது திருத்தச்சட்டத்தினால் வழங்கப்பட்ட உரிமையின் அடிப்படையில் மாகாணசபைத் தேர்தலிற் போட்டியிட்டு வெற்றிபெற்றோம். ஆனால் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அச்சட்டத்தின் கீழ் எமது மக்களுக்கு அரசியல் ரீதியான நிரந்தரத்தீர்வைப் பெற்றுக் கொடுக்கலாம் என்ற மனநிலையில் இத்தேர்தலிற் போட்டியிடவில்லை' என வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் வீரகேசரி வார இதழுக்கு 31.08.2014இல், சமகால அரசியல் பற்றி கருத்துத் தெரிவிக்கையில் மேற்கண்டவாறு கூறியிருந்தார்.

பதின்மூன்றாவது அரசியல் திருத்தச்சட்டம் கொடுத்துள்ள உரித்தின் கீழ் அரசியல் ரீதியான நிரந்தரத்தீர்வைப்பெற முடியாதெனவும் இத்திருத்தச்சட்டத்திலுள்ள குறைபாடுகளை வெளிப்படையாக மக்களுக்குத் தெரியப்படுத்தித் தேர்தலில் வெற்றி பெற்றதாகவும் ஒற்றையாட்சியின் கீழ் பெரும்பான்மைப் பலம் உடையவர்களால் பிராந்திய மக்களின் உரிமைகளைப் புறக்கணிக்க முடியுமெனப் புரிந்து கொண்டு தேர்தலில் நின்றதாகவுங் கூறியிருந்தார்.

பதின்மூன்றாவது திருத்தச்சட்டம் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான முதற்படியெனவும் விடையாகாதெனவுங் கூறும் நேரத்தில் வடக்கு – கிழக்கில் நிரந்தரத்தீர்வு ஏற்படுவதற்கு முன்னர், இராணுவத்தின் உதவியுடன் இம்மாகாணங்களில் குடிப்பரம்பலில் மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்கில் சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்த மத்திய அரசாங்கம் நாட்டாமை போற் செயற்படுவதாகவும், தற்போது, பேச்சுக்கான முனைப்புக்கள் வெளியாரின் அழுத்தத்தால் சாத்தியமாகுமெனவும் வெளிநாட்டு - உள்நாட்டு உந்துதல்கள் இன்றித் தமிழர்களுக்கு நீதி கிடைக்கப்போவதில்லையெனவுங் கூறியிருந்தார்.

தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வை எட்டிய பல்வேறு சந்தர்ப்பங்களில் தமிழர்கள் ஏமாற்றப்பட்டதாகவும் இனப்பிரச்சினை வாயிலாக பெரும்பான்மைச் சிங்கள மக்களின் பேராதரவை சிங்கள ஆட்சியாளர்கள் பெற்று அரசியல் இலாபம் தேடுவதாகவும் அரசிடம் பெரும்பான்மைப்பலமும் திறனும் இருக்கின்றபோதும் தேசியப் பிரச்சினையைத்தீர்க்க இதயசுத்தியுடன் இவர்கள் முனையவில்லை. எனவே மூன்றாம் தரப்பின் மத்தியட்சம் அவசியமாகிறது எனக்கூறியிருந்தார் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன். →

நடுநிலையை ஏற்பவர் பொறுப்பற்றவராக, மெய்யான கடமையுணர்வற்றவராக, காலத்தைக் கடத்துவதற்குத் துணை போபவராக, சம்பிரதாயத்திற்காகத் தலைமை தாங்குபவராக அல்லது தனது இலாபத்தைக் குறிக்கோளாகக் கருதிச்செயற்படுபவராக, தவறுகள் இருப்பினும், தான் எடுத்த முடிபை வலிந்து திணிப்பவராக இருந்தால், விளைவு 1987ம் ஆண்டிலிருந்து 2009ம் ஆண்டுவரையிலான காலப்பகுதியில் ஏற்பட்ட பயங்கரக் கொடுமைகளைக் கண்முன் நிறுத்தும்.

மக்கள் நீதிபதிகளானால் உரிமைப்போர் தொடரும். சாம்பல் மேட்டிலிருந்து மீண்டும் பீனிக்ஸ் பறவைகள் பறக்க வாய்ப்பேற்படும்.

கடந்த காலங்களில் வடமாகாணத்தில் முன்னர் இருந்த இயக்கங்களால், இராணுவத்தினரால், ஆளுனரால், அரசாங்கத் துக்குத் தொடர்புடைய அமைச்சர்களால் இடப்பட்ட சட்டத்துக்கு முரணான கட்டளைகளுக்கு சட்டத்துக்குப் புறம்பான முறையில் வடமாகாணச் செயலகங்களில் கடமைபுரிந்தவர்கள் செயற்பட்டு வந்துள்ளார்கள் எனக்கூறியுள்ளார் வடமாகாண முதல்வர் சி.வி.விக்னேஸ்வரன்.

இதன்வாயிலாக, சனநாயகம் அதிகார வர்க்கத்தின் கண்மூடித்தனமான கட்டளைகளுக்கு அடிபணிந்து பழக்கப்பட்ட தனால் வடமாகாணத்தில் சனநாயகவழியிற் சட்டம் அதிகாரவர்க்கத்துக்கு அஞ்சவேண்டிய நிலையிலுள்ளது எனக் கருதலாம்.

08.01.2015இல், சிறீலங்காவில் ஏற்பட்டுள்ள சனாதிபதி மாற்றத்துக்குப் பின், புதிதாகப் பொறுப்பேற்றுள்ள ஆளுனருடனும் முதன்மைச் செயலருடனும் இணைந்து நடவடிக்கைகளை மேம்படுத்தலாம் என்றும் அரசஊழியர்களும் இணைந்து பணியாற்றுவார்கள் எனவும் எதிர்பார்க்கும் முதல்வர் 1987ம் ஆண்டு, வரையப்பட்டிருந்த 13வது திருத்தச்சட்டத்தில் இருந்த உரித்துக்கள் படிப்படியாகப் பலவிதங்களில் குறைக்கப்படுவதாகவும், 13வது திருத்தச்சட்டத்தை, குறைக்கப்பட்ட, மாற்றப்பட்ட மேலுந் திருத்தப்பட்ட சட்டமாகத் தான் கருதுவதாகக் கூறுகிறார்.

கடந்தகால ஆளுனரும், முதன்மைச் செலரும் நடந்து கொண்ட முறை இச்சட்டத்தை உறுதிப்படுத்துவதாகவும், ஒற்றையாட்சியின் கீழ் 13வது திருத்தச் சட்டம் இருப்பதனால் மையஅரசின் தொந்தரவுகள் தொடர்ந்து உரித்துக்களுக்கு உத்தரவாதமற்ற நிலை ஏற்படும். தூரநோக்கில் தமிழ்மக்களின் பிரச்சினைகளுக்கு இத்திட்டம் வாய்ப்பாக அமையவில்லையெனவுந் தெரிவிக்கிறார். இதன்மூலம் ஏட்டுச்சுரைக்காய் கறிக்குதவாது என்னும் நிலை ஏற்படுகிறது.

இந்திய - இலங்கை அரசும், வடக்கு – கிழக்கு மாகாணசபைகளும் இணைந்து 13வது திருத்தச்சட்டத்தில் மாற்றங் கொண்டுவருவதற்கான முயற்சிகளில் ஈடுபட வேண்டும். இல்லாதுவிடின், இதனால் நன்மைகள் அடைய வாய்ப்பில்லை. இந்நாட்டில் உச்சநீதிமன்றத்திலிருந்து சிறுசிறு விடயங்கள் வரை பெரும்பான்மை, சிறுபான்மை என்னும் பேச்சுக்கள் எழுந்தவண்ணம் உள்ளன. இச்சூழலில் சிறுபான்மையினத்துக்குச் சார்பான வகையில் உள்நாட்டுப்பொறிமுறைகள் அமையும் என எதிர்பார்க்க முடியாது. எனவே, பன்னாட்டு உதவிகளின் ஊடாகப் பொறிமுறைகள் அமையவேண்டும். இதனூடாகத் தமிழர்களுக்கு நிரந்தரத் தீர்வு கிட்டும். நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்படுமென எண்ணுகிறார் முதல்வர் விக்னேஸ்வரன்.

இந்நிலை, தற்போது வரைக்கும் சந்நியாசி பயணம் திண்ணையில் என எண்ணவைக்கிறது.

வடமாகாணத்தின் தேவைகளைக் கண்டறிய ஐக்கிய நாடுகள் சபையின் நிரந்தரப் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்ததாகவும் முன்னாள் பொருளாதார அமைச்சர் பசில் ராஜபக்ஷ இவர்களுடன் ஏற்படுத்திக்கொண்ட தொடர்பின் காரணமாக இது தோல்வியடைந்ததாகவுங் கூறுகிறார் முதல்வர்.

இதன்வாயிலாக, வெண்ணெய் திரளும்போது தாளி உடைந்த நிலையை உருவாக்கினார் பொறுப்புள்ள அமைச்சர் எனலாம்.

தற்போது ஆசிய அபிவிருத்தி வங்கி, உலகவங்கி, ஐக்கிய நாடுகள் சபையுடன் இணைந்து வடமாகாணம் சம்பந்தமான தேவைகள், கணிப்பு அறிக்கை ஒன்றை கூடிய கெதியில் தயாரிக்க உள்ளதாகக் கூறும் இவர், வடக்கில் கணவனை இழந்தோர் தொகை, போரில் உடலவயங்களை இழந்தோர் தொகை, இறுதிப்போருக்கு முன்னும் பின்னும் உள்ளவர்கள் தொகை போன்றவற்றில் சரியான கணக்கெடுப்பொன்றை ஐக்கிய நாடுகள் சபையுடன் சேர்ந்து நடத்தப்போவதாக மேலுங் கூறுகிறார். இந்தியாவில் வாழும் இலங்கைத் தமிழ்மக்களை (தமிழ்அகதிகளை) மீண்டும் வடக்குக்கு வரவழைப்பது தற்போதைய நிலையில் கடினமான செயல் எனவும் இவர்களின் நலன்களுக்கான திட்டம் எதுவும் தன்னிடமில்லை யெனவும் இவர்களின் காணிகளின் உறுதிகள் இராணுவத்தினரால் பறிமுதல் செய்யப்பட்டு தெற்கிலிருந்து வந்த சிங்கள மக்களுக்கு வழங்கப்பட்டுக் குடியேற்றப்பட்டுள்ளார்கள் எனவும், எனவே, முதலில் இராணுவம் வெளியேற்றப்படவேண்டும், திட்டங்கள் தீட்டியபின்பு இவர்களைக் கூட்டிவரலாம் என நினைப்பதாகவுங் கூறுகிறார் முதலமைச்சர்.

தேளுக்கு மணியங்கொடுத்தால் நாழிக்கு நாழி கொட்டும் இராணுவம், வேலியே பயிரை மேய்ந்தால் விளைவது எப்படி வடமாகாணத்தில்.

இராணுவத்துக்குத் தேவையற்ற காணிகளை உரியவர்களிடம் ஒப்படைக்க வேண்டும். வலிவடக்கில் 6500 ஏக்கர் காணிகளை உயர்பாதுகாப்பு வலயம் என்னும் பெயரில் இராணுவம் கையகப்படுத்தியுள்ளது. 1000 ஏக்கர் நிலங்கள் உயர்பாதுகாப்பு வலயத்துக்குப் போதுமானதாக இருக்கையில், மீதி 5500 ஏக்கர் காணிகளை உரியவர்களிடம் ஒப்படைப்பது நியாயம். இதனை மீள்குடியேற்ற அமைச்சர் கொள்கையளவில் ஏற்றுக் கொண்டுள்ளார். இந்நேரத்தில், பாராளுமன்றத் தேர்தல் வரவிருப்பதனால், இவ்விடயத்தில் நடவடிக்கைகள் எடுப்பதற்குத் தாமதம் ஏற்படும். தேவையற்ற இராணுவத்தினரைத் திரும்ப அழைப்போம், தேவையற்ற காணிகளை விடுவித்துக் கொடுப்போம் என்னும் விடயங்களை யிட்டு அதிகமாக எதிர்பார்க்க ஒன்றுமில்லை. இதுவே இன்றைய உண்மைநிலை எனக் கூறுகிறார் முதல்வரும், முன்னாள் உயர்நீதிமன்ற நீதியரசருமான சி.வி.விக்னேஸ்வரன்.

தாயும் பிள்ளையுமாக இருந்தாலும் வாயும் வயிறும் வேறு என்னும் முதுமொழியே வடமாகாணத்தில் காணிகளைப் பறிகொடுத்த மக்களுக்குக் கிடைக்கும் நீதி.

இலங்கையின் சுதந்திர தின விழாவிற் பங்கேற்க பல வருடங்களாக அழைப்பு வந்து கொண்டிருப்பதாகவும், தான் சார்ந்த மக்களுக்கு உண்மையான சுதந்திரம் கிடைக்காத வரையில் அந்நிகழ்ச்சியிற் கலந்து கொள்வதில்லையென்னும் முடிவுடன் இருக்கிறார் வடமாகாண முதல்வர் சி.வி.விக்னேஸ்வரன்.

ஒற்றையாட்சித் தத்துவத்தைக் கொண்ட சிறீலங்காவின் முன்னாள் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில்

அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா, 08.01.2015இல், நடைபெற்ற புதிய சனாதிபதித் தேர்வுக்குப் பின்பு, தான் 15கோரிக்கைகளைப் புதிய அரசுக்கு முன்வைத்துள்ளதாகக் கூறுகிறார். சிறையில் வாடும் அனைத்துத் தமிழ் அரசியற் கைதிகளின் விடுதலை, இளைஞர், இளைஞிகளுக்குத் தகுதிக்கேற்ப வேலைவாய்ப்புகள், பூர்வீகச் சொத்துக்களை இழந்தவர்களுக்கும் பரம்பரைத் தொழில்களை இழந்தவர்களுக்கும் நட்டஈடுகளும் நிவாரணங்களும் பெற்றுக்கொடுத்தல் போன்ற வேலைத்திட்டங்களை உள்ளடக்கியதாக இக்கோரிக்கைகள் அமைந்துள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தற்போது, புதிய அரசுமுன் இவரினால் வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகளில் பலவற்றை முன்னாள் அரசிடமிருந்து இவர் அமைச்சராகவிருந்த காலத்தில், இவரால் இவர்சார்ந்த மக்களுக்குப் பெற்றுக் கொடுக்க முடியாமற் போனது வருத்தத்துக்குரிய விடயமென நோக்கர்கள் கருதுகின்றனர். தற்போது, இவர் பதவியில் இல்லாத நிலையில் இக்கோரிக்கைகளை எப்படி நிறைவேற்றப்போகிறார் என்பதையும் எதிர்பார்க்கின்றனர் இந்நோக்கர்கள்.

இடம்பெயர்ந்து வாழ்ந்த பலரை மீள்குடியேற்றியிருப்பதாகவும் இராணுவத்தால் சுவீகரிக்கப்பட்ட பொதுமக்களுடைய காணிகளை விடுவித்துக் கொடுத்ததாகவும் வேலைவாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுத்ததாகவும் ‘மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி’ என்னுந் தனது கொள்கையின் அடிப்படையில் இயங்கப்போவதாகவுங் கூறுகிறார். எழுதிவாங்கப்பட்ட, மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரங்களைக் கொண்ட மாகாணசபை சுயமாக இயங்கமுடியாத நிலையில், மாநிலம் என்றும், சுயாட்சி என்றும் இவர் கூறும்போது தமிழ் மக்களிற் பலர் இதை வேடிக்கை விநோத நிகழ்ச்சியாகப் பார்க்கின்றனர்.

கடந்தகால ஆட்சியில், அரசியற் காரணங்களுக்காகவும் தங்களுடைய ஆற்றலின்மை காரணமாகவும் வடமாகாண ஆளுனரையும், முதன்மைச் செயலரையும் மாற்றவேண்டுமென்று தமிழ்த்தேசியக்கூட்டமைப்புக் கோரியதே தவிர வேறு எந்தக் காரணத்துக்காகவும் அல்ல எனவும், முன்னாள் ஆளுனரைக் கொண்டு சொகுசு வாகனங்களையும், வீட்டு வாடகைகளையும், ஏனைய தங்களுடைய தேவைகளையும் பெற்ற கூட்டமைப்பினரால் அரசியல் உரிமைகளைப் பெறமுடியாமற் போனது எதற்காக எனக் கேள்வியெழுப்புகிறார் அமைச்சர் டக்ளஸ்.

இவர் அமைச்சராகப் பங்குபற்றிய அரசாங்கத்தினால், இவராற் போற்றப்பட்ட சனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட ஆளுனர், தனது பதவிக்காலத்தில் வீட்டுவசதி, சொகுசு வாகன மற்றும் ஏனைய வசதிகளைப் பெற்றுக் கொடுக்கும் தரகராகப் பதவி வகித்துள்ளார் என முன்னாள் அமைச்சர் உறுதிப்படுத்துகிறார். சிறீலங்காவில் வசதிகளையும் வாய்ப்புக்களையும் ஆளும் வர்க்கத்தினரால் தனிப்பட்ட முறையில் பெற்றுக் கொள்ளமுடியும் என மேலும் உறுதிப்படுத்துகிறார்.

இவரது கருத்துப்படி சிறு சிறு அன்பளிப்புக்களைப் பெறுவது மிகவும் இலகுவான விடயம். கேட்டால் கொடுப்பார்கள். அரசியல் உரிமைகள் என்னும்போது, அதைக் கேட்கும்போது ஆளும் பெரும்பான்மைப் பெருந்தேசியவாதிகள் எகிறிமிதிப்பார்கள் என்பதை இலங்கை (சிறீலங்கா) அரசியல் வரலாறு பல தடவைகள் பதிவு செய்துள்ளது. இவ்வரலாற்றில் தமிழ்மக்கள் கூட்டத்தைச் சேர்ந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா போன்ற பலர் ஒருபோதும் பெரும் அமைச்சர்களாகக் கடமையாற்றவில்லையென்பதையும், இவர் போல் சிறுரக அமைச்சர் பதவியை வகித்ததாகவும் எழுதப்பட்டுள்ளதை அவதானிக்கலாம்.

கடந்த காலங்களில் ஊடகவியலாளர்கள், அரசியல்வாதிகள் பலர் கொலை செய்யப்பட்டுள்ளார்கள். அக்கொலைகள் தொடர்பில் விசாரணைகள் நடைபெற வேண்டுமெனக் கோரிக்கை விடுத்துள்ளார் பாராளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா.

இவர் பங்குபற்றிய அரசாங்கத்தின் மூலம் பல ஊடகவியலாளர்கள் கொலைசெய்யப்பட்டும், காணாமலும் போயுள்ளனர் எனக் கூறப்படுகிறது. கருத்துச்சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம் கொலை செய்யப்பட்டிருப்பதுடன், அப்போது இவற்றை எதிர்த்து இவரால் விடமுடியாத கோரிக்கைகள் இப்போது எதற்கு? ஊடகவியலாளர்கள்மீது ஏற்பட்ட திடீர்க் கருணை எதற்காக? எனப்பன்னாட்டு ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

சிறீலங்காவின் முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தான் வடமாகாணசபை முதலமைச்சராக வேண்டும் என்ற கனவு நிச்சயம் நனவாகும். அப்போது, காணி, காவல்துறை அதிகாரங்களை இலகுவாகப் பெறுவேன். வடக்கை செழிப்புமிக்க பூமியாக மாற்றியமைப்பேன் எனக்கூறியிருந்தார். (பார்க்க தினக்குரல் வாரஇதழ் 17.08.2014)
அரசியல்வாதிகளின் தேனொழுகும் தில்லு-முல்லு வார்த்தைகள் ஆளும் நாற்காலிவரைக்கும். அதன்பின், குடிகாரன் பேச்சு விடிந்தாற் போச்சு.

உரிமைகளை ஆளும்வர்க்கத்திடமிருந்து பெறுவது கல்லில் நாருரிப்பது போலாகும்.

கடும்போராட்டத்தின் மூலம் சட்டமாக்கப்பட்டு எழுதிவாங்கப்பட்ட உரிமைகள்கூட, சில வேளைகளில், கைநழுவிப் போகின்ற இந்நிலையில், முதல்வர் பதவி மூலந்தான், வடமாகாணத்தின் அதிகாரங்களைப் பெற்றுக் கொடுக்க வேண்டியதில்லை. இவருடைய அரசாங்கம் மத்தியில் ஆட்சியில் இருந்த காலத்தில், இவர் வாழும் மாகாணத்தில் வாழும் மக்களின் எதிர்கால வளமான வாழ்வைக் கருத்திற்கொண்டு கட்சிகளையும் - கோட்பாடுகளையும் ஒரு புறத்தில் வைத்துவிட்டு, தன்னை மக்களில் ஒருவனாக, நாட்டின் பொதுத்தலைவனாக ஆழக்கருத்திற் கொண்டு தன்னால் இலகுவாகப் பெறமுடியுமெனப் புளுகியவார்த்தைகள் மூலம் நெஞ்சுறுதியுடன் செயற்பட்டு உரிமைகளை உடனடியாகப் பெற்றுக் கொடுத்திருக்கலாம். இது ஆயுதந்தாங்காத புரட்சியாக அமைவதுடன் இலங்கைச் சரித்திரத்தில் புதிய திருப்புமுனையை ஏற்படுத்தியிருக்குமெனக் கருதலாம்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தான் ஏற்றுக் கொண்ட மகிந்த சிந்தனை மூலம், இவரது தலைவர் மகிந்த ராஜபக்ஷவின் உதவியுடன் பல காலமாகப் பயங்கரவாதிப்பட்டம் சூட்டப்பட்டு சிறையில் வாடுகின்ற பல இளைஞர்கள் - இளைஞிகளை சிறையிலிருந்து விடுவித்துப் புனர்வாழ்வளிக்க முயற்சி செய்திருக்கலாம். காணாமற் போனோர் விடயத்திலும் கவனம் செலுத்தியிருக்கலாம் என்னுங் கருத்தும் நிலவுகிறது. மேற்கூறியபடி, முயற்சிகளை மேற்கொண்டிருந்தால் அதிகார ஆசைக்கு இவை அரணாக அமைந்திருக்கும்.

ஆயுதந்தாங்கிய முன்னாள் போராளியான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இந்தியாவின் தமிழ்நாட்டில் இருக்குங் காலத்தில், தமிழ்நாட்டில் ‘சூளைமேட்டில்’ நடந்த கொலையில் தொடர்புடையவரென, வாழ்வையிழந்து பிரான்சில் வாழும் முன்னாள் தமிழ்ப்போராளிகள் சிலர் கூறுகின்றனர். (இச்செயலை ஆதாரத்துடன் உறுதிப்படுத்த முடியாதுவிட்டாலும் செய்தியாகக் கவனத்திற்கொள்க)

→

தென்னாசியாவில், இந்தியாவின் பாதுகாப்பு இலங்கைத்தீவோடு தொடர்புடையதால் இலங்கைத்தீவில் வாழுந் தமிழ்பேசும் சிறுபான்மையினத்தின் பாதுகாப்பு இந்தியாவில் தங்கியுள்ளது. இச்சிறுபான்மையின மக்கள் பெரும்பான்மைச் சிங்களப்பேரினவாதிகளின் வன்முறைக்கொடுமைகளிலிருந்து தங்களைப் பாதுகாப்பதற்காகவும் சிங்களத்தீவின் அரசு இம்மக்களுக்குப் பாதுகாப்பு வழங்க முன்வராதநிலையிலும் இந்தியாவின் பாதுகாப்பு இச்சிறுபான்மையினருக்கு அவசியமாக அமைகிறது. இச்சிறுபான்மையினர் இந்திய மாநிலமான தமிழ்நாட்டுடன் மொழி, மதங்கள், கலைகலாச்சார ரீதியாக தொப்புட்கொடி உறவைக்கொண்ட தமிழ்பேசும் மக்கள்.

இலங்கையின் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் இவர்களின் குடிப்பரம்பல் அதிகமாக இருப்பதனாலும் இவ்வடக்குப்பகுதி தமிழ்நாட்டுக்கு மிக அண்மையில் இருப்பதனாலும் வடபகுதியில் தமிழ்பேசும் மக்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதனாலும் இவர்களின் இருப்பைப் பலப்படுத்தி வடமாகாணசபையின் வலுவை அதிகரிக்கச்செய்து அதனைப் பலமான அரசாக மாற்றி அதன்வழியில் வடக்கு - கிழக்கு இணைந்த பலமான அரசின் மூலமாக இந்தியா தனது நிரந்தரப்பாதுகாப்புக்குக் காப்புறுதியைத் தேடலாம் என அவதானிகள் கருதுகின்றனர்.

சிங்களமொழியின் பிறப்பு, பிற்காலத்தில் அதன் வளர்ச்சிபற்றி நன்கு அறியாதவரல்லர் பாரதியார். மேலும், தேமதுரத் தமிழோசை பற்றியும், செந்தமிழ் நாட்டைப்பற்றியும் அறிந்திருந்தவர். தமிழ்மொழியூடாகக் கவிதைகள் பல படைத்து இந்தியாவிலும், இலங்கைச்சிங்களமக்கள் மத்தியிலும் அமோக வரவேற்பைப் பெற்றவர் கவிஞர் பாரதியார். இந்தியநாட்டின் ஒற்றுமையை வலியுறுத்தி 'சிங்களத்தீவையும்' இந்தியநாட்டின் ஒரு பகுதியாகக் கருதி 'சிங்களத்தீவினுக்கோர் பாலமமைப்போம்' என்னுங் கவிதை வரிமூலம் சிங்களமொழி பேசும் மக்களின் உள்ளங்களைக் குளிரவைத்தவர். அன்னிய ஆதிக்கத்தை எதிர்த்து இந்தியநாட்டின் விடுதலைக்கு, அதன் சுதந்திரத்துக்கு அயராது உழைத்தவர். 'சிங்களத்தீவினுக்கோர் பாலம்' அமைய முன் அனைவரையும் விட்டுப்பிரிந்த கவிஞர் பாரதியாரின் கனவு நனவாக சிங்களத்தீவு செயற்படுமா? அல்லது, அன்னிய ஆதிக்கத்தை வரவழைத்து, மீண்டும், அதனை நிரந்தரமாக நிலைகொள்ளச் செய்து இந்தியநாட்டின் பாதுகாப்புக்கு இடையூறாக இருந்து செயற்படுவார்களா? இத்தீவின் நிருவாகிகள் என்னுங் கேள்விகளும் எதிரொலிக்கின்றன.

பெரும்பான்மைப் பௌத்த சிங்கள ஆட்சியாளர்களின் மூளையிலிருந்து சிந்தனைமாற்றம் ஏற்பட்டு, இலங்கைத் தீவில் நிரந்தர சமாதானம் உருவாக, அனைத்து இன மக்களும் சமமாக வாழ வழிபிறக்குமா? இக்கேள்விக்கான பதில் சாதகமாக அமையாத வரைக்கும், தொடர்ந்தும் வெளிநாட்டுக் கண்களுக்கு விருந்தாக இலங்கை அமையும்.
(உதவிய ஆவணங்கள்: வீரகேசரி, தினக்குரல் வாரவெளியீடுகள்- ஈழத்தமிழர் இறைமை.)

<<இனப்பிரச்சனைக்குத் தீர்வு காணும் நோக்குடன் மாகாணசபைத்திட்டம் உருவாக்கப்படவில்லை>> என்னுந் தலைப்பில் 26.10.14, 02.11.14ம் திகதி வீரகேசரி வாரவெளியீடுகளில் ஓருபகுதி வெளியாகியது.

**பிரான்சிலிருந்து, திவ்வியநாதன் செல்வத்துரை, காலம் : 05.04.2015**

# பத்திரிகை – பத்திரிகையாளன் – நசுக்கப்பட்ட குரல்

***'நோர்வே– சமாதானம்– பறிபோனமண்ணின் இறைமையை மீட்டுத்தருமா? '***
***'தூண்டிவிடப்பட்ட கிராமவாசிகளினால் அடித்துக்கொல்லப்பட்ட சிறுவர்கள்! '***
***'சனநாயக அரசியல் கட்சியின் துப்பாக்கிக்கு பத்திரிகையாளன் பலி! '***

எனப் பலதரப்பட்ட செய்திகளுடன் வெளிவந்த பத்திரிகையைப் பரபரப்புடன் படிக்கும்மக்கள், பல வானொலிகள், தொலைக்காட்சிகள் போன்ற செய்தித்தொடர்புச் சாதனங்களின் போட்டிகளின் நடுவிலும் இதைப் படிப்பதற்கு அதிக கவனஞ் செலுத்துகிறார்கள்.

பலதொன்நிறையுள்ள அச்சடிக்கப்பட்ட கடதாசிகள் ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்துக்கு மாற்றப்பட்டு, ஒவ்வொரு காலையிலும், உலகெங்குமுள்ள புத்தகசாலைகளுக்கும் பத்திரிகைகள் விற்பனை செய்யுமிடங்களுக்கும் அனுப்பப்பட்ட சில மணித்துளிகளில், இக்காகிதங்களுக்கு குறிப்பிட்ட பணமதிப்பீடு வழங்கப்பட்டு பத்திரிகை அல்லது செய்தித்தாள் என இவை அழைக்கப்படுகின்றன.

தொடர்பூடகங்களில் ஒன்றான பத்திரிகை ஒரு சமூகத்தின் நாகரீகத்தை நகர்த்திச்செல்லும் சிற்பவேலைகள் நிறைந்த தேர்போன்றதுடன், இந்நாகரீகத்தின் பெறுமதியை நன்றாகத் தெரிந்து கொள்ளவும் உதவுகிறது. மறைக்கப்பட்ட, அங்கீகரிக்கப்பட்ட கேள்விகளுக்கு விடையளிப்பதுடன் வரலாற்று ரீதியில் ஓர் இனம் இழந்த பெறுமதிகளைப் பாதுகாக்கும் பாதுகாவலன் மட்டுமல்லாது அவற்றைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாகவும் இருந்து அன்றாடம் பல விடயங்களை வாசகர்களுக்கு உணர்த்துகிறது. சமூகத்தில் ஏற்படும் நன்மை– தீமைகள், உலகமக்களின் குறை–நிறைகள் யாவுஞ் செய்திகளாகக் கோர்க்கப்பட்டு பத்திரிகைமூலமாக வெளிவரும்போது இதைப் படிப்போர் தம்மைமறந்து செய்திகளில் மூழ்கியிருப்பதற்கு இது சிறந்த கருவியாக அமைவதுடன், அரசுகளுக்கும் உயிரினங்களுக்கும் இயற்கைக்குந் தீங்குவிளைவிக்கக் கூடிய அபாயகரமான கருத்துக்களை எதிர்ப்பதுடன் அவற்றை மக்களுக்கு அம்பலப்படுத்துகிறது.

19ம் நூற்றாண்டு வரை குறிப்பிட்ட சிலருடன் தொடர்புபட்ட பத்திரிகை, 20ம் நூற்றாண்டில், மக்களின் முன்னேற்றத்துக்குத் தேவையான கருத்துக்களையும் தகவல்களையும் தெரிவிப்பதற்கு முகங் கொடுக்கவேண்டிய சூழ்நிலையில் பற்பல துறைகளில் தகுதிபெற்ற அறிஞர்களுடன் கைகோர்த்துத் தொழிற்படவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது. 20ம் நூற்றாண்டின் தொடக்கத்தில், எல்லாவற்றையும் அறிந்துகொள்ள வேண்டுமெனும் ஆர்வம் மக்களிடையே ஏற்படுவதற்குப் பத்திரிகை முக்கிய காரணியாக அமைந்தது. இதனால் பன்னாட்டுத்தொடர்புகள் விரிவுபட்டு சமூகமாற்றம் ஏற்பட, இம்மாற்றம் 4 வருடப் போருக்கு அடித்தளமிட்டது.

பத்திரிகை பல சிந்தனையாளர்களின் தூதுவனாக இருப்பதனாலும் அவர்களது தாராளமனப்பான்மையை வெளியுலகுக்கு அறிவிக்கும் ஒலிபெருக்கியாக இருப்பதனாலும் இது ஒரு வியாபாரப்பொருள் அல்ல என எண்ணுகிறோம். விளம்பரத்தின் மூலம் வியாபாரத்தைப் பெருக்க எண்ணுபவர்களுக்கும், ஏனைய விளம்பரத்தார்களுக்கும் பத்திரிகையின் சில பக்கங்கள் விற்கப்படுவதனாலும் இது ஒரு வியாபாரப் பொருளாகக் கருதப்படுகிறது. விளம்பரத்தின் வாயிலாகக் கிடைக்கும் பணத்தை பத்திரிகை வெளிவருவதற்குப் பயன்படுத்தி, இதை மலிவு விலையில் விற்பனை செய்து, வாசகர்களின் எண்ணிக்கையைக் கூட்டும்போது செய்திகள் பலதரப்பட்ட மக்களைச் சென்றடைய விளம்பரம் காரணமாக அமைகிறது.

நிறத்தால், மணத்தால் வேறுபடும் பூக்களைப் போன்று இரசனையால் வேறுபடும் வாசகர்கள் பலர், விளையாட்டு, சினிமா, அரசியல், இன்னும் பல மேடைக்கு வராத செய்திகள், வதிவிலக்கான செய்திகள் பற்றி அறிந்துகொள்ளவும் பத்திரிகையை விலைகொடுத்து வாங்குகிறார்கள். இவர்களின் இரசனையை ஒரு பத்திரிகையாசிரியர் அறிந்து வைத்துள்ள அளவைப்பொறுத்தும், இவ்வாசகர்களை அடிப்படையாகக் கொண்டும்தான் ஒரு பத்திரிகையின் வளர்ச்சி அமையும் எனப்பல தகவல்கள் கோடிட்டுக் காட்டுகின்றன.

சனநாயகக்கடமையை நிறைவேற்றத் துடிக்கும் ஒரு பத்திரிகையில் செய்தியாகப் பிரசுரிக்கப்பட வேண்டியது யாது என்பதை வரையறுத்துக் கூறமுடியாது விட்டாலும், செய்தியென்றவரையில், நிகழ்வொன்று அன்றாட வாழ்க்கையில் நாம் காணும் சாதாரண நிகழ்ச்சியாக அமைந்தால் இது பத்திரிகைச் செய்தியாக அமையாது என்பது விதி. எது அபூர்வமானதோ, எது அசாதாரணமானதோ, அதுவே செய்தியாகும்.

வீதியிற் சென்றுகொண்டிருக்கும் வாகனமொன்று வீதித்தடைகளை இடித்துத் தள்ளியவாறு அருகிலுள்ள பல அடுக்குமாடிக் கட்டிடத்தினுட் புகுந்து வெடித்துச்சிதற, கட்டிடம் இடிந்து விழுந்து சுக்குநூறாக, அக்கட்டிடத்தினுள் அமைந்த தொழிலகங்களில் பணியாற்றிய அனைவரும் கொல்லப்படும் இந்நிகழ்ச்சி செய்தியாகிறது. இதே வீதியிற் சென்றுகொண்டிருக்கும் மக்கள் தீடீரென ஒன்றுகூடி வீதியைத்தடை செய்து அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு நாட்டில் குழப்பத்தை உண்டுபண்ண முயல்வது செய்தியாகிறது. அப்போது வரைக்கும் தென்றலாக வீசியகாற்று, சட்டென, இரைச்சலுடன்கூடிய பெருமழையுடன் வெள்ளப்பெருக்கை ஏற்படுத்தி சூறாவளியாக மாறி நாட்டில் அழிவை ஏற்படுத்தும்போது செய்தியாகிறது. அரசியல்வாதியின் அடாவடித்தனத்தை அம்பலப் படுத்தி, இவரின் ஊழல்களை மக்களுக்குத் தெரிவித்து, இவரின் மனிதஉரிமைமீறலை வெளியுலகுக்குத் தெரியப்படுத்திய பத்திரிகையாளனை, இச்சனநாயக அரசியல்வாதியின் அடியாட்கள் வெட்டியும் சுட்டும் கொலை செய்த கோரச்சம்பவம் செய்தியாகிறது. மேற்கூறிய செய்திகளுக்கிடையில் 'விதிவிலக்கான செய்தி' யொன்று முக்கியமான செய்தியாக அமையாது இருப்பினும் பத்திரிகையொன்றில் 'விதிவிலக்கான செய்தி' என்னுந் தலைப்பில் வெளிவரும்போது கீழ்க்கண்டவாறு அமைகிறது.

திரு என்பவர் தினமும் காலையில் புகைவண்டிமூலமாகத்தான் தொழிற்சாலைக்கு வருவார். மதியம் 12மணிக்கு தொழிற்சாலை உணவுவிடுதியில் சாப்பிட்டுவிட்டு, மாலை 6 மணிக்கு வீடுதிரும்புமுன் அருகிலுள்ள 'தற்தேர்வுச் சிறப்பு அங்காடியில்' பலபொருட்களை வாங்கிக்கொண்டு வீடுதிரும்புவார். இந்நிகழ்ச்சி அன்றாடம் நடைபெறுவதால் யாருடைய கவனத்தையும் இது ஈர்க்கவில்லை. இதே திரு வேலைக்கு வருவதற்குப் பயன்படுத்தும் புகைவண்டி தடம்புரள்கிறது. இவரது தொழிற்சாலை தீப்பிடித்து முற்றாக எரிந்து சாம்பலாகிறது. தினமும் இவர் சாப்பிடும் உணவுவிடுதியில் சாப்பிட்டவர்கள் வயிற்றுவலியால் துடிக்கின்றார்கள். இவரையும் இன்னும் பலரையும் தற்தேர்வுச் சிறப்பு அங்காடிக்குள் வைத்துக் கொள்ளையர்கள் பணயக்கைதிகளாக்குகின்றனர். இந்நிகழ்ச்சி தினமும் நடைபெறாத நிகழ்ச்சியாதலால், இது விதிவிலக்கான நிகழ்ச்சியாகி பத்திரிகையாளரின் கவனத்தைக் கவர்ந்து செய்தியாகிறது. மேற்கண்டவாறு பலசெய்திகளுள் புலனாய்வுச்செய்தி பலபத்திரிகைகளின் முதற்பக்கத்தை அலங்கரிக்கின்றன.

பத்திரிகையியல் உருவாகுவது நிகழ்சிகளில் இருந்து என்பதை மேற்கூறிய செய்திகள் தெரிவிப்பினும், பொருட்களில் இருந்தும் இவ்வியலை உருவாக்கலாம். இது கண்கள் பார்க்கும் பார்வையில் இருந்து வேறுகோணத்தில் நிகழ்கிறது. பத்திரிகையியலைப் பற்றிப்பேசும்போது நேர்மையைப்பற்றிப் பேசுவது முக்கியமான விடயமாக அமைகிறது. பத்திரிகையின் நேர்மை எனப்படுவது கொடுக்கப்படும் தகவல்கள், செய்திகளின் அடிப்படையில் அமைகிறது. பிரான்சுநாட்டின் முன்னாள் பிரதமர் உயிர்நீத்த சங்கதியும், பிரான்ஸ் செஞ்சிலுவைச்சங்க இயக்குனராக இருந்த முன்னாள் அமைச்சர் பதவி விலகிய சம்பவமும், பிரான்ஸ்நாட்டு அமைச்சர் சிறைசென்ற சம்பவமும் நேர்மையான பத்திரிகையியலுக்கு எடுத்துக்காட்டாக அமைகின்றன.

நேர்மையான செய்திகளை எழுதி வாசகர்களுக்குத் தரும் பத்திரிகையாளன் சமுதாயத்தின் விடிவெள்ளி போன்றவன். மிகப்பெறுமதிமிக்க செயற்பாடுகளைக் கொண்ட பத்திரிகையாளன் யாருக்கும் எடுபிடியானவனோ, கைக்கூலியானவனோ, கொத்தடிமையானவனோ அல்லன். சமூகத்தை வாட்டிவதைக்குங் குற்றங்குறைகளை அறிந்து மீண்டும் இவை ஏற்படாதவாறு தடுத்துநிறுத்த முயற்சிசெய்பவன். விருப்பத்தினாலும் நம்பிக்கையினாலும் தூண்டப்பட்டு நெஞ்சுறுதியோடும் மனசுத்தியோடும் எழுதுகோலை ஏந்திய பத்திரிகையாளனால் ஒரு நாட்டின் அரசை நிலைதடுமாறச் செய்து, அங்கு சனநாயகத்தை வளப்படுத்த நீதியை நிலைநாட்ட முடியுமென்பதற்கு அமெரிக்கா, பிரான்சு, இங்கிலாந்து போன்ற நாடுகளில் நடந்த சம்பவங்கள் சாட்சியாக அமைகின்றன.

சிறீலங்கா போன்ற பல வளர்முக நாடுகளில் பேச்சுச்சுதந்திரம், எழுத்துச்சுதந்திரம் பறிக்கப்பட்டு சனநாயகத்தின் அடிப் படை விதிகள் கொள்ளையடிக்கப்பட்டு, பத்திரிகைகளும் பத்திரிகையாளர்களும் பல இன்னல்களுக்கும் துன்புறுத்தல் களுக்கும் தினமும் ஆளாகவேண்டிய சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறார்கள் ஆட்சியாளர்கள்.

சிறீலங்காவில் நடைபெறும் மனிதவுரிமை மீறல்களை பன்னாட்டுமக்களுக்குத் தெரிவித்த ஒரே காரணத்துக்காக,

துணிவும் செயல்திறனுமிக்க பலபத்திரிகையாளர்களின் விரல்கள் பிடுங்கப்பட்டு, குரல்வளைகள் நசுக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட பத்திரிகையாளர்கள் ரிச்சாட் டி சொய்சா, குருமூர்த்தி, இரமேஸ் நடராசா, ரோஹண குமார, அருள் போன்றோர் வரிசையில், 19–10–2000ல், கொலைசெய்யப்பட்ட பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராசன், சிறீலங்கா ஆட்சியாளர்களால் நடைமுறைப்படுத்தப்பட்ட செய்தித்தணிக்கை இருப்பில் இருக்கும்வேளை போர்க்களச்செய்திகளை, மனிதவுரிமைமீறல்களை, மோசடிகளை, வெளியுலகறியச்செய்த துணிச்சல்மிக்க பக்கச்சார்பற்ற பத்திரிகையாளன். இவரது நேர்மையான எழுத்துக்களைக் கண்டு அஞ்சிநடுங்கிய 100விகிதம் அரசியல்வாதிகள், அடியாட்களின்மூலம் இவரை வெட்டியும், சுட்டும் கொலைசெய்தது பத்திகையியலுக்கும் பத்திரிகையாளனுக்கும் வழங்கிய அதியுயர் மரியாதையாகும். இக்கொலைமூலம் மீண்டும் ஒரு பத்திரிகையாளனின் குரல்நசுக்கப்பட்டது, சனநாயகத்தைப் புதைப்பதற்காக வெட்டப்பட்ட புதைகுழிகள் மூடப்படவில்லை என்பதை உறுதிசெய்து, சிறீலங்காவின் அடக்குமுறை அரசியலையும் ஆட்சியாளர்களின் மனநிலையையும் ஆய்வுக்குரிய விடயமாக ஆக்கித்தந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

பாரிசிலிருந்து, திவ்வியநாதன் செல்வத்துரை. காலம்– 8–11–2000.

இக்கட்டுரை ஜனநாயகத்தைப் புதைப்பதற்கென வெட்டப்பட்ட புதைகுழிகள் மூடப்படவில்லை என்னுந் தலைப்பில் 12.11.2000 இன் வீரகேசரி வாரவெளியீட்டின் மூலம் வெளியாகியது. (வாசகரின் மீள்கவனத்துக்கு)

**றுநொடொ தேஓபிறாஸ்த்– ல கஸெத் RENAUDOT Théophraste et LA GAZETTE**

---

1631ல், 13வது லூஈ மன்னனின் ஆட்சியில் முதன்மை அமைச்சராக இருந்த கத்தோலிக்க மதகுரு கார்டினல் றிஷெலியுவின் வரவேற்புடன், பிரான்சின் முதலாவது செய்தித்தாளான கஸெத்(GAZETTE) என்னும் பத்திரிகையை றுநொடொ தேஓபிறாஸ்த் உருவாக்கினார். நீண்டகாலமாக அரசின் ஊதுகுழலாகச் செயற்பட்ட இப்பத்திரிகை, 1762ல் கஸெத் டு பிறான்ஸ் என்னும் பெயரில் கிழமைக்கு இருதடவை வெளிவந்தது. 1792ல், பிரெஞ்சுப் புரட்சிக்காலத்தில், கஸெத் நசிஓனல் டு பிறான்ஸ் என்னும் பெயரில் தினசரிப் பத்திரிகையாக வெளிவந்து, 1914ல், இப்பத்திரிகையின் பதிப்பு முற்றாக நிறுத்தப்பட்டது.

# கவிதைக்களம்

## சொல்

சொல்! மனிதா ! நீ சொல்!
சொல்! பொருள் படச் சொல்!
சொல்! நயம் படச் சொல்!
மனிதத்தைச் சொல்வதாற் சொல்!

சொல்லின்றி மொழியில்லை
நாவின்றிச் சொல்லில்லை
மொழியின்றி உலகில்லை
உலகின்றி மனிதரில்லை

சொல்லுக்கு உறுதி பல்
பல்லில்லாத சொல் புல்
புல்லர் பறிக்குஞ் சொல்
மல்லரை ஒழிக்கும் வேல்

திவ்வியநாதன் செல்வத்துரை, காலம் –12.06.1993

## கிருசாந்திப் பூக்கள்

'மறுதலையின் சூரியக்கதிர்கள்'
அறுவடையானதால்
அறுந்தன வடபுலத்தில் தாலிகள்.
தறுதலைப்படையின்
முறுக்குக்கரங்களின்
இறுக்குப்பிடிக்குள்
உறுப்புகள் ஒடிக்கப்பட்டுச்
சாறுபிழியப்பட்டன 'கிருசாந்திப் பூக்கள்'

திவ்வியநாதன் செல்வத்துரை, காலம் –26.12.1996

## கொலை வெறி

பள்ளிப் படிப்புமுதல்– கல்லூரிப்
படிப்புவரை இணைபிரியா நண்பர்கள் நாம்
புரட்சிவிடு தூது வந்ததனாற்
படைமுகாம்களில் இரண்டானோம்

கருத்துவேறுபாடு கொண்டதனால்–அவன்
கைத்துப்பாக்கி என்நெற்றியைக் குறிபார்க்க–என்
கைத்துப்பாக்கி அவன்நெற்றியைக் குறிபார்க்கக்
கொலைவெறி பீடித்து அலைகிறோம்

திவ்வியநாதன் செல்வத்துரை, காலம் –1993 கடைசிப்பகுதி

## பேயாட்சிசெய்யும் சனநாயகவாதிகள்

தாய்ப்பாலைக் கக்கும்வரை வயிற்றில் மிதிப்பார்கள்
வாயைக்கட்டிக் குரல்வளையை நெரிப்பார்கள் –
எழுதுகோல் ஏந்துங்
கையை முறிப்பார்கள் – ஈற்றில்
நாயைச்சுடுவதுபோற் சுடுவார்கள்
பேயாட்சிசெய்யும் சனநாயகவாதிகள்

திவ்வியநாதன் செல்வத்துரை,
காலம்– 20.03.2001, காலை 9.

# அமைதி வழி அரசியலின் எதிரிகளும் சமாதானத்தின் எதிரிகளும்

'சுதந்திர இலங்கையில் எம்மிடம் நீங்கள் துன்புறுத்தலுக்குள்ளாவீர்களென அஞ்சத்தேவையில்லை. தேசியகாங்கிரஸ் சார்பிலும் எனது சார்பிலிலும் சிறுபான்மையின மக்களுக்கு மேற்கூறியதை உறுதிமொழியாக வழங்குகிறேன்.' என முழக்கமிட்டவர் சுதந்திர இலங்கையின் முதற்பிரதமர் டி.எஸ். சேனனாயக்கா ஆவார்.

1947ம் ஆண்டின் பொதுத்தேர்தல் மூலம் டி.எஸ். சேனனாயக்கா தலைமையில் அரசாங்கத்தை அமைத்து, 1948ல் சுதந்திரம் பெற்ற, இந்துசமுத்திரத்தின் முத்து என அழைக்கப்படும் இலங்கையின் நிலப்பரப்பு 62337 சதுரமைல் ஆகும். 18.2 மில்லியன் மக்கள் வாழும் இந்நிலப்பரப்பில், 74 விகிதம் சிங்களவரும், 18.1 விகிதம் தமிழரும், 7.9 விகிதம் முஸ்லீம்களும்–மலாயர்களும்–பேகர்களும் அடங்குவர். இங்கு 69.3 விகித மக்கள் புத்தமதத்தைப் பின்பற்றுவ தால், புத்தமதம் தனது பெரும்பான்மை அதிகாரத்தைப் பயன்படுத்தி குடியரசுக்கும் அதன் சட்டங்களுக்கும் எப்போதும் இடையூறாக இருந்து வருகிறது. இதனால், சிறுபான்மையின மக்கள் குறிப்பாகத்தமிழர்கள் சுதந்திரத்துக்குப் பின்பு துன்புறுத்தலுக்குள்ளாகி வருவதைக் காணலாம்.

சனநாயகக் குடியரசின் முக்கிய ஏற்றுமதிப் பொருட்களான தேயிலை, இரப்பர், தெங்கு உற்பத்திப் பொருட்கள், பட்டை தீட்டப்பட்ட வைரங்கள் யாவும் நாட்டுக்கு அன்னிய வருவாயைக் கொண்டுவந்து சேர்க்கும் முக்கிய வருவாய்த்துறைகளாகும்.

மேற்கூறிய வருவாய்த்துறைகளில் ஒன்றான தேயிலை விளைச்சலை உண்டுபண்ண, இற்றைக்கு 180வருடங்களுக்கு முன்பு(இக்காலங்களில் கோப்பிச்செய்கை முக்கியத்துவம் பெற்றிருந்தது. பிற்காலங்களில் தேயிலைச்செய்கையாக மாற்றப்பட்டது.) மனிதவாடையே வீசாத அடர்ந்தகாடுகள் படர்ந்த மலைமுகட்டை தேயிலை விளைச்சல் மூலம் பொன்கொழிக்கும் இடமாக மாற்றுவதற்கு, தென்னிந்தியாவிலிருந்து, ஆசைவார்த்தைகளினால் ஈர்க்கப்பட்டு, கூலிகளாகக் கொண்டுவரப்பட்டு, தலைமன்னார்த்துறைமுகத்தினூடக மனிதர்கள் வாழாத மலைமுகடுகளுக்கு நடைபய ணஞ் செய்த, தமிழ்மொழி பேசும் மக்கள்கூட்டத்தைச் சேர்ந்த மலையகமக்கள் என அழைக்கப்படும் பல இலட்சம் சிறுபான்மையினரின் குடியியல் உரிமைகளைப்பறித்து, இவர்களைத் துன்புறுத்திய பெருமை இலங்கையின் முதலா வது பிரதமர் டி.எஸ் சேனனாயக்காவையே சாரும். 'சிறுபான்மை மக்களைத் துன்புறுத்தமாட்டேன்.' என உறுதி மொழிகொடுத்த ஆட்சியாளர், உறுதிமொழியை வழங்கிய ஒரு வருடத்துக்குள் அதைமீறினார் என்பது குறிப்பிடத்த க்கது.

அன்னியமுதலீட்டுடன் கூடிய தடையற்ற வர்த்தகப்பொருளாதாரமே டி.எஸ் காலத்து இலங்கையின் பொருளாதாரக் கொள்கையாக இருப்பினும், இக்கொள்கையில் அரசின்மேலாதிக்கம் கூடுதலாக இருந்ததனால், இதன் மூலம் அரசுக்கு அதிக வருமானம் கிடைக்கவில்லை. இதனால், பொருளாதாரத்தில் பாதிப்புஏற்பட நாட்டில் வேலையில்லாத் திண்டாட் டம் அதிகரித்தது. இந்நிலையை சீர்செய்யும் பொருட்டு, மேற்கூறிய மலையகமக்களின் குடியியல் உரிமைகளைப் பறி த்து, இவர்களை நாடற்றவர்களாக்கி, மீண்டும், இவர்களை தென்னிந்தியாவுக்கு அனுப்பிவிட்டு, இவர்கள் பிறந்து வளர்ந்த இவர்களது தாயகத்தை, இவர்களது நிலங்களைப் பறித்து, இந்நிலங்களில் பெரும்பான்மைச் சிங்களவர்களைக் குடியேற்றி, உரிமைகள் பறிக்கப்பட்ட இம்மக்கள் செய்துவந்த வேலைகளை இப்பெரும்பான்மையினருக்கு வழங்கி, நாட்டில் நிலவிய வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழித்து விடலாம் என்னும் நினைப்பில், முதன்முதலாக சிறுபான்மைத் தமிழர்கள்மீது ஒடுக்குமுறையைப் பிரயோகித்து மறைமுகமாகப் போரை ஆரம்பித்து வைத்தவர் பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த இந்த ஆட்சியாளர் டி.எஸ் சேனனாயக்காவாகும்.

1950களின் முற்பகுதியில் நிகழ்ந்த கொரியப்போர் இலங்கைப்பொருளாதாரத்தில் கணிசமான அளவு தாக்கத்தை ஏற்படுத்தியது. வணிக மாற்றுவிகித வீழ்ச்சியுடன் தொடர்புபட்ட கடுமையான பொருளாதாரச் சிக்கல் நாட்டில் வேலை யில்லாத்திண்டாட்டத்தை ஏற்படுத்தியது. இதனால், 1953ல், அரிசிப்பற்றாக்குறையும் விலையுயர்வும் ஏற்பட நாட்டில் பஞ்சம், பசி, பட்டினி அதிகரித்தன. இந்நிலையை எதிர்த்து நாடெங்கிலும் மக்கள் போராட்டத்தில் குதித்து நாட்டை முடக்கநிலைக்குக் கொண்டு வந்தனர். பலர் கைதாகினர். 11 பேர் மரணத்தைத் தழுவினர். இந்நிலையைச் சமப்படுத் துவதற்கு ஆட்சியாளர்களிடம் சிறந்த பொருளாதாரத் திட்டங்கள் இல்லாததனால், இப்பொருளாதார வீழ்ச்சிக்கு மொழி தான் முக்கிய காரணமெனக் கதையளந்து மக்களின் கவனத்தை திசைதிருப்பினர் ஆட்சியாளர்கள். மொழிமூலம் பொருளாதாரத்தைச் சீர்படுத்தலாம் எனக்கருதி 'சிங்களமொழி மட்டும் சட்டம்' என்னும் பரப்புரையோடு ஆட்சியைக் கைப்பற்றினர் அதிகாரவர்க்கத்தினர். 'சிங்களம் மட்டும் சட்டம்' தமிழர்களுக்கு எதிரான ஆயுதமாகப் பாவிக்கப்பட்டு, 1956ல், 'சிங்களம் மட்டும் சட்டம்' சட்டவடிவம் பெற்றது. இதை எதிர்த்த தமிழர்கள்மீது வன்முறையைக் கட்டவிழ் த்துவிட்டு அரசபயங்கரவாத நடவடிக்கையில் ஈடுபட்டனர் ஆட்சியாளர்கள். பெரும்பான்மைச் சிங்களவர் வாழும் பகுதிகளில் வாழ்ந்த தமிழர்களின் உயிர்கள் பறிக்கப்பட்டும் சொத்துக்கள் கொள்ளையடிக்கப்பட்டும் திட்டமிட்ட இனப்போர் ஆரம்பிக்கப்பட்டது. நாட்டில்நிலவிய பொருளாதார நெருக்கடி, வேலையில்லாத் திண்டாட்டம் இனவாத ஆயுதமாகப் பயன்படுத்தப்பட்டு, தமிழர்கள்மீது போரைத்திணித்தவர்கள் பெரும்பான்மைச் சிங்களஆட்சியாளர்கள் என் பதே சிறந்த கணிப்பாகும்.

1960களின் பிற்பகுதியில், இலங்கைப் பொருளாதாரத்தின் வளர்ச்சி மந்தநிலையில் இருந்ததனால் வர்த்தகம் பாதிக்கப்ப ட்டு அன்னியசெலவாணியின் வரவு குறைந்ததனால் விலை உயர்வும் அத்தியாவசியப்பொருட்களுக்குத் தட்டுப்பாடும் வேலையில்லாத் திண்டாட்டமும் ஏற்பட்டு, 'பழையகுருடி கதவைத்திறவடி' என்ற நிலை உருவானது. இந் நிலையிலிருந்து மக்களின் கவனத்தை திசைதிருப்புவதற்கு, மதரீதியிலான பூசலை உண்டுபண்ணி கிறீஸ்தவசமயத்தின்மீது நம்பிக்கை கொண்ட மக்கள்மீது வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டு சிறுபான்மையினரைத் துன்புறுத்தினர் ஆட்சியாளர்களும் அவர்களது அடிவருடிகளும்.

→

1961ல், பண்டா– செல்வா ஒப்பந்தத்தை நடைமுறைக்குக் கொண்டு வருவதாகக்கூறி தமிழரசுக்கட்சியின் உதவியுடன் ஆட்சிக்கு வந்த இன்றைய சனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்காவின் தாயார் சிறீமாவோ பண்டாரநாயக்கா, இவ் ஒப்பந்தத்தை முற்றாகக் கைவிட்டதை எதிர்த்து, வடக்கு–கிழக்கு தழுவிய அமைதிவழிச் சத்தியாக்கிரகத்தை நடத்தினர் தமிழரசுக்கட்சியினர். இவ் அமைதிவழி அரசியல் எதிர்ப்பை அடக்குவதற்கு முதல்முறையாக இராணுவத்தை வடக்கு –கிழக்குக்கு(தமிழர்களின் தாயகம்) அனுப்பி தமிழர்கள்மீது இனவெறியையும், போர்வெறியையும் திணித்தவர் இலங்கையின் முதற்பெண்பிரதமர் சிறீமாவோ பண்டாரநாயக்காவாகும். மேற்கூறிய நடவடிக்கை மூலம் இப்பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஆட்சியாளரே அமைதிவழி அரசியலின் முதல் எதிரிகள் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போலாகும்.

1968ன் கடைசிப்பகுதியில், பன்னாட்டு நிதி அமைப்பின் வற்புறுத்தலினால் இலங்கை ரூபாவின் மதிப்புக்குறைக்கப்பட அன்றாடப்பாவனைப் பொருட்களின் விலையில் திடீர் உயர்வு ஏற்பட்டது. மீண்டும், நாட்டில் பஞ்சம், பசி, பட்டினி ஏற்பட மக்கள் போர்க்கொடி தூக்கினர். மக்களின் கவனத்தை திசைதிருப்பி இவர்களைத் திருப்திப்படுத்துவதற்காகவும், 1972ல், நாட்டை சிங்கள பௌத்த குடியரசாக்கி புத்தகுருமார்களின் அரசியல் அதிகாரத்தை வலுப்படுத்தவும் நாட்டில் வாழும் மற்றைய இனத்தவரின் உரிமைகளைப் பறித்து, இவர்களை இரண்டாந்தரக் குடிமக்களாக்கி இலங்கைத் தேசியத்திலிருந்து தூரவிலகிநிற்கும்படி செய்தவர்கள் இப் பெரும்பான்மைச் சிங்கள ஆட்சியாளர்கள்.

பொருளாதாரம் மந்தநிலையிலும், பசி–பட்டினி–வேலையற்றோர் எண்ணிக்கை கைபிருப்பிலும், வாழ்க்கைத்தரம் கீழ்நோக்கிய நிலையிலும் இருக்கும் போது, 1977ல், ஆட்சிக்குவந்த ஆட்சியாளர்களால் உருவாக்கப்பட்ட திறந்த பொருளாதாரக் கொள்கை, வாணிபம்–பெருந்தொழில்களுக்கான முதலீடுகள், வேலைவாய்ப்புகள், பாடசாலை–பல்கலைக்கழக அனுமதிகள் இனங்களுக்கிடையே போட்டியையும், பணவீக்கம், பத்திரிகைகளின் பேரினவாதப் பரப்புரைகள் இனங்களுக்கிடையே மேலும் விரிசலை உண்டு பண்ண, ஆட்சியாளர்கள் ஆட்சியைத் தக்க வைக்க தமிழர்கள்மேல் வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டு மறைமுகமாக இனப்போரை ஊக்குவித்தனர். இதே ஆட்சியாளர்களால் 1979–81 வரை தமிழர்கள்மேல் மறைமுகமாக சிறிது சிறிதாகத் திணிக்கப்பட்ட போர், 1983ல், நேருக்குநேர் போராக மாற்றப்பட்டு நாட்டின் ஒருபகுதி மக்களை போரின்மூலம் அடியோடு ஒழிப்பதற்கு 1.2பில்லியன் ரூபா அரசாங்கத்தின் நிதிநிரலிற் சேர்க்கப்பட்டது. 1986ல், போராக்கத்தை விரிபுபடுத்தி 3.3பில்லியன் ரூபா மீண்டும் நிதிநிரலில் சேர்க்கப்பட்டது. 1989ல், போர்ச்செலவுகள் 6 பில்லியனாகவும், 1993ல், 16.6 பில்லியனாகவும், 1994ல், ஆட்சியைக் கைப்பற்றிய ஆட்சியாளர்களால் 21.4 பில்லியனாகவும், 1996ல், 31.7 பில்லியனாகவும், 1997ல், 45 பில்லியனாகவும், 1998ல், 57 பில்லியனாகவும், 2000ல், 106.43 பில்லியன்ரூபாவாகவும் உயர்த்தப்பட்டு, 'சிட்டுக்குருவியின் தலையில் பனங்காயைக் கட்டிவிட்டது போல்' நாட்டை போரில் மூழ்கவைத்துள்ளனர் இப் பெரும்பான்மைச் சிங்கள ஆட்சியாளர்கள்.

பொருளாதார ரீதியிலும் இராணுவ–உளவியல்ரீதியிலும் சிறீலங்காஅரசு தோல்விகண்ட இப்போரின் மூலம் விலைமதிக்கமுடியாத பல இலட்சம் உயிர்கள் கொலைசெய்யப்பட்டும் பல ஆயிரம்மக்கள் உடலின் பாகங்களை இழந்தும் சிறுகச்சிறுகச் சேகரித்த பலகோடி பெறுமதியான சொத்துக்கள் நாசமாக்கப்பட்டும் கொள்ளையடிக்கப்பட்டும் பல இலட்சம்மக்கள் அகதிகளாக்கப்பட்டும் பசி–பட்டினி–நோய்–நொடி போன்றவற்றால் பாதிக்கப்பட்டும் உள்ளநிலையில், மீண்டும் இப்போரை முன்னெடுத்துச் சென்று ஆட்சியைத் தக்கவைக்க 20 ஆயிரம் இளைஞர்களை ப்படைக்குத் திரட்டித்தரும்படி மாண்புமிகு சனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கா புத்தகுருமார்களுக்கு அறைகூவல் விடுத்துள்ளார். இவரால் கொண்டுவரப்பட்டு நடைமுறைப்படுத்தவிருந்த புதிய அரசியலமைப்புச் சட்டமூலத்தைஎதிர்த்து சாகும்வரை பட்டினிப்போர் நடத்திய புத்தகுருவையும் இவ் அரசியல் அமைப்புச் சட்டமூலத்தை ஆதரித்த அரசியல்வாதிகளைத் தேசத்துரோகிகளாக புத்தகுருமார்களின் தலைமையில் மக்களுக்கு அடையாளங்காட்டப் போவதாக சிங்களஅமைப்புகளின் பேச்சாளர் அறிக்கைவிடுத்திருந்தார். 'இனப்போருக்கான எந்தவொரு தீர்வுத்திட்டமும் பௌத்தமகாசங்கத்தின் ஆசியுடன்தான் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்' எனக்கூறும் பிரதமர் இரட்ணசிறீ விக்கிரமநாயக்காவின் கையறுநிலையும், சிறீலங்கா அரசியலில் பௌத்தமகாசங்கத்தினதும் பௌத்தகுருமார்களினதும் ஆதிக்கத்தைப் படம்பிடித்துக் காட்டுகின்றன.

இலங்கையின் இனப்போரை நிறுத்துவதற்காக எழுதப்பட்ட அனைத்து சமாதானஒப்பந்தங்களும் கடைசிக்கு முன்பு கொண்டுவரப்பட்ட வெற்றுப்பொதித்தீர்வுத்திட்டமும் புத்தகுருமார்களின் கடும்எதிப்புகளினால் தோல்வியில் முடிந்துள்ளன. மேலும், நோர்வேநாடு மேற்கொண்ட சமாதானத்தூது முயற்சியை எதிர்த்த புத்தகுருவினால் இந்நாட்டின் தேசியக்கொடி சிறீலங்காவில் உள்ள நோர்வேநாட்டுத் தூதரகத்தின் முன்னிலையில் எரித்துச் சாம்பலாக்கப்பட்ட நிகழ்ச்சிகள் சிறீலங்காவின் அரசியலை மக்களால் தெரிவுசெய்யப்பட்ட அரசியலாளர்கள் நெறிப்படுத்தவில்லை என்பதையும் அரசுவிடயங்களில் பௌத்தகுருமார்களின் முழுமையான தலையீட்டையும் உறுதிப்படுத்துகிறது.

சிறீலங்காவின் அரசியலில் மதங்களின் அதிகாரவலுவை, குறிப்பாக பௌத்தமதத்தின் அதிகாரவலுவை இழக்கச்செய்யாதவரையிலும், மகாசங்கம், அஸ்கிரியபீடம் போன்ற பௌத்தமடங்களின் அரசியல் ஆக்கிரமிப்பை முறியடித்து வெற்றி கொள்ளாதவரையிலும் இப்போரைத் தொடர்வோரிடமிருந்து சமாதானத்தை எப்படி எதிர்பார்க்க முடியும்?

சிறீலங்கா அரசியலின் மூலதனமான இனப்போர், 'போரின் மூலம் சமாதானம்' எனக்கூறிவந்த ஆட்சியாளர்களின் அரசியலைப் பொய்யாக்கியதுடன், இப்போரை உருவாக்கியவர்களையும், இது உருவாக்கப்பட்ட காரணங்களையும் நன்கு தெளிவாக்குகிறது. போரையும் உருவாக்கி, அதன்பின்பு 'சமாதானத்தை ஏற்படுத்துவதற்காகப் போர்புரிகிறோம்' என முதலைக்கண்ணீர் வடிக்கும் பெரும்பான்மையினச் சிங்கள ஆட்சியாளர்கள், போரைநிறுத்துவதன் மூலம் சமாதானத்தை ஏற்படுத்த முடியாத சமாதானத்தின் எதிரிகளாக 'தின்னவும்முடியாமல் விழுங்கவும் முடியாமல்' திணறும் இக்கட்டான சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள் என்பதை, சிறீலங்கா அரசியல் உலகுக்குப் பாடமாகக் கற்றுக் கொடுத்துள்ளது. (இக்கட்டுரை அமைதிவழி அரசியலின் எதிரிகளும் சமாதானத்தின் எதிரிகளும் என்னுந்தலைப்பில் 03.09.2000இல் வீரகேசரி வாரவெளியீட்டின் மூலம் வெளியாகியது.)

பாரீசிலிருந்து, திவ்வியநாதன் செல்வத்துரை. காலம்– 25–8–2000

தீண்டத்தகாதவர், இவருடைய கை பட்டாலும் குற்றம் கால்பட்டாலும் குற்றம் எனப் பல நாடுகளால் கருதப்பட்டு அரசியல்ரீதியாக ஓரங்கட்டப்பட்டவர், 12–4–99ல், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தை இராணுவபலத்தால் கவிழ்த்து பாக்கிஸ்தானின் சனாதிபதியாக முடிசூடிக்கொண்டவர் பாகிஸ்தானிய இராணுவத்தளபதி ஜெனரல் முசராப் அவர்கள்.

சவுதிஅரேபியாவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், இஸ்லாம்மதத்தின் பிரிவாகிய சுனித் என்னும் அதிதீவீர அடிப்படைவாத மதப்பிரிவின் கொள்கைகளை இராணுவக்கட்டமைப்பின் மூலம் திணிக்க முயல்பவரும், ஆப்கானிஸ்தானில் இருந்து இயங்கியவருமான கோடீஸ்வரர் ஒசாமா பின்லாடனின் அலக்கைடா என்னும் மதவாத அணியினரால் 11–9–01ல், அமெரிக்க நடுவண் உலகவர்த்தக நிலையத்தின் மீதும்– அமெரிக்கப்பாதுகாப்பு வலையக் கட்டிடத்தின் மீதும் நடத்தப்பட்டதாகக் கூறப்படும் விமானத்தாக்குதலின் பின்பு, அமெரிக்காவினால் ஏற்படுத்தப்பட்ட 'பன்னாட்டுப்பயங்கரவாத அழிப்பு அணி'யில் பாகிஸ்தானியச் சர்வாதிகாரி ஜெனரல் முசராப்பையும் உறுப்பினராகச் சேர்த்து, அமெரிக்கா தனது முக்கிய நண்பனாக அறிவித்துள்ளது உலககவனத்தை ஈர்த்துள்ளது. இந்நிகழ்வின் மூலம், இராணுவ அதிபர் முசராப் கறைபடிந்த தனது கரங்களைக் கழுவி சனநாயகத்தின் பாதுகாவலனாகவும் அமைதியின் தூதுவனாகவும் தன்னை இனங்காண வைத்துள்ளதுடன் பன்னாட்டுப்பயங்கரவாதத்தை அழிக்கும் முயற்சியில் ஈடுபட்டுப் பல நாடுகளின் தலைவர்களைச் சந்தித்து வருவது குறிப்பிடத்தக்கது.

'பலரும் விரும்பக்கூடிய முறையிலும் இலகுவான முறையிலும் பன்னாட்டுப்பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு வழி இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.' எனக்கூறும் பிரித்தானியப்பிரதமர் தொனிபிளேயரை– பயங்கரவாத அழிப்புச் சக்தியைச் சந்திப்பதற்கு வரும் வழியில், 'பயங்கரவாதத்தை ஒழிப்பதில் பாகிஸ்தானின் பணி தொடர்வதுடன் இந்நாடு எடுத்த முடிவுக்கு எனது பாராட்டுக்கள்' எனப் பராட்டைத்தெரிவித்த பிரெஞ்சுச் சனாதிபதி ஜக் ஷீறாக்கை பிரான்சில் சந்தித்துப் பாராட்டுக்களையும்பெற்ற ஜெனெரல் முசராப், முன்னாள் கூட்டாளிகளான தலிபான்களுடன் தனது உறவில் விரிசலை ஏற்படுத்தியுள்ளார்.

காபூலில் இருந்த கம்யூனிசஆட்சி முடிவுக்கு வந்த காலப்பகுதியில், அங்கு நிலை கொண்டிருந்த சோவியத்துருப்புக்க ளின் வெளியேற்றத்திற்குப் பின்பு, 1994ன் தொடக்கப்பகுதியில், ஆப்கானிஸ்தானில் நடைபெற்றுவந்த உள்நாட்டுக் கலவரத்துக்கு முடிவு கட்டவேண்டிய நிலை ஏற்பட்டது. 50000 பொதுமக்களைக்காவுகொண்ட போரினால் பல இலட்சம் அகதிகள் பாகிஸ்தானுக்குள் நுளையக்கூடிய சூழ்நிலையைத் தடுப்பதுடன் மசகுஎண்ணை, எரியும்வாயு வர்த்தகத்தில் ஈடுபட்டுவந்த அமெரிக்க வர்த்தக நிறுவனங்களுக்கு காபூலில் நிலையான அரசு அமையவேண்டிய தேவை ஏற்பட்டது.

முன்பு, சோவியத்துக்கூட்டில் பங்குபற்றி தற்போது சுதந்திரநாடுகளாக இயங்கும் தயிகிஸ்தான் போன்ற நாடுகளில் விளையும் மசகுஎண்ணையையும் எரியும்வாயுவையும் கொள்வனவு செய்து ஆப்கானிஸ்தானூடாகக் குழாய்கள்மூலம் பாகிஸ்தானுக்குள் கொண்டுசென்று இந்துசமுத்திரத்தின்வழியாக வர்த்தகத்தை நடத்துவதற்குப் பாதையொன்றைத் திறக்கவேண்டிய அவசரநிலை ஏற்பட, பாலியநண்பர்களும் தற்போதைய பயங்கரவாதிகளுமான தலிபான்என்னும் அடிப்படைவாத மத அமைப்பொன்றை அரசகட்டில் ஏற்ற அமெரிக்காவுக்குப் பாகிஸ்தான் உதவியதெனக் கூறுகிறார் புலனாய்வுப் பிரெஞ்சுப்பத்திரிகையாளர் திரு. கிய்யோம் டஸ்கிஏ.

பாகிஸ்தானின் உதவியுடன் ஆட்சிஅமைத்துக்கொண்ட தலிபான் அரசை அமெரிக்கா அழிக்குமாக இருந்தால், முன்பு, 'கம்யூனிசத்தை எதிர்த்துப்போராடியதுபோல், அமெரிக்கா நியமிக்கும் அரசைக் கெரில்லாப் போர் மூலம் வீழ்த்தி ஆட்சியைக் கைப்பற்றுவோம்.' எனச் சூளுரைக்கும் தலிபான்களை இயக்கும் முக்கிய தலைவர்களில் ஒருவரும் இஸ்லாம்மதத்தைக் காப்பாற்ற மனிதப்பிறவி எடுத்தவர் எனத் தன்னைக்கருதும் ஒசாமா பின்லாடன், 1987ல், அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏயின் உதவியுடன், ஆப்கானிஸ்தானில், தனெக்கென ஒரு படைமுகாமொன்றை நிறுவி, இன்று, பயங்கரவாத அமைப்பாகக் குற்றஞ்சாட்டப்பட்ட அல்க்கைடா என்னும் அமைப்பை உருவாக்கி, 43 நாடுகளில் இருந்து வந்த 35000 தீவீரவாதிகளுக்குப் போர்ப்பயிற்சியும், 1 இலட்சம்பேருக்கு இஸ்லாமியப் பயிற்சியும் அளித்ததாகச் செய்திகள் கூறுகின்றன. மேலும், இத்தீவீரவாதிகளின் துணையுடன் காபூலில் நிலைகொண்டிருந்த சோவியத்துப் படைகளை விரட்டி அடித்ததாகக் கூறப்படுகிறது. ஆப்கானிஸ்தானில் விளைவிக்கப்படும் போதைச்செடிகள் மூலம் தயாரிக்கப்படும் போதைப்பொருட்களை விற்றுப்பெறப்பட்ட பணத்தைக்கொண்டு ஆயுதக்கொள்வனவு செய்து, சோவியத்துத்துருப்புக்களுடன் போரிட்டதாகவும் போதைமருந்து விற்பனையை அமெரிக்கா கண்டுங் காணாமல் இருந்ததாகவும் பிரெஞ்சுச்செய்திப்படம் ஒன்று விளக்குகிறது.

1986ல், சோவியத்துப்படைகளின் வெளியேற்றத்துக்குப் பின்பு, இப்போரைப் பின் நின்று இயக்கிய அமெரிக்காவும் சவுதிஅரேபியாவும் 'விடுதலைக்காகப் போராடும் போராளிகள்' என முன்னாள் அமெரிக்கச் சனாதிபதி திரு.றொனால்ட் றீகனால் வாழ்த்தப்பட்ட போராளிகளின் வாழ்க்கைச் செலவுகளுக்கு எதுவித உதவிகளும் செய்யாதது கண்டு கொதிப்படைந்த பின்லாடன், தனது செலவில் இவர்களைப் பராமரித்து வந்ததுடன் அமெரிக்காவையும் சவுதிஅரேபியாவையும் கடுமையாகக் கண்டித்ததாகச் செய்தி.

சவுதிஅரேபியாவில் இருந்து ஆப்கானிஸ்தானுக்கு சோவியத்துப்படைகளை எதிர்த்துப்போரிட வந்த மதப்போராளி பின்லாடன், 1997ல், தனது தாய்நாடான சவுதிக்குச் சென்றபோது, உள்துறை அமைச்சரான இளவரசர் நெய்வ்வாலால் விசாரணைக்குட்படுத்தப்பட்டு, இஸ்லாம்மதத்துரோகி எனப் பழிக்கப்பட்டு இரண்டு வருடங்களின் பின்பு தனது சவுதிக்குடியுரிமையையும் இழந்தநிலையில் சூடான்நாட்டை வந்தடைந்தார்.
சூடான்நாட்டை வந்தடைந்த இவர், அங்கு பாரிய அளவில் படைமுகாமை நிறுவி பல ஆயிரம் இஸ்லாமிய

⟶

இளைஞர்களுக்கு ஆயுதப்பயிற்சி வழங்கி, இவ்விளைஞர்களை இயெமென் நாட்டுக்குள் கூட்டிச்சென்று, வடக்கில் ஓராட்சியும் தெற்கில் ஓராட்சியுமாக பிரிவுபட்டிருந்த இந்நாட்டை இஸ்லாம்மதத்தின் பெயரால் ஒன்றிணைத்து ஒரு குடையின்கீழ் கொண்டு வந்ததனால் அமெரிக்காவின் முதல் எதிரியானார். வைகாசி–1996ல், அமெரிக்கா சூடானுக்குக் கொடுத்த அழுத்தம் காரணமாக, அமெரிக்க எதிரி பின்லாடன் சூடானை விட்டு வெளியேறி, தனது 3மனைவியருட னும் 13 பிள்ளைகளுடனும் ஆப்கானிஸ்தானை வந்தடைந்தார். இக்காலப்பகுதியில், ஆப்கானிஸ்தானில் இருந்து தலிபான்களை வழிநடத்திவந்த முல்லா ஒமார் என்னும் எழுத–படிக்கத் தெரியாத கல்வியறிவற்ற போர்த் தலைவன் தனது கடைசிமகளை பின்லாடனுக்கு 4வது மனைவியாக மணம்முடித்து வைத்து மருமகனாக ஏற்றுக்கொண்டதனால், முல்லா ஒமாரின் நம்பிக்கைக்குரியவரான பின்லாடன் தலிபான்களின் மூளையாகச்செயற்படுவது குறிப்பிடத்தக்கது.

பின்லாடனால் உருவாக்கப்பட்ட அல்க்கைடா அமைப்பினரினால், 11–9–01ல், அமெரிக்காமீது நடத்தப்பட்ட விமானத் தாக்குதலுக்கு முன்பு ஈடாட்டம் கண்டிருந்த அமெரிக்கப்பொருளாதாரம், இத்தாக்குதல் மூலம் மேலும் பலவீனமடைந்து 10500கோடி டொலர்களை இழந்துள்ளது. மேலும், இச்செய்கையினால் பல வறிய நாடுகளின் பொருளாதாரம் வீழ்ச்சி கண்டு பாரிய உயிரிழப்புக்கள் ஏற்படும் நிலை உருவாகியுள்ளதுடன், உலகம் பூராவும் பல இலட்சம் மக்கள் வேலைவாய்ப்பை இழந்தும் பட்டினிச்சாவினால் பல குழந்தைகளின் இறப்பு விகிதம் அதிகரித்தும் உள்ளதாக உலகவங்கி தெரிவிக்கிறது.

அல்க்கைடா அமைப்பின் பயங்கரவாதநடவடிக்கைகளுக்கு அரசாங்கம் சாரா இஸ்லாமிய அமைப்புக்கள் பல உதவியதாகவும், அதில், அரபுப்பண முதலைகளை அங்கத்தவர்களாகக் கொண்டு ஆப்கானிஸ்தானில் இருந்து இயங்கிய வபா என்னும் அமைப்பு, 11–9–01ல், அமெரிக்காமீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு ஏடு தொடக்கி வைத்ததாகவும், பாக்கிஸ்தான் அரசுக்குச்சொந்தமான அபிப் வங்கி, சூடானுக்குச் சொந்தமான அல்சமல் இஸ்லாமிய வங்கி, பிரித்தானிய– ஜேர்மனிய– பிரெஞ்சு வங்கிகள், சுவிசைச்சேர்ந்த நடா மனேஜ்மன், மேலும், பல ஏற்றுமதி–இறக்குமதி நிறுவனங்கள், இலண்டனைச்சேர்ந்த சிற்றி வங்கி யாவும் பின்லாடனுடைய அல்க்கைடா அமைப்புக்குப் பணத்தைமாற்றியும் கறுப்புப்பணத்தை வெள்ளையாக்கியும் கொடுத்து வில்லங்கத்தில் மாட்டிக்கொண்டதாகவும் கூறுகிறார் பிரெஞ்சுப்பத்திரிகையாளர் திரு. எத்தினன் ஜேர்நெல் அவர்கள்.

பின்லாடனின் அணியைச்சார்ந்தவரும் சவுதியில் இருந்து வெளியேற்றப்பட்ட சிரியப்பணக்காரக் குடும்பத்தவரும் மத மனநோயாளியும் தற்போது இலண்டனில் அரசியல் தஞ்சங்கோரி வாழ்ந்து வருபவருமான சேக் ஒமார் பக்கிரி முகமட் என்பவர், 'குர் ஆன் சட்டங்கள் பிரித்தானியாவை ஆளும் நாள் வெகு தொலைவில் இல்லை எனவும் இஸ்லாம் மதம்தான் உலகை ஆளவேண்டும்' என்னும் பரப்புரையைப் படு அட்டகாசமாக இலண்டன்வீதிகளிற் செய்து, 2000 பேரைத் திரட்டியுள்ளதுடன் பல இளைஞர்கள் இவர் விரித்த வலையிற் சிக்கி, புனிதப்போருக்கான உடற்பயிற்சியில் ஈடுபட்டுவருவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பிரித்தானிய அரசு வழங்கிய வேலையற்றோருக்கான உதவிப்பண த்தைப் பல காலமாக விழுங்கியபடியே மேற்கூறிய நடவடிக்கையில் ஈடுபட்டுவந்ததாகவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மக்களாட்சித் தத்துவத்தின் உயிர்நாடியான பேச்சுச்சுதந்திரம்–எழுத்துச்சுதந்திரத்தைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தி பயங்கரவாதநடவடிக்கையில் ஈடுபட்டதனால், 28–2–01ல், பிரித்தானிய அரசாற் கொண்டுவரப்பட்ட பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் மூலம், இவரது இஸ்லாமியஅமைப்பு தடைசெய்யப்பட்டுள்ள நிலையிலும், 'பாக்கிஸ்தான் அதிபர் முசராப் அமெரிக்காவுடன் கூட்டுச்சேர்ந்து முஸ்லீம்களைக் காட்டிக்கொடுத்துவிட்டார்' எனக்கூறி, இவரைக்கொலை செய்ய ஆணையும் பிறப்பித்ததனால் சிலமாதங்களுக்கு முன்பு ஸ்கொட்லாந்யாட் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் உள்ளதாகத் தகவல்.

வந்துகுடியேறிய நாட்டில், வரவேற்றநாட்டில், அந்தந்தநாட்டு மக்களின் வரிப்பணத்தை விழுங்கிக்கொண்டு, அந்நாட்டு மக்களுக்கும் அந்நாட்டுக்கும் எதிராகப்பேசுவதும் அம்மக்களின் பாதுகாப்புக்கு இடையூறாக இருப்பவர்கள் அனைத்துச் சமூகங்களிலும் இருப்பது வருந்தத்தக்கதுடன், கிடைத்த பேச்சுச்சுதந்திரம்–எழுத்துச்சுதந்திரம் நாசமாக்கப்பட்டு பறிக்கப்படுவதை சேக் ஒமார் பக்கிரியின் பயங்கரவாத நடவடிக்கை தெளிவாக்குகிறது.

பயங்கரவாத ஒழிப்புநடவடிக்கையில் ஈடுபட்டுள்ள பாக்கிஸ்தானின் தலைவர் ஜெனெரல் முசராப், தனது நாட்டின் உளவுநிறுவனத்தின் பாதுகாப்புடன் உதயமான தலிபான் என்னும் மதவாதஅமைப்பு காபூலைக்கைப்பற்றி, பாக்கிஸ்தானின் இந்திய எதிர்ப்பலைக்கு ஆதரவான தனது உறுதிநிலையை வழங்கியதனாலும் இஸ்லாம்மதத்தைத் தனது அடிப்படைத் தத்துவமாகக்கொண்டதனாலும் பாக்கிஸ்தானில் உள்ள பல சமூகங்களை ஒன்றிணைக்கும் சீமெந்தாக இஸ்லாம் இருப்பதனால், காஸ்மீர்த் தீவீரவாதிகளுக்கு ஆப்கானிஸ்தானில் ஆயுதப்பயிற்சி வழங்கப்பட்ட தனாலும் சில காலங்கள் தலிபான்களுடன் உறவை வைத்திருந்து, அமெரிக்காவுக்குப் பாக்கிஸ்தான் கொடுக்க வேண்டியிருந்த பலகோடி டொலர்களை அமெரிக்கா துருப்புச்சீட்டாக விட்டுக்கொடுத்ததனாலும் கருப்புத்தலைப்பாக்கா ரத்தலிபான்களுடன் தனது ஊடலை முடிவுக்குக் கொண்டுவந்துள்ளார். இவ்வேளையில், பாக்கிஸ்தானின் உளவுப்படையின் ஊக்குவிப்பினால் இந்தியப்பகுதிகளுக்கு உட்பட்ட காஸ்மீரில் பயங்கரவாதநடவடிக்கையில் ஈடுபடவும் இந்தியஇராணுவத்துக்கு எதிராகச்செயற்படவும் தலிபான்களுடைய இராணுவப்பயிற்சி முகாம்களில் பயங்கரவாதநடவடிக்கைகளுக்கென இரசாயனநச்சுக்குண்டுகளைத் தயாரிப்பதற்கு விசேடபயிற்ச்சிபெற்ற பாக்கிஸ்தானின் இஸ்லாமியத் தீவீரவாதியும் 27வயது நிரம்பிய முரட்டுத்தலைவர் திரு. சலகெட்டின் கல்லெட் பாக்கிஸ்தானின் உளவுப்படை பயங்கரவாதத்தை அழியவிடாது கட்டிக்காக்கிறதெனக் கூறுகிறார்.

பாகிஸ்தான் உருவாக்கப்பட்டபோது, முன்பு, ஆப்கானிஸ்தானின் எல்லைகளாக இருந்த பல பகுதிகளைப் பறித்து ஆங்கிலேயர்கள் பாகிஸ்தானிடம் கொடுத்ததாகவும், இதனாற், கோபமடைந்த ஆப்கானிஸ்தான், உருவாக்கப்பட்ட பாகிஸ்தானை அங்கீகரிக்க மறுத்ததாகவும், தற்போது, 150.6மில்லியன் சனத்தொகையைக் கொண்ட பாகிஸ்தான், 26.7 மில்லியன் மக்களைக் கொண்ட ஆப்கானிஸ்தானை விழுங்கி ஏப்பம்விட முயல்வதாகவும் ஆப்கானிஸ்தானின் →

இன்றைய நிலைக்குப் பாகிஸ்தானே காரணமென ஆப்கானிஸ்தானின் இராஜதந்திரி ஒருவர் பாக்கிஸ்தானைக் குற்றஞ்சாட்டியுள்ளார்.

பாக்கிஸ்தானின் ஆட்சியாளர்களின் அடாவடித்தனமான ஆக்கிரமிப்பு எண்ணங்களை– பயங்கரவாத ஊக்கிவிப்பு நடவடிக்கைகளைக் கவனத்தில் எடுக்காது புறந்தள்ளிவிட்டு, இந்நாட்டின் அதிகாரவர்க்கத்தின் தலைவர் ஜெனெரல் முசராப் 'நல்லவர், பயங்கரவாதத்தை ஒழிப்பதில் வல்லவர்' எனக்கூறியவாறு பன்னாட்டுப்பயங்கரவாத அழிப்புஅணியில் சர்வாதிகாரி ஜெனெரல் முசராப்பையும் பாக்கிஸ்தானையும் சேர்த்துள்ள அமெரிக்கா, பக்கத்துவீட்டுவாசலில் இருக்கும் குப்பையை அகற்றமுன்பு, தனது வீட்டுவாசலில் இருக்கும் குப்பையை அகற்றவேண்டிய கடமைப்பாட்டில் உள்ளது.

வளைகுடாப்போருக்குப்பின்பு உருவான புதிய உலக ஒழுங்கமைப்பில் வல்லவன் கீறியதே வாய்க்கால் ஆகிவிட்ட நிலையில், நண்பர்களை நண்பர்கள் தின்பதற்கு முயற்சிசெய்யும் காட்டுமிராண்டிக்காலத்தில், உலகில் பேச்சுச் சுதந்திரம் எழுத்துச்சுதந்திரம் நிலைகொண்டு மக்களாட்சித்தத்துவம் வளம்பெறவேண்டுமானால், இந்துமதப்பயங்கரவாதம் உட்பட்ட அனைத்து மதப்பயங்கரவாதத்தையும் இனவாதப்பயங்கரவாதத்தையும் ஒழிப்பதற்கு அமெரிக்காவின் உதவியும் முதலீடும் தேவைப்படும் இவ்வேளையில், பணமே எல்லாவற்றிற்கும் முதற்படி மனிதநேயம் கடைப்படி என்னும் நினைப்பிற் செயற்படும் அமெரிக்கா, தேவைஏற்படும்போது பயங்கரவாதிகளுடன் கூட்டுவைப்பதுந் தேவைஏற்படாதபோது பயங்கரவாதிகள் எனக்குற்றஞ்சுமத்தும் போக்கை நிறுத்தி, தனது வெளியுலக அரசியலில் வடைசுட்டு விற்கும் வியாபார அரசியலைச் செய்யாது நேர்மையான முறையில் திரு.ஏபிரகாம் லிங்கன், வோசிங்ரன் போன்ற மனிதநேயர்கள் காட்டிய அரசியல்பாதையில் செல்லக்கடமைப்பட்டுள்ளது. மேலும், முரடர்களைத் தூண்டிவிட்டு அரசியல் வியாபாரத்தின் மூலம் பணப்பெருக்கத்தை நினைக்குமேயானால் பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு மாறாகப் பயங்கரவாதத்தை உற்பத்திசெய்யும் நிலையைத் தோற்றுவிக்கும்.

அமெரிக்காவால் பன்னாட்டுப்பயங்கரவாத ஒழிப்புஅணியில் சேர்த்துக்கொள்ளப்பட்ட நாடான சிறீலங்காவில், மதப்பயங்க ரவாதமும் இனப்பயங்கரவாதமும் ஒன்று சேர்ந்து சிறீலங்காஅரசபயங்கரவாதமாகத் தோற்றமெடுத்துள்ள இவ்வேளையில், சனநாயகவிரோதப் பயங்கரவாதச் சிறீலங்கா அரசுக்கு, பயங்கரவாதத்தை ஒழிப்பது என்ற போர்வையில் பணஉதவியும் பிரச்சார உதவியும் மறைமுக இராணுவஉதவியும் செய்துவரும் அமெரிக்காவின் நடவடிக்கைகள் கண்டனத்துக்குள் ளாகுவதுடன் விமர்சனத்துக்கும் உள்ளாகின்றது.

சிங்கம் ஒன்றைக் கொல்லவேண்டுமானால் முதலில் அதன் தலையில் அடிக்கவேண்டுமெனக் கூறப்படுகிறது. இலங்கைத்தீவில் கர்ச்சிக்கும் இனவாத–மதவாதப் பயங்கரவாத சிங்கத்தின் தலை சிறீலங்காவிற்குள்ளும் வால்மட்டும் தமிழர்மண்ணிலும் இருப்பதனால், சிறீலங்காவிற்குள் தலைவைத்து ஆறுதலாகப்படுத்திருக்கும் பயங்கரவாதச் சிங்கத்தின் தலையில் ஓங்கியடித்துக் கொல்வதனால் மட்டுமே, இத்தீவில், பயங்கரவாதத்தை ஒழிக்கமுடியும். சிங்கத்தின் தலையில் அமெரிக்காவால் ஓங்கியடிக்கமுடியுமா என்பது கேள்விக்குறி மட்டுமே. (*09.12.2001*ன் வீரகேசரி வாரவெளியீட்டில் 'பயங்கரவாதஒழிப்பு என்ற போர்வையில் அமெரிக்கா—பாகிஸ்தான்–இலங்கை கூட்டுமுயற்சி' என்னும் தலைப்பில் வெளி யாகியது. இது வாசகர்களின் மீள் கவனத்துக்காக)

**திவ்வியநாதன் செல்வத்துரை. காலம், 05–12–01**

# பௌத்ததுறவிகளிலிருந்து பின்லாடன்வரை

'சிங்கள இனத்துக்கும் பௌத்தத்திற்கும் உள்ளதொடர்பு பிரிக்கமுடியாதவாறு மிகவும் நெருக்கமானது. சிங்களவரின்றி பௌத்தமில்லை, பௌத்தமின்றி சிங்களவரில்லை. சிங்களவரின் இலக்கியம் பௌத்த இலக்கியம். சிங்களவரின் வரலாறு பௌத்தத்தின் வரலாறு, சிங்களவரின்கலாச்சாரம் பௌத்தத்தின் கலாச்சாரம், சிங்களவரின் கொடி பௌத்தசிங்களக்கொடி. சிங்களவர்களே பௌத்தசமயத்தைக் காப்பாற்றுங்கள்.' எனக்கூக்குரலிடும் அதியுயர்சொகுசுவாழ்வுப் புத்தபிக்குகளான அஸ்கிரியபீடாதிபதிகளும் மல்வத்தபீடாதிபதிகளும், இஸ்லாம்மதத்தைக் காப்பாற்றப் புனிதப்போர் தொடுக்கும் ஒசாமா பின்லாடனும் ஒத்ததன்மையுடைய மனநிலை உடையவர்கள். இம்மனநிலை உடையவர்களால், உலகம்பூராவும், மதத்தின்பெயரால் நடத்தப்பட்டுவரும் படுகொலைகளின் எண்ணிக்கை வான்வரை உயர்ந்து செல்ல, பேரழிவுகள் எஞ்சிநிற்க, மனிதவினம் அழிந்துசெல்கிறது.

*65610*சதுரக்கிலோமீற்றர் பரப்பளவில் *9* மாகாணங்களையும் *25* மாவட்டங்களையும் *22* தேர்தல்மாவட்டங்களையும் கொண்ட இலங்கைத்தீவில் வாழும் அனைத்து மக்களும் ஒருநாட்டுமக்களெனவும், மதசார்பற்ற அரசைக்கொண்டுள்ள நாடெனவும், தீவின் அரசியற்சட்டங்கள் தம்பட்டம் அடித்தாலும், மதத்தைக்காப்பாற்றுவதற்கு மட்டுமே அரசு என்னும் வகையிற் செயற்பட்டு, புத்தபிக்குகளின் காலடியில் மண்டியிடும் சிறீலங்காஅரசின் பரிதாபநிலையைப் பலவருடங்களாகக் காணலாம்.

நாட்டில்வாழும் அனைவரும் சட்டத்துக்குச் சமமானவர்கள் எனக்கூறிக்கொண்டு, பெரும்பான்மை–சிறுபான்மை, சிங்களம்பேசும்மக்கள்–தமிழ்பேசும்மக்கள், தமிழ்பேசும்மக்கள்–முஸ்லீம்கள் என்னும் பிரிவினையோடு தமிழ்பேசும்மக்களில் ஒருசிலரை மதஅடையாளத்தின் மூலம் முஸ்லீங்களாகப்பிரித்து, தமிழர்கள்–முஸ்லீம்கள் என்னும் பாகுபாட்டின் பிரகாரம் இவர்களிடையே விரிசல்களையும், விரோதங்களையும் ஏற்படுத்தி, தமிப்பேசும் மக்களின் எண்ணிக்கையைக் குறைத்து, இவர்களை மோதவைத்து, 'இரத்தம்பருகக்காத்திருக்கும் ஓநாய்போன்று' இவர்களின் அழிவுக்காகக் காத்திருப்பதாகவும், பிரித்தாளும் தந்திரத்தின் வாயிலாக இம்மக்களை சிறீலங்காஅரசு பிரித்தாளுவதாகவும் கருதுகிறார்கள் நோக்கர்கள்.

நாட்டில் ஏற்படுத்தப்பட்ட போலியான சனநாயக ஆட்சி மூலம், *1948*ல், பெரும்பான்மைச் சிங்களவினம் தமிழ்பேசும் மக்களுள் மூன்றில் ஒருபங்கினரின் குடியுரிமை, வாக்குரிமையைப் பறித்தும், *1956*ல், 'சிங்களம் மட்டும்சட்டம்' என்னும் சட்டநிறைவேற்று தலின் மூலம், நாட்டின் சுதந்திரப்போராட்டத்திற் பெரும்பங்கினை வகித்த தமிழ்பேசும்மக்களின் மொழி உரிமையைப் பறித்தும் இம்மக்களை இரண்டாம் நிலைக்குத் தள்ளியதுடன் நாட்டுப்பற்றையும் இழக்கச்செய்தது. மேலும், தீவின் கிழக்குமாகாணத்தில்

திருகோணமலைமாவட்டம், அம்பாறைமாவட்டம் போன்ற இடங்களில் இருந்து தமிழ்பேசும் மக்களின் பாரம்பரியத்தைப் பறைசாற்றும்நிலங்களுள் பலசதுரமைல் நீளமுள்ளநிலங்கள் திட்டமிட்டு அரசபடையின் துணையுடன் சிங்களக்குடியேற்றத்தின் வழியாகப்பறிக்கப்பட்டன. தமிழ்பேசும்மக்கள் பெரும்பான்மையாக வாழும் வடமாகாணத்தையும் கிழக்குமாகாணத்தையும் இணைக்கும் நிலப்பரப்பில் அமைந்திருந்த முக்கியகிராமங்களான தென்னைமரவடி, கணுக்கேணி கிராமங்களில் வாழ்ந்த தமிழர்கள் விரட்டியடிக்கப்பட்டு கிராமங்கள் அபகரிக்கப்பட்டு, வடக்கையும் கிழக்கையும் துண்டாடும் பொருட்டு கேந்திரமுக்கியத்துவம் வாய்ந்த இராணுவவலையங்கள் பெரும்பான்மையின ஆட்சியாளர்களால் திட்டமிட்டுப் பாரிய அளவில் உருவாக்கப்பட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

'இலங்கை மக்களின் அரசியல்அமைப்பு ஆக்கஅவை, இலங்கைமக்களின் வலிமையிலும் உரிமையிலும் ஆக்கப்படவுள்ள அரசியலமைப்பு, இலங்கைமக்களுக்காக ஆக்கப்படும் அரசியலமைப்பு, இலங்கைமக்களின் அடிப்படைச்சட்டமாக விளங்கப்போகின்ற அரசியலமைப்பு, இலங்கைமக்களின் நோக்கங்களை நிறைவுசெய்ய வழிவகுக்கும் அரசியலமைப்பு' என இலங்கைமக்களின் பெயரால் கூட்டத்தைக் கூட்டியிருப்பதாக, 19.07.1970ல், சனப்பிரதிநிதிகள் சபை உறுப்பினர்களைக் கூட்டிய கூட்டத்தில் மேற்கண்டவாறு உரைநிகழ்த்திய முன்னாள் பிரதமர் திருமதி. சிறீமாவோ பண்டாரநாயக்கா, பின்னாளில், 1971ல், 'சிறீலங்கா, சுதந்திரமான–இறைமைகொண்ட–தன்னாதிக்கமுள்ள குடியரசாகவேண்டும்' எனக்கூறியும், இதே ஆண்டில் முன்னாள் அமைச்சர் திரு. திக்கரி பண்டா இலங்கரத்தினா ' சிறீலங்கா குடியரசில் பெரும்பான்மை மக்களின் சமயமாகிய புத்தசமயத்துக்கு உரியஇடம் வழங்கி புத்தமதத்தைப் பாதுகாத்தலும் பேணிவளர்த்தலும் அரசின் கடமையாதல் வேண்டும்.' எனக் கூறியும் புத்தகுருமார்களைத் திருப்திப்படுத்தும் வகையில் மதசார்புள்ள அரசொன்றைத் தோற்றுவிக்கும் திட்டம் அடங்கிய கோரிக்கைகளை முன்வைத்தார்கள்.

1972ல், பெரும்பான்மையினரின் அதிகாரபலத்தினால் நடைமுறைக்கு வந்த மேற்கூறிய கோரிக்கைகளின் வாயிலாக, இலங்கை என்னும் பதம் விடுபட்டுள்ளதையும், இலங்கைவாழ் சிறுபான்மைமக்கள் ஏமாற்றப்பட்டுள்ளதையும். மதசார்புள்ள அரசுதோற்றுவிக்கப்பட்டதையும் அறியவாய்ப்புண்டு.

சுதந்திரத்துக்குப் பின்பு ஏற்படுத்தப்பட்ட முதலாவது அரசியல் அமைப்பைத் தயாரிக்கவும், ஏற்கவும், நடைமுறைப்படுத்தும் ஆற்றலுரிமையை மட்டுமே சிறுபான்மைமக்களிடம் பெரும்பான்மை ஆட்சியாளர்கள் கேட்டதாகவும், அதைச் சட்டமாக்கி நடைமுறைப்படுத்தும் ஆற்றலுரிமையைக்கோரவில்லை எனவும் கூறப்படுகிறது. சிறுபான்மையினரின் அரசியல் உரிமைகளை, விருப்பத்தைப் புறந்தள்ளிவிட்டு சனநாயகமோசடிமூலம் சட்டமாக்கி நடைமுறைப்படுத்தப்பட்ட அரசியல்அமைப்பின் பிரகாரம் இவர்களின்மேல் போர் திணிக்கப்பட்டதாக வரலாறு கூறுகிறது.

'போர் என்றால் போர்' எனக்கூவியவாறு, புத்தபிக்குகளைத் திருப்திப்படுத்த களனிவிகாரையில் இருந்து கண்டிவிகாரைவரை நடைப்பயணம் செய்தும், 'தமிழர்களின்தோலில் செருப்புத்தைத்துப்போடுவோம்' என இனவாதத்தைக் கக்கிய ஆட்சியாளர்களாலும், மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதமரை புத்தபிக்குவான சோமராமதேரோ சுட்டுக்கொன்றதன்வழியாக நாட்டில் பயங்கரவாதத்துக்கு அடிக்கல்நாட்டியும் உருவானது சனநாயகவிரோத அரசியல். இப்பயங்கரவாத அரசியலால் ஏற்படுத்தப்பட்ட போர் பல ஆயிரம் சிறுபான்மையினரைக் கொன்றும், பலரை நாட்டைவிட்டுத் துரத்தியும், பலகோடி பெறுமதிமிக்க பொருட்களை எரித்துச் சாம்பலாக்கியும், ஆயுதக்கொள்வனவினால் பலகோடி மில்லியன் ரூபாய்களை வெளிநாட்டுக்கடனாகக் கொடுக்கவேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளியும், நாட்டில்வாழும் அனைத்துமக்களின் வாழ்வை நாசமாக்கியதுடன் இவர்களின் எதிர்காலத்தையும் கேள்விக்குறியாக்கியிருப்பது அண்மைக்கால அறுவடைகளாக அமைகின்றன.

பயங்கரவாதச் சனநாயகவிரோத அரசால் அதன் ஆட்சியாளர்களால் தொடுக்கப்பட்டபோரைத் தொடர்வதற்கு நாட்டைக்காப்பதற்காக சிறுபான்மையினரிடமிருந்து ஒருவரியையும், அதேவரியை இனத்தைக்காப்பாற்றுவதற்காகப் பெரும்பான்மைச் சிங்களவர்களிட மிருந்தும் அறவிடப்படும் சமநிலையற்றபோக்கு, நாட்டில்வாழும் சிறுபான்மையினர் சட்டத்தினாலும் சமமாக நடத்தப்படவில்லை என்பதை இரட்டிப்பாகப் புரியவைக்கிறது.

சிறீலங்காவின் மொத்தவருமானத்தில் 50விகிதம் பாதுகாப்புச்செலவீனங்களுக்காகவும், போர்ச்செலவீனங்களுக்காகவும் துண்டுவிழும் நிலையில், கல்வி, சமூகமேம்பாட்டுத்திட்டங்கள், நாட்டைவளம்படுத்தக்கூடிய பொருளாதாரத்திட்டங்களில் மிகக்குறைந்த ரூபாய்கள் முதலீடு செய்யப்படுவது ஒப்பாரிபாடக்கூடியநிலையைத் தோற்றுவித்துள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. நாட்டில்வாழும் 19,2மில்லியன் மக்களில் 60விகிதத்தினர் எழுதப்படிக்கக்கூடிய கல்வியறிவு அற்றசூழலில், சராசரி மாதவருமானமாக மிகமிகக்குறைந்த ரூபாய்களை மட்டுமே சம்பளமாகப் பெறும் மக்களின் வாழ்க்கைத் தரஉயர்வுக்கு மேற்கூறப்பட்ட திட்டங்களின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொண்டு இவை உடனடியாகச் செயற்படுத்தப்படுமா? என்பது கேள்விக்குறியாக அமைகிறது.

சிறீலங்காவின் பொருளாதாரத்தில் அதிகபலனைப் பெறக்கூடிய பகுதிகளில், வெளிநாட்டு, உள்நாட்டு முதலீட்டாளர்கள் முதலீடுசெய்யும் நம்பிக்கையை இழந்து நீண்டநாளாகும் இவ்வேளையில், பொருளாதார வளர்ச்சி மிகவும் மந்தநிலையில் இருப்பதற்கும், முதலீட்டாளர்கள் முதலீடு செய்யத்தயங்குவதற்கும், பலஇலட்சம் மக்களைக்காவு கொள்ளும் உள்நாட்டுப்போரையும் உறுதியற்றஆட்சிமுறையையும் காரணங்களாகக் கூறலாம்.

பொருளாதார வளர்ச்சியின்மையால் வறுமைக்கோட்டின்கீழ் வாழும் பலஇலட்சம் மக்களிடமிருந்து போர்ச்செலவீனங்களுக்கென அறவிடப்படும் வரிகள் ஒரு புறம் இருக்க, சிறுபான்மையினரின் மேல் திணிக்கப்பட்ட போரைத் தொடர்ந்து நடத்துவதற்கு வெளிநாடுகளிலிருந்து தருவிக்கப்படும் அதிநவீன ஆயுதங்களுக்கான செலவீனங்கள் இன்னொருபுறமிருக்க, 'வீட்டுக்கொருவர் புத்தமதத்தைக் காப்பாற்றத் தயாராகுங்கள்' எனப் புனிதப்போருக்கு அழைப்பு விடும் மகாநாயக்கதேரோக்களின் வழிநடத்தலில் இயங்கும் சிறீலங்காஅரசும், சிறுபான்மையினரால் செய்யப்பட்ட ஒப்பந்தங்களைக்கிழித்து எறிந்தும், நோர்வே நாட்டால் மேற்கொள்ளப்பட்ட சமாதான முயற்சிகளின் பலனைப் பெறமுடியாதவாறு சீர்குலைத்து சமாதானத்தை நிராகரித்த சனநாயகவிரோதப் பயங்கரவாத பேரினவாதச் சிறீலங்கா ஆட்சியாளர்களும், மதவாதி ஒசமா பின்லாடனும், இவரால் ஆட்டுவிக்கப்படும் சனநாயகவிரோதப் பயங்கரவாதத் தலிபான் அரசும் ஒரேதன்மை வாய்ந்ததாக விடயம் அறிந்த பிரெஞ்சுமக்களிற் பலர் பேசிக்கொள்கிறார்கள். (11.11.2001ன் வீரகேசரி வாரவெளியீட்டில் 'பௌத்ததுறவிகளிலிருந்து பின்லாடன்வரை' என்னும் தலைப்பில் வெளியாகியது. மீண்டும் வாசகர்களின் கவனத்திற்கு)

***திவ்வியநாதன் செல்வத்துரை. காலம்– 31–10–01***

# தோல்வியை ஒப்புக்கொண்டு தோல்வியாளர்களாக ஆக்கிரமித்த நிலங்களை விட்டு வெளியேறவேண்டும்

## பிரெஞ்சுச் சனாதிபதி (Général de Gaulle) உரை

'எங்களுடைய மாகாணங்கள் எங்களதே, எங்களுடைய நிலங்கள் எங்களதே, எங்களுடைய போராளிகளும் எம்மவர்களே. எமது மூதாதையினரின் வேர்பாய்ந்த எங்களின் மாகாணங்களை யாராவது அபகரிப்பார்களேயானால், எமது நிலங்களில் விளையும் கோதுமையைத்தான் இவர்கள் உண்பதாகும். மேலும், இவர்களால் எமது ஆண்கள் சிறைக்கைதிகளாக நடத்தப்படுவார்களேயானால், இவர்கள் எமது எதிரிகள்.

நம்பிக்கை ஒளிவீசும் தைத்திங்கள் முதலாம்நாளில், மானமுள்ள அனைத்துப் பிரெஞ்சுமக்களும் வீட்டில் இருக்கும் இந்நேரத்தில், இவர்களுடைய எதிர்பார்ப்பும், இவர்களது நா உச்சரிக்கும் ஒவ்வொரு வார்த்தைகளும் மேற்கூறியது போல்தான் அமையும் என்பதற்கு இவர்கள் விதிவிலக்கானவர்கள் அல்லர் என்பதையே இந்நாள், இந்நேரம் பறைசாற்றுகிறது.

எமது தாயகம்(பிரான்சு) எதிரியிடமிருந்து எதனையும் எதிர்பார்க்கவில்லை. எதிரி எமது மண்ணைவிட்டுப் போய்விட வேண்டும். ஆக்கிரமிக்கப்பட்ட எமது மண்ணில் இருந்து எதிரி போகும்போது தோல்வியை ஒப்புக்கொண்டு தோல்வியாளராகப் போகவேண்டும். ஆயுதபலத்தினால் மட்டுமே எதிரி எமது தாயகத்துக்குள் நுளைந்தான். ஒருநாள், ஆயுதபலம் எதிரியை வேட்டையாடி எமது தாயகத்தை விட்டு விரட்டியடிக்கும். எமது நிலங்களை ஆக்கிரமித்த மகிழ்ச்சியில் எதிரி பலமாகச்சிரிக்கலாம். ஆனால், 'முதற் சிரிப்பவன் எவனோ அவனே கடைசியிற் சிரிக்கப்படுவான்' என்னும் பிரெஞ்சு முதுமொழியை மிகவும் ஆழ்ந்த அவதானத்துடன் நுணுகி ஆராய்ந்து நம்பிக்கை ஒளிவீசும் இந்நேரத்தில் அனைத்துப் பிரெஞ்சுமக்களும் எதிரிக்குப்பாடமாகக் கற்றுக்கொடுக்கப் போகிறார்கள்.'

31–மார்கழி–1940ல், இலண்டனில் இருந்து இயங்கிவந்த பிரெஞ்சுவானொலிச்சேவையில் மேற்கூறியபடி உரை நிகழ்த்திய முன்னாள் பிரெஞ்சுச் சனாதிபதி ஜேனேறல் டு கோல்(Général de Gaulle) பிரான்சின் வடபகுதியில் உள்ள லீல்(Lille) என்னுமிடத்தில், பாரம்பரியம்மிக்க கத்தோலிக்கக் குடும்பம் ஒன்றில், 1890ல், பிறந்தார். இவரது முழுப்பெயர் ஷார்ல் ஆந்திறே ஜோசெப் மறி டு கோல்(Charles André Joseph Mari de Gaulle) ஆகும். இவர் சிறந்த கல்வியறிவுமிக்கவராக, அரசியல்–பொருளாதார விடயங்களில் தனிமனித சுதந்திரப்போக்குடைய சிந்தனை உடையவராக, மிகச்சிறிய வயதில் வறேஸ், வேர்க்சொன், பேகி(Barrès, Bergson, Péguy) போன்ற எழுத்தாளர்களின் எழுத்துக் களினால் ஈர்க்கப்பட்டு, இவர்களின் எழுத்துக்களில் தன்னைக் காண்கிறார். பிரான்சின் சன்சீர் (Saint-Cyr) என்னும் அதியுயர் மதிப்புமிக்க இராணுவக்கல்லூரியிற் கல்விகற்று, அங்கு 3ம் படைப்பிரிவில் 33ம் படையணியில் படையதிகாரியாகக் கடமைபுரிகிறார். 1–சித்திரை–1914ல், ஜேர்மனிய இராணுவத்தைப் பற்றிய கருத்தரங்கொன்றில் உரையாற்றிய பின், 1916ல், முதலாவது உலகப்போரில், ஜேர்மனிய இராணுவத்தால் சிறைபிடிக்கப்பட்டு 32 மாதங்களின் பின் சிறைமீண்ட இவர், 1–2–1921ல் சன்சீர் இராணுவக்கல்லூரியில் இராணுவச் சரித்திர–வரலாற்றாசிரியராகக் கடமைபுரிகிறார்.

எழுத்துத்துறையில் நாட்டங்கொண்டு பிரெஞ்சுமொழி வளர்ச்சிக்கு உதவும் பொருட்டு, தனது முதலாவது படைப்பான 'ல டிஸ்கோர்ட் ஷே லென்மி (La discorde chez l ' ennemi) ' 'எதிரியின் பாசறையில் தகராறும் பிரிவும்' என்னும் புத்தகத்தை எழுதி, 1–3–1924ல், பிரபல புத்தக வெளியீட்டு நிறுவனம் ஒன்றின் மூலம் வெளியிடுகிறார். 5–5–1934 வரை இராணுவ விடயங்களை உள்ளடக்கிய கட்டுரைகளை எழுதி இராணுவச் சிற்றிதழ் மூலமும், இராணுவத்தைப் பற்றிய தனது நிலையை பல கருத்தரங்குகள் மூலமும் எழுதியும் பேசியும் வந்த படையதிகாரி டு கோல், 5–5–1934ல், மீண்டும், ஒரு படைப்பாக Vers l'armée de métier' இராணுவத்தொழிலை நோக்கி ' என்னும் புத்தகத்தை எழுதி முன்பு வெளியீடு செய்த நிறுவனத்தின் மூலம் வெளியீடு செய்த காலப் பொழுதில் 'கொலொனெல் 'Colonel' தரத்துக்குப் பதவியுயர்வு பெறுகிறார். 27–9–37ல், மீண்டும் ஒரு படைப்பாக La France et son armée' பிரான்சும் அதன் இராணுவமும்' என்னும் புத்தகத்தை எழுதி வெளியிடுகிறார். மேற்கூறியவாறு இராணுவவிடயங்கள் தொடர்பாகப் பல புத்தகங்களை எழுதி பிரான்சின் பாதுகாப்பு நடவடிக்கைக்கு உதவியாகவும் பிரெஞ்சுமொழி வளர்ச்சிக்கு உதவியும் தனது எழுத்துப் பணியை மேற்கொண்டு வருகிறார்.

புரட்டாதி–1939ல், 2வது உலகப்போர் ஆரம்பமாகிறது. கிட்லரின் நாசிப்படை மிக வேகமாகப் பிரான்சுக்குள் நுழைகிறது. இப்படையை எதிர்கொள்ள பிரெஞ்சு இராணுவத்தின் 4வது குதிரைப்படைப் பிரிவின் படைநகர்த்தல் கட்டளை அதிகாரத்தை, 26–4–40ல், தற்காலிகமாகப் பெற்றுக்கொள்ளும் கொலொனெல் டு கோல், 25–5–40ல், ஜேனேறல் டு பிறிகார்ட் ஆக (général de brigarde) பதவியுயர்வு பெறுகிறார். அப்போதைய பிரெஞ்சுச் சனாதிபதியான அல்பேர் லுவிறனின் (Albert Lebrun) ஒப்பமடங்கிய ஆவணத்தின் மூலம் ஜேனேறல் டு கோல் போர் நிருவாகத்துக்கான அரசின் உயர் ஆணையாளராகப் பதவி உயர்வு பெற்று, 9–6–40ல், அந்நாளின் பிரித்தானியப் பிரதமராக இருந்த வின்ஸ்ரன் ஷேர்ச்ஷிலைச் (Winston Churchill) சந்தித்து பிரித்தானியாவின் மிகத்தரமான தரைப்படையையும் அதன் விமானப்படையையும் பிரான்சுக்குத் துணையாக அனுப்பி நாசிப்படையை வெற்றிகொள்ள உதவுமாறு கேட்டுக்கொள்ளுமிவர், நீண்ட தருக்க நியாயங்களின் மூலம் ஷேர்ச்ஷிலை இந்நடவடிக்கைக்கு இணங்க வைக்கிறார்.

16–6–40ல், 'பிரெஞ்சு–ஆங்கில மக்களின் ஒற்றுமை' என்னும் திட்டத்தைத் தனது கடின உழைப்பின் மூலம் பிரித்தானிய அரசாங்கத்தை ஏற்றுக்கொள்ளும்படி செய்துவிட்டு பிரான்சுக்குத் திரும்பியபோது அந்நேரத்தைய பிரான்சின்

அரசாங்கமான போல் றெநோவின் (paul Reynaud) அரசாங்கம் தனது பதவி விலகலை உறுதிப்படுத்தியிருந்தது. இதனால் மனமுடைந்த ஜேனேறல் டு கோல், மீண்டும் மறுநாள் ஷேர்ச்ஷிலைச் சந்திப்பதற்கு இலண்டனுக்குப் பயணமாகிறார். இந்நேரத்தில், கிட்லரின் மறைமுகக் கட்டுப்பாட்டிலிருந்த பிரான்சில் கிட்லரின் ஆதரவுடன் விஷ்ஷியைத் Vichy தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்து வந்த மறேஷால் பெத்தனின் Maréchal Pétain அரசாங்கம் போரில் பிரெஞ்சுமக்களின் தோல்வியை உறுதிப்படுத்தி பிரான்சுநாடு முழுவதற்குமான போர்நிறுத்தத்தைக் கிட்லரிடம் தயவுடன் கேட்கிறது. இக்கோரிக்கைக்கு இணங்காத ஜேனேறல் டு கோல் இலண்டனில் இருந்து இயங்கிவரும் b.b.c வானொலிச்சேவை மூலம், 18–6–40ல், பிரெஞ்சு மக்களைப் போருக்குத் தயாராகும்படியும், எதிரியின் அதிகாரத்துக்கு கீழ்ப்படியவேண்டாமெனவும், எதிரியை வீழ்த்துவதற்கு அனைத்து வழிகளிலும் செயற்படும்படியும் கேட்கிறார்.

போரில் பிரெஞ்சுமக்களின் தோல்வியை உறுதிப்படுத்தி கிட்லரின் போர்நிறுத்த உடன்படிக்கையில், 26–6–40ல், பெத்தன் கையொப்பமிடுகிறார். இந்நிலையில் விடுதலையை விரும்பும் பிரெஞ்சு மக்களின் தலைவனாக ஜேனேறல் டு கோலை பிரித்தானிய அரசாங்கம் அங்கீகரிக்கிறது. இத்தலைவனின் வானொலி உரைக்குக் கட்டுப்பட்ட விடுதலையை விரும்பும் பிரெஞ்சு மக்களிற் பலர் ஆடிமாதக் கடைசிப் பகுதியில், இலண்டனில் ஒலிம்பியா என்னும் மண்டபத்திற் கூடுகின்றனர். இவ்வாறு கூடிய மக்களில் 7000 போராளிகளில் 500 விமானப் படை வீரர்களும் 410 கடற்படை வீரர்களும் அடங்குவர். இங்கு எடுக்கப்பட்ட தீர்மானங்களின்படி பிரான்சின் கணிசமான குடியேற்ற நாடுகளில் இருந்து பல போராளிகளையும் இராணுவ–பொருளாதார வளங்களையும் ஒன்று திரட்டி பிரான்சு இராச்சியத்தின் பாதுகாப்பு ஆலோசனைக்கான அமைப்பை உருவாக்குகிறார். இந்நேரத்தில், பிரித்தானிய அரசாங்கம் இவ்வமைப்பை அங்கீகரிக்கிறது. தற்காலிக அரசாங்கத்தை உருவாக்கிய ஜேனேறல் டு கோல், 19–3–41ல், பிரித்தானிய அரசாங்கத்துடன் நிதி–பொருளாதார–நாணய ஒப்பந்தம் ஒன்றைப் பிரான்சு தரப்பில் செய்து கொள்கிறார்.

கிட்லரின் மறைமுகக்கட்டுப்பாட்டிலிருந்த பிரான்சில், விஷ்ஷியைத் தலைநகராகக் கொண்ட அரசாங்கத்தின் ஆலோசனை அமைப்பின் துணைத்தலைவரான அமிறல் டர்லோன் (Amiral Darlan) என்னும் கடற்படைத் தளபதியுடன் அல்ஜீறியா என்னும் நாட்டில் வைத்து அமெரிக்காவும் பிரித்தானியாவும், 13–11–42ல், செய்துகொண்ட ஒப்பந்தத்தின் பிரகாரம், வடக்கு ஆபிரிக்காப் பகுதியை அபகரிக்கும் பொருட்டு அமிறல் டர்லோனை வடக்கு ஆபிரிக்காவுக்கான பிரான்சுநாட்டின் பிரதிநிதியாகவும் அதியுயர் கட்டளை அதிகாரியாகவும் அமெரிக்காவும் பிரித்தானியாவும் அங்கீகரிக்கின்றன. இந்நடவடிக்கையினால் கோபமடைந்த ஜேனேறல் டு கோல் இவ்வொப்பந்தத்தை முற்றாக நிராகரித்து டர்லோனை தீர்த்துக்கட்டும்படி கட்டளையிடுகிறார். அல்ஜீரியாவில் வைத்து ஜேனேறல் டு கோலின் இராணுவத்தைச் சேர்ந்த ஒருவரினால் டர்லோன் கொலைசெய்யப்படுகிறார். மேற்கூறியவாறு தக்க தருணத்தில் நடவடிக்கை எடுத்து வடக்கு ஆபிரிக்காப்பகுதியை பிரான்சின் பிடிக்குள் தக்கவைத்த ஜேனேறல் டு கோல், 4–2–43ல், 'பிரெஞ்சு மக்களைப் பொறுத்தவரையில் தங்களது தேவையை அறிந்து ஆயுதத்தின்மூலம் இரத்தஞ்சிந்தி தங்களுடைய விடுதலையைப் பெற்றுக் கொள்வார்கள்' எனச் சூழுரைக்கிறார். மீண்டும், 12–9–43ல், 'கண்ணீரையும் செந்நீரையும் கூடவே வறுமையையும் சேர்த்து தனது பங்காக இப்போரில் எமது மண் எமது இனத்தின் விடுதலை என்னும் ஒரேகாரணத்துக்காக முன்பே வழங்கியுள்ளதை அதுவே அறியும்' என வலியுறுத்தும் ஜேனேறல் டு கோல் பிரான்சின் பல காலணித்துவ நாடுகளைப் போராட்டத்தில் இணைத்து பிரான்சின் கூட்டாளிநாடுகளான அமெரிக்கா பிரித்தானியா நாடுகளின் தலைவர்களுடன் பேரம்பேசியும் விட்டுக்கொடுப்புகளைச் செய்தும், இந்நாடுகளின் தலைசிறந்த சேனாதிபதிகளுடன் கூட்டுச்சேர்ந்து படைநகர்த்தல்களைத் திட்டமிட்டும், 30–12–43ல், கூட்டாளி நாடுகளின் சேனாதிபதியான ஜேனேறல் ஏசென்நொவெரிடம் (Général Eisenhower) பாரீசுநகர் பிரெஞ்சுப்படையின் ஒரு பிரிவால் மட்டுமே விடுதலையடைய வேண்டுமெனவும் கேட்டுக்கொள்கிறார்.

3–6–44ல், பிரெஞ்சுக்குடியரசின் தற்காலிக அரசாங்கத்தின் தலைவராகச் செயற்படும் ஜேனேறல் டு கோல் பிரான்சின் கூட்டாளி நாடுகளின் உதவியுடன் படைநகர்த்தலில் ஈடுபட்டு பிரான்சில் வயு (Bayeux) என்னுமிடத்தைக் கைப்பற்றி தனது தாய் மண்ணில் பல ஆண்டுகளுக்குப் பின், 14–6–44ல், காலடியெடுத்து வைத்து முதன் முதலாக வெற்றிமுழக்கம் செய்தும் அப்பகுதியை கிட்லரின் பிடியிலிருந்து விடுவித்தும், ஜேனேறல் மொங்கொமெறியை (général Montgomery) குடியரசின் உயர் அதிகாரியாக நியமித்து அப்பகுதிக்கான குடியியல் நிருவாகத்தை அவரிடம் ஒப்படைக்கிறார்.

25–8–44ல், பாரீசு மாநகரம் கிட்லரின் பிடியிலிருந்து விடுபடுகிறது. அன்று, பாரீசில் வாழும் அனைத்து மக்களையும் பாரீசின் மாநகரசபைமுன் கூடும்படி அழைப்பு விடுத்த ஜேனேறல் டு கோல் 'பிரான்சு நாட்டின் குடியரசு ஆட்சிமுறை தொடர்ந்து செயற்பாட்டில் உள்ளது.' எனக் கூறித் தனது நிலையை அனைத்து மக்களுக்கும் தெரிவிக்கிறார். மறைமுகமாக இயங்கிவந்த விடுதலைப் போராளிகள் அமைப்பின் தலைவர்களுக்கு தற்காலிகமாக இயங்கிவந்த அரசாங்கத்தில் தகுந்த பதவிகளை வழங்கி, இவ் அரசாங்கத்தை மறுசீரமைப்புச் செய்யுமிவர், 'இறைமை சீர்செய்யப்பட்டபின்பு மக்களால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் கையில் இத்தற்காலிக அரசாங்கத்தின் அதிகாரம், செயற்பாடு சென்றடையும். அதுவரை இவ் அரசாங்கமே தனது கடமையைச் செய்து வரும்.' என 12–9–44ல் அறிவிக்கிறார்.

8–5–45ல், கிட்லரின் படைகள் முற்றாகச் சரணடைந்ததை உறுதிப்படுத்தி, பேர்லின் நகரில், இரவு 8 மணிக்கு கையொப்பமிடுகிறார்கள். தற்போது பிரான்சு முற்றுமுழுதாக விடுதலையடைகிறது. 21–10–45ல், அரசியல் அமைப்பைப் பற்றிய நிலையை அறிய அனைத்து மக்கள் வாக்கெடுப்பை நடத்தி, புதிய அரசியல்அமைப்புச்சட்டவரைவுகள் உருவாகும்வரை இவ்வரசாங்கத்தின் காலஎல்லை 7 மாதங்கள் வரைதான் இருக்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்ளும் ஜேனேறல் டு கோல், பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்துக்கான வாக்கெடுப்பையும் நடத்தக்கோருகிறார். இத்தேர்தலில் கம்யூனிசக்கட்சிக்கும் சோசலிசக்கட்சிக்கும் ஒட்டுமொத்தமான பெரும்பான்மை கிடைக்கிறது. ஜேனேறல் டு கோல் பிரெஞ்சுக்குடியரசின் →

தற்காலிகஅரசாங்கத்தின் தலைவராகத் தனது வேட்புமனுவைத் தாக்கல் செய்யாமல் அரசியல்யாப்பைப் பாதுகாக்கும் பாராளுமன்றத்தால் தெரிவுசெய்யப்படுகிறார். புதிதாக அமைந்த அமைச்சரவையில் உள்நாட்டு அமைச்சையும், வெளிநாட்டமைச்சையும், பாதுகாப்பமைச்சையும் கம்யூனிஸ்டுகள் தங்களுக்குத் தரும்படி கேட்கின்றனர். இக்கோரிக்கைக்கு ஜேனேறல் டு கோல் இணங்காததால் கம்யூனிஸ்டுகள் இவருடன் சேர்ந்து செயற்பட மறுக்கின்றனர். இதனால், மீண்டும், தனது பதவிக்கான அதிகாரத்தை உறுதிப்படுத்துவதற்காக வாக்கெடுப்பில் டு கோல் குதிக்கிறார். இவ்வாக்கெடுப்பில் கம்யூனிஸ்டுகள் கலந்துகொள்ளாமல் விலகுகின்றனர். 19–11–45ல், மீண்டும் டு கோல் அரசியலமைப்புச்சட்டத்தைப் பாதுகாக்கும் சனாதிபதியாகப் பாராளுமன்றத்தால் தெரிவு செய்யப்படுகிறார். 23–11–45ல், தனது புதியஅரசாங்கத்தை அமைத்து பாராளுமன்றத்திற் சமர்பிக்கிறார்.

புதியஅரசாங்கத்தை அமைக்கும் டு கோல், பிரான்சு மையவங்கி உட்பட மேலும் 4 வங்கிகளைத் தேசியமயமாக்கி, தனது இலக்கான சுதந்திரம், உற்பத்தி, ஒற்றுமை என்னும் தனது கொள்கைக்கு, அமைக்கப்பட்ட அரசாங்கத்தால் இடையூறு ஏற்படுவதை அறிந்து, அரசியல்கட்சிகளுடைய ஆக்கிரமிப்பில் அரசு கைதியாக இருப்பதனால், தனது பதவியைத்துறப்பதாகப் பாராளுமன்றத்தில் தெரிவிக்கிறார். இக்காலப்பகுதியில், பாராளுமன்றத்தின் புதிய அரசியல் அமைப்புச்சட்டத்திருத்தத்தின் பிரகாரம் அரசியலமைப்புச் சட்டத்தின் பாதுகாவலரான சனாதிபதியின் அதிகாரவலுவைச் சின்னாபின்னமாக்கி, சனாதிபதியை அதிகாரவலுவற்ற நியமனத்தலைவராக ஆக்குவதற்கான சட்டத்திருத்தத்தைக் கோரி மக்களாணைக்கான வாக்கெடுப்பை அரசாங்கம் முன்வைக்கிறது. மிகக்குறைவான அதிகப்படியான வாக்குகளால் இக்கோரிக்கை சட்டவடிவம்பெறுகிறது. இச்சட்டத்திருத்தத்தைக் கடுமையாக எதிர்க்கும் ஜேனேறல் டு கோல் 'நடைமுறையில் இருக்கும் அரசியலமைப்புச்சட்டம் காலஞ்சென்றுவிட்டதாகவும், தற்கால நடைமுறைக்குச் சாத்தியமற்றதாகவும் இருப்பதனால் இவை வேறு விதமாகத்திருத்தப்பட்டு எதிர்வருங்காலங்களில் ஏற்படப்போகும் பாரிய விளைவுகளைத் தடுத்து நிறுத்துவதாகவும் அமையவேண்டும்' எனக்கூறுகிறார். இவ்வாறுகூறிய பிரெஞ்சுச்சனாதிபதியின் வானொலியுரையின் தமிழாக்கத்தை மேலே காணலாம். (02.07.2000ன் வீரகேசரி வாரவெளியீட்டில் 'பிரெஞ்சு மக்களைத் தட்டிஎழுப்பிய ஜெனரல் டி கோல்' என்னும் தலைப்பில் வெளியாகியது. இது வாசகர்களின் மீள்வாசிப்புக்கு)

வானொலியுரையின் தமிழாக்கத்துடன் கட்டுரை – திவ்வியநாதன் செல்வத்துரை, காலம்–22–6–2000. காலை–1.30மணி. இக்கட்டுரையை எழுத உதவிய நூல்– Le dictionnaire du Gaullisme.

# அடிப்படை வாழ்வுக்காகக் காத்திருக்கும் இலங்கை வாழ் மக்கள்

தோல்வியை ஒப்புக்கொண்டு, தோல்வியாளராக ஆக்கிரமித்த நிலங்களை விட்டு வெளியேறவேண்டும் எனக்கூறி கிட்லருடன் மிகக்கடுமையாகப் போரிட்டு, பிரான்சு நாட்டின் இறைமையைக் காப்பாற்றிய பிரான்சின் முன்னாள் சனாதிபதி ஜேனேறல் டு கோலினால் உருவாக்கப்பட்ட ஐந்தாவது குடியரசின் அரசியல் யாப்புச் சட்டங்கள் மாற்றியமைக்கப்பட்டு, 6வது குடியரசை நோக்கி அரசியலமைப்புச் சட்டங்கள் அமைக்கப்படவேண்டுமென பல பிரான்சிய அரசியற்கட்சிகள் இன்று கோரிக்கை விடுத்துள்ளன.

ஐந்தாவது குடியரசில், மக்களாட்சி என்னும் போர்வையில் சனாதிபதி மன்னராகச் செயற்படுவதாகக் குற்றச்சாட்டுக்களை இக்கட்சிகள் மக்கள் முன் வைத்துள்ளன. இக்கோரிக்கைகளை அடக்கிய பல துண்டுப்பிரசுரங்கள் வினியோகிக்கப்பட்டிருப் பதைக் காணமுடிகிறது.

இன்று, பிரான்சில், பல தேர்தல் தொகுதிகள் நிருவாக நலனுக்காக ஒன்றிணைக்கப்படவும் பிரிக்கப்படவும் அரசமட்டத்தில் முயற்சிகள் நடைபெறுகின்றன. பல மாகாணங்களில் புழக்கத்தில் இருந்துவந்த பல மொழிகளை அழியவிடாது தடுப்பதற்கான முயற்சிகளில் பிரெஞ்சுஅரசு செயற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. பிரான்சின் நிலை மேற்கண்டவாறு இருக்க, சிறீலங்காவுக்குள் கவனத்தைத் திருப்பினால், அங்கு 1978இல், இரண்டாவது புதிய குடியரசின் அரசியல் யாப்பைத் தயாரித்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன பிரான்சினதும் அமெரிக்காவினதும் அரசியல் யாப்பை அடிப்படையாகக் கொண்டு தயாரித்ததாகச் செய்தி.

இலங்கை அரசியலமைப்புச் சட்டங்களின்படி சனாதிபதியிடம் மிகக்கூடியஅளவிலான அதிகாரங்கள் குவிக்கப்பட்டிருந்த போதிலும், ஐந்தாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி மகிந்த ராஜபக்ஷாவினால் கொண்டுவரப்பட்ட 18வது திருத்தச்சட்டத்தின் மூலம், மேன்மேலும் அதிகாரங்கள் இவரது கைகளிற் குவிக்கப்பட்டதாகவும், நாட்டின் முக்கிய ஆணைக் குழுக்களின் சுதந்திரங்கள் பறிக்கப்பட்டு இவ்வாணைக்குழுக்கள் சுதந்திரமாகச் செயற்படமுடியாதபடி முடக்கப்பட்டதாகவும், சிறுபான்மையின மக்களின் பாதுகாப்பிற்கு பங்கம் விளைவிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

ஐந்தாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி 18வது திருத்தச்சட்டத்தின் மூலம், உயர் நீதிமன்றத்தின் உதவியுடன் மூன்றாவது தடவையாக சனாதிபதிப் பதவியை விரும்பித் தனது பதவிக்காலம் முடியுமுன் 2வருடங்களுக்கு முன்பாக 7வது சனாதிபதித்தேர்தலை அறிவித்துத் தோல்வியைத் தழுவியதையும், இத்தேர்தல் செல்லுபடியற்றது எனப் பலர் கூறியிருந்தும் பல எதிர்ப்புகளுக்கு மத்தியில் நடைபெற்றிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

வரைமுறைகளுக்கு எதிராக முற்றுமுழுதாகக் காவல்துறை, இராணுவம், அரசஊழியர்கள், அரசவளங்கள் அனைத்தையும் இத்தேர்தலில் வெற்றி பெறுவதற்காக முன்னாள் சனாதிபதி பயன்படுத்தியதாக எதிரணி வேட்பாளரும், இன்னாள் 6வது நிறைவேற்று அதிகார சனாதிபதி மைத்திரிபால சிறீசேன ஆதாரங்களுடன் முன்வைத்திருந்தும், இக்குற்றச்சாட்டை அப்போதைய காவல்துறை கண்டுகொள்ளவில்லையெனவும் செய்திகள் தெரிவித்திருந்தன.

09.01.2015இல், பதவியேற்ற 6வது நிறைவேற்று அதிகாரம் கொண்ட புதிய சனாதிபதி, தனது 100நாட்கள் வேலைத்திட்டத்தின் மூலம் முன்னைய அரசியல் யாப்பிலுள்ள நிறைவேற்று அதிகாரம்கொண்ட சனாதிபதியின் அதிகாரத்திற்குப் பதிலாக, நாடாளுமன்றத்துக்கு நிறைவேற்றுப் பொறுப்புக்கூறக் கூடிய அரசியல் அமைப்பை மறுசீரமைப்புச் செய்வதுடன் 18ம் திருத்தச்சட்டம் நீக்கப்பட்டுச் சுதந்திர ஆணைக்குழுக்களை நியமித்து, இத்திருத்தச்சட்டத்துடன் தொடர்புடைய 19வது அரசியலமைப்பு திருத்தச்சட்டமூலத்தைப் பாராளுமன்றத்திற் சமர்ப்பித்து சட்டம் நடைமுறைக்கு வருமாறு சட்டத்தை நிறைவேற்றப்போவதாகக் கூறியிருந்தார். ஆக மொத்தத்தில், அரசியல் யாப்பு மாற்றப்பட வேண்டுமென்பது அனைவரதும் எதிர்பார்ப்பாக அமைந்திருந்தது.

வேலையில்லாத் திண்டாட்டம், பசி போன்றவற்றை ஒழித்து வளமான வாழ்வைத் தனது மக்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்க சிறந்த திட்டமில்லாத ஆட்சியாளர்களால், 1983இல், உருவாக்கப்பட்ட சிறுபான்மையினத்துடனான ஆயுதப்போர் பல ஆமிரங்கோடி ரூபாய்களை விழுங்கியதை அனைவரும் அறிவர். இப்போரை முறியடிக்கச் சிறுபான்மையினத்தின் ஆயுதப்போராளிகள் பலர் இந்தியாவுடன் நெருங்கிய உறவை ஏற்படுத்த, சிறீலங்கா இவ்வுறவைக் காழ்ப்புணர்வுடன் உள்வாங்கியது. முன்கூட்டியே

சிறீலங்கா பல மேற்குலக நாடுகளுடன் தொடர்பு கொண்டிருந்ததனால், இந்தியாவுக்கும் சிறீலங்காவுக்கும் இடையில் பனிப்போர் நிகழ்ந்தது.

இந்தியத் துணைக்கண்டத்தில் தன்னை வளம்மிக்க உறுதியான நாடாகக் கட்டியெழுப்ப விரும்பிய இந்தியாவுக்கு சிறீலங்காவின் மேற்குலகத் தொடர்பு தடையாக இருக்க, இத்தொடர்பைத் துண்டித்துத் தனது காலடியில் வீழ்த்துவதற்கு இந்தியா சிறீலங்காவின் சிறுபான்மையினப் போராளிகளைப் பயன்படுத்தியதாகக் கூறப்படுகிறது.

சட்டவலுவுள்ள பன்னாட்டு உடன்படிக்கையான இந்திய–இலங்கை ஒப்பந்தத்தின் மூலம், இருநாடுகளும் தங்களுக்கிடையில் நல்லுறவை வளர்த்தன. இந்தியா இந்தியத் துணைக்கண்டத்தில் அரசியல்–பொருளாதார ரீதியாக உயர்நிலையடைய முயற்சிப்பதைக் கண்ட பொருளாதாரம் வளர்ந்த நாடுகள், இலங்கைச் சிறுபான்மையினப் போராளிகளில் ஒரு சாராரை ஆதரித்ததுடன் இவர்களை வளர்த்து, பின் இவர்களைப் புறந்தள்ளி இந்தியாவுடன் பேரம் பேசும் நிலையை அடைந்தன.

கெரில்லாப் போர் முறையிலிருந்து மரபுப் போர் முறைக்குத் தங்களைத் தயார்ப்படுத்திய இப்போராளிகளுக்கு, இவர்களின் அரசியல் அணுகுமுறையில் ஏற்பட்ட தவறான முடிவுகளால் பயங்கரத்தை உண்டுபண்ணும் பயங்கரவாதிகளாக இந்தியாவும் பலம் பொருந்திய பொருளாதார வளம் நிறைந்த நாடுகளும் முத்திரை குத்த, இவர்களது நடவடிக்கைகள் முடங்கின. இந்நிலையில், மதப்பயங்கரவாதமும் இனப்பயங்கரவாதமும் ஒன்று சேர்ந்து சனநாயக விரோத அரச பயங்கரவாதம் நடைபெறும் நாடெனக் கூறப்படும் சிறீலங்காவை, முன்பு, ஆப்கானிஸ்தானில் நடைபெற்ற கொம்யூனிச ஆட்சியை முறியடிக்க பின்லாடனின் தலைமையில் இயங்கிய பயங்கரவாதத் தலிபான் அமைப்பை உருவாக்க உதவிபுரிந்த பாகிஸ்தான் நாட்டை பயங்கரவாதத்தை முறியடிக்க இணைத்தது போன்று, பயங்கரவாத ஒழிப்பு நாடுகளில் ஒன்றாகத் தன்னுடன் இணைத்துக் கொண்டது அமெரிக்கா.

இக்காலத்தில், ஆயுதப்போராளிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் அகோர ஆயுதப்போர் நடக்க, நாட்டு மக்களிற் பலர் நாட்டைவிட்டு வெளியேறி உலகின் பல நாடுகளில் புலம்பெயர்ந்து வாழ்ந்து வருகின்றனர். குறிப்பாகப் பொருளாதாரம் வளர்ந்த பணக்கார நாடுகளிற் குடியேறினர். இக்குடியேற்றம் இந்நாடுகளுக்குத் தேவையாக இருந்ததால் சில காலம் இம்மக்களை வரவேற்றனர் இந்நாடுகளின் ஆட்சியாளர்கள். மேன்மேலும் இந்நாடுகளுக்கு அகதிகளாகப் பலர் வந்து சேருவதை உணர்ந்த ஆட்சியாளர்கள், இவர்களின் வாழ்வுக்கான அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்க இயலாத காரணத்தால் இவர்களுடைய வருகையைக் கட்டுப்படுத்தும் நோக்கோடு, சிறீலங்காவின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பி இந்நாட்டு மக்களுக்கு இந்நாட்டுக்குள் வளமான வாழ்வை அமைத்துக் கொடுக்க முன்வந்தனர். இதற்குத் தடையாக இருந்த கிளர்ச்சியாளர்களும், பிரிவினைவாதிகளுமான ஆயுதப்போராளிகளை ஒழித்துக்கட்ட முயன்றனர்.

*1994*ம் ஆண்டு, *4*வது நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க பண்டாரநாயக்கா, அமைதியான நாடு, சமாதானமான நாடு என்ற தனது தேர்தற்காலப் பரப்புரையின் மூலம் *62.28*சதவிகித மக்கள் ஆணையைப் பெற்று ஆட்சியைக் கைப்பற்ற, பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப அவருக்கு உதவியாக மேற்கூறப்பட்ட நாடுகள் முன்வந்தன. போர்த்தளபாடங்கள் வழங்கப்பட்டு, சிறு சிறு போர்முனைகள் கைப்பற்றப்பட்டுக் கிளர்ச்சியாளர்களுக்கும் இவருக்குமிடையில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுத் தோல்வி கண்டன.

கிளர்ச்சியாளர்களின் கைகள் ஓங்கியிருந்த இக்காலகட்டத்தில், *5*வது நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ *57.88* சதவிகித வாக்குகளைப் பெற்று ஆட்சியைக் கைப்பற்ற, இப்பணக்கார நாடுகளுடன் சீனா, இந்தியா உட்பட்ட பல நாடுகள் இக்கிளர்ச்சியாளர்களை முற்றுமுழுதாக ஒழிப்பதற்கு இராணுவ நுணுக்கங்கள், ஆயுதத் தளபாடங்கள் போன்றவற்றை வழங்கி உதவிபுரிந்தன. சிறுபான்மையின மக்களில் ஒன்றரை இலட்சம் மக்களும் முப்பதாயிரம் அரச படையினரும் இப்போரின் போது இறந்ததாகவும், இப்போர் விதிமுறைகளுக்குட்பட்டு நடைபெறவில்லையெனவும் கூறப்படுகிறது. இதனால், இச்சனாதிபதியின் மேல் போர்க்குற்றம்–மனிதவுரிமைமீறல் வழக்கு ஐ.நா மனிதவுரிமை அவையில் தாக்குதல் செய்யப்பட்டுள்ளது.

பயங்கரவாதஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட சிறீலங்காவைக் கூட்டுச்சேர்த்த அமெரிக்காவும் அதன் நேச நாடுகளும் இவ்வழக்கை முன்னெடுப்பதில் முன்நின்றதை அவதானிக்கலாம்.

5வது நிறைவேற்று அதிகார சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது பதவிக்காலத்தில் சீன நாட்டுக்குச் சார்புடையவராக, அதன் கொள்கையில் பற்றுடையவராகக் காணப்பட்டதே இதற்குக் காரணமெனவும் கூறப்படுகிறது.

பல இலட்சம் கோடி ரூபாய்கள் முதலீடு செய்யப்பட்ட இப்போரின் மூலம், கிளர்ச்சியாளர்களை வெற்றிவாகை சூடிய முன்னாள் சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ போர் நடைபெற்ற இடத்தில் 87000 ஏக்கர் காணிகளைப் பறித்துப் பல ஆயிரம் இராணுவத்தினரை அந்நிலங்களில் நிறுத்திப் படைமுகாம்களை அமைத்து மக்களாட்சி என்னும் பெயரில் இராணுவ ஆட்சி செய்து வந்ததாகத் தமிழ்க்கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தொடர்ந்து குற்றஞ்சாட்டி வருவதை அவதானிக்கலாம்.

இந்நிலங்களுக்குச் சொந்தமானவர்கள் இருப்பிடங்களை இழந்தும், பல நிலங்களில் இவர்களின் உயிர்வாழ்வுக்கான தொழில்களை இழந்தும் வீதி ஓரங்களிலும் – வசதியற்ற முகாம்களிலும் வாழ்ந்து வருவதாகக் கூறும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர், இந்நிலங்களிலிருந்து படையினரை வெளியேற்றும்படி கண்டனங்களை அரசுக்கு விடுத்து வருகின்றனர். அரசின் இந்நட வடிக்கைகளினால் பாதிக்கப்பட்ட இம்மக்கள் தம்மால் இயன்ற வழிகளில் இழந்த காணிகளை மீளப்பெறுவதற்காக உரிமைப் போராட்டங்களை அமைதி வழியிற் செய்து வருகின்றார்கள்.

இப்பகுதிகளில் வாழும் மக்கள் தங்களது நியாயமான உரிமைப் போராட்டக்களத்தில் ஒரு போர்முனையை மட்டும் இழந்துள்ளார்கள் என்பதை மேற்கூறப்பட்ட நிகழ்ச்சி தெளிவாக்குகிறது.

*08.01.2015*இல், நடந்து முடிந்த *6*வது நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதிக்கான தேர்தலில், முன்னாள் சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ போர் நடந்த இடத்தில் வாழும் இம்மக்களின் வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டிருக்கிறார். இவருடைய தோல்விக்கு இவரது சர்வாதிகாரப்போக்கையும் ஒடுக்குமுறையையும் காரணமாகக் கூறலாம். இவரது ஆட்சிக்காலத்தில், இவரது அரசாங்கத்தில் மிக நெருங்கிய அமைச்சர்களாகவிருந்த சிறுபான்மையின மக்களின் இணக்க அரசியல் தலைவர்களின் சார்புநிலைப் பரப்புரைகளிருந்தும் இவர் பதவியைக் கைப்பற்ற முடியாமற்போனது இவருக்கும் மந்திரி நண்பர்களுக்கும் ஏமாற்றமாகவும் அவமானமாகவும் அமைந்ததை உலகம் அறியும்.

தேர்தற்கால வன்முறைகள், ஆள்மாறாட்டங்கள் போன்ற சனநாயக வழிமுறைக்கு ஒவ்வாத செயல்கள் நடைபெற்றிருப்பினும் வடக்கு கிழக்கு வாழ் மக்கள் தடைகளை உடைத்து, சனநாயக வழியில் வாக்குப் பெட்டிகள் மூலம் உறுதியாகத் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்கள். இம்மக்களின் அரசியல் நலன்களைத் தீர்மானிப்பவர்களில் ஒருவரும், முன்னாள் சனாதிபதியின் அமைச்சர்களில் ஒருவரும், இணக்க அரசியல் மன்னனுமான டக்ளஸ் தேவானந்தா மகிந்த ராஜபக்ஷவுக்காக, இவரது அரசியற் கொள்கைகளுக்காகத் தேர்தற்காலப் பரப்புரைகளில் ஈடுபட்டிருந்தும் இவரால் மகிந்த ராஜபக்ஷவைக் காப்பாற்ற முடியாமற் போனதும், தமிழர்களின் குரல் எனக்கூறும் தமிழர் கூட்டமைப்பு நேரடியாகத் தேர்தலில் தனது சார்புநிலைக்

கருத்துக்களை மைத்திரிபால சிறீசேனாவுக்குச் சார்பாக மேடைப்பரப்புரையின் மூலம் தெரிவிக்காது விடுத்து தனது கருத்தைப் பட்டும்படாமல் செய்தி இதழ்கள் மூலம் கடைசிநாட்களில் தெரிவித்ததை அனைவரும் அறிவர். தமிழ்பேசும் முஸ்லிம்களின் தலைவர்களில் சிலர், மகிந்த ராஜபக்சுஷவின் ஆட்சியில் முஸ்லிம்மக்கள் வன்முறைகளுக்குட்பட்டிருந்தும், இவரது தேர்தல் மேடைகளில் தோன்றிப் பரப்புரைகளில் ஈடுபட்டும் இவரால் வெற்றி பெற முடியவில்லை. மகிந்தராஜபக்சுஷவின் அமைச்ச ரவையில் அமைச்சர்களாக இருந்த முஸ்லிம்அமைச்சர்கள் பலர் தருணம் பார்த்துக் கடைசி நேரத்தில் மைத்திரிபாலசிறீசேனவை ஆதரித்திருந்தனர்.

இவர்களுடைய தில்லுமுல்லுகளை அறிந்திருந்த சிறுபான்மையின மக்கள் இவர்களை நிராகரித்துவிட்டு 6வது நிறைவேற்று அதிகாரச் சனாதிபதியாக மைத்திரிபாலசிறீசேனவை 51.28 விகித வாக்குகளால் (சிங்களமொழி பேசும் மக்களின் வாக்குகள் உட்பட) ஆட்சி நாற்காலியில் அமரவைத்துள்ளார்கள். இதன்மூலம், சிறுபான்மையின மக்களின் முக்கியத்துவம் உணரப்படு கிறது.

6வது நிறைவேற்று சனாதிபதிக்கான இத்தேர்தலில் முன்னாள் சனாதிபதி மகிந்த ராஜபக்சுஷ பெரும்பான்மை இனத்தவரினதும் சிறுபான்மையினத்தவரினதும் வாக்குகளைப் பெற்றபோதும், பெரும்பான்மையினத்தவரின் பெருந்தொகையான வாக்குகளையும் சிறுபான்மையினத்தின் சிறுதொகையான வாக்குகளையும் பெற்றிருப்பதாகவும், மைத்திரிபாலசிறீசேன பெரும்பான்மையினத்தின் சிறுதொகை வாக்குகளையும் சிறுபான்மையினத்தின் பெருந்தொகை வாக்குகளையும் பெற்றுள்ளதால், மகிந்தராஜபக்சுஷ பெரும் பான்மையினத்தின் நம்பிக்கைக்குரிய தலைவராகக் காணப்படுகிறார் என முன்னாள் சனாதிபதியின் மந்திரிகளில் ஒருவரும் இன வாதியுமான விமல்வீரவன்ஸ கூறியுள்ளார். இதன்மூலம், மைத்திரிபாலசிறீசேன சிறுபான்மையின மக்களின் நம்பிக்கைக்குரியவர் ஆகிறார் என்பது வெளிச்சம்.

காலாகாலமாகச் சிறுபான்மையின மக்களின் பெருந்தொகையான வாக்குகளால் பெரும்பான்மையின சிங்கள மக்களில் ஒருவரை இந்நாட்டின் அதியுயர் பதவியில் அமர்த்த முடியுமென்பதும், மாறாகச் சிறுபான்மையின மக்களில் ஒருவரை அப்பதவியில் அமர்த்த முடியாதெனவும் தெளிவாகிறது. இருப்பினும், இப்பெரும்பான்மையின மக்களில் ஒருவரை இச்சிறுபான்மையின மக்கள் நாட்டின் தலைவராக ஏற்றிருப்பதுடன், காலத்துக்குக் காலம் சனநாயகவழியில் இம்மக்கள் ஏமாற்றப்பட்டிருப்பதாகவும் வரலாறு கூறுகிறது. இடையில், தற்போது நடைமுறையிலுள்ள சனநாயக வழியில் நீதி, நியாயமாகக் கிடைக்க வேண்டிய வாழ்வுரிமைகளை அடைய முடியாதென உணர்ந்த தமிழ்பேசும்வாலிபர்களிற் சிலர் ஆயுதம் ஏந்திப் போராடவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டதையும் இலங்கை அரசியல் வரலாறு பதிவுசெய்துள்ளது.

இந்நிலையிலும், சிறுபான்மையினம் எப்போதும் சனநாயகக் கோட்பாட்டுக்குள் இயங்கிவருவதை, கடந்த சனாதிபதித் தேர்தல் மூலம் உறுதிப்படுத்தி 6வது நிறைவேற்று அதிகாரச் சனாதிபதி மைத்திரிபாலசிறீசேனவின் மேல் நம்பிக்கை வைத்துள்ளது.

இலங்கையின் வருவாய்த் துறைகளில் ஒன்றான தேயிலை உற்பத்தித்துறையை வளப்படுத்தும் மலையக மக்களான சிறுபான்மையின மக்களின் குடியியல் உரிமைகள் பலகாலப் போராட்டத்தின் பின் ஓரளவுக்கு வழங்கப்பட்டுள்ளது. இவர்களைப் பாராளுமன்றத்தில் அடையாளப்படுத்தும் முக்கிய அரசியல் கட்சியான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சி முன்னாள் சனாதிபதி மகிந்தராஜபக்சுஷவுக்கு ஆதரவு வழங்கித் தனது பெறுமானத்தை இழந்துள்ளது. இக்கட்சி சனாதிபதி மகிந்த ராஜபக்சுஷவின் அரசாங்கத்தில் மந்திரிப்பதவி வகித்தது குறிப்பிடத்தக்கது. இக்கட்சியை மலையக மக்கள் நிராகரித்து 6வது நிறைவேற்று அதிகார சனாதிபதி மைத்திரிபாலசிறீசேனவுக்கு வேறுசில மலையக அரசியற்கட்சிகளின் ஊடாக ஆதரவை வழங்கி இவரைச் சனாதிபதியாக ஏற்றுள்ளார்கள்.

இம்மக்களின் அடிப்படைப் பிரச்சனைகள் 200 வருடங்கள் பழமைவாய்ந்தவை எனவும், வாழ்வதற்கு பொருத்தமற்ற காலனித்துவச் சின்னமாய் விளங்கும் லயன் முறையை இல்லாது ஒழித்து, தனித்தனி வீடுகள் அமைக்கக் காணிகள் வழங்கப்பட்டு நிலவுரிமையற்ற நிலையைப் போக்கவேண்டுமெனவும் கோரப்படுகிறது. மலையகத்தின் குடியிருப்புகளும் அதனைச் சூழ்ந்துள்ள பகுதிகளும் உள்ளூர் ஆட்சிப்பராமரிப்புக்குள் வரவேண்டுமெனவும், தோட்டப்பகுதிகளுக்குத் தொழில் வழங்குவதற்குத் தடையாகவிருக்கும் பிரதேசசபைச் சட்டத்தின் 33வது சரத்துக்கள் நீக்கப்பட்டு உள்ளூர் ஆட்சி நிருவாகத்தின் கீழ் அரசு ஊழியங்கள் பகிரப்பட வேண்டுமெனவும், இவ்வுள்ளூர் ஆட்சிகளிற் பங்குபற்றித் தீர்மானங்கள் எடுப்பதற்கு வழி செய்துதரப்பட வேண்டுமெனவும் மலையகமக்கள் புதிய சனாதிபதியை செய்தி இதழ்கள் மூலமாகவும் அரசியற் கட்சிகள் மூலமாகவும் கோரியுள்ளனர்.

மதம் அபின் போன்றதென லெனின் கூறியதாகக் கூறுவர். மதநம்பிக்கைகள் புனைகதையாகத் திரித்துக் கூறப்பட்டு, கட்டுக்கடங்காதளவு நம்பிக்கைகள் ஏற்படும்போது, வெறிபிடித்து மனிதகூட்டம் தன்னை இழந்தநிலையில் எதனையும் செய்யத் துணிகிறது.

அமெரிக்காவால் பயங்கரவாதத்தை அழிப்பதற்கென உருவாக்கப்பட்ட தலிபான் என்னும் அடிப்படைவாத மதஅமைப்புக்கு தலைமை தாங்கியவரும், இஸ்லாம் மதத்தைக் காப்பாற்ற மனிதப்பிறவி எடுத்தவரும், அல்கைடா என்னும் மதவாத அமைப்பை உருவாக்கியவருமான பின்லாடன், தன்னை உருவாக்கிய அமெரிக்காவினால் கொல்லப்பட்டார். இவரின் மறைவுக்குப் பின், இன்று இஸ்லாமிய மதவாதம் ஐ.எஸ்.ஐ.எஸ் என்றும் புதிய இஸ்லாமிய அரசு என்றும் ஜிகாத் என்றும் புக்கரம் என்றும் பெயர்கள் கொண்டு புத்துயிர் பெற்று அதிபயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதை அனைவரும் அறிவர்.

சிறீலங்காவில் அஸ்கிரிய–மல்வத்த போன்ற முப்பெரும் பீடங்களுடன் 37691 பிக்குகளுடன் பற்பல வடிவங்களில் மதத்தீவிர வாதம் தோற்றமெடுத்துள்ளதை வரலாறு பதிவுசெய்துள்ளது. இன்று சிஹளஉறுமய, ஜாதிகஹெலஉறுமய, பொதுபலசேன போன்ற பல தீவிர மதவாத முற்றும் துறந்த முனிவர்களால் நடத்தப்படும் அரசியல் அமைப்புகள் தோன்றியுள்ளன. இந்நிலைக்குச் சிறீலங்கா அரசு காரணமாக அமைந்துள்ளதுடன் இவ்வமைப்புகளுக்கு மறைமுகமாகவும் நேரடியாகவும் இவ்வரசும், பணபலம் படைத்த சிங்கள மக்களில் சிலரும் சிங்கள மொழி ஊடகங்களும் ஆதரவு வழங்கி வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. மதம் பற்றிய தெளிவு செய்யும் புத்தமதகுருமார்கள் புத்தவிகாரைகளை (கோயில்களை) நிருவகித்து, மதபோதனை என்னும் போர்வையில் அரசு செய்ய வேண்டிய அரசியல் விடயங்களின் கடமைகளான மக்கள் குடியேற்றங்கள், வீடு கட்டிக்கொடுத்தல், மின்இணைப்பு வசதிகள் யாவற்றையும் பெரும்பான்மைச் சிங்களமக்களுக்குச் சார்பாக, சிறுபான்மையின மக்களின் நிலங்களிற் செய்து கொடுத்து, இப்பெரும்பான்மையினரை அதிகரிக்கச்செய்து, மதபோதனையின் மூலம் இம்மக்களை மயங்க வைத்து, சிறுபான்மையினருடன் இனரீதியாகப் பூசலை உண்டுபண்ணி இரத்தம் சிந்தவைக்கின்றனர் எனக் கூறப்படுகிறது.

முன்னாள் சனாதிபதி மகிந்தராஜபக்சுஷவின் அன்புக்குரியவரும் பொதுபலசேனாஅமைப்பின் முன்னாள் செயலரும் பௌத்ததுறவியு மான கலகொடஅத்தே ஞானசாரதேரர் 'இலங்கை(சிறீலங்கா) ஒரு பௌத்தநாடு' எனக்கூறி பௌத்தமத ரீதியிலான செயற்பாடு களை முன்னெடுப்பதில் முன்னிற்பவர். 'இலங்கைவாழ் முஸ்லீம் அடிப்படைவாதிகள் இந்தியாவின் தமிழ்நாட்டிலிருந்து செயற்

படும் பயங்கரவாத அமைப்பான தவ்ஹித் அமைப்புடன் தொடர்புடையவர்கள். இவர்கள் உணவு, பொருளாதாரம், கலைகலாச் சாரம், உடைகள் எனப் பலவற்றால் பௌத்தமதத்தினரை ஆக்கிரமித்துள்ளார்கள்.' எனக்கூறி அடிப்படைவாதச் சிந்தனைகள் அற்ற பெருந்தொகையான முஸ்லீம் மக்களுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியவர் இப்பொதுபலசேனாவின் செயலர் ஞானசார தேரர். இவர்கூற்றுப்படி இவருடைய அமைப்பானது பௌத்த பயங்கரவாத அமைப்பல்ல எனக் கருதப்பட்டாலும் தம்புள்ள ஹெரிய ஜும்மா பள்ளிவாசல் மீது, *14.09.2014*இல், நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதல் இஸ்லாம் மதத்தைக் கடைப்பிடிக்குந் தமிழ்பேசும் சிறுபான்மையின மக்களின்மீது வலிந்து நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலாகவே கருதப்படுகிறது.

அளுத்கம, பேருவளை, தர்க்காநகர் போன்ற இடங்களில் இச்சிறுபான்மையின மக்களின் சொத்துக்களைச் சூறையாடியும், தீயிட்டு அழித்தும், பெண்கள், வயோதிபர்கள், சிறுவர்களை இரவோடு இரவாக இவ்விடத்தை விட்டுத் துரத்தியும், கொலையுஞ் செய்ததாகப் பொதுபலசேனா அமைப்பின் மீது குற்றஞ்சாட்டப்பட்டதை அனைவரும் அறிவர். இதன் உண்மையை அறிந்த இலங்கைஅரசு இவ்வமைப்பின்மீது நடவடிக்கை எடுத்துத் தண்டனை வழங்காதது இச்சிறுபான்மையினத்துக்கு நடுக்கத்தை ஏற்படுத்தியபடியே இருந்துவருவதாகக் கூறப்படுகிறது. பொதுபலசேனா பௌத்தமதப் பன்னாட்டுப் பயங்கரவாதி என அடையாளம் காணப்படும் மியான்மர் (பர்மா) அஸ்வின் விராத்து தேரருடன் உடன்படிக்கை செய்துள்ளதாகச் செய்தித்தாள்கள் கூறுகின்றன.

பௌத்தமதத் தர்மத்தின்படி உயிரைக்கொல்லுதல் பாவம். இலங்கையில் வாழும் சிறுபான்மையினரை அடியோடு அழித்துவிட்டால் பௌத்தமதத்தையும் இந்நாட்டையும் பாதுகாக்க முடியுமென நினைக்கும் காவியுடையணிந்த சில துறவிகளுக்கு எதிராக, இம்மதத்தையும் நாட்டையும் காப்பதற்காக ஆங்காங்கே முகவரியற்றிருக்கும் காவியுடையணிந்த துறவிகளிற் சிலர் செயற்படுவதாகச் செய்தி. *1995*இல், தமிழ்–சிங்கள–முஸ்லீம் மக்கள் இணைந்த தேசிய ஐக்கிய முன்னணியினூடாக, மறைந்த முன்னாள் அமைச்சரும், முஸ்லீம் காங்கிரஸ் நிறுவுனருமான அஸ்ரப்புடன் இணைந்து அரசியல் வேலையில் ஈடுபட்ட தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவரான பௌத்தத்துறவி வட்டரக்க விஜித தேரர், தான் வெளிப்படையாகப் பொதுபலசேனா அமைப்பையும் அதன்செயலர் கலகொட அத்தே ஞானசார தேரரையும் எதிர்த்துப் போராடும் ஒரேயொரு பிக்கு எனக்கூறியிருந்தார். இதன் காரணத்தால், உயிர் அச்சுறுத்தலுக்கும், உடல் ரீதியான வன்முறைத் தாக்குதலுக்கும் இவர் ஆளானார். இவரது ஆணுறுப்பு சிதைக்கப்பட்டு தற்போது இவர் தலைமறைவாக வாழ்ந்து வருவதாகக் கூறப்படுகிறது. *1980*இல், மகாவலித் திட்டத்தின் மூலம், மஹியங்கனைப் பகுதியிலிருந்து குடிபெயர்க்கப்பட்ட விவசாயிகளின் பிரச்சினைகளில் தலையிட்டு கடமையாற்றியவர் எனவும், *2011*இல், இப்பிரதேசத்தில் பிரதேசசபைத் தேர்தலில் வெற்றிபெற்றவர் எனவும் கூறப்படுகிறது. இந்நிலையில் இருப்பவரது உயிருக்கு சிங்களபௌத்தருக்காகப் போராடும் மதவாத பொதுபலசேனாவினால் ஆபத்து ஏற்பட்டிருப்பது, பல்லாண்டுகளுக்கு ஏற்படப்போவது கோடிட்டுக் காட்டப்படவேண்டிய விடயம். இந்நிலையில் வைத்து, ஜாதிகஹெலஉறுமய, சிங்களராவய, சிங்களத்தேசியமுன்னணி போன்ற அமைப்புக்கள் இனங்காணப்படவேண்டியவை. இதன்மூலம், இலங்கையில் வாழும் ஒட்டுமொத்த மக்களின் பாதுகாப்பில், புதிய சனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்ட மைத்திரிபாலசிறீசேனா புதிய அணுகுமுறைகளை நாடவேண்டிய அவசரநிலையில் இருக்கிறார் என்பதைக் காலம் உணர்த்துகிறது.

பாதுகாப்புநிலை மேற்கண்டவாறு இருக்க, இலங்கையின் வருவாய்த்துறையை கவனித்தால், இலங்கையில் உள்ள *25,000* கிராமங்களில் வாழும் சாதாரண மக்களின் வாழ்வை மேம்படுத்தப் போடப்படும் வளர்ச்சித்திட்டங்கள் யாவும் நாட்டின் மொத்தத்தேசிய உற்பத்தி வருமானத்தில் தங்கியுள்ளதனால், வளர்ச்சித் திட்டங்கள் குறித்த விபரங்கள் யாவும் பிழையானவை எனவும், இம்மொத்தத் தேசியஉற்பத்தி ஒவ்வொரு கிராமங்களிலும் சரியாகக் கணிப்பிடப்படுவதில்லையெனவும் கூறப்படுகிறது.

*2003*ம் ஆண்டில், *633,729* ஆகவிருந்த அரச ஊழியர்களின் எண்ணிக்கை *2014*இல், *1,298,529* ஆக உயர்ந்து *84.14* சதவிகித வளர்ச்சி அடைந்தது. விசேட ஆட்சேர்ப்புக்கள் தனியார்துறைகள் உட்பட அனைத்துத் துறைகளிலும் முன்னெடுக்கப்பட, இன்று, இலங்கையில் *96.5*விகிதமான மக்கள் தொழில் புரிந்து வருவதாகவும், உயர்ந்த மனிதவள வளர்ச்சி நாடாக, *2005*ம் ஆண்டு *93*வது இடத்தில் இருந்த இந்நாடு, *2014*இல், *73*வது இடத்தில் இருப்பதாகவும், *2002*ம் ஆண்டில், தனிநபர் வருமானம் *870*அமெரிக்க டொலராக இருந்து இன்று இவ்வருமானம் *3718* அமெரிக்க டொலராக வளர்ந்துள்ளதென முன்னாள் பொருளாதார அமைச்சின் அறிக்கை தெரிவித்துள்ளது. *2012*இல், *4*சதவிகிதமாகவிருந்த பொருளாதார வளர்ச்சி, *2014*இல், *7.8* சதவிகிதமாக வளர்ந்துள்ளதாகக் கூறும் இவ்வறிக்கை வெளிநாட்டுப் பண அனுப்பல் – வெளிநாடுகளில் பணிபுரிபவர்களின் பண அனுப்பலின் அளவு *1977* மில்லியனிலிருந்து *6999* மில்லியனாக உயர்ந்துள்ளதெனவும் கூறுகிறது. *2005*ம் ஆண்டு, *6347* அமெரிக்க டொலராகவிருந்த ஏற்றுமதி வர்த்தகம் கடந்த ஆட்சியில் (*2014*) *11,854* டொலராக அதிகரித்ததாகத் தெரிவிக்கிறது.

வீட்டுப்பணிப்பெண்களாக வெளிநாடுகளுக்குத் தொழில்புரியச் செல்வோரைவிட உயர்தொழில் புரிவோரின் எண்ணிக்கை கடந்த ஆட்சியில் அதிகரித்ததாகவும், இதற்கு முன்னைய ஆட்சியில் அரசமுதலீடு மொத்தத்தேசிய உற்பத்தியில் *2*சதவிகிதமாகவும், *2014*இல், *6.9*சதவிகிதமாக அதிகரித்ததாகவும் வெளிநாட்டுச்சேவை மற்றும் பணஅனுப்பல் அளவு உயர்வடைந்ததெனவும் கூறியது மகிந்தராஜபக்ஷவின் ஆட்சி.

வெளிநாட்டுக்கடன்கள் மூலமாக வரும் வருமானத்தைக்கொண்டு சிறீலங்காவின் மொத்தத்தேசிய உற்பத்தி கணக்கிடப்படுவதாகவும், வெளிநாட்டு உதவிகளில் *70*சதவிகிதமானவை உயர்குடி மக்களையும், அரசியற்செல்வாக்குள்ளவர்களையும் மையப்படுத்தியுள்ளதாகவும் செய்திகள் கூறுகின்றன. வெளிநாட்டில் வாழும் உறவினர்கள் அனுப்பும் பணத்தைக்கொண்டும், மத்திய கிழக்கில் பணியாற்றும் பெண்களின் வருமானத்தைக்கொண்டும் வடக்கு–கிழக்கு–தெற்குப்பகுதியில் சில குடும்பங்கள் வாழ்ந்துவருவதாகவும் மேலும் செய்திகள் தெரிவிக்கின்றன.

சிறீலங்காவில் வேலையில்லாத் திண்டாட்டத்தால் கிராமப்புற இளைஞர்கள், இளைஞிகள் பலர் மதுவுக்கும், மலிவாகக் கிடைக்கும் ஆட்கொல்லிக் கசிப்புக்கும், போதைமருந்துக்கும் அடிமைகளாகி உடல்நலத்தை, வீடு, குடும்பத்தினர் அனைவரையும் இழந்து வீதிகளில் வீழ்ந்து கிடப்பதை அவதானிக்கமுடிகிறது. மேற்கூறப்பட்டபடி ஒரு தலைமுறை அழிந்துவரும் நேரத்தில், தொழில்துறைகளை மேம்படுத்தி வேலைவாய்ப்புக்களை உருவாக்குவதற்கு, வசிப்பிடம், உணவு, உடை, சுகாதாரவசதி, கல்வி, பாதுகாப்பு போன்ற அடிப்படை வாழ்வுரிமைகளை எதிர்பார்த்துப் பெரும்பான்மைச் சிங்களமக்களிற் கணிசமானவர்களும், சிறுபான்மை மக்களில் அதிகதொகையினரும் தங்களது நம்பிக்கை வாக்குகளை சனநாயக வழியில் வழங்கி, *6*வது நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதியாக மைத்திரிபால சிறீசேனாவை *09.01.2015*இலிருந்து பதவியேற்க வைத்து நாட்டின் உச்ச பதவியான சனாதிபதிப் பதவியில் அமர்த்தியுள்ளார்கள்.

அடிப்படைவாழ்வுக்காகக் காத்திருக்கும் தங்களுக்கு நியாயமான முறையில் வாழ்வுரிமை கிடைக்குமா ? எனக் கேட்கிறார்கள் இவ்இலங்கை வாழ் மக்கள்.

உதவிய ஆவணங்கள்: வீரகேசரி, தினக்குரல் வாரவெளியீடுகள்.

திவ்வியநாதன் செல்வத்துரை, காலம் –16.03.2015, அதிகாலை *1.20*

# மொழிபெயர்ப்பும் மொழிபெயர்ப்பாளனும்

<<சில்வி (Sylvie) உங்களுக்கு சூலி புருடோமைத் தெரியுமா?>> எனக் கபிலன் தனது பிரெஞ்சு நண்பியைக் கேட்கிறான். பேச்சுத்தொடர் பிரெஞ்சு மொழியில் தொடர்கிறது. <<சூலி புருடோமா? யாரது? இப்படியான பெயரை ஒருபோதும் கேள்விப்படவில்லையே!>> எனச் சில்வி பதில் கூறுகிறாள். <<என்ன! ஆச்சரியமாக இருக்கிறதே! பிரெஞ்சு இலக்கியத்திற்கான நோபல்பரிசைப் பெற்றவரைப்பற்றி நீங்கள் அறியவில்லையா?>>.

முதன்னாள் தமிழ் வாரமலரில் வெளிவந்த கட்டுரை மூலம் தான் அறிந்து கொண்ட சூலி புருடோமைப் பற்றிய கேள்வியைக் கேட்கிறான். <<ஆ! சுலிபுறுய் டொம் (Sully Prudhomme), தெளிவாகப் பெயரை உச்சரித்தால்தானே என்னாற் புரிந்துகொள்ளமுடியும். அதைவிடுத்து, ஆங்கிலமொழியின் உச்சரிப்பில் பிரெஞ்சு மொழியை உச்சரித்தால் எப்படி என்னாற் புரிந்து கொள்ள முடியும்>> எனப்பதில்கூறுகிறாள் சில்வி.

ஒரு மொழியிலிருந்து இன்னொரு மொழிக்கு மொழி மாற்றம் செய்யும்போது ஏற்படக்கூடிய குறைபாடுகளை, சிக்கல்களைப் புரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆவல் காரணமாகத் (பிரெஞ்சுமொழியிலிருந்து தமிழ்மொழிக்கு மாற்றும்போது ஏற்படக்கூடிய) திரட்டிய தகவல்களை இங்கு தருகிறேன்.

ஒரு சமூகத்தில் அறிவுப்பசி ஏற்படும்போது அச்சமூகத்திற் பல மொழிபெயர்ப்பு நூல்கள் உருவாவது இயற்கையான நிகழ்ச்சியாகவும், அறிவுப்பசி ஏற்படுங் காலத்தை மறுமலர்ச்சிக்காலம் எனவும் அறிஞர்கள் கருதுகிறார்கள். சமுதாயவளர்ச்சி ஏற்படுவதற்கு மொழிபெயர்ப்பும் உதவி புரிகின்றது என்ற அடிப்படையில், உலகத்திற் சிந்திக்கப் பட்டவற்றிலும், கூறப்பட்டவற்றிலும் மிகச்சிறந்தவற்றை எடுத்து, அதனை வளப்படுத்தி மொழிமாற்றம் செய்யும் போது அறிவுத்தெளிவுபெறவும், வேற்றுமொழிப் படைப்பை அறிமுகப்படுத்திக்கொள்ளவும், ஒவ்வொரு மொழியின் தனித்தன்மையை அறிந்து கொள்ளவும் வாய்ப்பு ஏற்படுகிறது.

ஒவ்வொரு மொழியுந் தனித்தன்மையுடையது போன்று ஒவ்வொரு மொழிபெயர்ப்பும் தனித்தன்மை வாய்ந்தது. வேரிலிருந்து மாறுபடாமற் படிப்பதற்கு இனிமையாக மொழிமாற்றம் செய்யும் முறை, ஒரு படைப்பைத் தானாகப் படைப்பதை விட மிகவும் கடினமானதுடன், பல தொல்லைகளைக் கொடுப்பது. ஒரு மொழியிலுள்ள சொல்லை சொல்லுக்குச் சொல் மற்ற மொழிக்கு மாற்றுவது மட்டும் மொழிபெயர்ப்பாகிவிடாது. மாறாக மூல மொழியின் அழகையும், சிறப்பையும், சொற்களின் கருத்துக்களையும் வெளிப்படுத்துவதே மொழிபெயர்ப்பின் முக்கிய கடமையாகும் எனக் கற்றுணர்ந்தோர், இத் துறையில் வெற்றிபெற்றோர் கூறுகின்றனர்.

மூலநூலைப் படைக்கும் ஆற்றல் உள்ளவனால் மட்டுமே சிறந்த மொழிபெயர்ப்பு நூலைப் படைக்கமுடியும்.

மூலமொழியிலுள்ள சொற்களின் கருத்துக்களை, அவற்றின் மென்மைத்தன்மையை ஆழமாகத் தெளிவாகப் புரிந்த பின்பு மொழிபெயர்க்க வேண்டும். மொழிபெயர்ப்பு நூல், மூலநூல் முழுவதையும் உள்ளடக்கியிருக்கும் வேளையில், அந்நூலைப் படிப்பவர்களின் உள்ளத்தில் படிக்கும் நூல் மொழிபெயர்க்கப்பட்ட நூல் என்ற உணர்வு தோன்றாதவாறு அமையவேண்டும்.

மூலநூலாசிரியரின் நோக்கம், எந்தக்கருத்து வலியுறுத்தப் படுகிறது, மூலநூலிற் கூறிய கருத்தின் முழுமை மொழி பெயர்ப்பின் மூலம் உறுதியாகிறதா என்ற கேள்விகளுக்கான விடைகளின் பாதையிற் சென்று உள்ளம் நிறைவான மொழிபெயர்ப்பை வாசகர்களுக்கு அளிப்பவனே மொழிபெயர்ப்பாளன்.

மொழிபெயர்ப்பாளர் மொழிப்பற்றுமிக்கவராக, பல மொழிகளை விரும்புபவராக, வேற்றுமொழிகளை முறையாகக் கற்கும் ஆர்வமுடையவராக இருத்தல் வேண்டும். மூலமொழியிலும், பெயர்ப்புமொழியிலும் சிறந்த ஆர்வமும், ஆற்றலும் புரிந்துகொள்ளும் தன்மைபெற்றவராகவும் இருத்தல் வேண்டும். ஆராய்ந்து பார்க்கும் அறிவும், நினைவாற்றலும் உள்ளவராக, தான் என்னும், தனிமனிதன் என்னும் நினைப்பை விடுத்து நடுநிலைப்பண்போடு இலக்கிய ஆர்வம், சுவைபட எழுதும் திறன், சமகால நூல்களைப்பற்றிய அறிவு, காலப்போக்கில் ஏற்படும் மொழிநடைமாற்றம் என்பவற்றை அறிந்தவராக இருத்தல் வேண்டும். மொழிபெயர்க்கப்படும் மொழியின் பண்பாடு, நாகரிகம் போன்றவற்றில் பாண்டித்தியம் பெற்றவராக மொழிபெயர்ப்பாளர் இருப்பது மிகவும் அவசியமாகிறது.

*திவ்வியநாதன் செல்வத்துரை, காலம் – 23.05.1995*

# இவை மொழிபெயர்ப்பல்ல

பிரெஞ்சுக் கவிஞர்களை உள்வாங்கி உருவாக்கப்பட்டவை

## ஆக்கிரமிப்புக்கால இலக்கியம்

### *பிரெஞ்சுக்கவிஞர் போல் எலுஆரும் அவர் கவிதையும் (Paul Eluard)*

டுமீல்!டுமீல்!டுமீல்!, அன்று, 1–புரட்டாதி–1939 அதிகாலை 5.45 மணி, நாசி கிட்லரின்படை போலந்துக்குள் நுழைகிறது, கட்டிடங்கள் இடிந்துவிழுகின்றன, காதைப்பிளக்கும் சத்தத்துடன் துப்பாக்கிக்குண்டுகள் சிதறிப்பாய்கின்றன, கவசவாகனங்கள் நெருப்பைக் கக்குகின்றன, எஞ்சியுள்ள வீடுகளை நெருப்பு பதம்பார்க்கிறது, கூக்குரலிட்டு அழுதமக்கள் கிடைத்தவற்றை எடுத்துக்கொண்டு உயிர்தப்புவதற்கு எத்தனிக்கின்றனர். ஆனால், நாசிப்படையோ வெகுவேகமாக முன்னேறுகிறது.

மிகச்சொற்ப ஆயுதங்களைக்கொண்ட போலந்தின் ஆயுதப்படை முன்னேறி வரும் நாசிகளை எதிர்த்துப் போரிடுகிறது. போலந்தின் ஆயுதப்படைகளுக்குள் மிகக்கவனமாகத் தெரிவுசெய்யப்பட்டுப் பயிற்றப்பட்டு மூர்க்கத்தனமாகப் போரிடக்கூடிய இராணுவம்கூட முன்னேறிவரும் நாசிப்படையை எதிர்கொள்ளமுடியாத நிலையில், போலந்தின்

→

அனைத்து ஆயுதப்படைகளுடன் கிட்லரின் கைகளிற்சங்கமமாகின்றது. வெற்றிக்களிப்பில் கிட்லர் எக்காளமிடுகிறான். நாசிகள் குடித்துக் கும்மாளமிடுகின்றனர். தனக்குக்கிடைத்த இவ்வெற்றியை முன்வைத்து, தான் பலசாலியென மார்தட்டுகிறான் கிட்லர். தன்னால் நீண்டதூரத்துக்குச்செல்ல முடியுமெனக்கூறித் தனது பிடிவாதக்குணத்தை உலகுக்கு அறிவிக்கிறான்

தனக்குக்கிடைத்த இவ்வெற்றி தற்காலிகவெற்றியெனக் கணிக்கத்தவறிய கிட்லருக்கு, 1933ல், யேர்மனியின் ஆட்சியைக்கைப்பற்றுவதற்கான வாய்ப்புக்கிட்டியது. 1935ல், யேர்மனியின் முப்படைகளையும் மறுசீரமைத்து, 1936 பங்குனியில், பிரான்சின் ஒருபகுதியான லா றேனனி (La Rhénanie)என்னுமிடத்தை ஆக்கிரமித்துத் தனது அதிகாரத்துக்குட்பட்ட இடமாகப் பிரகடனப்படுத்துகிறான். இக்காலத்தில் ஸ்பெயின் நாட்டை ஆண்ட மற்றுமொரு சர்வாதிகாரி–பாசிசவாதி பிராங்கோவுக்கு உதவிக்கரம் நீட்டுகிறான். 1937ல், பிராங்கோவுடனான உறவுகளை முறித்தவாறு, 1938 பங்குனியில், ஆஸ்திரியா நாட்டை (Autriche) யேர்மனியுடன் இணைக்கிறான். 1939 பங்குனியில், இன்னொரு நாடான செக்கோஸ்லவாக்கியாவை யேர்மனியுடன் இணைத்துத் தனது அதிகார வரம்பைப் பலப்படுத்துகிறான்.

'நன்றாக உருசி கண்டபூனை' நாசி கிட்லர், 'தேளுக்கு மணியம் கொடுத்தால் நாழிக்கு நாழி கொட்டுமாப்போல்' 1–புரட்டாதி–1939ல், போலந்து நாட்டை ஆக்கிரமித்த அன்று, பிரான்ஸ், பிரித்தானியா நாடுகளின் அரசதூதுவர்கள் கிட்லருடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுகின்றனர். அனல்தெறிக்கும் சிவந்தகண்கள் வெறுமையில் நிலைகுத்தி நிற்க, முகத்துத்தசைகள் இறுகி மீசை துடிக்க, கைகளை ஒன்றுடன் ஒன்று உரசியவாறு கனத்தகுரலில் 'ஆங்கிலேயர்களுக்கு இன்னும் புரியவில்லை எனது பலத்தைப்பற்றி, என்னுடன் போர்புரிய இவர்கள் ஆசைப்பட்டால் ஒருவருடமென்ன பத்துவருடங்கள் இவர்களுடன் போர்புரிய நான் தயாராக இருக்கிறேன்' எனக்கூறி அன்றுவரைக்கும் உலகில் அமைதிவேண்டி நடைபெற்ற பேச்சுவார்த்தைகளை நாசமாக்குகின்றான். நாசி கிட்லரின் இப்பாசிசக்கர்ச்சினை உலகெங்கும் அமைதிவாழ்க்கை வாழவிரும்பும் பலரை வெறுப்படையச்செய்கிறது.

23–ஆவணி–39ல், சோவியத்தின் தலைவரான மற்றுமொரு சர்வாதிகாரி ஸ்ராலினுடன் கிட்லர் செய்துகொண்ட யேர்மனோ–சோவியத் என்னும் ஒப்பந்தம் பல பிரெஞ்சுவாலிபர்களைக் கொதிப்படையச்செய்கிறது. பாசிசத்துக்கு எதிராகப் பலர் ஆயுதம் ஏந்துகின்றனர். இவ்வாறு ஆயுதம் ஏந்திய வாலிபர்களில் ஒருவர்தான், 1–புரட்டாதி–39ல், போர்வீரனுக்குரிய ஆடை அணிகலன்களுடன் 'லெப்டினன்' என்னும் பட்டத்தைச் சுமந்தவாறு, பிரான்சின் ஒரு மாகாணமாகிய (Loiret) லுஆறே என்னும் மாகாணத்தில் (Minières) மினிஏர் என்னுமிடத்தில் நாசிப்படைகளை எதிர்கொண்ட பிரான்சுநாடு போற்றும் சிறந்த கவிஞரில் ஒருவரான (Paul Eluard) போல் ஏலுஆர் என்னுங் கவிஞர்.

1895ல் பிறந்து 1952 வரைக்கும் வாழ்ந்த போல் ஏலுஆர், பாரீசின் சுற்றுப்புறப்பகுதியான சன்– டுனி (Saint- Denis) என்னுமிடத்தில் பிறந்தவர். காசநோயினாற் பீடிக்கப்பட்டு உயர்படிப்பை இழந்தவர். சுற்றுப்புற இயற்கை அழகை எப்போதும் தன்னுடன் தாங்கித்திரியுமிவர், இளமைக்காலங்களில் பழமைக்கவிஞர்களின் படைப்புக்களாற் கவரப்பட்டார். இவ்வயதில் உணர்ச்சிகளால் உந்தப்பட்டுத் தனது உணர்வுகளை, இன்பதுன்ப நிகழ்வுகளாகப் பிரித்து அவற்றிற்கு உருவங்கள் கொடுத்துப் பல கவிதைகளை வடித்தவர், தனது 20ம் வயதில் கவிதைமூலம் உணர்வுகளை வெளிப்படுத்துவதற்குப் புதியவழியொன்றைத் தேடுவதில் நாட்டங்கொண்டு 'சுயூர்றேயலீசம்' (surréalisme) என்னும் வழிமூலம் வார்த்தைகளைப் புதுமைப்படுத்தும் தொழில்நுட்பத்தைக் கண்டுபிடித்தார். இவர் சொற்களை ஆளும் விதம், இவரது கவிதை நடை, இவர் விளக்கவரும் நிகழ்ச்சிகளில் உபயோகிக்கும் வார்த்தைகள் விஞ்ஞான விளக்கத்துக்குரியவையாக அமைவதாக ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

மரபுக்கவிதைகளின் சொந்தக்காரனாக ஆகவேண்டுமென்ற ஆவலில், இவர் மரபுக்கவிதைகள் பலவற்றைத் தொகுத்து அவற்றில் புதைந்திருக்கும் உருவம், உத்தி, உள்ளடக்கம் ஆகியவற்றின் விலைமதிப்பற்ற தன்மையை சாதாரணமக்களும் அறிந்துகொள்ளும்படி கடின உழைப்பின் முயற்சியால், 1951ல், 'தெரிவுசெய்யப்பட்ட பழங்கவிதை கள்' என்னும் தலைப்பில் தொகுப்பொன்றை வெளியிட்டார். அதிமுக்கியத்துவம் வாய்ந்த தனது சொந்தப்படைப்பான 'துயரங்களின் தலைநகரம்' என்னும் கவிதைத் தொகுப்பை 1926லும், 'கவிதையின் மோகம்' என்னும் தொகுப்பை 1929லும், சுயூர்றேயலீசம் என்னும் வழிமூலம் 'பொதுஇடத்து ரோசா' என்னும் தொகுப்பை 1934லும் வெளியிட்டார்.

'பட்டறிவின்மூலமாகத்தான் ஒருமனிதன் வாழவேண்டும். இல்லாதுவிடின், இவன் நடைபிணம்' என்று கூறும் போல் ஏலுஆர், இந்தத்திகதியில்தான் பாசிசத்தின் அடக்குமுறைக்கு எதிராக இலக்கியத்தைத் தீவீரமாகப் பயன்படுத்தினார் என்று கூறுவது மிகவும் கடினமான விடயமாகக் கருதுகிறார்கள். இரண்டாம் உலகப்போர்க்காலத்தில், ஆக்கிரமிப்புப் பிரான்சில், கிட்லரின் நேரடிக்கட்டுப்பாட்டிலிருந்த பிரான்சிலிருந்தும் மறைமுகக் கட்டுப்பாட்டிலிருந்த பிரான்சிலிருந்தும் பல கவிதைகளை எழுதி சிற்றிதழ்கள், தொகுப்புக்கள் மூலமாகவும் வெளியிட்டு வந்த போல் ஏலுஆரின் கவிதை களை கிட்லர் தணிக்கைக்குள்ளாக்குகின்றான். இதனால், இவர் மறைமுகமாக வெளியிடவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளாகி, 1942ம் ஆண்டுக் கோடைக்காலத்தில், அதிதீவீர எதிர்ப்புடன் 'கவிதையும் உண்மையும்' என்னும் தலைப்பில் தொகுப்பொன்றை வெளியிடுகிறார். இத்தொகுப்பு பன்னாட்டுரீதியாகப் படிக்கப்படுகிறது. இத்தொகுப்பில்தான் 'ஊரடங்குச் சட்டம்' என்னுங்கவிதை வெளிவந்தது. இது மிகவும் எளிமையான வார்த்தைகளையும், கவிதைகளின் அடிகள் தொடக்கத்தில் ஒரேவிதமான சொற்களைக்கொண்டவையாகவும் முடிவில் ஒரேவிதமான தொனியில் முடிவடைவதாக வும் அமைவது புதுவிதமானதெனப் பிரெஞ்சுக்கவிஞர்கள் கருதுகின்றனர். இக்கவிதை தமிழ்மொழியின் பாட்டிலக்கணத்தினுள் 'மடக்கு' விதிக்குள் அடங்குவது குறிப்பிடத்தக்கது. இக்கவிதையையும் இதற்கான தமிழ்வடிவத்தையும் காணலாம்.

## ஊரடங்குச் சட்டம்

என்ன செய்யமுடியும் அவ்வேளையில்
 ஆயுதமுனையில் அறைக்கதவு
என்ன செய்யமுடியும் அந்நேரத்தில்
 அடைக்கப்பட்டிருந்தோம் அறைக்குள்
எப்படிச்சொல்வேன் அந்நிலையை
 தடைகளை நிரப்பிப் பிரிக்கப்பட்டிருந்தது பாதை
இப்படித்தான்
 வாய்ப்பூட்டு, அடக்குமுறைக்குட்பட்டிருந்தது நகரம்
இப்படித்தான் சொல்லவேண்டும்
 பட்டினியாலும் வாடிக்கொண்டிருந்தது நகரம்
இப்படித்தான் எம்நிலை
 வார்த்தைகள் பிடுங்கப்பட்டு, உணர்வுகள் உருவப்பட்டு
ஆக்கப்பட்டிருந்தோம் நிராயுதபாணிகளாக
 இப்படித்தான் அப்பொழுது
காரிருள்சூழ இரவு விழுந்தது
 இப்படித்தான் அப்பொழுதில்
காதலில் தோயப் பசி பறந்தது
 காதலியும் நானும் ஒருவரை ஒருவர்... .

## Couvre-feu

Que voulez-vous la porte était gardée
Que voulez-vous nous étions enfermés
Que voulez-vous la rue était barrée
Que voulez-vous la ville était matée
Que voulez-vous elle était affamée
Que voulez-vous nous étions désarmés
Que voulez-vous la nuit était tombée
Que voulez-vous nous nous sommes aimés

(Paul Eluard)

இக்கவிதை, 27.02.2000இன் வீரகேசரி வாரவெளியீட்டின் சஞ்சிகை 1இல் ஆக்கிரமிப்புக்கால இலக்கியம் என்னும் தலைப்பில் வெளியாகியது.

கவிதையின் தமிழ்வடிவம், கட்டுரை – திவ்வியநாதன் செல்வத்துரை, காலம்–11–6–99. பிற்பகல் 1 மணியிலிருந்து

# போர்புரியும் இலக்கியம்

## *பிரெஞ்சுக்கவிஞர் றொ(b)வேர் டெஸ்நொஸும் அவர் கவிதையும;* (Robert DESNOS)

'எதிரியினுடைய வெற்றி எதிர்வரும் காலங்களில் மிகவும் பயங்கரமான, பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும். இருப்பினும், எதிரியை வெற்றிகொள்வதற்கான சொற்ப அனுகூலங்களை, அறிகுறிகளைச் சீரிய முறையில் ஆராய்ந்து, எமக்குச்சாதகமாக இவற்றைப் பயன்படுத்தினால் வெற்றி நிச்சியம் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை உடையவனாக இருக்கிறேன்.'

3–ஆடி–1940ல், யூக்கிளன்னும் இதழுக்கு மேற்படி கட்டுரை எழுதிய றொ(b)வேர் டெஸ்நொஸ்(Robert DESNOS) பல பிரெஞ்சு அறிவுசீவிகளுடைய மாறுபட்ட கருத்துகளுக்கு மத்தியில், நாசிகளை எதிர்த்துப் போரிடுவது தவிர்க்க முடியாத சம்பவமெனவும், போரிடுவதற்குத் தயாராகவேண்டுமெனவும் கூறி, மிகவேகமாகத் தனது முடிவுடன் பாசிசத்தை எதிர்கொள்கிறார்.

பாசிசப்பிடியிலிருந்து கலாச்சாரங்களைப் பாதுகாப்பதற்காகப் பன்னாட்டு எழுத்தாளர்கள் சங்கத்தினால் ஒழுங்கு செய்யப் பட்ட பாசிச, கிட்லேரிய எதிர்ப்புப்பேரணியில் விசேடமாகக் கலந்துகொள்ளும் றொ(b)வேர் டெஸ்நொஸுக்கு, பிரான்சின் மீது கிட்லர் போர்ப்பிரகடனம் செய்யும்போது வயது 39.

1940ம் ஆண்டு, பிரெஞ்சு இராணுவத்தின் 436வது படைப்பிரிவில் 'சார்ஜன்ட்'(sergent) என்னும் பட்டத்துடன் படையதிகாரியாக நாசிப்படையை எதிர்கொள்ளும் றொ(b)வேர் டெஸ்நொஸ், 1900ம் ஆண்டு, பாரீசில் வஸ்தீய் (bastille) என்னுமிடத்தில் பிறந்தார்.

1919ல், 'டடா'(dada) என்னும் அமைப்பினுள் தன்னை இணைத்துக்கொள்ளும் இவர், வென்ஜெம பெறெ (Benjamain PERET) என்பவரின் தொடர்புக்குப் பின் 'சுயூர்றேயலீசம்' என்னும் அமைப்பினுள் தன்னை ஈடுபடுத்தி, தனது கனவுகளுக்கு, கருத்துக்களுக்கு உருவங்கொடுத்து மக்களைக் கவரக்கூடிய வகையில் கவித்துவ சாமர்த்தியங்களால் இனிக்கும் கவிதைகளை இயல்பான நீரோட்டத்தில் ஆக்கிய ஆசுகவியாவார்.

1924ல், 'துக்கம் துக்கத்திற்காக' என்னும் கவிதைத் தொகுப்புடன் தனது எழுத்துப்பணியை ஆரம்பிக்கும் றொ(b)வேர் டெஸ்நொஸ், 1930ல், 'இரகசியப்புத்தகம்' என்னும் தொகுப்பையும், 1935ல் இருந்து 1939 வரை 'சலக்குறு' என்னும் இதழுக்கு செய்தி மற்றும் விளம்பர ஆசிரியராகக் கடமையாற்றுகிறார். பின்பு, 'லுக்சம்வூர்க்வானொலி', 'போஸ்ற் பரிசியன்வானொலி'களின் பல நிகழ்ச்சிகளில் பங்குபற்றியும், நிகழ்ச்சித் தயாரிப்பாளராகவும் கடமையாற்றுகிறார். ஒவ்வொரு மாலைவேளைகளிலும் கவிதைகள் எழுதியும், சிறுவர்களுக்காகச் சிறுகதைகள் எழுதியும் வானொலி மூலம் வெளியிட்டுவருகிறார். மேற்கூறியபடி தனது எழுத்துப்பணியை மேற்கொண்டுவரும் காலத்தில் காட்டிக்கொடுப்பொன்றினாற் கிட்லரின் படையினரால் கைது செய்யப்பட்டு (f)புலோஹா (Floha) தடைமுகாமுக்கு அனுப்பப்பட்டார். பசியுடன் உளநலம் முற்றாகப்பாதிக்கப்பட்ட நிலையில் .....(இவரைப் பற்றிய செய்திகளுடன் இவரது சில கவிதைகளும் விரல்2 இல் தொடரும்). 1943இல், இவர் எழுதிய 'பண்டமாற்றுப்பாலமருகே கண்விழித்துக் காவலிருப்பவர்'<<Le Veilleur du Pont-au-Change>> என்னுங் கவிதையின் தமிழ்மொழிவடிவத்தைக் காணலாம்.

⟶

## " பண்டமாற்றுப் பாலம் அருகே கண்விழித்துக் காவலிருப்பவர்"

நான் சிரந்தாழ்த்துகிறேன்!
நன்றாக உறங்கும் உங்களுக்கு
நான் சிரந்தாழ்த்துகிறேன்!

நான் சிரந்தாழ்த்துகிறேன்!
நாள் முழுவதும் கடின உழைப்புடன்
நான்குபேர் அறியாவாறு செயற்பட்டு
நன்றாக உறங்கும் உங்களுக்கு
நான் சிரந்தாழ்த்துகிறேன்!

அச்சுப்பதிப்பாளர்களே!
இரும்புப்பாதையில் ஆணியை
இழுத்தெடுப்பவர்களே!
குண்டுதாரிகளே!
துண்டுப்பிரசுர வினியோகஸ்தர்களே!
கடத்தற்காரர்களே!
தகவல்காவிகளே!
தீமிடுபவர்களே!

நான் சிரந்தாழ்த்துகிறேன்!
நம் எதிரியை வீழ்த்த
நாள் முழுவதும் உழைக்கும்
நம் இருபது வயது இளைஞர்களே!
நம்பிக்கைச் சிரிப்பின்
நல்லூற்றுக்களே!
நம்நாட்டுப் பாலங்களைப் போலும்
நரை விழுந்த முதியவர்களே!
நம்நாட்டுமலைகளைப் போன்றவர்களே!
நான்கு காலங்களின் அழகைப்போன்ற உங்களுக்கு
நான் சிரந்தாழ்துகிறேன்!

நாளை மலரும் விடியலில்
மீண்டும், ஒரு காலைச்சூரியன்
தன் கதிர்களை எறியும் காலம்
நான் உங்களுக்குச் சிரந்தாழ்த்துகிறேன்!

கவிதையின் தமிழ்வடிவம், கட்டுரை:
திவ்வியநாதன் செல்வத்துரை,
காலம் : 24-3-2000, காலை : 4-45 மணி

இக்கவிதை, 23.04.2000இன் வீரகேசரி வாரவெளியீட்டில் 'பிரெஞ்சுக்கவிஞர் றொபேர்ட் டெநொசும் அவர் கவிதையும்' என்னும் தலைப்பில் வெளியாகியது.

## போர்க்காலக் காதல் கவிதை

*செய்திகளற்ற போர்க்கைதி* (sans nouvelles)

என் இதயத்தாமரையே!
நான் ஆயுதமுனையில்,
ஆகாய உயர முட்கம்பி
வேலிகட்குள், அயல்நாட்டில்,
ஆக்கிரமிப்பாளர்களின்
கழுகுப்பார்வைக்குள்,
அனைத்தையும் இழந்த போர்க்கைதி.

என் ஆன்மா தப்பியதே
அவனருளால்.
நான் நலமே. இருப்பினும்,
என் மனம் உனைப்பிரிந்து
தவிக்கிறது.

உன்னைக் காதலிக்கிறேன்....
உன்னைக் காதலிக்கிறேன்.
முன்பைவிட இன்னும் ஆழமாக,
முன்பைவிட இன்னும் அதிகமாக.

என் போர்க்கள வாழ்நாளில்,
என் மடல்கள் இச்செய்தியைக்
காவிவந்தன.
என் மடல்கள் மிகச்சிறியவை.
என் கையிற் சிக்கிய இதழ்களின்
உயரம் அதுவே.

அதிகம் எழுதவிரும்புகிறேன்.
முடியவில்லை.
அருகினில் ஆயுதம் தரித்தோர்
என் உணர்வுகளைக் கொன்றிடுவர்.
என்னால் எழுதமுடியாது விடுபட்ட
என் உணர்வுகளை இருகோட்டினுள்
படித்தறிக.

என்னவளே! உன் மெல்விரல்கள்
வரைந்த மடல்கள் எங்கே?
என்னைச் சுற்றிநிற்கும் துப்பாக்கிக்
கரங்களிலா?
என்னவளே! அங்கு என்ன
செய்கிறாய்? எப்படி வாழ்கிறாய்?
எனப் பல கொடுமையான கேள்விகள்
என்மனதைத் துளைக்கின்றன.

எனினும், உனை எண்ணி
இன்புறுகிறேன்.
என் போர்க்களக் குளிர்காக்கும்
உள்ளாடைகளை,
நான் மறப்பினும் நீ மறவாது,
அன்று, பக்குவமாக மடித்துப்
பெட்டிக்குள் வைத்திட்ட
உன்னை எண்ணி இன்புறுகிறேன்.
இன்று, உன் நினைவால்
வாடுகிறேன்.
என்னவளே!

என் சிறகுகள் வெட்டப்பட்ட
சின்னக்குருவி நான்.
என்னைச் சுற்றியுள்ள
முட்கம்பிவேலிகள்
என் சுதந்திரச் சுவாசத்தைத் தடுக்க,
என் நினைவுகள் என்றும் உன்னைச்
சுற்றியதாய்.

உன்னைக் காணத் துடிக்கிறேன்!
என் ஆற்றாமைக் கடிவாளம்
அதைத் தடுக்க,
என் பற்கள் நகங்களைக் கடிக்க,
நான் மீண்டும் அதே மூலையில்.

உன்னை நினைக்கிறேன். மீண்டும்
மீண்டும்
உன் நினைப்பில் மூழ்குகிறேன்.
என் இயலாமையால் முகம் சிவக்க,
இன்று நடந்தவற்றுக்கு முன்னால்,
என்னைப்பற்றிய என்மதிப்பீடு
மிகப்பெரியதாய்,
என் உறுதியில்
நம்பிக்கையுள்ளவனாய்.
இன்று, இவற்றை இழந்தவனாய்,
நான் பாடுவது பழைய பல்லவியே!
என்னாற் செய்யமுடிவது இதுவே.
உன்பெயரிற் பாடுவது பழைய
பல்லவியே.

என்னவளே!
என் அன்பே அறிந்துகொள்.
என்றும்போல் வரும்
குளிர்காலத்துக்குமுன்,
எம்நாட்டில் இருப்பேனென
நினைக்கிறேன்.
உன்னை அங்கு முழுமையாகப்
பெற்றிடுவேன்.
நாம் பல இழப்புக்களைச்
சந்திக்கவேண்டுமென,
நமக்கு ஏதோ ஒன்று கட்டளையிட,
என்காதுகளில் இது ஒலிக்கவில்லை.

எம் இதயங்கள் ஒன்றாகி அன்புகீதம்
பாட,
எம் கைகள் இணைந்து வாழ்வு
பலம்பெற,
எம்மை எப்படிப் பயமுறுத்தமுடியும்
வறுமையால்?
என்னவளே!

(2ம் உலகப்போரில், போர்க்களத்தில் வைத்து கிட்லரினால் சிறைபிடிக்கப்பட்டு, யேர்மனியச்சிறையில் வாடிய பிரெஞ்சுப்படைத்தரைப்பைச் சேர்ந்த போர்க்கைதியினால் சிறைக்காலவாழ்வில் 12-4-1942ல் பிரெஞ்சுமொழியில் எழுதப்பட்ட கவிதையின் தமிழ்வடிவம்.)

தமிழில்: திவ்வியநாதன் செல்வத்துரை, காலம்: 23-4-2000, 4-15 அதிகாலை.
இக்கவிதை, 15.10.2000இன் வீரகேசரி வாரவெளியீட்டின் சஞ்சிகை2 இல் 'செய்திகளற்ற போர்க்கைதி' என்னும் தலைப்பில் வெளியாகியது.

# போர்க்காலப் பெண்ணாலான கவிதை

## பிரெஞ்சுஇலக்கியத்தில் மறிஆன் கோஎன் (Marianne COHN)

'அடிக்காதே! அடிக்காதே! எம் வயிற்றில் அடிக்காதே!. வேலை வேண்டும்! வேலை வேண்டும்! எமக்கு வேலைவேண்டும்!' எனக்கேட்டு மக்கள் வீதிக்கு வருகின்றனர். வேலைகேட்டவர்களின் கைகளில் ஆயுதங்கள் திணிக்கப்படுகின்றன. பேச்சுச்சுதந்திரம் எழுத்துச்சுதந்திரம் பறிக்கப்படுகின்றன. ஆட்சியாளர்கள் தங்கள் சுகபோக வாழ்வைத் தக்கவைக்க, மக்களைப்பயமுறுத்தி அதிகாரவலுவை மேன்மேலும் இறுக்குகின்றனர். உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டு, இராணுவச்சட்டங்களை நிரந்தரமாக்கி அயல்நாட்டை அபகரிக்கமுயல்கின்றனர். அந்நாட்டிலுள்ள மக்களைக்கொன்று குவித்தும், அம்மக்கள் சிறுகச்சிறுகச் சேகரித்த சொத்துகளை கொள்ளையடித்தும், இந்நாட்டுப் பெண்களை பாலியல்வல்லுறவுக்குட்படுத்தியும், தங்களின் பாசிச இராணுவநடவடிக்கையைக் கட்டவிழ்த்துவிடுகின்றனர். மேற்கூறியபடி மக்களை அணியணியாய்ப் போரிற் கொன்றுகுவிக்கும் பாசிசவேலையை, புரட்டாதி–1939ல், மேற் கொண்டு பிரான்சுநாட்டை ஆக்கிரமிக்கிறான் சர்வாதிகாரி கிட்லர். பிரான்சில் வாழும் பல இலட்சம் யூதமக்களைக் கைதுசெய்து உயிரோடு கொளுத்துகிறான். யூத இனத்தை அடியோடு அழிக்கும் திட்டத்தைக் குறியாகக் கொண்டு வெறியோடு செயற்பட்டுவரும் கிட்லரை அழிப்பதற்கு ஆயுதம் ஏந்திய பல மறைமுக அமைப்புகள் செயற்படுகின்றன. இவ்வமைப்பொன்றில் தன்னைப்போராளியாக இணைத்துக் கொள்கிறார் மறிஆன் கோஎன் என்னும் பெண்.

மறிஆன் கோஎன், 1922ல், ஜேர்மனியிற் பிறந்தார். ஜேர்மனியில் வாழ்ந்த யூதச்சமூகத்தைச் சேர்ந்த இவர், ஜேர்மனியில் ஏற்பட்ட அரசியல் மாற்றத்தினால் புகலிடம்கோரி இஸ்பெயின் நாட்டில் வாழ்ந்துவருகிறார். இஸ்பெயின்நாட்டில் ஏற்பட்ட உள்நாட்டுப்போரினாலும், சர்வாதிகாரிபிராங்கோவின் கொடுங்கோல் ஆட்சியினாலும் இஸ்பெயினைவிட்டு விலகி பிரான்சில் புகலிடம்கோரி வாழ்ந்து வருகிறார். 1940ல், பிரான்சு கிட்லரின் கைகளில் வீழ்ந்ததனாலும், கிட்லரின் யூதஇன அழிப்புக் காரணமாகவும் மறிஆன் கோஎன் மறைமுக அமைப்பொன்றில் தன்னைப் போராளியாக இணைத்துக் கொள்கிறார். இக்காலத்தில், யூதச்சமூகத்தைச் சேர்ந்த குழந்தைகளை கிட்லரின் பிடியிலிருந்து காப்பாற்றும் பொருட்டு மறைமுகமாக சுவீஸ் நாட்டுக்கு அனுப்பிவைக்கும் வேலையில் ஈடுபடுகிறார்.

31–5–1944ல், 28 குழந்தைகள் கொண்ட வாகனமொன்றுடன் பிரான்சுநாட்டு எல்லையில் வைத்து கிட்லரின் கூலிப்படையாற் கைது செய்யப்படுகிறார். தப்பியோடித் தன்னைக் காப்பாற்றக்கூடிய நிலையிருந்தும், தன்னை நம்பிய குழந்தைகளை விட்டுப்பிரிய மனமில்லாத காரணத்தினால், இவர்களைக் காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட்டு, 8–7–1944 இரவு நாசிப்படையால் கொலைசெய்யப்படுகிறார். பிரான்சு நாட்டின் விடுதலைக்குப் பின்பு, இவரது சிதைந்த உடல் கண்டெடுக்கப்பட்டுத் தகுந்தமரியாதையுடன் நல்லடக்கம் செய்யப்படுகிறது. இவரது தன்னலமற்றசேவையைப் பாராட்டி ஜெருசலேம் நகரில், இவரது நினைவாக இவரது பெயரில் சிறுவர் பூங்காவொன்றை இஸ்ரேலிய அரசு ஏற்படுத்தியுள்ளது. இவரால்எழுதப்பட்ட இறுதிக்கவிதையின் தமிழ் மொழிவடிவத்தை, கட்டுரையைக் காண்க.

நாளை காட்டிக்கொடுப்பேன் << Je trahirai demain>>
----------------

நாளை காட்டிக்கொடுப்பேன். இன்று, என்
நகங்களைப் பிடுங்குங்கள்.
நம்மக்களைத் துரோகிக்கமாட்டேன்.
நம்பியவரைச் சதிவலையில் வீழ்த்தமாட்டேன்.

நான் அறிவேன் என் உற்சாகத்தின் உச்சத்தை.
நீங்கள் அறியீர்கள்.
நீங்கள் இரும்பு வளையங்கள் பூட்டிய அய்ந்து
முரட்டுக்கரங்கள்.
நீங்கள் கூரிய ஆணிகள் பூட்டிய பாத அணிகள்.

இன்று காட்டிக்கொடுக்க மாட்டேன்.
இதைத் தீர்மானிப்பதற்கு – எனக்கு
இவ் இரவு தேவை.

இல்லை இல்லை எனக்கூறுதற்கு,
அறியேன் அறியேன் எனக்கூறுதற்கு,
அனைவரையும் துரோகிப்பதற்கு,
என்நண்பர்களைத் தெரியாதென்பதற்கு,

உரொட்டியையும் திராட்சை இரசத்தையும்
உண்ண மறுப்பதற்கு,
வாழ்க்கையை விரோதிப்பதற்கு,
உயிரைமாய்ப்பதற்கு– ஓரிரவுக்குக் குறைவாயின்

இவ்விரவை ஏற்கேன்.
இன்று காட்டிக்கொடுக்க மாட்டேன்.
இந்த வாள் நிலத்தின் பளிங்குக்கற்களின் கீழ்,
இந்த வாள் என்னைச் சுற்றியுள்ள கம்பிகட்கல்ல,
இந்த வாள் கொலைகாரர்கட்கல்ல,
இந்த வாள் என்மணிக்கட்டு நரம்புக்கு.

இன்று என்னிடம் சொல்வதற் கொன்றுமில்லை,
நாளை காட்டிக்கொடுப்பேன்.

கவிதையின் தமிழ்வடிவம், கட்டுரை:
திவ்வியநாதன் செல்வத்துரை
காலம்– 10–7–2000, அதிகாலை 5மணி.

03.09.2002இன் வீரகேசரி வாரவெளியீட்டின் இலக்கிய சாரலில் பிரெஞ்சு இலக்கியத்தில் 'மறிஆன் கோஎன்' என்னும் தலைப்பில் வெளியாகியது.

# தமிழ்மொழிப் பாட்டிலக்கணத்தில் சில குறிப்புக்கள்

தமிழ்மொழியிலுள்ள 247எழுத்துக்களும் உயிர்எழுத்துக்கள் எனவும், மெய்யெழுத்துக்கள் எனவும், உயிர்மெய்யெழுத்துக்கள் எனவும் 3வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன. உயிர்எழுத்துக்கள் அ முதல் ஔ வரையுள்ள 12 எழுத்துக்களாகும். இவற்றில் அ,இ,உ,எ,ஒ என்ற ஐந்தும் குறில் அல்லது குற்றெழுத்து (குறுகிய ஓசையுடையவை) எனவும், ஆ,ஈ,ஊ,ஏ,ஐ,ஓ,ஔ என்ற ஏழும் நெடில் அல்லது நெட்டெழுத்து (நீண்ட ஓசையுடையவை) எனவும் அழைக்கப்படும்.

தமிழ்மொழியில் உள்ள உயிர்எழுத்துக்கள் பல தனித்து நின்று வார்த்தைகளை உருவாக்கி அவற்றுக்குப் பல கருத்துக்களைத் தருவது இம்மொழிக்கு செழுமை சேர்த்துள்ளது குறிப்பிடத்தக்கது. உ.ம் – அ, இம்மொழியின் இலக்கத்தில் 8ம் இலக்கத்தைக் குறிக்கும் சொல். ஆ, பசுமை, வகை, மரம், அற்பம், மறுப்பு, சம்மதம், நிந்தை, இரக்கம் என்னுங் கருத்துக்களைத் தரும். ஈ, ஈசல் என்னுங் கருத்தையும், ஊ, இறைச்சி என்னுங் கருத்தையும், ஏ, அம்பு என்னுங் கருத்தையும், ஐ, தலைவன், கணவன் என்னுங் கருத்துக்களையும், ஓ, ஆச்சரியம், வியப்பு என்னுங் கருத்துக்களையும் தருவது குறிப்பிடத்தக்கது.

மெய்யெழுத்துக்கள் க் முதல் ன் வரையுள்ள 18 எழுத்துக்கள். இவற்றை புள்ளி எழுத்துக்கள் எனவும், ஒற்றெழுத்துக்கள் எனவும் கூறுவர். இவை வல்லினம் 6, மெல்லினம் 6, இடையினம் 6 என 3 வகையாகப் பிரிக்கப் பட்டுள்ளன.

வல்லினம் – க்,ச்,ட்,த்,ப்,ற்
மெல்லினம் – ங்,ஞ்,ண்,ந்,ம்,ன்
இடையினம் – ய்,ர்,ல்,வ்,ழ்,ள்

உயிர்மெய்யெழுத்துக்கள் 216ஆகும். உயிர்எழுத்துக்கள் (12) x மெய்யெழுத்துக்கள் (18) = 216.

உ.ம் – க் + அ = க, க் + ஆ = கா, ……. க் + உ = கு, க் + ஊ = கூ என்பன.

ஆயுத எழுத்து 1 (ஃ) ஆகும்.

ஓரெழுத்து உச்சரிக்கும் நேரத்தை அளவு அல்லது மாத்திரை எனலாம். ஒரு மாத்திரை நேரமாவது கண்ணிமைக்கும் நேரம், அல்லது கட்டைவிரலும் நெடுவிரலும் சேர்த்துச் சொடுக்கும் நேரம். தமிழ் எழுத்துக்களில் அரை மாத்திரை நேரம் ஒலிக்கும் எழுத்துக்களும், ஒரு மாத்திரை, இரண்டு மாத்திரை ஒலிக்கும் எழுத்துக்களும் உள்ளன. உ.ம் – புள்ளி எழுத்துக்கள், ஆயுத எழுத்து அரை மாத்திரை. க,ச,ட,த,ப,ற போன்ற உயிர்மெய்யெழுத்துக்கள் ஒரு மாத்திரை. கா, சா, டா, தா, பா, றா போன்ற எழுத்துக்கள் இரண்டு மாத்திரை. குறில் ஒலிக்கும் காலஅளவு ஒருமாத்திரை, நெடில் ஒலிக்கும் காலஅளவு இருமாத்திரை.

**அரையடிப்பாட்டு**

உ.ம் – அறஞ்செய்ய விரும்பு. ஆறுவது சினம். இயல்வது கரவேல்.

**ஓரடிப்பாட்டு**

உ.ம் – அன்னையும், பிதாவும் முன்னறி தெய்வம். ஆலயம் தொழுவது சாலவும் நன்று.
தொல்காப்பியரின் கருத்துப்படி ''அடியின் சிறப்பே பாட்டெனப்படுமே.''

**எதுகை**

முதலெழுத்து மாத்திரை எனப்படும் ஒலியளவால் ஒத்திருக்க, இரண்டாம் எழுத்து அவ்வெழுத்தாகவே வருமானால் அதற்கு எதுகை என்பர். மெய்யெழுத்துக்கள் எதுகைக்கு உதவுகின்றன.

உ.ம் – பட்டுக்குக் கட்டு, பாட்டுக்குக் காட்டு. இங்கு ப,க பா,கா மாத்திரை எனப்படும். 'ட்' எதுகை எனப்படும். பட்டுக்கு பாட்டோ, கட்டுக்கு காட்டோ எதுகையாகாது.

**மோனை**

முதலெழுத்து ஒத்துவருதல் மோனை எனப்படும். இரு சொற்களில் முதற் சொல்லின் முதலெழுத்தும், அடுத்த சொல்லின் முதலெழுத்தும் ஒன்றுபட்டிருப்பது, அதே எழுத்து அல்லது அதன் இன எழுத்து அல்லது அவ்வொலி தரும் எழுத்து ஒன்றுபட்டிருப்பது மோனை எனப்படும்.

உ.ம் – உள்ளது உரியது. உற்றார் உறவு. மரம் மட்டை. கொட்டும் குரவை. ஈடும் எடுப்பும். பெண்டு பிள்ளை. எட்டுக்கும் இழவுக்கும். தோட்டம் துரவு. முக்கல் முனகல். வற்றல் வதங்கல். குளம் குட்டை.

குறும்புக் குப்பன் குச்சியை எடுத்துக் குளத்துள் எறிந்தான். இவற்றில் வரும் 4 'கு'களும் மோனை எனப்படும். →

**இனம்**

அ,ஆ இரண்டும் ஓரினம். அவ்வாறே இ,ஈ,உ,ஊ முதலியன குறிலும், நெடிலுமாகும். ஒலிவகையால் இ,ஈ,எ,ஏ,ஐ என்பன ஓரினமாகவும், உ,ஊ,ஒ,ஔ என்பன ஓரினமாகவும் கொள்ளப்படும். இவ்வினத்தை அறிதல், மோனை அமைப்புக்கு பயன்படும். இவ்வாறு மெய்யெழுத்துக்களை நினைவில் வைத்துக்கொள்ளுதல் எதுகைக்கும், வண்ணங்களுக்கும் பயன்படும்.

**ஈரொற்று உடனிலை**

ய், ர்,ழ் என்பவை இரண்டு ஒற்றுக்களாகும். இம்மூன்றினுள், ஒன்று முன்னே ஒன்றாய் நிற்க அவற்றின் பின் க்,ச்,த்,ப்,ங்,ஞ்,ந்,ம் ஆகிய 8 ஒற்றெழுத்துக்களுள் ஒன்று வந்து ஈரொற்றாய் நிற்கும். உ.ம் – வாய்ப்பு, வார்த்தல், ஆர்ப்பு, வாழ்க்கை, தாழ்ச்சி, வாய்க்கால், வார்ப்பு, வாழ்த்து. இவ்வாறு வருவது ஈரொற்று உடனிலை எனப்படும். ஒற்று, மெய், புள்ளி என்பனவெல்லாம் ஒரே பொருள் தருவன. ஆயுதம் தனி எழுத்தே எனினும் மெய்யெழுத்து போன்றதே.

மு.கு – எழுத்தெண்ணி அமைக்கும் பாடல்களில் மெய்யெழுத்துக்கள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படமாட்டாது. மேலும், செய்யுளின் இறுதியில் 'போலும்' என்னும் சொல்லுடன் 'ன, ம' என்னும் எழுத்துக்கள் ஈரொற்று உடனிலை யாகவும் நிற்கும். உ.ம் – முந்நூலாகக் கொள்வானும் போன்ம், திசையறி மீகானும் போன்ம் (மீகான் : மாலுமி)

**குற்றியலுகரம்**

சொல்லின் இறுதியில், வல்லெழுத்தின் மேல் வரும் 'உ' (உகரம்) [ கு, சு, டு, து, பு, று ] குற்றியலுகரம் எனப்படும். குற்றியலுகர எழுத்துக்கள் புனர்ச்சி நிலையில் கி, சி, டி, தி, பி, றி என மாறிவருவதுண்டு. இவை குற்றியலிகரம் என அழைக்கப்படும். குற்றியலுகரமும், குற்றியலிகரமும் எழுத்தாகக் கணிப்பிடப்படும் இடமும், கணக்கிடப்படாத இடமும் உண்டு. மேலும், ஐ, ஔ என்பன குறிலாகக் கொள்ளப்படும் இடமும் உண்டு.

**புணர்ச்சி நிலை**

இரண்டு சொற்கள் ஒன்று சேர்வது புணர்ச்சி. அங்ஙனம் சேர்கையில் நிலைமொழியீறும், வருமொழிமுதலும் இயல்பா கின்றன. அல்லது தோன்றல், திரிதல், கெடுதல் ஆகிய வேறுபாடுகளை அடைகின்றன. இந்நிலை புணர்ச்சி நிலை எனப்படும்.

**நிலைமொழி, வருமொழி**

இரண்டு சொற்கள் சேர்வதைச் சொல்லும்போது அதாவது புணர்ச்சியில் முதலில் உள்ள சொல் நிலைமொழியாகும். இரண்டாவதாக வரும் சொல் வருமொழி ஆகும். உ.ம் – படிப்பது + யாது.

மேலும், 'ஒரு கதவு' , 'ஓர் இலக்கியவடிவம்' என்பவற்றை நோக்குக. ஒரு, ஓர் என்பன பெரும்பாலும் உயிர்முதன் மொழியுடன் புணரும்போது 'ஓர்' எனவும், உயிர்மெய்யெழுத்தை முதலாக உள்ள சொல்லுடன் புணரும்போது 'ஒரு' எனவும் அமையும். இதைப் பயன்படுத்தும்போது இன்னோசை உண்டாகும். உ.ம் – ஓர் அணில் – ஓரணில் எனவும், ஒரு கதவு – ஒருகதவு எனவும் அமையும். ஒரு சொல்லுக்கு முன்வருகின்ற உயிர்எழுத்துடன் கூடிய வார்த்தை அல்லது பதம் உயிர்முதன்மொழி எனப்படும்.

**சொல் வேறுபடுதல் (விகாரம்)**

பாட்டிலக்கணம் கருதிச் சொற்களிற் சில வேறுபாடுகள் ஏற்படும். இவை வலிதல், மெலிதல், நீட்டல், குறுக்கல், விரித்தல், தொகுத்தல் என்பன. மேலும், சில சொற்களின் முதல்குறைதல், இடைகுறைதல், கடைகுறைதல் எனப்படும். உ.ம் – வரம்பு — வரப்பாக மெல்லெழுத்து வல்லெழுத்தாக (ம் – ப்) மாறும் நிலை. குரக்கு — குரங்காக வல்லெழுத்து மெல்லெழுத்தாக (க் – ங்) மாறி மெலிதல். நிழல் – நீழல் குறில் நெடிலாக (நி — நீ) நீளுதல். தீயேன் – தியேன் நெடில் குறிலாகக் (தீ — தி) குறுகிக் குறுகுதல். விளையுமே — விளையும்மே என எழுத்துச்சேர்க்கப்பட்டு (ம்) விரிதல். சிறிய இலை — சிறியிலை எழுத்துக் குறைக்கப்பட்டு (ய) தொக்குதல்.

**முதற்குறை, இடைக்குறை, கடைக்குறை**

முதற்குறை

தாமரை — மரை

இடைக்குறை

ஓந்தி — ஓதி

கடைக்குறை

நீலம் – நீல்

இச்சொற்களின் வேறுபாடுகளையும், குறைகைளையும் அறிந்தால் சீர், தளைகளில் பிழையில்லாமல் பாடலாம்.

தொகை எனப்படுவது இரண்டு சொற்கள் சேர்ந்து வருவது. உ.ம் – செந்தாமரை இதிற் செம்மை, தாமரை ஆகிய இரண்டு சொற்கள் சேர்ந்துள்ளன. அசை எனப்படுவது ஓரெழுத்து அல்லது இரண்டு எழுத்துக்கள் கொண்ட ஒரு தொகுதிக்கு பெயர். உ.ம் – கடவுள் இதில் 'கட' என்பது ஓரசை. 'வுள்' என்பது மற்றோர் அசை. 'சீர் எனப் படுவது செய்யுளில் ஓரடியில் வரும் சொல்லுக்கு சீர் என்று பெயர். திருக்குறளில் வரும் அகர என்பது ஒரு சீர். முதல என்பது இரண்டாம் சீர். எழுத்தெல்லாம் என்பது மூன்றாம் சீர். அடி என்பது செய்யுளில் உள்ள வரிகளுக்கு அடி என்று பெயர். பல சீர்கள் கொண்டது ஓரடியாகும். தளை எனப்படுவது சீர்கள் ஒன்றோடொன்று தொடர்பு கொண்டுள்ள நிலை. தளைகள் 7 வகைப்படும்.

**அளபெடை**

ஓரெழுத்து தனக்குரிய ஒலி அளவில் அதிகமாக ஒலிப்பது அளபெடை எனப்படும். உயிர் எழுத்து அளபெடுப்பது (அளவுக்கதிகமாக) உயிரளபெடை எனப்படும். ஒற்றெழுத்து அளபெடுப்பது (அளவுக்கதிகமாக) ஒற்றளபெடை எனப்படும். உயிரளபெடைக்கு அடையாளமாக அளபெடுக்கும் ஏழு நெட்டெழுத்துக்களும், அவற்றின் இனமாகிய குற்றெழுத்துக்களோடு வரும். ஐகாரத்திற்கு இகரமும், ஔகாரத்திற்கு உகரமும் இனம். உ.ம் – 'அ,அய்', 'தழீஇ', 'கெடுப்பதூஉம்', 'ஏஎ', 'ஓஒ', 'ஐஇ', 'ஔஉ'. ஒற்றளபெடைக்கு அடையாளமாக வந்த ஒற்றெழுத்து மீளவும் வரும். உ.ம்– பொன்ன், கண்ண், மஞ்ஞ்சள். ங,ஞ, ண,ந,ம,ன,வ,ய,ல,ள என்னும் 11றும் ஒற்றள பெடையாகும். மற்றைய மெய்யெழுத்துக்கள் அளபெடையாக வராது. அளபெடையை அறிதல் சீர், தளை சிதையாமல் பாடுவதற்கும், இசையும், பொருளும் இணைவதற்கும் உதவும்.

**ஆட்சிநிலை மரபுகள்**

அ,ஆ,இ,ஈ,உ,ஊ,எ,ஏ,ஐ,ஒ,ஓ,ஔ என்னும் ஒலிகள் உணர்ச்சி வெளிப்பாட்டிற்குரியவை. உயிர் என்பது உணர்வால் இயங்குவதால் இவ்வுணர்வுக்கு இவ்வொலிகள் உதவுகின்றன.

வல்லினம் (க்,ச்,ட்,த்,ப்,ற்) – போர், எதிரீடு, கொடுமை முதலியவற்றையும், மெல்லினம் (ங்,ஞ்,ண்,ந்,ம்,ன்)– அன்பு, அழகு, அமைதி, இனிமை முதலியவற்றையும், இடையினம் (ய்,ர்,ல்,வ்,ழ்,ள்) – இவ்விருவகைக்கும் இடைநிலைப் பட்டதாகவும், பொதுநிலை அறங்கள் கூறுவதற்கும் ஏற்றவை. 'ழ'கரம் இனியது. மிகச்சிறந்த பொருளைப்பற்றிப் பாடுவதற்கு 'ழ'கர ஒலியை வைத்தல் வேண்டும்.

நெடில், குறில், வல்லினம், மெல்லினம், இடையினம் ஆகிய வகைகளைத் தெளிவாக அறிந்து கொள்ளுதல் அவசியம். இது வண்ணப்பாடல்களையும், சந்தப்பாடல்களையும் அமைக்க உதவும்.

**வண்ணப்பா, சந்தப்பா**

தாளத்துடன் நிகழும் பாடல்களை 4 வகையாகப் பிரிக்கலாம். அவையாவன வண்ணப்பா, சந்தப்பா, சிந்துப்பா, உருப்படி என்பன. 'சந்தம் பந்தத் தொடராலே சஞ்சலம் துஞ்சித் திரியாதே...' என்னும் அருணகிரிநாதரின் திருப்புகழ் வண்ணப்பாவுக்கு உதாரணமாகவும், 'தேமாங்கனி கடுவன்கொள விடுகொம்பொடு தீண்டித்.....' என்னும் திருஞானசம்பந்தரின் தேவாரப்பாடல் சந்தப்பாவுக்கு உதாரணமாகவும் அமையும்.

வண்ணம், சந்தம் ஆகிய இரண்டுக்கும் அடிப்படை தாளநடைகளாதலின், இவற்றை மாற்றிக் கூறுவதும் உண்டு. அருணகிரிநாதர் தன் திருப்புகழ்ப் பாடல்களைச் 'சந்தத்தமிழ்' என்கிறார்.

புகழ்வாய்ந்த புலவர்களின் பாடல்களில், இவர்கள் எடுத்துக்கொண்ட பொருளுக்கு ஏற்ற ஒலிவகைகள் அமைவது, இவர்கள் பெற்றிருந்த தேர்ச்சியின் விளைவெனக் கூறப்படுகிறது.

பாட்டிலக்கணத்தை ஐயந்திரிபறக் கற்றுவிட்டால் மட்டும் தற்காலக் கவிஞர்களாக முடியாது.

(விரல் 2இல் தொடரும்)

திவ்வியநாதன் செல்வத்துரை, காலம் – 21.03.1993, காலை 5.00

விரைவில் ! மிக விரைவில் !

பல வண்ண மெட்டுக்களுடன் காதுகளுக்கு இனிமையாக வெளிவருகிறது இறுவட்டுத் தொகுப்பு (CD)

பாடல்கள்– இசை
திவ்வியநாதன் செல்வத்துரை

# கவிதைக்களம்

## கடவுளுக்குக் கவலை

ஓ மனிதர்களே! கடவுளை அறிவீர்களா?
முன்பு அவரை நன்கு அறிவேன்!
முதியவர் அன்பானவர், இரக்கமானவர்!
மக்கள் பலரோடு பழகுபவர்!

கடவுள் முதுமையில் தள்ளாடுகிறார்
கடவுள் கடுஞ்சொற் பேசுகிறார்
கடவுள் ஆணவக்காரராகிவிட்டார்
கடவுள் நீதி–நியாயங்களையும் இழந்துவிட்டார்

கடவுள் இறந்து விட்டார்
கடவுளை அகக்கண் கொண்ட
கடவுள் இறந்துவிட்டார்
கடவுள் உன்னுள் உள்ளார்
கடவுள் கால் பற்ற உன்னைப் புடம்போடு

கடவுள் நீதிகளுஞ் சமயவாதிகளுங் கூறிடினும்
காலமான கடவுளுங் கடவுளானார்

இறந்த கடவுள் முதுமையில்
வாதம், வலி, பேதியினாற்
காலமாகும்வரை துன்புற்றார்

கடவுள் அது செய்வார், இது செய்வாரெனக்
கடைசிவரை காத்திருந்த
கடவுளின் மரணத்தைத் தடுக்க எந்தக்
கடவுளாலும் முடியாமற் போனது
கடவுளுக்கு எப்போதுங் கவலை

திவ்வியநாதன் செல்வத்துரை
காலம் – 04.01.14, காலை 7.30

## எழுந்தென்னைப் பாரம்மா!

அம்மா என்றழைக்கும் என்குரல்
உன்காதில் விழவில்லையா!
சும்மா உன்கண்கள் மூடியிருந்தால்
என்னென்பேன்! ஏதென்பேன்! என்னம்மா!

அம்புலி காட்டி அமுதூட்டி
எனை வளர்த்த தாயே! என்னைப்பாரம்மா!
எழுந்தெனைப் பாரம்மா! என்முகம் பாரம்மா!
அன்று நோயில் வாடினேனம்மா!
அன்றும் எனக்காகப் பத்தியமிருந்தாயம்மா!
என்னம்மா! எழுந்தெனைப்பாரம்மா!

என்னைச் சுமந்த உன்கருப்பை
என்னைச் சுமந்த உன்நெஞ்சம்
என்னைச் சுமந்த உன்தோள்கள்
என்னைத் தொட்டிலிட்ட கைகள்
தாலாட்டுப் பாடிய உன்நா மரத்து நிற்கின்றனவே!
தாயே எழுந்தெனைப்பாரம்மா! என்முகம் பாரம்மா!

அரப்பெண்ணை உன்தலையில் தடவி
உனைக் குளிப்பாட்டி, மஞ்சள் நீர் தெளித்தேனம்மா!
மீண்டும் மண்ணில் என்தாயாய்ப் பிறக்கச்
சுண்ணம் இடித்தேனம்மா! வாய்க்கரிசி போட்டேனம்மா!
சுற்றிநின்றோர் ஓலமிட, பறை முழங்க, சுடுகாடு வந்தேனம்மா!
சுட்டெரித்து, எலும்பு பொறுக்கி, சுடுசாம்பல் சேர்த்தேனம்மா!
கொட்டிக் கடலிற் கரைத்த நேரம் நெஞ்சு வலித்ததம்மா!
விட்டுப்பிரியும் காலம் உன்முகம் தெரிந்ததம்மா!

திவ்வியநாதன் செல்வத்துரை
காலம் – 26.07.14 பிப 1.30

## மெய் உலகினில் பல பொய்முகங்கள்

என்னிசைப்பாடல்களிற்
சிந்தனையை வளர்த்தேன் – அதிற்
சிந்தும் பொருட்தேனை
உன்தனுக்களித்தேன்

மெய்யுலகினில் — பல
பொய்முகங்கள் கண்டேன்
தலைக்கு வந்ததொன்று
தலைப்பாகையோடு போனது கண்டேன்

வேலிக்கு வைத்த முள்ளுக்
காலில் தைத்தது கண்டேன்
காத்து வளர்த்த கடா — தருணம்
பார்த்து நெஞ்சிற் பாய்ந்தது கண்டேன்

தடியில் தேனிருந்தது கண்டு
முடவன் கொம்பை இழந்தது கண்டேன்
மடியிற் கனமிருந்தது கண்டு
மாலைகள் கழுத்தில் வீழ்ந்தது கண்டேன்
மடிதன் கனத்தை இழந்தது கண்டு
மதிப்பிழந்த நாணயமானது கண்டேன்
நாயிறந்தது கண்டு
நாயுண்ணிகள் நீங்கியது கண்டேன்

திவ்வியநாதன் செல்வத்துரை
காலம்– 08.08.14, இரவு 12.00

31.08.14இன் வீரகேசரி வாரவெளியீட்டில் 'எழுந்தென்னைப் பாரம்மா' என்னும் கவிதை 'உன்காதில் விழவில்லையா!' என்ற தலைப்பிலும், 'மெய்உலகினில் பல பொய்முகங்கள்' என்னும் கவிதை 'பொய்முகங்கள்' என்ற தலைப்பிலும் வெளியாகின.

## இராணுவஆட்சி

ஏழுகிலோமீற்றர்கள் தொலைதாண்ட
ஏழுதடைகள் தாண்டிடினும்
ஏழுதடவைகள் சேலை உரிபடினும்
ஆளும் இராணுவம் முன் மாதர் இழிவுபடினும்
வீழும்! ஒருநாள் வீழும்!
நீளும் இராணுவஆட்சி ஒருநாள் வீழும்!

கேளும்! ஒடுக்குமுறையாளரே!

வாழும் நிலங்களிற் பற்றைக்காடுகள்
கூழுங் கஞ்சியுங் குடித்துக் குலாவியவர்கள் – இராணுவம்
ஆளும் இந்நிலங்களின் வழித்தோன்றல்கள்
நாளும்பொழுதும் தம்மண்ணில் நடைபிணங்கள்

→

வீழும்! ஒருநாள் வீழும்!
நீஞம் இராணுவஆட்சி ஒருநாள் வீழும்!

கேளும்! ஒடுக்குமுறையாளரே!

துப்பாக்கிமுனையிற் பிஞ்சுகளைக் கடத்திடினும்
தப்பேதும் செய்யா மனிதர்களைச் சிறைக்குட் கொன்று
குவித்திடினும்
நப்பாசைகொண்ட நயவஞ்சகப்பிறவிகளை
அப்பப்போ பணங்கொடுத்து வேண்டிடினும்
இப்பிறவியில் மனிதசுதந்திரம் வேண்டி எழுந்த கைகள்
ஓயும்வரை
வீழும்! ஒருநாள் வீழும்!
நீஞம் இராணுவஆட்சி ஒருநாள் வீழும்!

கேளும்! ஒடுக்குமுறையாளரே!
வாழும்! மக்களாட்சி ஒருநாள் இம்மண்ணில் வாழும்!

திவ்வியநாதன் செல்வத்துரை
காலம்–17.03.1998, பிப 2.30

## பேயாட்சிசெய்யும் சனநாயகவாதிகள்

தாய்ப்பாலைக் கக்கும்வரை வயிற்றில் மிதிப்பார்கள்
வாயைக்கட்டிக் குரல்வளையை நெரிப்பார்கள் – எழுதுகோல் ஏந்தும்
கையை முறிப்பார்கள் – ஈற்றில்
நாயைச்சுடுவதுபோற் சுடுவார்கள்
பேயாட்சிசெய்யும் சனநாயகவாதிகள்

திவ்வியநாதன் செல்வத்துரை
காலம்– 20.03.2001, காலை 10.00



## ஓ மண்டேலா எம் இதய தீபமே! (Oh! Mandela)

மண்ணிழந்து போகின்றீரோ மண்டேலா
விண்ணகம் போவதற்கோ

வண்ணத்தமிழ்க் கவிஞனும் கதைகேட்டுப்
பண்ணிறைந்த கவி வடித்திடக்
கண்ணிழந்த கலைஞன் தூரிகைக்
கண்கொண்டு உமதுரு வரைந்திட

மண்ணிழந்து போகின்றீரோ மண்டேலா
விண்ணகம் போவதற்கோ

கண்ணிய மரபில் வந்தவர் நீர்
பண்ணிய போர்கள் எத்தனை, எத்தனை
நுண்ணியர் நிறவெறி பண்ணிய இன்னல்கள்
எண்ணிலர் அன்னியரானார் உம்மண்ணில்

மண்ணிழந்து போகின்றீரோ மண்டேலா
விண்ணகம் போவதற்கோ

கண்களை விற்றுச் சித்திரம் வாங்கிப் பயனேதென
எண்ணக்கருவில் உரிமைகளற்ற இனம் பிணமென
எண்ணியபடியே நுண்ணிய அறிவுடன் சிறைவாசம்
குண்டர்களின் குண்டாந்தடி முன் குகைக்கல்லுடைத்தவரே!

மண்ணிழந்து போகின்றீரோ மண்டேலா
விண்ணகம் போவதற்கோ

உண்ண மறுத்தீர், பருக மறுத்தீர், நடக்க மறுத்தீர்
கண்மூடித்தனக் கட்டளையை ஏற்க மறுத்தீர்
கண்ணயரும் காலம் காலாலுதைத்த கயவர்களைக்
கற்சுவர்கட்குள்லிருந்து நடுங்க வைத்தீர்

மண்ணிழந்து போகின்றீரோ மண்டேலா
விண்ணகம் போவதற்கோ

எந்நிலை வரினும் முன்னிலை மறவேனென
எண்ணிய படியே வின்னியை அணைத்தவரே
தன்னலம் கருதாத் தென்னாபிரிக்க மன்னவரே!
பொன்விளையும் பூமிதனில் வன்செயலார்

வெஞ்சினம் கொண்டும்மை
வஞ்சிறையில் ஓரங்கட்டியபோதும்
நெஞ்சுரங்கொண்டவும் மக்கள்
பஞ்சைப்பற்றிய தீ போற் கிளர்ந்தெழக்கண்டு
அஞ்சினர் ஆட்சியாளர் பதறினர்
மிஞ்சிய நிலைமாறக் கெஞ்சினர்
கொஞ்சிக் குலாவ வந்தவர் மீது
இஞ்சியளவும் வஞ்சம் தீர்க்காது
அரசியல் அறந்தழைக்க, நிரந்தரப்பகை முடிக்க

ஆக்கபூர்வப் பேரம் பேசி அடிபணிய வைத்து
"ஆபிரிக்கனேர்" எனும் நிலை மாற்றி
தென்னாபிரிக்கர் நாம் எனும் கருத்தியலைத்
தென்புடன் எடுத்தியம்பி உம் மக்களுக்குத்

தேசத்தில், தேர்தலில் வாக்களிக்கு
முரிமை பெற, நிறவெறி முற்றுப்பெற
முழுமூச்சுடன் இருபத்தேழு வருட இரும்புச்சங்கிலியை
முற்றுமுழுதான அடிமைச் சங்கிலியை
உடைத்தெறிந்தவரே, ஐயா!

மண்ணிழந்து போகின்றீரோ மண்டேலா
விண்ணகம் போவதற்கோ

இரண்டாயிரத்துப் பத்தில் இலக்கம் ஆறின்
மேற்சட்டையணிந்து
இன்றைய உம் நாட்டின் இளஞ்சந்ததியினருக்கு
விளையாட்டின் மகிமையுணர்த்தி
விளையாட்டு மைதானத்துக்குட் புகுந்து, சிரந்தாழ்த்தி

அரவணைக்காதிருந்த கறுப்பு, வெள்ளை, கலப்புக்
கரங்களை இணைத்து வைத்து
தரமான, வளமான தென்னாபிரிக்கச் சமுதாயம்
தரணியில் உருவாகச் சூளுரைத்தவரே!

மண்ணிழந்து போகின்றீரோ மண்டேலா
விண்ணகம் போவதற்கோ

மண்டேலா எம் இதய தீபமே, மண்மீதவதரித்த நியாயமே!
பாரினில் மனிதவியலிற்கோர் புதிய அத்தியாயம்
படைத்தவரே!
பாரேந்தும் மைந்தரே! பன்னீர் கொண்டு பாதங்கள் கழுவி
பனித்துளி படிந்த வாடா மலர் உம் பாதங்களை
அலங்கரிக்க

மண்ணிழந்து போகின்றீரோ மண்டேலா
விண்ணகம் போவதற்கோ

15.12.2013இன் வீரகேசரி வாரவெளியீட்டில் இக்கவிதை வெளியாகியது.

திவ்வியநாதன் செல்வத்துரை
காலம்–10.12.2013, மாலை 7.00

# பாசிசம் அரசாளச் சனநாயகம் புதைகுழிக்கு!

பார்த்துப் பார்த்துப் பதறும் கண்கள் பல
'பகலிற் போனவர் வீடுதிரும்பவில்லையே!' எனும் மனைவியின் ஏக்கம்
'பாலூட்டி வளர்த்தவர்களைக் காணவில்லையே!' எனத் தாயின் கலக்கம்
'பாதிவழியில் என்ன ஆனாளோ!' எனக் காதலனின் நடுக்கம்

பாரினிற் பலநாடுகளிற் பாதாளவுலக அரசியலின் பயங்கரவாதத் தேசியவாதம்
பாரம்பரிய அரசியற் சட்டதிட்டப் பாதுகாப்பு, நிதி, நீதிச் சட்டங்கள் பலவும்
பாதுகாவலரினாற் கொள்ளிவைப்பு
பாலுக்கழுத பிஞ்சுப்பயிற்றை வயிற்றைப் பலமுழ ஈரத்துணியாற் பலசுற்று
பாரவேலைப் பாமரக்கரங்களிற் பரிகாசத்துடன் பயங்கர ஆயுதங்கள் திணிப்பு

பாடசாலை நோக்கிவிரையும் கால்களைப் பதமான வீரகாவியங்கள் கூறிப் போர்க்
களம் நோக்கிய இழுப்பு
பாசிசம் அரசாளச் சனனாயகம் புதைகுழிக்கு
பற்பல நிறங்களில் இராணுவச்சட்டங்கள், பலரகத்திறனோடிவை என்றும் நிரந்தரங்கள்
பக்கத்து வீட்டானுடன் காணித்தகராறு, நாட்டுப்பற்றாளன் இவனில்லை எனக்கூறிப்
பலரும் அறியாவண்ணம் புதைகுழிக்கு

பக்கத்து நாட்டுக்குட் பாசிச இராணுவம், பலகோணங்களிற் கொள்ளை போயின
பலகோடிப் பெறுமதிகள்.
பலாத்காரத் துகிலுரியப்பட்டனர் மெல்லிடையினர், பலமுறை தடுத்தனர் கணவர்கள்
பலத்தஅடி உச்சியில், பலரும் அறியாவண்ணம் புதைகுழிக்கு
பலமாகத்தீட்டிய இனச்சுத்திகரிப்பு, பல இளம் உயிர்கள் அபகரிப்பு
பலரும் அறியாவண்ணம் புதைகுழிக்கு
பலரும் எதிர்பாராவேளை வீடுகள் சுற்றிவளைப்பு, பாசிசத்துக்கெதிரானவனெனக் கைது
பலரும் அறியாவண்ணம் புதைகுழிக்கு

பத்திரிகையாளர் பலர் கைது பற்றிச்செய்தி, பயங்கரவாதத்தடைச்சட்டத்தை மீறியதெனக்கூறிப்
பலரும் அறியாவண்ணம் புதைகுழிக்கு
பலபெற்றோர்கள் பிள்ளைகளைத் தேடிப் பல மனிதநேய அமைப்புக்களை நாட, பாசிசம்
மனிதநேயத்தை அனுப்பியது புதைகுழிக்கு
பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றம் பாசிசக்கரங்களின் துப்பாக்கியைப் பிடுங்கும் போதும்
படுவேகமாக நிரம்பும் புதைகுழிகள்
பன்னெடுங்காலப் பாசிசத்தின்மேற் பாசக்கயிறு, மூடியகுழிகள் தோண்டப்பட வேண்டுமென்பதே
மூக்கணாங்கயிறு- பலநாட் கழித்தொருநாள்
பற்றைக்காடுகளை வெட்டிக் கழனிகளாக்கி நீர்ப்பாய்ச்சக் கிணறுகள் தோண்ட
பலத்த கூச்சலுடன் துள்ளி எழுவர் பாழாக்கப்பட்ட தம் வாழ்வுக்காய் நீதிகேட்ட
புதைகுழி மாந்தர்.

இக்கவிதை *16.09.2001*இல், வீரகேசரி வாரவெளியீட்டின் மூலம் வெளியாகியது.

திவ்வியநாதன் செல்வத்துரை, காலம்-*21-06-99*

# பகை மூண்ட மண்ணில்................

சலசலவெனப் பாயும் பேராறு பிறக்கும் வேளை
பொலுபொலுவெனக் கண்ணீர் சொரிந்து உச்சிமுகர்ந்தாள்
மண் தழைத்தால் மனிதனின் ஏற்றத்தாழ்வுகள் சீர்பெறுமென
எண்ணுங்காலை ஆனந்தக்களிநடனம் பூண்டாள் இயற்கையன்னை

பாண்டவர் களனிகளில் 'பூக்கூடைகள்' நாட்பார்த்து நின்றன
மூண்ட பகை மண்ணில் வாடிவதங்கின பயிர்கள்
தாண்டவமாடிய சூரியக் கொடுமையால்
தாகம் தீர்க்க வழியறியாது வறண்டன தொண்டைகள்
ஈனர்கள்-கௌரவர்கள் பேராற்றிலிருந்து துளி நீர் கொடுக்க மறுத்தனர்
கானமிசைக்கும் பேராறு கடலோடு கலந்து உப்பானாள்.

திவ்வியநாதன் செல்வத்துரை, காலம்- *15.04.1998*

## முத்தங்கொடுக்க முடியாதவன்

மாட்டப்பட்ட விலங்கு
கை–கால்களில்
உருட்டிவிடப்பட்ட மூலை
இருப்பிடமென
அடக்கப்பட்ட அனல்மார்பு
அமைதி காக்கும் எண்ணமென
வடிக்கப்பட்ட இரத்தக்கண்ணீர்
கூரியவாளுக்கு ஒக்குமென
பேச எழுப்பப்பட்ட நா
ஊமையென
ஊட்டப்பட்ட குடிநீருக்கு
உரிமையுள்ள தாயென
கொடுக்கப்பட்ட ஊற்றுக்களாற்
பச்சைப்பயிர்களுக்குப்
பசுஞ்செடிகொடிகளுக்குப்
பாரம்பரிய மரங்களுக்கு நீர்
பாய்ச்ச முடியாதவளென
அள்ளிச்செல்லப்பட்ட கரையோரமண்
ஆட்சியாளார்களால், இணக்கஅரசியல்
மன்னர்களால் விற்றுப்பணஞ்சேர்க்கப்பட
கொண்ட கோபம் அடக்கித்
தாள் பணிந்தவளென
காவுகொண்ட ஆழ்கடலலைகளைத்
தடுக்கமுடியாதவளென
விரிக்கப்பட்ட வெண்மணற்பரப்புக்களை
பெற்றெடுத்த நீலக்கரையோரங்களை
அழகு மலைகளை
மிதித்து முத்தங்கொடுக்க
முடியாதவனென.

திவ்வியநாதன் செல்வத்துரை,
காலம் –06.06.2014, காலை 10மணி

## வீங்கும் ஆட்சியாளர்களின் இன்பமும்– வருங்கரும்பண முதலீடும்

சிறுபொறியொன்று சீறும்
பெருநெருப்பொன்று மூளும்
அரும்பெரும் ஆவணங்கள்
தீக்கிரையாகும்
அங்கும் அவ்வினம் சாம்பலாகும்
வீங்கும் ஆட்சியாளர் இன்பம் பொங்கும்

சிறுபொறியொன்று சீறும்
பெருநெருப்பொன்று மூளும்
பெருங்கட்டிடந் தீப்பிடிக்கும்
வரும்புகை நாடிக் கூட்டங் கூடும்
அங்குமிங்கும் அல்லோலகல்லோலம்
எங்குங் கூக்குரலும், எத்தனிப்பும்,
உயிர்காக்கும் முயற்சியும்
தொங்குஞ் சிலவுடல், சிலவுடல் கருகும்
ஏங்கும் ஆட்சியாளர், முதலீட்டாளர்
தாகந்தீரும்

சிறுபொறியொன்று சீறும்
பெருநெருப்பொன்று மூளும்
பெருங்காடொன்றைத் தீ சுவைக்கும்
அங்கும் முதலீட்டாளர் கை ஓங்கும்
வருங்கரும்பணம் முதலீடாகும்.

திவ்வியநாதன் செல்வத்துரை,
காலம் –15.09.2014, காலை 10.35மணி

## தப்பமாட்டார்கள் தற்குறிகள்

என் கதையைத் தன் கதை என்பர்
என் கட்டுரையைத் தன் கட்டுரை
என்பர்
என் கவிதையைத் தன் கவிதை என்பர்
என்றென்றும் இவர் குருவிச்சைச்
சாதியர்

என் படைப்புகளைத் திருடி இவர்
என் மறைவுக்குப் பின் தன் பெயரில்
வெளியிடத் துடிப்பவர்
என்னுடன் பவனிவந்த நவீன
'புரூட்டஸ்' இவர்
என் கூட்டில் முட்டையிடுங்
குயிலானவர்

எப்போதும் வறுமை எப்போதும்
வெறுமை
எப்போதும் அதிகாரம் இவர் கையில்
ஏற்றமிகு ஊடகமும் இவர் கையில்
அற்பபதரிவர் அறிவாரோ? என்
எழுத்தின் வலிமையை

முழு முட்டாளிவர் புகழினது
ஆசையில்
முந்திக்கொண்டார் முதற்பதிப்பில்
முடக்குவாதம் பீடித்து மூலையில்
முடங்க போகிறார்!
ஏக்கவாய்வு பீடித்து ஏங்கப்போகிறார்!
எள்ளிநகையாடுகிறேன் இவர்தம்
ஈனச்செயல் கண்டு

என் இறப்பைக் காத்திருப்பவர் இன்னும்
யாராரோ!
என் படைப்புகளைச் சொந்தமாக்க
இப்புவியில் அலைபவர் எத்தனைபேர்?
தப்பமாட்டார்கள் தற்குறிகள்–என்
எழுதுகோல்
துப்பும்! காறித்துப்பும்! இவர்கள்
முகத்தில்
அப்போது பார்ப்பேன் இவர்கள்
முகத்தை.

திவ்வியநாதன் செல்வத்துரை,
காலம் –19.11.2007, காலை 03மணி

## சுண்டெலிகளின் கொண்டாட்டம் எனக்கிது திண்டாட்டம்

எங்கும், பாரீஸ் நகரெங்கும், நகருஞ்
சித்திரைச் சுண்டெலி
எங்கிருந்து வந்ததோ அதிர்ச்சியொலி
என் வீட்டினுள் ஓரெலி, ஈரெலி, மூவெலி
அங்குமிங்கும் ஓடியோடிப் பேரொலி

என் மானங்காக்க முழங்கியது சண்டை
தன் மானங்காக்கக் குழம்பியது
மண்டை
என் வீட்டுக்கருகிற் பல்பொருளங்காடி
அன்றிதற்குப் பரிகாரம் தேடிக்
கொண்டுவந்தேன் முப்பெரும் பொறிகள்
தெண்டி நிமிர்த்தி வைத்தேன்
பாற்கட்டிகள்
கண்டுகொள்ளவில்லைச் சுண்டெலிகள்
மீண்டும், மீண்டும் வைத்தேன்
தக்காளிகள்
தாண்டியோடுஞ் சுண்டெலிக்கூட்டம்
கொண்டுவா என்கிறது ஐந்து நட்சத்திர
உணவுத்திட்டம்
நகர்வாழ் எலிகளுக்கான பொருளாதாரத்
திட்டம்
நகங்கடித்து, மண்டை சொறிந்து
போட்டேன் ஒரு திட்டம்
என் வரும்படியிற் சிறுதொகைச்
சேமிப்புத்திட்டம்
என் வீட்டுக்குள் என்னை
அவமதித்த இக்கூட்டம்
தானாகப் பொறியில் மாட்டும்! என்னும்
பொதுச்சட்டம்
நானாக நசுக்கேன் ஒருநாள் தானாக
நசுங்கும்! இவ்வெலிக்கூட்டம்.

திவ்வியநாதன் செல்வத்துரை
காலம்–02.05.2014, மதியம்– 2 மணி

## அழகுநிறை மாதவியரும் அவனும்

அவள் நினைப்பில், அவள் மட்டும்
கண்ணகி
அடுத்த பெண்கள் மாதவிகள்
அவள் நினைப்பில், அவன் வசீகரக்
கோவலன்
அழகுநிறை மாதவியருக்கு, அவள்
பார்வையில் வலைவீசுபவன்

அவள் நினைப்பில், அவன் இராமனல்
லன், ஏகபத்தினிவிரதனுமல்லன்
அவன் இராவணன் அழகுச்சீதைகளைச்
சிறையெடுக்கும் நவீன அரக்கன்
அவள் நினைப்பில், அவன் அழகுப்
பெண்களுக்கு அகக்கதவுதிறக்குங்காமன்
அவளுக்கு மட்டும் அக்கதவு திறக்காக்
கஞ்சன்

அவன் நினைப்பில்,
மன்மதன் மலரம்புகள்மார்பினில்துளைக்க
மூன்றாம்கண் திறந்த சிவன்
மகளின் கதறல் கண்டு மனமிரங்கிய
தந்தை
அவன் நினைப்பில், பஞ்சபாண்டவர்குப்
பாய்விரித்த பாஞ்சாலியைத்தேடுபவன்
திருமணச்சந்தைச் சூதாட்டத்தில்
வாழ்வையிழந்த நவீனதருமன்
அவன் நினைப்பில், செஞ்சோற்றுக்கடன்
தீர்க்க ஊர்ப்பழி ஏற்ற மதிமயங்காக்
கர்ணன்
அவன் நினைப்பில் வனப்புமிகு சிவனின்
குளிர்ச்சிமிகு முகம் பார்த்த வளம்நிறை
நவரத்தினப்பெண்டிர் கருவுற, தான் தாய்
மையடையத் தன் கணவன் தடுப்பதை
எண்ணி கருவிழிகள் சிவக்கப் பொறா
மைகொண்டு சாபமிட்ட பார்வதி அவள்

அவளின் கட்டுக்கடங்காச்சினம்
அவளின் பொங்கியெழும் பொறாமை
அவளின் தன்னம்பிக்கையின்மை
அவளின் உளவியல் தாக்கமென
அகவியல் தாக்கத்தால் அவதியுறும்
அகத்தாள் குணமடைய முதலுதவி
வழங்க முயற்சிக்கும் முற்றும்துறந்த
முனிவனல்ல அவன்.

திவ்வியநாதன் செல்வத்துரை
காலம்–16.10.2014, மதியம்–2 மணி

# முருங்கைக்காயும் முத்துவேலரும்

« முறிச்சுத்தானே காச்சிறது பின்னெ என்ன
முழுசாயேகாச்சிறது பேப்…… ! » –என்றும்
முதியவர் நாவிற் தூசனச்சரஸ்வதி குடியிருப்பாள்
முருகுதமிழெனச் சதிராடிடும் « சு னாவும், பு னாவும் »

முதியவர் முத்துவேலர் வாய்திறந்தால், குழந்தை
முதல்-காளை வரை- குமரி
முதல் - சாந்திமுகூர்த்தங் கழித்தவர் வரை
முகங்கள் முக்காடு போடும்

முத்துவேலுக்கிழவர் வீட்டு முற்றத்து முருங்கை
முறுக்கேறி, மண்கிழித்து வேர்பரப்பிய மண்மீது
முற்றுப்புள்ளியிடாத 'புக்காரா'த் தாக்குதல் காலத்தே
முறைதவறிக் காய்ந்து சுருங்கும் வயிற்றை
நெளிவெடுக்கும் உணவாக
முருங்கையிலை வறைக்கும் முருங்கைக்காய்க்கறிக்கும்
முருங்கு, இலையும்-பூவும் முக்கத்தவறவில்லை

முதியவர் வீடு சிந்திய சிகப்புக்கண்ணீர் கண்டும்
முருங்கைப்பூ மனம், பொருள் தடையை எதிர்கொண்டும்
முருங்கின் கழுத்திற் பாசக்கயிறு வீழாதிருக்க
முருங்கை நிரப்பிய காய்கள் பிறந்தன

முத்துவேலர் முழுவதையும் பொருளாதாரமாக முடக்க
முன்னிரவிலே முழுவதையும் முற்றாகத்துடைத்தெடுத்து
முன்னோக்கினார் பொடிநடையாகச் 'சாவகச்சேரி'ச்
சந்தைநோக்கி

முன்னிரவு, கண்பார்வை குறைந்த முதியவர்
முன்னேவந்த மிதிவண்டி மீது மோதி
« முருகா என்னைக் காப்பாற்று» என அலறியபடி
முகங்குப்புற வீழ்ந்தார்

« மூதேவி, இந்த இருட்டுக்கெ எங்கெ திரியிறாய்» என
முழங்கிய மிதிவண்டிக்காரரின் அருச்சனையுடன்
முறிந்து சிதறிய காய்களைப் பொறுக்கியெடுத்து
முருங்கை மரத்து வேதாளமானார் முத்துவேலர்

முத்தாச்சிக் கிழவியின்
மூத்த மகள் தொப்புள் கொடியறுத்ததனால்
மூன்று நேரப்பத்தியமும் முருங்கைக்காய்ச் சம்பிரதாயம்

முன்னெப்போதும் இல்லாதவாறு
முருங்கைக்காய்க்கு, சந்தையிலே குதிரைப் பெறுமானம்-
ஏகப்பிரதிநிதி
முத்துவேலரின் முருங்கைக்காய் அரசியல்
முத்தாச்சிக் கிழவியின் மூச்சைத் திணறவைத்தது

முத்துவேலரை நெருங்கிய முத்தாச்சிக் கிழவியின் பேரமும்
'முறிஞ்ச முருக்கங்காய்' என்னும் விலை குறைப்புக்கான
முழுஉத்தியும்
'முகக்குப்புற' வீழ்ந்து புண்பட்ட முதியவர்
முகத்துப் புண்களில் அரிப்பை அதிகமாக்க

« முறிச்சுத்தானே காச்சிறது பின்னெ என்ன
முழுசாயேகாச்சிறது பேப்…… ! » –என முதியவர் இரைய
முத்தாச்சிக்கிழவி முகஞ்சிவந்தவளாய் மூடியவாய் மூடியபடியே
முறிந்த முருங்கைக்காயுடன் வீடு செல்ல

முறிந்தகாய் விற்றபணம் முழுவதையும்
முதியவர் வேட்டித்தலைப்பில் முடக்க
மூதாட்டி அவ்வையின் முதுகுரல் வெகு தொலைவில் « யாரோ
அனுபவிப்பார் பாவிகாள் அந்தப்பணம் » என்றது.

திவ்வியநாதன் செல்வத்துரை, காலம் 20.02.1994

*** 1982இல், நான் இலங்கையில் வசிக்கும் காலத்தில், சாவகச்சேரிச் சந்தையில் நடந்த சிறுசம்பவத்தின் கரு ஒன்றை மையமாகக் கொண்டும், இவ்வாண்டிலிருந்து, நான் பிரான்சில் வாழ்ந்து வரும் காலத்தில், 1994இல், சாவகச்சேரியில், போர்க்காலத்தின்போது நிகழ்ந்த, கேள்விப்பட்ட நிகழ்ச்சி ஒன்றின் சிறுகருவொன்றையும் மையமாகக் கொண்டு கற்பனை கலந்து இக்கவிதையை வடித்துள்ளேன்.

# கடல் கடந்த கணேசமூர்த்தியும், கணேசனும்

கடல் கடந்து 'பிரான்சுக்குக்'
களவாய் வந்து குடியேறிய
கணேசமூர்த்தியும் கணேசனும்
காலம் இணைத்த ஓரறைவாசிகளாக.

கணேசமூர்த்தி 'உயர்குடிப்பிறப்பாக'
கணேசன் 'தாழ்குடிப்பிறப்பாக' – எனத்
தமிழர் சட்டச் சாதிப்பிரிப்பாக.

கணேசன் மரியாதை அன்புடன்
கணேசமூர்த்தி அண்ணலை 'நீங்கள்' எனக்
கற்றறியா இலக்கணக் கூற்றுப்படி
முன்னிலை ஒருமையிலும்,
கணேசமூர்த்தி அண்ணல் சிற்றன்புடன்
கணேசுப் 'பெடியனை' 'நீர்' எனக்
கற்றறிந்த இலக்கண மரபுப்படி
முன்னிலை ஒருமையிலும்
காலத்தைக் கடத்த.

இடுக்கண் களையுமாம் நட்புக்கு
இருவரும் இலக்கணமாக.

இராச்சாப்பாட்டுக்கு முன்
இன்பமாம் மது அருந்த
இணைபிரியா நண்பர்கள் ஆசைகொண்டு
இட்டனர் பாதிப்பாதி மூலதனமாக.

இரவு நேரக்குளிருக்குள் இறங்கி
இங்கிருக்கும் 'அடையான்' கடையில் இருந்த
இங்கிலாந்துச் சரக்கான சமாதான நீதவானுடன் (J.B)
இருப்பிடம் நோக்கி மேலோங்கி.

நன்றே கடித்துச் சுவைக்க 'E.D' கோழிப்பொரியலும்
நன்மைபெற ஒரு 'கிளாஸ்' J.B யும்
நின்றே கொல்லும் வியாதிபோல் உள்ளே பாயப்பாய
சாந்தமான நண்பர்கள் சற்று நேரத்திற்
சாதிப்பெருமை பற்றிய கருவாக.

கணேசமூர்த்தி அண்ணல் தன் குடிப்பெருமைபற்றியும்
கணேசுப் 'பெடியன்' தன் குடிப்பெருமைபற்றியும்….
கணேசமூர்த்தி கணேசனை 'நீ' என ஒருமையிலும்
கணேசன் கணேசமூர்த்தியை 'நீ' ' என ஒருமையிலும்
மணங்கமழ் J.B வழி இலக்கணப் பரிமாற்றமாக.

உயர்குடி தாழ்குடியாகித் தாழ்குடி
உயர் தாழ்குடியாகித் தாள் பணிய
வாய்ச்சண்டை கைச்சண்டையாக.

வாய் தன் உடை பற்களை வெளித்தள்ள
"டேய்! கணேசமூர்த்தி பல்லெ உடைச்சுப் போட்டாயடா!"
"டேய்! நீயும் தானேயடா கணேசா!" என - ஒறு
வாய் நண்பர்களாக.

கணேசமூர்த்தி கணப்பொழுதிற் தொப்பென விழ
கணேசனும் அவர் வழியில் அவரருகே 'அரோகரா'.
இடைவெளி இறுக்கமாக.

"கொற கொற" சத்தம் முகட்டைப் பிளக்க
" கீச்சு கீச்சு" சத்தம் காலை ஆறு மணியைக் காட்ட
கணேசன் "கணேசமூர்த்தி எழும்பிக்கட்டிலிலெ படுங்கோ!" எனக்
கையில் தேநீர்க் கோப்பையுமாக.

கணேசனும் கணேசமூர்த்தியும்
பலத்த சிரிப்புடன்
கட்டியணைத்து நண்பர்களாக,
பரிதாபமாயின பற்கள்.

*** பிரான்சு-பிரான்சு நாடு, அடையான்-இங்கு வசிக்கும் அரேபிய மக்களை தமிழ்பேசும் மக்கள் மறைமுகமாக அழைக்கும் முறை, (J.B)-இங்கிலாந்தில் தயாரிக்கப்படும் விஸ்கி. இதனை இலங் கைத் தமிழர்களிற் சிலர் சமாதான நீதவான் எனக்கூறுவர். ஏனெனில், இலங்கையில் வழங்கப்படும் J.P என்னும் பட்டத்தைக் கருத்திற் கொண்டே., E.D-நவீன பல்பொருள் அங்காடி. அனேக மாக இங்கு விற்கப்படும் கோழிகள் மலிவானவை, கொழுப் புள்ளவை.

திவ்வியநாதன் செல்வத்துரை, காலம்-05.03.2002,
காலை-11.00

## கவிதையல்ல வரிகள்

அன்புக்குரியவளே!
அன்று எம் வாழ்வில் வீசிய
அத்தென்றல்
அத்துமீறிப் புயலானதேனோ?

நாட்கள் பல கடந்தும்
என் நினைவுத் தேனீக்கள்
உன்னை மொய்ப்பதேனோ?

நமக்குப் பாலமான
நம் கடதாசியும் பேனாவும்
நம்மைவிட்டுப் பிரிந்து
நாட்கள் பலவாகிவிட்டன

காகிதமலர்களை முகர்கிறேன்
காதற்பூக்களின் வாசனையில்
கடந்த காலங்களைக் காண்கிறேன்
கண்ட காட்சிகளுடன் கண்களை மூடுகிறேன்

என் ஒவ்வொரு இரவுகளும்
நான் முட்களில் நடப்பது போல்
என் உணர்வுகள்
என்னை ஆக்குகின்றன

கூட்டுக்குள் அகப்பட்ட
பறவையொன்று
கூட்டைவிட்டு வெளியே
பறக்க முயற்சிப்பது போல்
உன் நினைவுகளிலிருந்து
விடுபடத் துடிக்கிறேன்
என் இயலாமையை எண்ணி
வருந்துகிறேன்

திவ்வியநாதன் செல்வத்துரை, காலம்-20.08.1992

## மறுமணந் தேடிப் பறந்தேன்

விழிகளில் இருந்து
கிளம்பிய பார்வை
நிலைகுலைய வைத்தது.

நேற்று
நான் இரசித்த அந்த ரோஜா
இன்றும்
என்முன் இதழ்களை விரித்து நின்றது.

கற்பனையிற் கருவண்டாகிக்
கசங்காத மெல்லிதழ்கள் மீது – என்
காற்றுப்படாத வாறு
கால் வைத்தமர்ந்தேன்.

மணத்தை முகரும் நேரம்
மலரவள் கேட்டாள்
“மதுவை உண்டபின் - வேறு
மலர்களை நாடுவாயா” வென.

மதுவைப் பறிகொடுத்தால்
மலரவள் சருகாகுவாள் - வேறு
மலர்களை நாடாவிட்டால்
மதுவில்லா என் உயிர் வாழ்வதெப்படி?
மண்ணில், காய் - கனிகள் விளைவதெப்படி?
மயக்கிய மலரவளுக்கு விடையாகக் கூறி
மறுமணந் தேடிப் பறந்தேன்.

திவ்வியநாதன் செல்வத்துரை, காலம்-08.04.2015

## ஒட்டுண்ணிகள்

வாழ்க்கையின் அனுபவத்தைப்
பறைசாற்றும் அச்சிறு புல்லின் முதுமை.

அருகில்,

வாழத்துடிக்கும்
வானுயர வளர்ந்து
விருட்சமாகி நிழல் கொடுக்கத்துடிக்கும்
செழிப்பு மிகு அச்சிறு மரத்தின் இளமை.

அதனருகில்,

வாழலாம்! எவர் தயவிலும் வாழலாம்!
வாழலாம்! எப்படியும் வாழலாம்! என எண்ணும்
சமகாலக் கொடியின் நம்பிக்கை.

இவர்களிடையே,

நான் பெரியவன்
நீ சிறியவன்
நான் உயர்சாதி
நீ கீழ்ச்சாதி என்னும் வேற்றுமை.

மரம் வேகமாக வளர்கிறது
மரத்திற் படர்ந்த கொடியும் அதுபோல்
புல் மட்டும் பெருமூச்சுடன் மிதிபடுகிறது.

அன்றொரு நாள்,
புயல்வீசுகிறது.
நம்பிக்கையோடு வாழ்ந்த மரம்
வேரோடு சாய்ந்து வாழ்வை முடிக்கிறது.
ஒட்டுண்ணி போல் வாழ்ந்த கொடி
சில தண்டுகளை இழந்து
வேறு மரத்தை நாடுகிறது.
புயலுக்குத் தலைகுனிந்த புல்லோ
மீண்டும், மிதிபடுகிறது.

திவ்வியநாதன் செல்வத்துரை, காலம்-1990நடுப்பகுதி

## சமயம் சமயம் பார்த்துப் புகுந்தால்?

“சைவக்கொடி எண்டால்
இவ்வளவு கூலி”
“வேதக்கொடி எண்டால்
இவ்வளவு கூலி”
வேலி கட்டுங் கொடி என்றால்
எவ்வளவு கூலி?

தாலியொடு கொடிகட்டப் பறக்கும்
வேலி தாண்டாப் பத்தினியரின்
தாலியிலும் சமயம் புகுந்ததேனோ?

சமயம் தலை காட்டா இடமுண்டோ?
சமயம் பார்த்துப் புகுந்து
சனத்தைப் பிரிப்பதேனோ?

சமயத்தைப் “பழித்தானாம்” ஒரு கவிஞன்-எனச்
சமயத் தலைவன் நினைத்தானாம்
கவி(ஞன்) தலை(க்)கொய்ய
இட்டானாம் கட்டளை

அங்கே ஒரு நாட்டில்
காலத்தைப் பறை சாற்றிய
சரித்திரச் சான்றுக் கலைக் கட்டிடம்
சமய நெடி வீசியதால்
அரை நொடியிற் சிதறியதாம்
சாதுக்கள் கூட்டத்தால்

சமயம்
சமயம் பார்த்துப் புகுந்தால்
இன்னும்
எத்தனை பிளவுகள்?
எத்தனை இழப்புகள்?
எத்தனை காவுகள்?

திவ்வியநாதன் செல்வத்துரை, காலம்-20.03.1993

# சங்ககாலத்திலும் விலை மகள்

## சங்கப்பாடலும் இக்காலக் கவிதையும்

சங்ககாலம் எனப்படுவது கிட்டத்தட்ட கி.மு முதல் நூற்றாண்டு முதல், கி.பி மூன்றாம் நூற்றாண்டின் இறுதிவரையில் நீடித்த காலம். அக்காலத்தில் வாழ்ந்த பண்டைத்தமிழர்கள், வாழ்க்கையின் பொருள் உணர்ந்து, அப்பொருளை அகம் என்றும் புறம் என்றும் பிரித்து, அகத்தின் இயல்புகளைத் தனியாகவும் புறத்தின் இயல்புகளைத் தனியாகவும் விரித்துரைத்து, அக்காலத்தைப் பறைசாற்றும் பத்துப்பாட்டையும், எட்டுத்தொகையையும் பதினெட்டு நூற்களுக்குள் அடக்கினராம்.

சங்ககாலத்துத் தொகை எனப்படுவது பல்வேறு பாடல்களை ஒன்றாகச் சேர்த்துத் தொகுத்த நூலின் பெயராம். சங்கநூல்களான நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு என்பவை எட்டுத்தொகை நூல்களைச் சார்ந்தவையாம். எட்டுத்தொகை நூல்களுள் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு என்பவை முழுக்க முழுக்க அகப்பொருளைப் பாடும் நூல்களாம்.

அகப்பொருளை ஐந்திணை என்றும் ஐந்திணை ஒழுக்கம் என்றும் பெயர்கள் கொண்டு அழைக்கின்றனர் தமிழ் ஆய்ந்தோர். அகம் எனும் பெயர்பெற்ற ஐந்திணை ஒழுக்கத்தைக் கூறும் சங்கநூல்களுள் தனிச்சிறப்புடையது அகநானூறாம். அகநானூற்றுப் பாடல்களைப் பாடிய புலவர்கள் நூற்றிநாற்பத்தைந்து பேரில் கபிலர், பரணர், நக்கீரர், ஔவையார், சீத்தலைச்சாத்தனார் போன்ற புலவர்கள் மிகவும் புகழ்பெற்றவர்கள். இவர்கள் அனைவரும் பாடிய பாடல்களை, பாண்டியன் உக்கிரப்பெருவழுதியின் உதவியுடன் எமக்குத் தொகுத்துத் தந்தவர் உப்பூரிக்குடிகிழார் மகனார் உரித்திரசன்மர் என்பவராம். இவர் செய்யுள்களை வரிசைப்படுத்தியுள்ள முறை பலராலும் போற்றப்படுகிறது. 1,3,5,7,9,11 போன்ற ஒற்றைப்படை எண்ணுள்ள செய்யுள்கள் அனைத்தும் பாலைத்திணையைச் சேர்ந்தவை எனவும், 2,8,12,18 போன்ற எண்ணுள்ள செய்யுள்கள் குறிஞ்சித்திணையைச் சேர்ந்தவை எனவும், 4,14,24 போன்ற எண்ணுள்ளவை முல்லைத்திணையைச் சேர்ந்தவை எனவும், 6,16,26 போன்ற எண்ணுள்ளவை மருதத்திணையைச் சேர்ந்தவை எனவும், 10,20,30 போன்ற எண்ணுள்ளவை நெய்தல் திணையைச் சேர்ந்தவை எனவும் தரம் பிரிக்கப்பட்டுள்ளதாக அறிக்கை ஒன்று தெரிவிக்கின்றது.

பாலைத்திணை எனப்படுவது காடும் மலையும் சார்ந்த இடமும், குறிஞ்சித்திணை எனப்படுவது மலையும் மலை சார்ந்த இடமும், முல்லைத்திணை எனப்படுவது காடும் காடு சார்ந்த இடமும், மருதத்திணை எனப்படுவது வயலும் வயல் சார்ந்த இடமும், நெய்தல் திணை எனப்படுவது கடலும் கடல் சார்ந்த இடமும் ஆகும். மேற்குறிப்பிட்டவாறு ஒவ்வொரு திணைக்கும் ஒவ்வோர் உரிப்பொருள் இருப்பதுடன் 14 வகைக் கருப்பொருட்களும் உள்ளன. கடவுள், உயர்ந்தோர், தாழ்ந்தோர், பறவைகள், விலங்குகள், ஊர்கள், பறைகள், யாழ்கள், பண்கள், தொழில்கள் என்பவையே அக்கருப் பொருட்களாகும்.

உரிப்பொருள் அல்லாத கருப்பொருள் முதற்பொருள் என்னுந் தொல்காப்பிய விதிப்படி, முதற்பொருளானது நிலங்களையும், காலங்களையும் காட்டி நிற்கின்றது. இங்கு பாலை, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்பன நிலங்களாகும்.

வேனில், இளவேனில், முதுவேனில் (சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி) பின்பனி (மாசி, பங்குனி) நண்பகற்பொழுதுமாகிய ஐந்து காலங்களும் நடுவு நிலைத்திணையாகிய பாலைத்திணைக்குரிய காலங்களாகும். இத்திணைக்குரிய உரிப்பொருள் பிரிதல் எனப்படும். கூதிர் (ஐப்பசித்திங்கள், கார்த்திகைத் திங்கள்) சாமம் (இரவின் நடுக்கூறு) முன்பனிக்காலம் (மார்கழித்திங்கள், தைத்திங்கள்) மூன்றும் குறிஞ்சித்திணைக்குரிய காலங்களாகும். இத்திணைக்குரிய உரிப்பொருள் புணர்தல் எனப்படும். கார்காலம் (ஆவணித்திங்கள், புரட்டாதித்திங்கள்) மாலைப்பொழுது (இரவின் முதற்கூறு) இவ்விரண்டும் முல்லைத்திணைக்குரிய காலங்களாகும். இத்திணைக்குரிய உரிப்பொருள் இருத்தல் எனப்படும். எற்படுகாலம் (பகற்பொழுதின் பிற்கூறு) நெய்தல் திணைக்குரிய காலமாகும். இத்திணைக்குரிய உரிப்பொருள் இரங்கல் எனப்படும். வைகறை (இரவின்பிற்கூறு) விடியற்காலம் (பகற்பொழுதின் முதற்கூறு) இரண்டும் மருதத்திணைக்குரிய காலங்களாகும். இத்திணைக்குரிய உரிப்பொருள் ஊடல் எனப்படும்.

மருதத்திணையில், பரணரால் பாடப்பட்ட பாடலைக்கருப்பொருளாகக் கொண்டு, இக்காலக்கவிதை வடிக்கப் பட்டிருக்கிறது. இக்கருப்பொருள் - பரத்தை ஒருத்தியுடன் உறவுகொண்ட பின்னர், மீண்டும், தன் வீடு திரும்பும் கணவனை ஊடல் நிமித்தம் மனைவியானவள் அவனது செயலை வெறுப்பவளாக, தழுவ வந்தவனைத் தட்டிக்கழிப் பவளாக அமைகிறது.

***<u>சங்கப்பாடலும் பொருள் விளக்கமும்</u>***

பாடியவர் - பரணர்
திணை - மருதம்
சிறப்படைந்தோர் - ஐயை என்பவளின் தந்தையான உறையூர்த்தித்தனும், கழார்த் தலைவனான மத்தியும்

அரிபெய் சிலம்பின் ஆம்பலந் தொடலை
அரம்போழ் அவ்வளைப் பொலிந்த முன்கை
இழையணி பணைத்தோள் ஐயை. தந்தை
மழை வளம் தரூஉம் மாவண் தித்தன்.
பிண்ட நெல்லின் உறந்தை ஆங்கண்-

கழைநிலை பெறாஅக் காவிரி நீத்தம்
குழை மாண் ஒள்ளிழை நீ வெய்யோளொடு
வேழ வெண்புணை தழீஇப் பூழியர்
கயம் நாடு யானையின் முகனமர்ந் தாங்கு,
ஏந்தெழில் ஆகத்துப் பூந்தார் குழைய

நெருநல் ஆடினை புனலே! இன்று வந்து

"ஆக வனமுலை அரும்பிய சுணங்கின்,
மாசில் கற்பின் புதல்வன் தாய்" என
மாயப் பொய்ம் மொழி சாயினை பயிற்றி-எம்
முதுமை எள்ளல், அஃது அமைக்கும் தில்ல!

சுடர்ப்பூந் தாமரை நீர்முதிர் பழனத்து
அம்தூம் வள்ளை ஆய்கொடி மயக்கி
வாளை மேய்ந்த வள்ளெயிற்று நீர்நாய்
முள்ளரைப் பிரம்பின் மூதரிற் செறியும்.
பல்வேல் மத்தி கழாஅர் அன்ன-எம்

இளமை சென்று தவத்தொல் லஃதே
இனிமை எவன் செய்வது, பொய்மொழி எமக்கே?

⟶

***இப்பாடலின் பொருள் விளக்கம்***

பருக்கைக்கற்களால் ஆன சிலம்பினை உடையவள், அழகிய ஆம்பல்மலராலான மாலையினை அணிபவள், அரத்தாற்குடைந்து அழகாகச் செய்யப்பட்ட வளையல்களை அணிந்ததனால் அழகுபெற்று விளங்கும் கைகளை உடையவள், ஆபரணங்கள் அணிந்திருக்கும் தோள்களை உடையவள் ஐயை. அவளின் தந்தை, மழைவளத்தினைப்போல் வாரி வழங்குகின்ற பெருந்தன்மையுடைய தித்தன் என்னும் சோழமன்னன். நெற்குவியல்கள் நிறைந்திருக்கின்ற, அவனது நீதிதவறாத ஆட்சி நடக்கும் ஊரான உறையூரில், துடுப்புக்களும் நிலையாகத் தங்கிவிடாத அளவுக்குப் பெருகியோடும் காவிரியின் புதுநீர் வெள்ளத்தில் அழகி ஒருத்தியுடன் வேழக்கரும்பாலாகிய வெண்மையான ஓடத்தில், சேர, பாண்டிய மன்னர்களின் குளத்தினை விரும்பிச் செல்கின்ற யானையின் முகமலர்ச்சிபோல் முகத்திற் களிப்புடையவனாக, அழகுமிகுந்த உம்மார்பில் இருந்த பூமாலையும் கசங்கி வாடுமாறு அவளைக் கட்டித்தழுவியவனாக நேற்று நீ நீராடினீர்!

இன்றோ, இவ்விடம் வந்து என்னை " செழிப்பான முலைகளையும், கரிய காம்புகளையும் உடைய குற்றமற்ற கற்பினை உடையவளே! எம் புதல்வனை ஈன்றதாயே!" என்றெல்லாம் மயக்கும் பொய்வார்த்தைகளை மிகப்பணிவோடு என்னிடங்கூறுகின்றீர். எமது முதுமையினைச் சுட்டிப்பேசி ஏதும் நீர் இகழ வேண்டாம். அது எமக்கு மிகவும் பொருந்தும்.

தீச்சுடர்போல் விளங்கும் அழகிய தாமரைமலர்களை உடைய நீர்வளம் மிகுந்த தடாகத்தில், அழகிய உட்துளையினை உடைய வள்ளைக்கொடிகளை உழக்கிக்கொண்டு வாளைமீனைத் தின்னுங் கூரிய பற்களையுடைய நீர்நாய் மீனைத்தின்ற பின்னர் முட்கள் பொருந்திய தண்டினை உடைய பிரப்பஞ்செடியின் பழைய புதரிற் சென்று தங்கும். அவ்வளவு நீர்வளம் மிக்கது மத்தி என்பவனது வேல்வீரர் பெருக்கத்தினை உடைய "கழார்" என்னும் ஊர். அவ்வூரினைப் போன்று எம்முடைய இளமையும் எம்மைவிட்டுச் சென்று நாட்கள் பலவாயின. உமது பொய்வார்த்தைகள் எனக்கு இனி எப்படி இனிமை தரப்போகின்றன. எனவே, இங்கிருந்து விலகிச்சென்று அவளுடன் வாழ்க்கை நடத்துவீராக!

***சொற்பொருள்***

வளைப்பொலிந்த : வளையலால் அழகுற்ற
கழை : துடுப்பு
வேழம் : வேழக்கரும்பு
யானை எனவே பிடியும் அடங்கும் : அவனைப்போலவே அப்பரத்தையும் மகிழ்வுடன் நீராடினாள்.
மாயம் : வஞ்சனை
பயிற்றி : பல தடவை கூறி
புதல்வன் தாய் என்பதை : முதுமை காட்டி இகழ்வதாகக் கொள்க.
அரில் : பிணக்கம், மாறுபாடு, சிக்கல்

***இக்காலக் கவிதை***

எழுதியவர் - திவ்வியநாதன் செல்வத்துரை
திணை - மருதம்
சிறப்படைந்தவை - சித்திரை மாதம், முழுநிலவு, ஆம்பல்

சித்திரைமாத நிலவோ?
பத்தரை மாற்றுப் பொன்னோ?
குத்தும் வாட்கண்ணோ? - குமுதம்
முத்திரை பிடிக்கும் பெண்ணோ?

அத்தரைச் சொரியும் உடலோ?
அத்தினி முப்பாலுட் கடைப்பாலோ?
இத்தனை அமுதுங் கொண்டவளே! - பத்தினி
இல்லறமே! இலக்கியமே! மனைவி

அல்லி இதழே! முல்லைக்கொடியே!
நெல்லிக்கனியே! சொல்லின்தமிழே!
வஞ்சி வாசல் மிதிப்பேனோ!
மஞ்சங் களிப்பேனோ!

கட்டிளங் காளையே கணவா!
காட்டிலங்கனி தேடுங் கடுவன் நீரே!
கட்டியணைக்குங் கணிகையவள்!
கன்னத்தில் முத்தமிட்டீரோ!

மருதநிலமே! பசும்பயிரே!
தருக்கம் பேசிக் காலம் போகுதே!
நெருக்கங் கொண்டணைக்க
அருகில் வாராயோ!

உம் வீட்டுப் பானையில் பால் வழிய
ஊர்ப்பானையில் தயிர் தேடும்
உத்தமனே! உறவு எமக்கேது!
நித்தமுமக்குப் பித்தம் அவளே!

***பொருள் விளக்கம்***

இயற்கை அன்னை இனிய கோலத்தில் இயங்க, சோலைகள் யாவும் பூத்துக் குலுங்க, எங்கும் பசுமை. குயில்களின் கூவல்கள், கிளிகளின் பேச்சுக்கள், தேனீக்களின் ரீங்காரங்கள், வானம்பாடிகளின் பாடல்கள் ஒன்றாகக் கேட்கப் புதுப்பொலிவுடன் சித்திரை மாத இளவேனிற் காலம் ஆரம்பம். மரம், செடி, கொடிகள் யாவும் மகரந்தச்சேர்க்கையில் ஈடுபட, விலங்குகள், பறவைகள், மனிதர்கள் சிற்றின்ப உறவில் நாட்டம் கொள்ளும் காலம் சித்திரை மாதம்.

சந்திரனை நாயகனாகவும் நட்சத்திரங்களை நாயகிகளாகவும் கவிஞர்கள் வர்ணிக்க, சந்திரன் நட்சத்திரங்களைச் சுற்றி வரும் காலத்தில், ஒவ்வொரு நட்சத்திரங்களுடனும் தொடர்பு ஏற்பட்டு முழுத்தோற்றத்துடன் தோன்றி ஒளிரும் ஒவ்வொரு பௌர்ணமி நாட்களையும் பண்டிகைகளாகக் கொண்டாட வேண்டுமென இந்துமதப்பெரியவர்கள் கூறுகின்றனர்.

சூரியன், பூமி, சந்திரன் ஆகியவை ஒரு நேர்கோட்டிற் சந்திக்கும்போது சூரியனுக்கும் சந்திரனுக்கும் இடையிலிருக்கும் பூமி சூரியஒளியை சந்திரன்மீது விழவிடாது மறைக்கிறது. இப்பூமியைச் சந்திரன் தாண்டும்போது ஏற்படும் நிகழ்ச்சி சந்திரகிரணம் எனவும் இந்நிகழ்ச்சியின்போது நிலவு முழுவட்டமாகவும் முழுநிலவாகவும் தோற்றமளிக்கும் நாளைப் பூரணை எனவும் பௌர்ணமி எனவும் இந்நிலவைப் பூரணைநிலவு, பௌர்ணமிநிலவு எனவும் தமிழ்பேசும் மக்களில் ஒரு சாரார் அழைக்கின்றனர்.

தமிழ்நாட்டிலுள்ள மதுரையில் வாழும் தமிழ்பேசும் மக்கள் இச்சித்திரை மாதத்து 30 நாட்களைச் சித்திரைத் திருவிழாவெனச் சிறப்பாகக் கொண்டாடுகின்றனர். இந்நாட்டில், முன்னைய பாண்டியநாட்டு அரசியான மதுரையிற் கோயில் கொண்டிருக்கும் மீனாட்சி அம்மனுக்குப் பட்டாபிசேகமும், பின்பு, சிவபெருமானுடன் ஏற்பட்ட தொடர்பினால் திருக்கல்யாணமும் செய்துவைக்கப்படும் மீனாட்சி திருக்கல்யாணம் என அழைக்கப்படும் திருவிழாவும் இந்நாட்களிற் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

சித்திரைப்பௌர்ணமியில், தமிழ்நாட்டில் இந்துசமயத்தைக் கடைப்பிடிக்குந் தமிழ்பேசும் மக்கள் இச்சமயப்புராணக்

கதையின்படி பாவ-புண்ணியக் கணக்கெழுதும், 'திருவெண்ணாமலை'க் கோவிலில் வீற்றிருக்கும் சித்திரகுப்தரை வணங்க அங்கு சென்று நீராடி வணங்குகிறார்கள்.

இலங்கையில் வாழும் இந்துசமயத்தைக் கடைப்பிடிக்குந் தமிழ்பேசும் மக்கள் இப்பௌர்ணமி தினத்தில், சித்திரைப்பூரண விரதம் - சித்திரகுப்த விரதம் இருக்கிறார்கள். புத்தமதத்தைக் கடைப்பிடிக்குஞ் சிங்களமொழி பேசும் மக்களின் வாழ்வில் இப்பௌர்ணமி நாள் (வெசாக்தினமாக) மிக முக்கியநாளாகக் கொண்டாடப்படுகிறது. மேற்கூறப்பட்ட இம்முழுநிலவு, தமிழ்பேசும் மக்களில் ஒரு சாராரையும் சிங்களம்பேசும் மக்களில் ஒரு சாராரையும் இணைப்பதனால் மேலும் சிறப்படைகிறது.

பண்டிகைகள், பொதுவாகச் சமயங்களின் பெயராலும் - புராணங்களின் பெயராலும், வேறுசில காரணங்களாலும் ஏற்படுத்தப்பட்ட போதிலும், அவற்றுக்கான அடிப்படைக் காரணம் பொருளாதாரமே. செல்வம் ஒருசிலரிடையே முடங்கி விடாமல் பரவலாகச் சுற்றிவருவதற்காகப் பண்டிகைகள் உருவாக்கப்பட்டிருக்க வேண்டும். மக்களிடையே பண்பு வளர, ஒற்றுமை ஏற்பட இவை பாலமாக இருந்து வருகின்றன. இதன்காரணமாக, இப்பாடல் மூலம் சித்திரை மாதமும், முழுநிலவும் சிறப்படைகின்றன.

தாமரைமலர்கள் நிறைந்த தடாகத்தில் அங்கொன்றும் இங்கொன்றுமாகப் பூத்துநிற்கும் ஆம்பல்மலரானது, தனது அழகை வேறுபடுத்திக் காட்டி நிற்பதனாற் குமுதமும் சிறப்படைகிறது.
இதற்கான பொருள் விளக்கத்தையும் பரணருக்கும் எனக்குமான ஒப்புநோக்கலையும் வாசகர்களாகிய உங்களிடம் விட்டுவிடுகின்றேன்.

**சொற் பொருள்**
அத்தர் : வாசனைப்பொருள். அத்தினி : பெண்களில் ஒருவகையினர். காட்டிலங்கனி : வாழைப்பழம். குமுதம் : ஆம்பல், அல்லி மலர். மஞ்சம் : கட்டில்.

திவ்வியநாதன் செல்வத்துரை, காலம் - 24-11-1990

### முன்னாள் நாடாளமன்ற உறுப்பினர் (இலங்கை) பண்டிதர் கா.பொ.இரத்தினம் நினைவாக

நற்றமிழ் கற்ற நற்பண்டிதன் க.பொ.இரத்தினன்
சொற்சுவை பொருட்சுவை ஒருங்கமைந்து
முற்றத்து மல்லிகை போற்றமிழ் வையத்துள்ளேற்றம் பெறச்
சற்றேனுந் தன்னலங் கருதாத் தயாளன் - தமிழ்ப்
பற்றுக்கொண்டுலகத் தமிழாராய்ச்சி மாநாடு நடந்திட முன்மொழிந்தனன்
உற்ற நான்னாளிவனுறவு கிடைத்தும்
பிற்போக்கரசியலாளனிவனென்னும் நினைப்பில்
அற்பன் நானுதறித் தள்ளி விட்டேனிவனுறவைத்
தற்போது வருந்துதலிற் பயனேது.

14.05.1971இல், இலங்கைநாடாளுமன்றத்தில், 'சிறீலங்கா குடியரசு ஒரு மதச்சார்பற்ற அரசாதல் வேண்டும். ஆனால், அது பௌத்தமதம், இந்துமதம், கிறிஸ்தவமதம், இஸ்லாம்மதம் ஆகியவற்றைப்பாதுகாக்கவும் பேணிவளர்க்கவும் வேண்டும்.' எனத் திருத்தங்கோரிய திரு.கா.பொ.இரத்தினம் அவர்களுடன், 1993இல், ஜேர்மனியில் நடைபெற்ற உலகத் தமிழ்ப்பண்பாட்டு மாநாட்டில், கலந்துரையாட வாய்ப்பேற்பட்டது. இந்நாளில், 'உலகத்தமிழாராய்ச்சி மாநாடு' என்ற கருவை மறைந்த பன்மொழிப்புலவர் தனிநாயகம் அடிகளாருக்குத் தான் முன்மொழிந்ததாகவும், அடிகளார் உலக ரீதியில் தொடர்பு வைத்திருந்ததனால் அதைச்செயற்படுத்த அவரால் மட்டுந்தான் முடியுமெனத் தான் நினைத்ததாகவும் அந்த அடிப்படையில் இன்று உலகத்தமிழாராய்ச்சி மாநாடு நடைபெற்று வருவதாகவும், கன்னியாகுமரியில் நடைபெற்ற கலைஞர் கருணாநிதியின் வள்ளுவர் சிலைத்திறப்பு விழாவின்போது தான் புறக்கணிக்கப்பட்டதாகவும் தற்போது தன் போன்றவர்களை யாரும் கவனிப்பதில்லை எனவும் கூறினார். நான் இவர் கூறியதை அன்று நம்பவில்லை. பின்னாளில் வேறு சிலரும் இக்கதையை எனக்குக் கூறியிருந்தனர். 30.11.1997இல், உலகத்தமிழ்ச் செய்தித்தாளைப் படித்ததனால் ஏற்பட்ட விளைவே மேற்கூறப்பட்ட உணர்வுகள்.

திவ்வியநாதன் செல்வத்துரை, காலம் - 30-11-1997

## கவிதைக்களம்

### தடுத்திடுவார்கள் இனஅழிப்பை

குளிரூட்டப்பட்ட ஆண்குறித்துளிகள்
குழாய் மூலம் குழந்தைகளாக
குறிகள் மூலம் ஆணாகிப் பெண்ணாகிக்
குறிவாசல் வழி வந்து குதித்தனவே!

குதித்த குழந்தைகள் தாங்கிய வயிறு
கூழுக்காய் வாடகைத்தாயெனப்
பதிந்த கட்டைவிரல் பத்திரத்தில்
பிறந்த குழந்தை உடல் ஊனமெனவே!

பணங்கொடுத்த அன்னியத் தம்பதியர்
சினங்கொண்டு கூட்டைக் கலைக்க
உளம் நொந்த தாயவள் அது கண்டு
உலகங் கேட்க அழுதனள்! அழுதனள்!

திடங் கொண்ட சமூகநல அமைப்புகள்
மனங் கொண்ட வறுமைத் தாயவள் பாசங்கண்டு
விடங் கொண்ட அன்னியத்தம்பதியரை நீதிமுன் நிறுத்த
வளங் கொண்ட அரசுகள் குழாய்வழி இனம்பெருக
வரவேற்கின்றனவே!

போர் மேகமும் போர் மோகமுங் கொண்ட அந்நாட்டில்
ஓரினத்தின்மேற் பொழிந்தனர் குண்டுமழையை அரசினர்
ஆர்ப்பரித்து ஆங்காங்கே சிதறிஓடிய மக்கள்
அவ்வேளையிலும்
ஈர்ப்புக் கொண்டு இனப்பெருக்கத்தில் ஈடுபட்டனரே!

பிறந்த குழந்தைகள் பசியுடன் நோயிலும்
இறந்து போக மீதி எலும்புந் தோலுமாக
உறங்கு நிலைநீக்கி முழங்கி உரிமைகள் வேண்டி
மறங்கொண்ட மறவர் எழுச்சியுற்றனரே!

அறம் பிழைத்த அரசு கனரக ஆயுதங் கொண்டு
புறங்காட்டி அவ்வெழுச்சியை அடக்கப் பலர் இறக்கப்
பிறந்த மண்ணை அரசபடை முற்றுகையிட்டு
வலிந்த கரங்கொண்டு வற்புறுத்திக் கருவைக் கலைக்க
வைக்கிறதே!

இனப்பெருக்கம் அற்ற அம்மக்களின் மண்ணில் - தன்
இனமக்களின் குடியேற்றத்தைப் படையுதவியுடன்
பெருக்கிச்
சனநாயகத் தேர்தல் வழி ஆங்கே ஆட்சியைக்
கைப்பற்றி – தன்
இனமக்கட்கு மட்டும் தரமானவாழ்வை ஏற்படுத்துகிறதே!

திட்டமிட்டு மண்ணைத் திருடிக்
கட்டமைத்து அம்மண்ணின் மக்களைக் கொன்று
முற்றான இன அழிப்பு நடைபெறும் இந்நேரம்
பெற்றிடுவார்கள்! பெருக்கிடுவார்கள் குழந்தைகளை!
தடுத்திடுவார்கள் அங்கே இனஅழிப்பை!

திவ்வியநாதன் செல்வத்துரை, காலம் - 26-04-2015

## கோயில் கட்டும் தமிழன்

குந்தும் இடமெல்லாம்
கோயில் கட்ட இடம் தேடும்
தொன்மை மிகு தமிழா!

தோரணங்கள் உன் தொன்மையை அலங்கரிக்கத்
தோத்திரம் போல் உன்னை வசை பாடத்
தொடுமிடமெங்கும் உன் கைரேகை பதிவாகக்
காத்திரமான உன் சரித்திரம் மரணப்படுக்கையில்
விழுந்துவிட,

பத்திரம்போற் பாதுகாக்கப்
பயங்கரவாதிப் பட்டம் சூட்டப்பட்டுப்
பவனி வருகின்றாய் உலக வீதிகளிலே!
உன் விதி இதுவென்றால் . . . . . . .

திவ்வியநாதன் செல்வத்துரை, காலம்-20.04.1993

## எங்கும் பொங்கியது புதுப்பானை

காரிருள் நீக்கவரும் பொற்கதிர்கள் கண்டு
அங்கும் பொங்கியது புதுப்பானை
கருக்கொள்ளும் புது எண்ணங்கள் உருப்பெற
எங்கும் பொங்கியது புதுப்பானை

செங்கரும்பும்- மாவிலையும்- தோரணமும்
மன்றை அலங்கரிக்கச்
சங்கம் மூன்றின் நாயகியாம்
மிவள் பவனிவரப்
பொங்கியபாலின் தமிழோசை கீதமிசைக்கச்
சிங்கம் ஒன்று போர்க்கொடி தூக்கும் நேரம்
அங்கும் பொங்கியது புதுப்பானை

சங்கும் முழங்க முழவும் முழக்க
இங்கும் இருந்து ஒரு வெண்புறா
அங்கும் ஒரு சேதியுடன் செல்லும்
எங்கும் உள்ள தமிழர் ஒன்றாதல் கண்டு
வீணர்கள் கொக்கரிக்க
எங்கும் பொங்கியது புதுப்பானை-
அங்கும் பொங்கியது புதுப்பானை

திவ்வியநாதன் செல்வத்துரை, காலம்-19.01.2001

## ஓ கலைஞனே! நீ எங்கே?

இங்கு புழுக்கள்கூட நெளியவில்லை!
இங்கு இலைகள்கூட ஆடவில்லை!
இங்கு மனிதக்குரல்கள்கூட ஒலிக்கவில்லை!
இங்கு பூக்கள்கூடப் பூக்கவில்லை!

ஓ கலைஞனே! நீ எங்கே?

உன் கல்லறையின் காதுகளில்
என் கூப்பிடுகுரல் விழவில்லையா?- உன்
மஞ்சத்தை அலங்கரிக்க
மலர்களுக்கு எங்கு செல்வேன்?

ஓ கலைஞனே! நீ எங்கே?

என் ஆசை நிராசையாகி
உன்னை இழந்த தனிமையில்
உன்னிடமிருந்து என்னைப்பிரித்த மரணத்திடம்
உன் முகவரி கேட்டு உன் பெயரை உச்சரிக்கிறேன்

ஓ கலைஞனே! நீ எங்கே?

அன்றொருநாள் வீதியிலே
நாம் மூவர் நடந்து வருகையிலே
எம் கண்முன்னே தன்வரவைக் காட்டி
எவரோ ஒருவருக்காய் காத்துநின்றது மரணம்

அன்றைய பொழுதில் நீ சிந்திய வார்த்தை
என் இதையத்தை நனைக்கிறது
“என்றும் இதன் பிடியிலிருந்து தப்பவே முடியாது”
எனக்கூறி உண்மையை உறுதி செய்தாய்
இன்றும் அந்நினைவை அசைபோடுகிறேன்
உன்னிடமிருந்து என்னைப்பிரித்த மரணத்திடம்
உன் முகவரிகேட்டு உன் பெயரை உச்சரிக்கிறேன்

ஓ கலைஞனே! நீ எங்கே?

(இக்கவிதை, பிரான்சில் காலமானவரும், கலைஞரும், நண்பருமான கிரகரி தங்கராசா நினைவாக எழுதப்பட்டது.)

திவ்வியநாதன் செல்வத்துரை, காலம்-21.01.2001

## எங்கே நீ?

வெண்புறாவே! வெண்புறாவே!
வேட்டை வெறி கொண்ட வேடர்-மனித
வேட்டை வெறி கொண்ட வேடர்
நாட்டையாள வேட்கை கொண்டு-மனிதக்
காட்டிற் புதைத்த கண்ணியிற் சிக்கினாயோ?

யூகொஸ்லாவியா நாட்டிலே
துப்பாக்கி வேட்டுக்கு இலக்காகிக்
கண்ணிரண்டும் இழந்த
கபோதியானாயோ?

சோமாலியா நாட்டிலே
உண்ணவொரு
சோறின்றிச் சோகமாய்
உன் வாழ்வை முடித்தாயோ?

சிறீலங்கா நாட்டிலே
சிறகுகள் வெட்டப்பட்டுச்
சிறையிலடைபட்ட
ஆயுட்கைதியானாயோ?

தூது சென்ற சிறுபறவையே!
உலகில் அமைதி வேண்டித்
தூது சென்ற சிறுபறவையே!
நீ எங்கே?

திவ்வியநாதன் செல்வத்துரை, காலம்-20.09.1993

## அகப்பட்டுக் கொண்டீர்!

ஆயிரம் பொய்யுரைத்து
அகவாழ்வு தேடி
உயிரொன்று பின்றொடர
அவ்வுயிர்க்குரியாளோடு கூடி
உயிரும் மெய்யும் நீதான் உன்னுயிர்
பிரிந்தால் வாழேனெனக் கூறி
ஆயிரமாயிரம் உதவித் தொகையைக்
கருவிற்கொண்டு மழலைகளைப் பெற்றிடுவீர்
ஆயிரமான உதவித்தொகை ஐந்நூறாகி
அடியோடு நின்றுவிடக் குமுறிடுவீர்
நோயிலே சேய்கள் வருந்தும்போது
வகையறியாது விழித்திடுவீர்
காயிலே கனிந்துவிடப்
பிள்ளைகளை வளர்த்திடுவீர்
வாயிலே விரலை வைத்து
வியப்படையச் சோகக் கதை கூறிடுவீர்
நோயிலே கைதேர்ந்த மருத்துவன்
பரிகாரம் கூறிடினும் மறுத்திடுவீர்
ஆயிரம் பாம்புகட்கோர் தேரை போல்
அகப்பட்டுக்கொண்டீர்! நீர் அகப்பட்டுக்கொண்டீர்!

திவ்வியநாதன் செல்வத்துரை, காலம்-23.08.1991

# பாம்பின் கால் பாம்பறியும்

## பாரதி – பாரதிதாசன் பலகோணங்களில்!

உலகின் முதல் தோற்றம் ஒலி என மொழிவல்லுனர்கள் கூறுகிறார்கள். இன்று, பல மனிதக்குழுக்கள் ஒலிக்கும் ஒலிகளுக்குப் பல எழுத்துக் குறியீட்டு வடிவங்கள் (symbol of writing or letters) உருவாக்கப்பட்டுள்ளன. சில மனிதக்குழுக்களின் ஒலிகள் அழிந்து போயுள்ளன. சில வாழ்ந்து வருகின்றன. இவை (dialect, patois) உ-ம் - இலங்கையில் வாழும் சில காட்டு வேடுவர்கள் பேசுவது போன்றதும், இந்தியாவில் சில மலைவாழ், காட்டுவாழ் மக்கள் பேசுவது போன்றதும், நாடோடிகள் கதைப்பது போன்றதுமான எழுத்துக்குறியீட்டு வடிவமற்ற ஒலிவடிவங்களாகும்.

உருவாக்கப்பட்ட எழுத்துக்குறியீட்டு வடிவங்கள் சொற்களாக்கப்பட்டு (words) கருத்து நிலைகளை (meaning) அடைந்து இலக்கண - இலக்கிய விதிகட்குட்பட்டு மொழி தோற்றமெடுக்கிறது.

கண், வாய், செவிப்புலனற்றவர்களுக்கு, இன்று, மொழி உருவாக்கப்பட்டுள்ளது. இது சைகை, உதடு, விரல் என மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. சைகை என்பது ஒரு பொருளுக்கான விளக்கத்தை பத்து விரல்களின் மூலம் சுட்டிக்காட்டி, ஒரே வகையான உதட்டசைவுகள் கொண்ட சொற்களைப் பிரித்தறிய சைகை மேலும் உதவுகிறது. உதடு என்பது சொல்லின் பொருளை வாயின் உதடுகள் சேர்ந்தும், பிரிந்தும் விளக்கி நிற்பது. விரல் என்பது உயிரெழுத்து மெய்யெழுத்துக்களை விரல்கள் மூலம் தடவிப்பார்த்து தாமாகவே வாசித்து அறிந்து கொள்ளக்கூடிய குறியீடுகள் (symbol) கொண்டதென இம் மொழியிற் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் கூறுகிறார்கள்.

மொழி என்பது தொடர்பு ஊடகமென மனிதவர்க்கம் அனுபவரீதியாக அறிந்து கொண்ட செய்தி. ஒவ்வொரு மனிதக்குழுக்களிலும் ஒத்த கருத்துக்களை, உணர்ச்சிகளை குரல்கள் வெளிப்படுத்துகின்றன. இக்குரல்களின் தொனியின் வாயிலாகப் பகுத்துப் பெறக்கூடிய நிகழ்ச்சிகள் ஒவ்வொரு மொழிகளிலும் இருக்கும் வேளையில், பேசும் பேச்சுவழக்கு மொழிகளும் (Speaking Language), செப்பனிட்ட இலக்கிய மொழிகளும் (Literature Language) தினம் இயங்கி வருவதை அவதானிக்கலாம்.

எழுத்துக்குறியீட்டு வடிவங்களுடன் இலக்கண – இலக்கிய விதிகட்குட்பட்டு இலக்கண வழுவின்றிப் பேசப்பட்டுப் பல நூற்றாண்டுகளுக்கு மேல் வாழ்ந்து வந்த சில மொழிகள், இன்று, அண்ணளவாக நடைமுறையில் புழக்கத்தில் இல்லாதிருப்பதைக் காணலாம். உ-ம் - இலத்தீன் மொழி, சமஸ்கிருதம் (வடமொழி) போன்றவை.

'எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு'

எண்ணுதல் (சிந்தித்தல்), எழுதுதல் எனக் கூறப்படும் இருவகை நிலைகளும் மண்ணில் வாழும் மக்களுக்குக் கண்கள் போன்றவை என வள்ளுவர் கூறும் வேளையில், எழுத்தறிவுடன் வாழவேண்டிய அவசியம் அதனூடாக ஏற்படும் அறிவுவளர்ச்சி எழுதுவதின் முக்கியத்துவத்தை உணர்த்தி நிற்கிறது.

தனித்தனியாக மூளையில் ஏற்படும் காட்சிகளை, திட்டங்களை நடைமுறைப்படுத்தி பொருளாதாரத்தை விருத்தி செய்வதற்கு எழுத்து உதவுவதுடன் எழுத்தாளர்கள் வாசகர்கள் முன்னிலையில் வைக்கும் கருத்துக்களுக்குப் பெறுமதியைப் பெற்றுக் கொடுக்கிறது.

ஆரம்பக்கல்வியறிவு உலகமக்களுக்குத் தவிர்க்க முடியாத நிலையில் இருப்பதனால், எழுத்து, வாசிப்பு என்பன மேன்மேலும் வளர்ந்துவரும் இக்காலகட்டத்தில், நூலகங்களும், வெளியீட்டு நிறுவனங்களும் படைப்பாளிக்கு உரிமைச் சம்பளத்தொகையினை வழங்கி வருவதனால் இலக்கியமும் வணிகமயமாகி வருகின்றது.

இலக்கியமென்றால் என்ன? இதற்கு இவ்வளவு முக்கியத்துவம் ஏன்? என்ற கேள்வி எம்மிடம் எழுகின்றது. தனி மனிதனுக்கும் சமுதாயத்துக்கும் இடையில் உள்ள தொடர்புகள், சமுதாய நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், பண்பாட்டு மிச்சங்களைத் தெரிந்து கொள்வதற்கும், காட்டுமிராண்டி நிலையிலிருந்த மனிதன் பண்பட்ட நாகரீக மனிதனாகவும், மனித உரிமைகளைப் பாதுகாக்கும், மதிக்கும் மனிதனாக ஆக்குவதற்கும் இலக்கியம் உதவுகிறது.

கால ஓட்டத்திற் சமூகம் தான் கண்டுபிடித்த கொள்கைகள், வழிமுறைகள், செயல்முறைகளை இலக்கியத்தின் மூலம் பதிவுசெய்வதாலும், மனிதக்குழுக்களுக்கிடையே எழும் வாழ்க்கைச் சிக்கல்கள் இதன் மூலம் வெளிப்படுவதாலும், படைப்பாளியின் தனித்தன்மையைப்பொறுத்து சமூக நிகழ்வுகளைப் பல வடிவங்களில் இலக்கியம் பதிவு செய்வதால், இது சமூகஆவணம் என்னும் முக்கியத்துவத்தைப் பெறுகிறது.

ஒளிபடைத்த விழிகளோடு, உறுதிகொண்ட நெஞ்சோடு கருத்துக் கூறும், படைக்கப்படும் இலக்கியம் எளிமையான சொல்லாக்கங்களையும், செழிப்பான கட்டமைப்புக்களையும், விழிப்புறவைக்கும் கருத்துக்களையும் எப்போதும் உள்ளடக்கி, எளிமை, செழிப்பு, விளிப்பு இம்மூன்றும் ஒருங்கமைந்து உருவம், உள்ளடக்கம், உத்தி இம்மூன்றும் கைவரப்பெற்று இலக்கியம் படைக்கப்படவேண்டுமென அறிஞர்கள் கூறுகிறார்கள்.

உலகில் ஏற்பட்டுள்ள அரசியல், பொருளாதார மாற்றம் மாறுபட்ட சமூகஅமைப்புக்கு வழிவகுத்து சமூகமாற்றம் ஏற்பட, புதிய அனுபவங்கள் இலக்கியப்படைப்புக்கும், இலக்கிய ஆய்வுக்கும் புதிய வழிமுறைகளை உருவாக்கியுள்ளது.

இலக்கிய இன்பத்துக்காகவும், அழகியல் உணர்வை நாடும் கலை உள்ளத்தின் நிறைவுக்காகவும் இலக்கியத்தை நாடிய மனிதன், தொழிற்புரட்சிக்குப் பின் ஏற்பட்ட அறிவியல் வளர்ச்சியின் விளைவால் புதிய கோணங்களில், புதிய பார்வைகளில் இலக்கியத்தை அணுக முற்பட்டு, இலக்கியப் படைப்புக்குப் பின்னணியாக விளங்கும் உளவியற் சிக்கல்கள், வாழ்க்கைச் சிக்கல்கள் ஆகியவற்றை நுணுகியறியும் அறிவுத் தேடுதலுக்கு இலக்கியத்தை இலக்காக்கியுள்ளான்.

வாழ்க்கையை நேருக்கு நேர் சந்திப்பதற்கு பயந்து கண்களை மூடிக்கொண்டு கோட்பாடுகட்குள்ளும் சித்தாந்தங்கட்குள்ளும் ஒளிந்து கொள்ளும் மனிதர்களும், கற்பனைக் குதிரையில் ஏறிக் காலத்தைக் கடத்த முயலும் மனிதர்களும், மண்குதிரையிலேறி ஆற்றைக் கடக்க முயலும் மனிதர்களும், கடந்த காலமே சிறந்த பொற்காலமென எண்ணிக் காலச்சக்கரத்தை இடப்பக்கமாகச் சுழலவிட முயலும் மனிதர்களாகிய எம் போன்றோர் நிறைந்த இவ்வுலகில் இலக்கியப்படைப்பாளி வாழ்க்கையைப் பட்டறிபவன். தனது கால வாழ்க்கையைப்பற்றிய தன் அனுபவங்களை இலக்கியப்படைப்பு மூலம் தெளிவுபடுத்தி, சமுதாயத்தைப் பற்றிய சிந்தனையில் ஆழ்ந்து ஈடுபட்டுத் தான் வாழும் காலத்துக்கும் அக்கால நாட்டுக்கும் சாட்சியாக விளங்குபவன். இவ்வாறு அதியுச்ச அம்சங்களைக் கொண்டவன் படைப்பாளி.

கொடையாளிகளால் ஊக்குவிக்கப்பட்டுப் படைக்கப்பட்ட பழைய இலக்கியங்களின் உற்பத்திகள், வெளியீடுகள் மந்தகதியில் இருந்ததாகத் தகவல். அச்சுப்பொறியை உருவாக்கியதன் காரணமாக, வெளியீட்டாளர்களும், புத்தக விற்பனையாளர்களும் இலக்கிய உற்பத்தியிற் பங்கேற்க முன்வந்ததைத் தொடர்ந்து நடுத்தட்டு மக்கள் நுகர்வோராக மாறியதனால், இலக்கியப் படைப்புக்கள் நேரடியாக மக்களைத் தொடர்பு கொள்கின்றன, விமர்சனத்துக்குள்ளாகின்றன. விமர்சனத்தின் வாயிலாக படைப்பாளி தன் படைப்புக்களை வளம்படுத்திச் சீரிய முறையில் இலக்கியம் படைக்க முயல்கிறான்.

இலக்கியத்தின் பல பிரிவுகளில் (கதை, சிறுகதை, நெடுங்கதை, கட்டுரை, கவிதை, வரலாறு போன்றவை) ஒன்றான கவிதை எழுத்தின் துணையுடன் வடிக்கப்படுகிறது.

→

எதுகை – மோனைகளுடன், மெட்டு, ஓசை, தாளக்கட்டுக் களை அடக்கிய இதன் வரிகள், மூளையில் ஏற்படும் உருக்கமான உணர்ச்சிகளை, எண்ணக்கருத்துக்களை, காட்சிகளை மொழியின் மூலம் வெளிப்படுத்துகின்றன. மனிதனாற் படைக்கப்படும் மேன்மை பொருந்திய கலை களில் ஒரு கிளையான கவிதை உலகத்தின் சுருக்க மாகும்.

தொன்மைமிக்கதெனக் கருதப்படும் தமிழ்மொழியின் கவிதைப் பாரம்பரியம் கி.மு முதல் நூற்றாண்டுக்கு முன் சங்ககாலம் முதல் கி.பி 19ம் நூற்றாண்டு வரை பல வடிவங்களில், பல நிலைகளில் உருவாகி வாழ்ந்திருந் தாலும், இப் 19ம் நூற்றாண்டுக்குப் பின் நவீன கவிதைத் தளமாக மாற்றம் பெற்றுள்ளது.

கடும் யாப்பு இலக்கண விதிகட்குட்பட்டு புலவர்கட்கும், பண்டிதர்கட்கும் சொந்தமாகவிருந்த கவிதைத் தொழில், சாதாரண மக்களின் அவல வாழ்வைப்பாடி கவிதை வடிவத்தை மாற்றியமைத்து கவிதைத் தொழில் புரிந்த பாரதியின் கைகட்குட் புகுந்ததனாற் புத்துயிர் பெற்றது. 18ம் நூற்றாண்டில், சில கவிதைகள் பொதுமக்கள் சார்புடையதாக இருப்பினும், பல புலவர்கள் இக்கவிதைத் தொழிலின் மூலம் மக்கள் சார்புக் கவிதைகள் பாடியிருப் பினும், பாரதியாரே முன்னிலையில் நிற்பதாகத் தகவல்.

காவடிச்சிந்து, நொண்டிச்சிந்து, கும்மி, ஆனந்தக்களிப்பு, தெம்மாங்கு, இலாவணி, வளையற்சிந்து போன்றவை சிறப்பான இலக்கணங்களாலான சிந்துப்பாவினங்கள் எனச் செய்தி. கும்மி, நொண்டிச்சிந்து, காவடிச்சிந்து, ஆனந்தக் களிப்பு, தெம்மாங்கு, கிளிக்கண்ணி, தங்கச்சிந்து, பண்டா ரப்பாட்டு, பள்ளர்களியாட்டம் போன்ற சிந்துப்பாவினங்கள் மூலம் பாரதி பாடல்பாடி இலக்கியப் பெறுமதியைப் பெற்றுக் கொடுத்திருப்பதாகக் கூறுவர்.

பிறர் துன்பத்தைக் காணும்போது தனது துன்பம்போல் எண்ணி வருந்தும் இயல்புடைய ஒருவனும், பிறர் துன்பத்தைக் கருதாத ஒருவனும் யாப்பிலக்கணம் படித்துக் கவிதை செய்யப் பழகுவாராயின், முந்தியவன் உண்மையான கவிதை எழுதுவான். பிந்தியவன் பதங் களைப் பின்னுவான். இவனுடைய தொழிலில் கவிதை இராது எனக் கூறுகிறார் பாரதியார்.

Allons, enfants de la Patrie,
Le jour de gloire est arrivé !
Contre nous de la tyrannie (bis)
L’étendard sanglant est levé !
Entendez-vous dans les campagnes
Mugir ces féroces soldats ?
Ils viennent, jusque dans nos bras,
Egorger nos fils, nos compagnes.

Aux armes, citoyens ! formez vos bataillons !
Marchons, Marchons qu’un sang impur abreuve nos sillons !

அன்னை நன்னாட்டின் மக்காள் ஏகுவம்
மன்னு புகழ் நாளிதுவே!
நம்மேல் கொடுங்கோல் செலுத்துவோர்
நாட்டினார் உதிரக்கொடிதனை!
கேட்டீர்களா! கிராமங்களில்
வீறிடும் அரக்கப்படைகள்
அணுகி நம்மடிகளிலேயே
நம்மக்கள் பெண்டிரைக் கொல்லத் துணிவார்!
போர்க்கோலம் பூணுவீர்! வகுப்பீர் அணிகளை!
செல்வோம் செல்வோம்!
நாம் போம் பாதையில்
பாய்ச்சுவோம் அவரிரத்தத்தை!

பிரான்சு நாட்டின் தேசியகீதத்தின் முதற்பத்து அடிகளைப் பிரெஞ்சுமொழியில் இருந்து தமிழ்மொழிக்குத் தந்த பாரதி, 11 புரட்டாதி 1920ல், இவ்வுலகைவிட்டுப் பிரிந்தாலும் இவருடைய நினைவுகள் என்றும் எம்மை விட்டு நீங்காத நினைவுகளாகப் பசுமரத்து ஆணிபோற் பதிந்திருக்கின்றன.

பாரதியார், ஆங்கிலேய ஆதிக்கத்தின் கீழிருந்த இந்தியா வில் சுப்பிரமணியம் என்னும் இயற்பெயருடன் 11 மார்கழி 1882ல், எட்டையபுரத்தில் பிறந்தார். எட்டையபுரத்து அரண்மனையிற் கூடும் தமிழ்ப் புலவர்கள் தொடர்பினால் தமிழார்வம் ஏற்பட்டு, தனது 11வது வயதில் பல கவிதை களை இயற்றிப் புலவர்கள் முன் பாடியதனால் இவர்கள் இவருக்குப் பாரதி என்னும் பட்டத்தை வழங்கிப் பெருமைப்படுத்தினார்கள். காஞ்சி இந்துப்பல்கலைக்கழ கத்தில் சமஸ்கிருதம், இந்தி ஆகிய மொழிகளைக் கற்றார். ஆங்கிலத்தை நன்கு கற்றதோடு பிரெஞ்சுமொழி யையும் அறிந்திருந்தார். புலமை வளர்ந்தது. இலக்கியத் தில் ஈடுபாடு ஏற்பட்டது. பிழைக்கும் வழிதேடித் தமிழாசிரி யராகவும், பத்திரிகை ஆசிரியராகவும் கடமையாற்றிவரும் காலத்தில் இந்தியநாட்டின் விடுதலை உணர்வுக்கு ஆட் கொள்ளப்பட்டு காங்கிரஸ், சூரத் காங்கிரஸ், சுதேசி இயக்கம், ஒத்துழையாமை இயக்கம் ஆகியவற்றுக்கு ஆதரவு வழங்கினார். விடுதலை உணர்வுப்பாடல்களையும் கட்டுரைகளையும் எழுதி வந்த காரணத்தால் ஆங்கிலேய அரசு இவரைக்கைது செய்ய ஆணை பிறப்பித்தது. இதை அறிந்த இவர் 1908ம் ஆண்டு பிரெஞ்சு ஆதிக்கத் தின் கீழ் இருந்த பாண்டிச்சேரியில் அடைக்கலம் புகுந்தார். இங்குதான் பாரதியாருடன் பாரதிதாசனுக்குப் பழகும் வாய்ப்பு ஏற்பட்டது.

பாரதிதாசன் பிரெஞ்சு ஆதிக்கத்தின் கீழிருந்த இந்தியா வில் சுப்புரத்தினம் என்னும் இயற்பெயருடன் 1891ம் ஆண்டு பிறந்து, இயற்கையில் ஏற்பட்ட தமிழார்வம் காரண மாகப் புதுவைத்திருப்புளிசாமிஅய்யா, பெரியசாமிப்பிள்ளை ஆகியோரிடம் தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்று 17வது வயதில் புலவர் தேர்வில் நாற்பது புலவர்கள் மத்தியில் முதற்புலவராகத் தேர்வு பெற்று, 18வது வயதில் காரைக்காலில் உள்ள நிரவி என்னுமிடத்தில் ஆசிரிய ராகக் கடமையாற்றி வந்த இவர், பிரெஞ்சு மொழியையும் நன்கு கற்றறிந்திருந்தார். பாரதியாரின் மீது ஏற்பட்ட பற்றுக் காரணமாகத் தனது பெயரை பாரதிதாசனென மாற்றிக் கொண்டார். 1908இல், பாரதியின் தொடர்பின் காரணமாக, இந்தியாவின் விடுதலைக்கு மூச்சாக இயங்கிய திலகர், மாடாசாமி, அரவிந்தர் போன்ற விடுதலைப்போராட்டவீரர்களுக்கு உதவியதனால் பலமுறை சிறைவாசத்தையும் அனுபவித்தார்.

1922இல், தேசிய இயக்கத்திற் பணியாற்றிய காந்திமகான், ஒத்துழையாமை இயக்கத்தைக் கைவிட்டுக் கதர் இயக் கத்தை ஆரம்பித்த காலத்தில், பாண்டிச்சேரியில் (புதுவை மாநிலம்) கதர் ஆடைகளை வீதிவீதியாகக் கொண்டு சென்று விற்று, அந்நிய நாட்டுப்பொருட்கள் பயன்பாட்டு மறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு ஆங்கிலேய ஆதிக்கத் தை எதிர்த்தார். 1928இல், ஈ.வே.ரா பெரியார் ஆரம்பித்த சுயமரியாதை இயக்கத்திற் (திராவிடர் கழகம் - கடவுள் மறுப்பு இயக்கம்) சேர்ந்தார். 1955இல், புதுவைமாநில விடுதலைக்குப் பின், முதன்முதலாக நடந்த 39 உறுப்பி னர்களைக் கொண்ட சட்டமன்றத் தேர்தலில் மக்கள் முன்னணி என்னும் முற்போக்குஅணி மூலம் துணை எதிர்க்கட்சித்தலைவராகச் செயற்பட்டார்.

ஒரு கவிஞனையும் அவனுடைய கவிதை உணர்வையும் கவிதைத்திறனையும் எடை போடும்போது, இவனது மூளை உள்வாங்கி உணர்ந்த சம்பவங்கள், அதனால் ஏற்படும் முரண்பாடுகள் எவை? இக்கவிஞன், தனது கவிதைகள் மூலம் ஆழமாகப் பதித்த கருத்துக்கள் எவை? கவிதை களைப் படிப்போர், கேட்போர் மனதில் ஏற்படும் மாறுதல் கள் எவை? என்ற கணிப்புக்களின் மூலம் மேற்கூறிய வற்றைச் சரியானமுறையில் எடைபோடமுடியும். இந்நிலை யில் வைத்து கவிஞர்கள் பாரதியையும், பாரதிதாசனையும், இவர்களது கவிதைகளையும் பார்க்கலாம்.

உதாரணமாக –
பாரதியார் இயற்கையைப்பற்றிப் பாடும்போது

தங்கம் உருக்கித் தழல் குறைத்துத் தேனாக்கி
எங்கும் பரப்பியதோர் இங்கிதம்
புல்லை நகையுறுத்திப் பூவை வியப்பாக்கி
மண்ணைத் தெளிவாக்கி நீரில் மலர்ச்சி தந்து
விண்ணை வெளியாக்கி விந்தை செய்யும் …
எனக்கூறிச் சூரியனின் மூலம் காலைக்காட்சியை உருவகப் படுத்துகிறார்.

⟶

மேலும்,
'ஞாயிறே நின்னைப் பரவுகிறோம்
மழையும் நின்மகள், மண்ணும் நின்மகள்
காற்றும் கடலும் கனலும் நின்மக்கள்
இடியும் மின்னலும் நினது வேடிக்கை எனச்சூரியனைப் பாடி இலகு நடைக்கவிதை மூலம் மரபு வழிவந்த கவிதை முறையை மாற்றி, தமிழ்க்கவிதைக்குப் புத்துயிர் அளிப்பதைக் காணலாம்.

காதல் இல்லாமல் கவிதை இல்லை என்பதைக் கவிபாரதி, தான் காதல் கொள்ளும் காட்சியைப் பின்வரும் பாடல்கள் மூலம் காட்டுகிறார்.
காதலினால் மானுடர்க்குக் கலவி உண்டாம், கலவியிலே மானுடர்க்குக் கவலை தீரும், காதலினால் மானுடர்க்குக் கவிதை உண்டாம், கானமுண்டாம், சிற்பமுதற் கலைகளுண்டாம், ஆதலினால், காதல் செய்வீர் உலகத்தீரே.

மங்கியதோர் நிலவினிலே கனவில் இது கண்டேன்
வயது பதினாறு இருக்கும் இளவயது மங்கை
பொங்கிவரும் பெருநிலவு போன்ற ஒளிமுகம்
புன்னகையின் புதுநிலவும் போற்றவருந் தோற்றம்
துங்கமணி மின்போலும் வடிவத்தாள் வந்து
தூங்காதே எழுந்தென்னைப் பாரென்று சொன்னாள்
அங்கதனிற் கண்விழித்தேன் அடடாவோ! அடடா!
அழகென்னுந் தெய்வந்தான் அதுவென்றே அறிந்தேன்.

(மணி : அழகு) (மின் : ஒளி) (துங்கம் : உயர்வு, தூய்மை, பெருமை)

மேலும்,
வீசு கமழ் நீ யெனக்கு விரியுமலர் நானுனக்கு,
பேசுபொருள் நீ யெனக்குப் பேணுமொழி நானுனக்கு,
நேசமுள்ள வான்சுடரே! நின்னழகை யேதுரைப்பேன்?
ஆசைமதுவே, கனியே, அள்ளுசுவையே கண்ணம்மா!

மேலும்,

பெண்ணே உனதழகைக்கண்டு மனம்
பித்தங்கொள்ளுதென்று நகைத்தான் - அடி
கண்ணே எனதிரு கண்மணியே – உன்னைக்
கட்டித்தழுவ மனம் கொண்டேன்....
எனக்காட்டுகிறார். (பறவைகளின் பாட்டையும், மலர்களின் சுகந்தத்தையும், குழந்தையின் சிரிப்பையும், ஞாயிறின் ஒளியையும், காற்றின் உயிர்ப்பையும், விண்மீன்களின் கதிர்களையும் காதலர் தூதுவிடுகிறார்கள். ஏன் கூடாது? தெய்வத்தின் படைப்பு முழுவதும் காதலுக்குத் தொண்டு செய்யும் பொருட்டே அமைந்திருக்கிறது. உலகம் முழுவதையும் தூது போகச்செய்கிற திறமை காதலர்க்கு உண்டு. உயிரே! நீ கல்லாய்ப் பிறந்தால் காந்தக் கல்லாய்ப் பிற. செடியானால் தொட்டால் வாடும் செடியாகிவிடு. மனிதனானால் காதல் செய். காதல் இல்லையானால் ஞாயிறு என்றதோர் தீப்பந்தம் அவிந்து போய்விடும். இவை பாரதியின் பொன் மொழிகள்.)

இந்தியச் சமூகத்திலுள்ள குறைபாட்டிலொன்று சாதிப் பாகுபாடு. இதைப்பற்றிப் பாரதியார் பாடும்போது,

வேதமறிந்தவன் பார்ப்பான் - பல
வித்தை தெரிந்தவன் பார்ப்பான்
நீதி நிலை தவறாமல் - தண்ட
நேமங்கள் செய்பவன் நாயக்கன்.
பண்டங்கள் விற்பவன் செட்டி – பிறர்
பட்டினி தீர்ப்பவன் செட்டி
தொண்டரென்றோர் வகுப்பில்லை

(நேமம் : விதிமுறை, நாயக்கன் : சேனைத்தலைவன்)
பார்ப்பனர்களையும், செட்டிமார்களையும், நாயக்கர்களையும் உயர்வாகக் கூறிய பாரதியார் இவர்களுக்குத் தொண்டு செய்ய என்றோர் வகுப்பினர் இல்லை என்று கூறி இந்திய சமுதாயத்தை நால்வகை வகுப்புப்பிரிவுகளூடாகப் பார்வையைச் செலுத்திவிட்டு,

நாலு வகுப்பும் இங்கொன்றே - இந்த
நான்கினில் ஒன்று குறைந்தால்
வேலை தவறிச் சிதைந்தே – செத்து
வீழ்ந்திடும் மானிடச்சாதி.
சாதிப்பிரிவுகள் சொல்லி – அதில்
தாழ்வொன்றும் மேலொன்றும் கொள்வார்
நீதிப்பிரிவுகள் செய்வார் - அங்கு
நித்தமும் சண்டைகள் செய்வார்
சாதிக்கொடுமைகள் வேண்டாம் - அன்பு
தன்னிற் செழித்திடும் வையம்.

மேலும்,
சாதிகள் இல்லையடி பாப்பா, தாழ்ச்சி உயர்சிகள்
சொல்லல் பாவம் …
எனப்பாடி சாதிப்பாகுபாட்டை எதிர்க்கிறார்.
('தாழ்த்தப்பட்ட' வகுப்பைச் சேர்ந்த புதுவை கனகலிங்கம் என்னும் இளைஞன் பாரதியாரிடம் பற்றும் மரியாதையும் கொண்டிருந்தான். இவனைப் பிராமணனாக்கப் போவதாகப் பாரதியார் தனது நண்பர்களிடம் கூறி, அவர்கள் அனைவரையும் தனது வீட்டுக்கு வரும்படி அழைப்பு விடுத்துவிட்டு, கனகலிங்கத்தை அழைத்து 'உனக்கு நாளை உபநயனஞ் செய்விக்கப் போகிறேன். அதனால் நீ நாளைக் காலையில் குளித்துவிட்டுச் சுத்தமான உடைகளை அணிந்துகொண்டு எனது வீட்டுக்கு வந்துவிடு' எனக் கூறினார். அவனும் வீட்டுக்கு வந்துவிட, பாரதியார் தன் வீட்டுக்கூடத்தில் அமர்ந்து ஹோமம் வளர்த்தார். கனகலிங்கம் பாரதி முன் அமர்ந்தான். பாரதியாரும், வ.வே.சு ஐயரும் ஹோம குண்டலத்தில் தீ வளர்த்தனர். கனகலிங்கத்துக்கு முறைப்படி உபநயனஞ் செய்து, பிரம்மோபதேசமும் செய்து, 'இன்று முதல் நீ பிராமணன், யாரைக்கண்டும் அஞ்ச வேண்டாம், யார் உனக்கு பூணூல் போட்டார்கள் என்றால் என் பெயரைச் சொல். யார் என்ன சொன்னாலும், என்ன நேர்ந்தாலும் பூணூலை மட்டும் கழற்றி விடாதே' எனக்கூறி அனைவருக்கும் வெற்றிலை, பாக்கு, சந்தனம் கொடுத்து உபநயனத்தை நிறைவேற்றி வைத்த பாரதியார் சாதிப்புரட்சியை மேற்கூறிய நிகழ்வின் மூலம் நிறைவேற்றி வைத்தார்.)

சமத்துவம் பற்றிப் பாரதியார் பாடும்போது,

நிகரென்று கொட்டு முரசே - இந்த
நீணிலம் வாழ்பவரெல்லாம்
ஒன்றென்று கொட்டு முரசே! – அன்பில்
ஓங்கென்று கொட்டு முரசே
நன்றென்று கொட்டு முரசே - இந்த
நானில மாந்தருக்கெல்லாம்.
அன்பென்று கொட்டு முரசே – மக்கள்
அத்தனைபேரும் நிகராம்
இன்பங்கள் யாவும் பெருகும்
இங்கு யாவரும் ஒன்றென்று கொண்டால்

என யாவற்றையும் சமமாகப் பார்க்கின்றார். (ஒவ்வொருவருக்கும் செல்வத்தை நியாயமாகப் பங்கிட்டுக் கொடுப்பதனால் சர்வசுகம் உண்டாகிறது. சமத்துவக் கொள்கையில் இரண்டு செய்திகளைப்பற்றிய விசாரணை உண்டாகிறது. முதலாவது, செல்வத்தை உண்டாக்குதல். இரண்டாவது, அதைப் பங்கிட்டுக் கொடுத்தல். ஜனவலிமை, சர்வசுகம் என்ற இரண்டும் சேர்ந்தால் ஜனசெம்மை ஏற்படுகிறது. மனிதன் செல்வனாவான். குடிகள் விடுதலை பெற்றிருப்பர். நாடு உயர்வு பெற்றிருக்கும். உலகத்து மனிதர்கள் எல்லாம் ஒரே ஜாதி. சகல மனிதரும் சகோதரர். மனிதவர்க்கம் ஓர் உயிர். பொருளாளிகள் இடைவிடாத உழைப்பையும், அன்பையும், சமத்துவ நினைப்பையும் கைக்கொண்டால் உலகத்தில் அநியாயமாக உத்பாதங்கள் நேரிட்டு உலகம் அழியாமல் காப்பாற்ற முடியும். இவை பாரதியின் பொன்வாக்குகள்)

பாரதியார் பார்வையில் பெண்கள்,

பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் - புவி
பேணி வளர்த்திடும் ஈசன்
மண்ணுக்குள்ளே சில மூடர் - நல்ல
மாதர் அறிவைக் கெடுத்தார்
கண்களிரண்டினில் ஒன்றைக் குத்திக்
காட்சி கெடுத்திடலாமோ?

பெண்கள் அறிவை வளர்த்தால் - வையம்
பேதமை அற்றிடுங் காணீர்
உலகில் வாழும் சில மூடர்கள் பெண்களின் கல்வியறிவைக் கெடுத்தனர் எனவும், பெண்கள் கல்வியறிவு பெற வேண்டும் எனவும், இவ்வறிவு பெற்றால் உலகம் சிறக்குமெனவும் பாடுகிறார்.

மேலும்,

திறமையால் இங்கு மேனிலை சேர்வோம்
தீய பண்டை இகழ்ச்சிகள் தேய்ப்போம்
குறைவிலாது முழுநிகர் நம்மைக்
கொள்வர் ஆண்கள் எனில் அவரோடும்
சிறுமை தீரநந் தாய்த் திருநாட்டைத்
திரும்ப வெல்வதில் சேர்ந்திங்குழைப்போம்
அறவிழுந்தது பண்டை வழக்கம்
ஆணுக்குப் பெண் விலங்கென்னு ம.ஃ.தே

மேலும்,

அறிவு கொண்ட மனித உயிர்களை
அடிமையாக்க முயல்பவர் பித்தராம்
நெறிகள் யாவினும் மேம்பட்டு மானிடர்
நேர்மைகொண்டு உயர் தேவர்களாதற்கே
சிறிய தொண்டுகள் தீர்த்தடிமைச்சுருள்
தீயிலிட்டுப் பொசுக்கிட வேண்டுமாம்
நறிய பொன்மலர் மென்சிறு வாயினால்
நங்கை கூறும் நவீனங்கள் கேட்டீரோ
ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
அறிவிலோங்கி இவ்வையந் தழைக்குமாம்
பூணு நல்லறத்தோடு இங்கு பெண்ணுருப்
போந்து நிற்பது தாய் சிவசக்தியாம்
நாணு அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்
ஞான நல்லறம் வீர சுதந்திரம்
பேணு நற்குடிப் பெண்ணின் குணங்களாம்
பெண்மைத் தெய்வத்தின் பேச்சுக்கள் கேட்டீரோ!...

எனப் பாரதியார், நெறிகள் யாவிலும் வளர்ச்சியடைந்து, மனிதர்கள் நேர்மையுடன் உயர் தேவர்களாவதற்கு சிறிய தொண்டுகள் செய்து அடிமைத்தனத்தைத் தீயிலிட்டுப் பொசுக்க வேண்டுமெனப் புராணங்களினூடாக சமயத்தின் வாயிலாகப் பெண் பாடுவதாகப் பாடுகிறார்.

மேலும்,

சாத்திரங்கள் பலபல கற்பராம்
சவுரியங்கள் பலபல செய்வராம்
மூத்த பொய்மைகள் யாவும் அழிப்பராம்
மூடக்கட்டுக்கள் யாவுந் தகர்ப்பராம்
காத்து மானிடர் செய்கை அனைத்தையும்
கடவுளர்க்கு இனிதாகச் சமைப்பராம்
ஏத்தி ஆண்மக்கள் போற்றிட வாழ்வராம்
இளைய நங்கையின் எண்ணங்கள் கேட்டீரோ!...
எனச்சமூகத்தில் ஆண்மக்களின் முக்கியத்துவத்தையும் உணர்த்திப் பாடத்தவறவில்லை. (பெண்களுக்கு ஜீவனுண்டு, மனமுண்டு, புத்தியுண்டு, ஐம்புலன்களுண்டு, அவர்கள் செத்த இயந்திரகளல்ல. உயிருள்ள செடி, கொடிகளைப்போலவும் அல்ல. சாதாரணமாக ஆண் மாதிரியாகவேதான். புற உறுப்புக்களில் மாறுதல். ஆத்மா ஒரே மாதிரி. பெண்கள் தங்களுக்கு விருப்பமானவரை விவாகம் செய்து கொள்ளலாம். விவாகம் செய்து கொண்ட கணவனுக்குப் பெண் அடிமையில்லை, உயிர்த் துணை, வாழ்க்கைக்கு ஊன்றுகோல், ஜீவனில் ஒரு பகுதி. பெண்களுக்கு விடுதலை கொடுத்ததனால் மக்கள் சமூகம் குழம்பிப்போய்விடும் என்று சொல்வோர் பிறர் தம் கண்முன் சுயேட்சையுடன் வாழ்வதைத் தாம் பார்க்கக் கூடாது என்று அசூயையால் சொல்கிறார்களே ஒழிய வேறொன்றுமில்லை. பெண்களை மிருகங்களாக வைத்து நாம் மாத்திரம் மகாரிசிகளாக முயலுதல் மூடத்தனம். பெண் உயராவிட்டால் ஆண் உயராது. இவை பாரதியார் பகர்ந்த பொன்மொழிகள்.)

பாரதியாரின் கடவுள் நம்பிக்கை.

தாயாய்த் தந்தையாய்ச் சக்தியும் சிவனுமாய்
உள்ளொளியாகி உலகெலாந் திகழும்
பரம்பொருளேயோ! பரம்பொருளேயோ!
ஆதிமூலமே! அனைத்தையும் காக்கும்
தேவதேவா! சிவனே! கண்ணா!
வேலா! சாத்தா! விநாயகா! மாடா!
இருளா! சூரியா! இந்துவே! சக்தியே!
வாணீ, காளீ! மாமகளேயோ!
ஆணாய்ப் பெண்ணாய் அலியாய், உள்ளது
யாதுமாய் விளங்கும் இயற்கைத் தெய்வமே
வேதச்சுடரே! மெய்யாங்கடவுளே!
அபயம் அபயம் அபயம் நான் கேட்டேன்,
நோவு வேண்டேன், நூற்றாண்டு வேண்டினேன்
அச்சம் வேண்டேன், அமைதி வேண்டினேன்,
உடைமை வேண்டேன், உன் துணை வேண்டினேன்
வேண்டாதனைத்தையும் நீக்கி,
வேண்டியதனைத்தையும் அருள்வது உன் கடனே...
எனக் கடவுள் நம்பிக்கை மூலம், தனது
வேண்டுதல்களைத் தெரிவித்த பாரதியார்,

மேலும்,

தெய்வம் பலபல சொல்லிப் - பகைத்
தீயை வளர்ப்பவர் மூடர்
உய்வதனைத்திலும் ஒன்றாய் - எங்கும்
ஓர் பொருளானது தெய்வம்
தீயினைக் கும்பிடும் பார்ப்பார் - நித்தந்
திக்கை வணங்குந் துருக்கர்
கோயிற் சிலுவையின் முன்னே – நின்று
கும்பிடும் யேசு மதத்தார்
யாரும் பணிந்திடுந் தெய்வம் - பொருள்
யாவினும் நின்றிடுந் தெய்வம்
பாருக்குள்ளே தெய்வம் ஒன்று - இதில்
பற்பல சண்டைகள் வேண்டாம் ........

எனக் கடவுளின் பெயராலும், சமயநம்பிக்கையின் பெயராலும் மோதிக்கொள்பவர்களுக்கு கடவுள் அனைவருக்கும் பொதுவானவர் என வலியுறுத்துகிறார். (மதம் வேறு, குருக்கள் கட்டுப்பாடு வேறு என்பதை மறக்கலாகாது. அவை ஒன்றுக்கொன்று தீயும், சாம்பலும் போலாகும். மதத்தை மீறிக்கட்டுப்பாடு செல்லும்போது நதியை மணல் மூடுவது போலாகிறது. அங்கு நீர்கெட்டுப் பாலைவனம்போல் தோன்றும். இந்த நிலையைக்கண்டு மகிழ்ச்சியடைவோர் மிகக் கேடுகெட்டவர்கள் என்பது வெளிப்படை. பிற மதங்களும் உண்மையென்ற சமரசஞானம் இல்லாவிட்டால் எந்தச்சித்தாந்தமும் நாளடைவில் பொய்யாகவும், குருட்டு நம்பிக்கையாகவும், வீண் அலங்காரமாகவும் முடிந்து மக்களை மிருகங்களைப் போல ஆக்கிவிடும். இவை பாரதியின் பொன்மொழிகள்.)

கல்வி பற்றி பாரதியாரின் நிலைப்பாடு.

காலை எழுந்தவுடன் படிப்பு-பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு
மாலை முழுதும் விளையாட்டு-என்று
வழக்கப் படுத்திக் கொள்ளு பாப்பா!

நீதி, உயர்ந்தமதி, கல்வி-அன்பு
நிறைய உடையவர்கள் மேலோர்.
பின்பு மனிதர்களெல்லாம் - கல்வி
பெற்றுப் பதம்பெற்று வாழ்வார்.

மேற்கூறிய கவிதைவரிகள் மூலம் கல்வியின் மகிமையை உணர்த்துகிறார் பாரதியார்.

(கல்வியே செல்வத்தின் தாய். தேசக்கல்விக்குக் குடும்பக் கல்வியே வேர். தேசமாவது குடும்பங்களின் தொகுதி. குடும்பங்கள் இல்லாவிட்டால் தேசம் இல்லை. தேசம் இல்லாவிட்டால் தேசியக்கல்வியைப்பற்றி பேச இடமில்லை. தேசபாஷையே பிரதானம் என்பது தேசியக் கல்வியின் ஆதாரக்கொள்கை. உபாத்தியாயர்களுக்கு தேசபாஷையில் நல்ல ஞானம் இருக்க வேண்டும். தேச பாஷையின் மூலமே எல்லாப்பாடங்களும் கற்பிக்கப்படல் வேண்டும். தேசபாஷை மூலமாகக் கற்பிக்கப்படாத கல்விக்கு தேசியக்கல்வி என்று பெயர் சொல்லுதல் சிறிதும் பொருந்தாது. தேசியக்கல்வி கற்றுக்கொடுக்காத தேசத்தை தேசம் என்று சொல்லுதல் தகாது. தமிழ்க்

கல்விக்கும், தமிழ்க்கலைகளுக்கும், தொழில்களுக்கும் தமிழ்ப்பெண்களே விளக்குகளாவர். தமிழ்நாட்டுப் பெண்களையும் சேர்த்துக் கொண்டு அவர்களுடைய யோசனைகளையும் தழுவி நடத்தாவிடின் அக்கல்வி சுதேசியம் ஆகமாட்டாது. தேசியக் கல்வியும் சுயராஜ்யமும் தமக்குள்ளே பிரிவு செய்யத்தகாதன. இவை பாரதியாரின் பொன் வாக்குகள்.)

ஒரு பொருள் எமது கண்களுக்கு அழகாக இருந்தால் அதனிடம் எமக்கு இயற்கையில் விருப்பம் உண்டாகிறது. கிளியைப்பார்த்து மனிதன் அழகென நினைக்கிறான். அதன்மீது அன்பு கொள்கிறான். தவளையைப் பார்த்து அழகில்லையென நினைக் கிறான். அதற்காகத் தவளை மனிதரை அடித்துத் துன்புறுத்திச் சிறையிலடைத்தால் தவளை செய் வதை நியாயமென ஒத்துக்கொள்வோமா? பெண் களை ஆண்களும், ஆண்களைப் பெண்களும் கட்டாயப்படுத்தி ‘என்னிடம் அன்புசெய்’ எனச் சொல்வது அவமானம். பெண்கள் ஆண்களிடம் அன்புடன் இருக்கவேண்டுமானால், ஆண்கள் பெண்களிடம் அன்பும், அசையாத பக்தியும் செலுத்த வேண்டும். பக்தியே பக்தியை விளைவிக்கும். அச்சத்தினால் அன்பை விளைவிக்க முடியாது என இவர் அன்புக்கு வரைவிலக்கணம் கூறுகிறார்.

தொழில் மீதும், தொழிலாளர் மீதும் பாரதியார் கொண்ட கருத்தை, தேவர்களையும், கடவுள்களை யும் உருவகப்படுத்தும் புராணத்தினூடாகக் காண் கிறார். வேதக்கொள்கைகளை அனைத்து மக்களுந் தெளிவாக உணரும்பொருட்டு முன்னோர்களால் புரா ணங்கள் ஏற்படுத்தப்பட்டன எனப் பாரதியார் கூறு கிறார்.

இரும்பைக்காய்ச்சி உருக்கிடுவீரே!
 யந்திரங்கள் வகுத்திடுவீரே!
கரும்பைச்சாறு பிழிந்திடுவீரே!
 கடலில் மூழ்கி நன்முத்தெடுப்பீரே!
அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்
 ஆயிரந் தொழில் செய்திடுவீரே!
பெரும்புகழ் நுமக்கே இசைக்கின்றேன்.
 பிரம்மதேவன் கலை இங்கு நீரே!

மேலும்,
எண்ணெய், பால், நெய் கொணர்ந்திடுவீரே!
 இழையை நூற்று நல் ஆடை செய்வீரே!
விண்ணில் நின்று எம்மை வானவர் காப்பார்
 மேவிப்பார்மிசைக் காப்பவர் நீரே!
தேட்டமின்றி விழியெதிர் காணும்
 தெய்வமாக விளங்குவீர் நீரே! இப்படியாக இவர் தனது உணர்ச்சிகளை வெளிப்படுத்துகிறார்.

கைத்தொழிலால் செல்வம் விளைகிறது. அறிவுத் தொழிலால் அது சேகரிக்கப்படுகிறது. கைத்தொழில் செல்வத்தை ஏற்படுத்துகிறது. அறிவுத்தொழில் கைத் தொழிலை நடத்துகிறது. பல இடங்களில் இப்போது மூடர்களிடம் செல்வம் இருப்பதைக் காண்போமாயின், இவர்களுக்கு இச்செல்வத்தை ஏற்படுத்திக்கொடுக்க இவர்களுடைய முன்னோர்களில் அனேகர் அல்லது ஒருவராயினும் மிகுந்த புத்திசாலியாயும், அந்தப் புத்தியைக்கொண்டு சோம்பலின்றி விடாமுயற்சியுடன் உழைப்பவனாகவும் இருந்திருக்க வேண்டும். அப் போதுதான் செல்வம் சேர இடமுண்டு.

வியாபாரம், கைத்தொழில் முதலிய துறைகளில் செல்வம் சேர்ப்பதற்கு மிக உயர்ந்த மதிநுட்பம் எக்காலத்திலும் இன்றியமையாததாக இருந்து வந்தி ருக்கிறது. இதை உணர்ந்தே ஆதிகாலம் முதல் அறிவுப்பயிற்சியுடையவர் பலர் கைத்தொழிலாளர் களுக்கு கல்வியறிவு ஏற்படாதபடி திட்டமிட்டு வேலைசெய்து வந்திருக்கிறார்கள். ‘எழுதத்தெரிந்த சூத்திரனை மிகவும் தொலைவில் வைத்திருக்க வேண்டும்’ என்ற வினோத விதியொன்று நிலவி வருகிறது. நம் நாட்டில் மட்டுமின்றி அனைத்து நாடுகளிலும் கைத்தொழிலாளர்களுக்குக் கல்விப் பயிற்சி உண்டாகாதவாறு திட்டங்கள் உருவாக்கப் பட்டிருக்கின்றன. கைத்தொழிலாளர்கள் கல்விப் பயனை காவியங்கள் இயற்றுவதிலும், படிப்பதிலும் மாத்திரம் செலவிடும் வழக்கம் மாறிப்போய், அவரவர் தத்தமக்குரிய தொழில்களில் கல்வியறிவைப் பயன்படுத்தத் தொடங்குவார்கள். இதினின்றும், இது வரை உலகத்தில் கைத்தொழிலாளர் பரமஏழை களாக இருந்து வரும் நிலைமை நீங்கி, மேன்மேலும் இவர்களுக்கு செல்வம் வளர்ச்சி பெற வாய்ப்புண்டு.

பல தொழிற்சங்கத்தினர் ஆங்காங்கே பள்ளிக்கூடங் களை ஆயிரக்கணக்காக ஏற்படுத்தி, அவற்றில் தம்முடைய மக்களுக்கு நிறைந்த கல்வியூட்டுவதற்கு முயற்சிகள் செய்ய வேண்டும். மேலும், பகற்பள்ளிக் கூடங்கள் மாத்திரமன்றி, இராப்பள்ளிக்கூடங்களையும் ஏற்படுத்தி அவற்றில் அனைத்து வயதினரும் சென்று படிப்பதற்குரிய வழிமுறைகளை நடைமுறைப்படுத்த வேண்டும்.

அறிவு, வலிமை, கல்வி ஆகியன செல்வத்தின் தாய். கல்வியுள்ள இடத்தில் செல்வமும், செல்வமுள்ள இடத்தில் கல்வியும் ஏற்படுதல் மிகவும் அரிது என்று எமது நாட்டில் பரம மூடத்தனமான கொள்கை யொன்று பரவி நிற்கிறது. அது இக்காலத்திற்கு பொருந்தாது. தொழிலாளிகளே! கல்விப்பயிற்சி செய் யுங்கள்! உங்களுக்கும் உங்கள் மக்களுக்கும் கல்வியறிவு மிகுவதற்கு வழி செய்யுங்கள்!

தொழிலாளர்கள் என்போர் உடலால் உழைத்து வேலை செய்பவர்கள் என சிலருக்கு எண்ணமிருக் கலாம். அது தப்பு. உடலாகட்டும், புத்தியாகட்டும் முதலாளிகளுக்குக் கட்டுப்பட்டு வேலை செய்பவர்கள் எல்லோரும் தொழிலாளர்கள் எனக் கூறப்படுகிறது. செயலக ஊழியர்கள், ஆசிரியர்கள் அனைவரும் தொழிலாளர்கள் எனக்கூறப்படுகிறது. எனவே, என் போன்ற நூலாசிரியர்களும் தொழிலாளர்களே. முத லாளிகள் கூட ஆள்நியமித்தல், வேலையை மேற் பார்வை செய்தல், வியாபார சம்பந்தமான கணக்கு களைக் கவனித்தல் முதலிய செய்கைகளால் தொழிலாளியாகிறான். நூலாசிரியரும், வீதி பெருக்கு வோரும் ஓரினமாகச் சேர்ந்து வைசியருக்கு (முதலா ளிகளுக்கு) எதிராகப் போராடுதல் என்பது எமது நாட்டில் நேற்றுவரை நினைக்க முடியாத செயலாக இருந்தது. இன்று அது சாத்தியமாகிவிட்டது. நமது நாட்டின் நெடுங்கால வழக்கத்தின்படி நூலாசிரியர் களும், ஆசிரியர்களும் முதற்பிரிவு. அரசர் அதற்கு அடுத்தபடி. முதலாளிகள் எனப்படும் வைசியர் மூன்றாம் பிரிவு. உடற்பலத்தால் மாத்திரம் செய்வ தற்குரிய தொழில்களைச் செய்வோர் நான்காம் பிரிவினர்.

‘தம்முடைய காரியத்தைச் செய்ய வேண்டியதே தொழிலாளியின் கருமம் என ஈசனால் விதிக்கப்பட்ட விதி’ என்று முதலாளிகளிற் பலர் நினைக்கிறார்கள். இயந்திரங்களைப் போலவே இவர்கள் மனிதரையும் மதிக்கிறார்கள். இவ்வெண்ணத்தை உடனே மாற்றித் தொழிலாளிகளையும், மற்றைய ஏழைகளையும் நாம் சாதாரண மனிதராக நடத்த வேண்டும். அதிலும் தொழிலாளர்கள் விடயத்தில் நாம் உயர்ந்த மதிப்பு செலுத்த வேண்டும்.
(இவை பாரதியாரின் சிந்தனையிலிருந்து உதிர்ந்த சில கருத்துக்கள்.)

(விரல் 2 இல் தொடரும்.)

*திவ்வியநாதன் செல்வத்துரை, காலம்– 1991 நடுப்பகுதி*

## நீள்பயணம்

காய்ந்து சுருங்கிய வயிற்றுடன்
கால்கள் நகர மறுக்கின்றன
கண்கள் கதறி இருண்டன
பெண்கள், ஆண்கள், குழந்தைகள்
புற்றீசல் போல்

எங்கள் உயிர் குடிக்கும்
எதிரியின் "புக்காராக்களும்" "கிபீர்களும்"
ஆங்காங்கே நெருப்பைக்கொட்ட
எங்கே போவோம்?

எங்கள் முன்னோர் கொஞ்சிக் குலாவிய மண்ணில்
எங்கள் முன்னோர் விட்டுச்சென்ற மண்ணில்
எங்கள் முன்னோரின் வேர்பாய்ந்த மண்ணில்
எங்களை அகதிகளாக்கியது ஆக்கிரமிப்புப்படை

எங்கே போவோம்?
உங்களைத்தான் கேட்கின்றோம் ஆட்சியாளர்களே!
உங்களைத்தான் கேட்கின்றோம் ஆக்கிரமிப்பாளர்களே!
உங்களைத்தான் கேட்கின்றோம் வன்முறையாளர்களே!
உங்களைத்தான் கேட்கின்றோம் வல்லரசுகளே!
எங்கே போவோம்?

பறவையாகப் பிறந்திருந்தால் மரங்களில் கூடுகட்டி
மிருகமாகப் பிறந்திருந்தால் கொட்டும்மழைக்கும்
கொடியவெய்யிலுக்கும் முகங்கொடுத்து
நாகரீக மனிதனாகப் பிறந்ததனால்
நச்சுப்பாம்புகளின் தீண்டலுக்கும் நரிகளுக்கும் இரையாகி
நடைப்பிணமாக நாம் எங்கு போக?

எங்கள் பயணம் நீண்டது
எங்குபோகின்றோம் எனத்தெரியாமற் போகின்றோம்
நாம் போகும்பாதையில்
நம் சுவடுகளை அழித்துவிட்டுப் போகின்றோம்

திவ்வியநாதன் செல்வத்துரை, காலம்- 01.05.1997

## இனியுமொரு தடவை வேண்டாம் !

மருதமுனை
மழுங்கியது அறிவுமுனை
அழுகிறது
எழுதுகோலின் முனை

யாரை நொந்துகொள்ள
யாரிடம் நீதி கேட்க
நீதி கிடைக்க - மனு
நீதிச் சோழர்களா அங்கே?

நாசிகள் தலைவன் மரணித்துவிட்டானா?
பூசி மறைக்கிறார்கள் படுகொலைகளை
தூசிபடிந்த நாசிக்கொள்கைகளை
நேசிப்பவர் - யாசிப்பவர் பலர் அங்கே!

இரண்டாம் உலகப்போர்
திரண்டு வந்தது நாசிப்படை
மிரண்டு, முழிபிதுங்கிக் கதறினர்
புரண்டு அழுதனர் யூதமக்கள்

கோரப்பற்களிற் சிக்கி உயிர்கள்
கொதிக்கும் நீருள் இறக்கப்பட்டுத்
தலைமுடி பிடுங்கப்பட்டுக்
கொழுப்பு வடிக்கும் உலைகளுட்
கொடுந் தீயினிற் கருக்கப்பட்டனர்

மருதமுனையும் மறுவடிவில்!

எத்தனை குழந்தைகள்?
எத்தனை கர்ப்பிணிகள்?
எத்தனை இளைஞர்கள், இளைஞிகள்?
எத்தனை முதியோர்கள்?
அத்தனை பேரும் கருகினரே!

வேண்டாம்!
வேண்டாம் இனியுமொரு தடவை!

திவ்வியநாதன் செல்வத்துரை, காலம்- 06.10.1996

## வன்முறை

கன்னியின்
கற்பைச் சூறையாட,
வன்முறையை நாடும்
காமுகன்.

பிறாண்டியும் கடித்தும்,
கற்பையும் உயிரையும்
காப்பாற்ற, வன்முறையை
நாடும் கன்னி.

பன்னாட்டுச்சட்டங்களையும்
உள்நாட்டுச்சட்டங்களையும் மீறும்,
பயங்கரவாதியல்ல இவள்.
பரிதாபத்துக்குரியவள்.

சிறுபான்மையின் மேற்
பெரும்பான்மையின் அடக்குமுறை.
அடக்குமுறைக் கெதிராகச்
சிறுபான்மையின் உரிமைப்போர்.

பன்னாட்டுச்சட்டங்களையும்
உள்நாட்டுச்சட்டங்களையும் மீறும்,
"வன்முறையாளர்கள்"
"பன்னாட்டுப் பயங்கரவாதிகள்".

யாரிவர்கள்?
சுதந்திரக்காற்றைச்
சுவாசிக்கத் துடிக்கும்
அடக்கி யொடுக்கப்பட்டவர்கள்.

ஒடுக்குமுறைகளுக்கு எதிரான போரில்,
போர் நிறுத்தங்களும்
பேச்சுவார்த்தைகளும்
தற்செயலான நிகழ்வுகள்.

திவ்வியநாதன் செல்வத்துரை, காலம்- 15.11.1996

## ஈழத்து மின் கம்பங்கள்

ஈழத்து மின்கம்பங்களே!
நீங்கள் சிலுவைகளானால்---
உங்கள் பெருமைகள் சொல்ல
எத்தனை யேசுக்கள்
அவர்கள் சிறுமைகள் சொல்ல
எத்தனை யூதாஸ்க்கள்

அடியவர் கரங்கூப்பும் சிலுவையே!
ஈரிரு வருடங்கள் அல்லற்படும்
ஈழத்து மின்கம்பங்கள்
உன் பெயரால் உயர்வுபெறட்டும்!
ஆமென்!

திவ்வியநாதன் செல்வத்துரை, காலம்- 25.08.1987

## புக்காராத்தாக்குதல்

புக்காரா தலைமேற் குண்டைப் பொழியிது தமிழ்த்தாயே
சிக்குது உடல்நூறு சுக்குநூறாகுது பலநூறு
தமிழ்த்தாயே
கக்கும் நெருப்புக்குள் என்னவள் கருகுகிறாள்
தமிழ்த்தாயே
விக்கலெடுத்துத் தாய்ப்பாலுக் கழுகிறான் என்பாலன்
தமிழ்த்தாயே

அக்கம்பக்கம் அல்லோலகல்லோலம் தமிழ்த்தாயே
ஏக்கம்பீடித்து எனைஈன்றவள் மூச்சுநின்றதடி தமிழ்த்தாயே
ஆக்கிரமிப்புப் படையின் இரத்தவெறி அடங்கவில்லைத்
தமிழ்த்தாயே
துக்கமும் துயரமும் பசியும் பட்டினியும் நித்தமும்
நிறைந்ததே எம் வாழ்வு தமிழ்த்தாயே

திவ்வியநாதன் செல்வத்துரை, காலம்- 28.09.1999

# இலங்கை – இந்தியத் தமிழர்களின் அரசியலுக்குள் ஓங்கி ஒலித்த குரல்!



மேற்காணும் படங்களில் : உரையாற்றுபவர் திவ்வியநாதன் செல்வத்துரை, உடன் இருப்பவர்கள் இரா.சனார்த்தனம், திரு.பா.தசரதன் (பிரான்சு தமிழ்ச் சங்கத்தலைவர்) பாரீஸில் நடைபெற்ற மணிவிழாவில், காலம் : *19.09.1999*. தமிழக அமைச்சர் திரு.தமிழ்க்குடிமகனுடன், இரா.சனார்த்தனம், திவ்வியநாதன் செல்வத்துரை, *1993*இல், ஜேர்மனியில் நடைபெற்ற தமிழ்ப்பண்பாட்டு இயக்க மாநாட்டில்.

ஈழத்துக் காந்தி என அழைக்கப்பட்ட மறைந்த ஈழத்தமிழ் தலைவர் திரு.எஸ்.ஜே.வி.செல்வநாயகம் போன்ற பல ஈழத்துத் தலைவர்களை அழைத்துவந்து தமிழகத்துக்கு, தமிழகத்திலுள்ள அனைத்து அரசியற்கட்சித் தலைவர்களுடன் தொடர்பை ஏற்படுத்தி, இலங்கைத் (சிறீலங்கா, ஈழம்) தமிழரின் வாழ்வுரிமைப் பிரச்சினையைத் தமிழகம் அறியச்செய்த ஆரம்பகாலத் தமிழ்த் தொண்டர் திரு.சனார்த்தனம், இலங்கை அரசியலிலும், தமிழக அரசியலிலும் தனக்கென ஒரு தனிஇடத்தைப் பிடித்துள்ளவர்.

1954இல், எழுத்துப்பணியை ஆரம்பித்தவர். கோவை ஆர்.எஸ்.புரம் ஆண்கள் உயர்நிலைப் பள்ளியிற் படிக்கும்போது பேச்சுப் போட்டிகளிற் பங்குபற்றியும், நாடகங்களில் நடித்தும் கலைவாழ்வில் ஈடுபட்டவர். மாணவத் தலைவர் தேர்தலிற் கலந்து மாணவத் தலைவரான காலத்தில், தமிழக முன்னாள் முதல்வர் திரு.சி.என்.அண்ணாத்துரையின் பேச்சுக்களாலும், எழுத்துக்களாலும் ஈர்க்கப்பட்டு அண்ணாவின் தம்பியானவர். பின், சென்னைப்பச்சையப்பன்கல்லூரி மாணவர் செயலாளராகவும், மாணவர் தலைவராகவும், தமிழக அனைத்துக் கல்லூரி மாணவர் தலைவராகவும் பணியாற்றியவர்.

தி.மு.க மாணவர் அணியின் கோவை, ஈரோடு, நீலகிரி மாவட்ட மாணவர் பிரிவுத் தலைவராக இருந்த காலத்தில், திராவிட முன்னேற்றக் கழக மாணவர் அணியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, கழகத்தின் அக்கால ‘முரசொலி’ செய்தித்தாளின் முதற்பக்கத்தை அலங்கரித்தும், அண்ணாவின் அறிவுப்படி நடத்தப்பட்ட சனநாயகப் பாதுகாப்பு மாநாட்டில் அண்ணாவின் பாராட்டையும் பரிசையும் பெற்றவர்.

1969இல், இலங்கை நண்பர் நவசோதியுடன் இணைந்து ‘உலகத்தமிழ் இளைஞர் பேரவை’ அமைப்பை உருவாக்கி அதன் தலைவரானார். பின் இவ்வமைப்பு ‘தமிழர் பேரவை’ எனத் தோற்றம் கண்டபோது அதன் தலைவரானார் சனார்த்தனம் அவர்கள்.

1983இல், இலங்கையில் ஏற்படுத்தப்பட்ட இனக்கலவரத்தின் கொடுமைகளை இவ்வமைப்பைப் பயன்படுத்தி பல அறிக்கைகளை எழுதி வெளிஉலகுக்குத் தெரிவித்தார்.

தமிழகத்தில் ஆட்சிப்பொறுப்பில் இருக்கும் பலருக்கு இவர் விடுக்கும் அறிக்கைகள் இடையூறாக அமைந்ததாகவும், இதனால் முதல்வர்கள் முதல், அமைச்சர்கள் வரை கோபமடைந்து இவரைக் கண்டித்ததாகவும் என்னிடம் கூறியிருந்தார். பாதிக்கப்பட்ட முதல்வர் அண்ணாத்துரை அவர்கள் கோபம் கொண்ட கதை ஒன்றையும் என்னிடம் கூறியிருந்தார்.

இலங்கைச் சிங்கள அரசின் தகாத செயல்களைக் கண்டித்துத் தமிழக மக்களுக்கு உண்மையைத் தெரிவிப்பதற்கும் தமிழக அரசை வற்புறுத்திச் சிங்கள அரசின் மேல் அழுத்தத்தை ஏற்படுத்தவும் தமிழக தமிழ் மக்களின் ஆதரவைத் திரட்டி தனது சொந்தப்பணத்தில் அறிக்கைகள் விட்ட கதையையும், இதனால், சாடைமாடையாக முதல்வர் எம்.ஜி.ஆர் ஒரு தடவை சிறிதாகக் கோபம் கொண்டதையும், மேலும், தனது அறிக்கை ஒன்றால் முதல்வர் கலைஞர் கருணாநிதி தனது கருத்தை மாற்றிக்கொண்ட சம்பவத்தையும் என்னுடன் பகிர்ந்து கொண்டார்.

நான் மிகச் சிறியவனாக இலங்கையில் இருக்கும் காலத்தில், சாவகச்சேரித் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த திரு.வி.என்.நவரத்தினம் (நான் பிரான்சுக்கு வரக் காரணமாக இருந்தவர்களில் ஒருவர்) அவர்களால் வெளியிடப்பட்ட சிறுபரப்புரை ஏடொன்றில், நண்பர் சனார்த்தனத்தின் நிழற்படத்துடன் வி.என்.நவரத்தினத்தின் படமும், பலாலி விமானநிலையத்தில் வைத்து சனார்த்தனத்தை தமிழ்நாட்டுக்கு வழியனுப்பி வைக்கும் காட்சியுடன், சனார்த்தனம் தமிழ் இளைஞர்களின் நம்பிக்கைக்குரியவர் என்ற குறிப்புக்களும் அச்சாகியிருந்தன. தமிழரசுக் கட்சியின் ‘சுதந்திரன்’ இதழ் மூலம், வீரகேசரி இதழ் மூலம் இவரை அறிய வாய்ப்பு ஏற்பட்டது. அன்றிலிருந்து நண்பர் சனார்த்தனத்தின் மீது இனம்புரியாத தமிழ்வழிப் பிணைப்பு ஏற்பட, 1982இல், நான் தமிழகம் சென்றபோது இவரைச் சந்திக்க முயன்றேன். முடியவில்லை.

பல வருடங்களுக்குப் பின்பு, பிரான்சுக்கு வரும்போதெல்லாம் இவர் என்னைச் சந்திக்காத நாட்களில்லை. எங்களுக்குள் நட்பு மேன்மேலும் வளர்ந்து நெருக்கம் ஏற்பட்டது.

→

இலங்கைத் தமிழ் இளைஞர்கள் இவரைச் சந்தித்ததாகவும், இவர்களுக்குத் தமிழகத்தில் உதவிகள் வழங்கியதாகவும், அடைக்கலந் தேடிவந்த போராட்ட இளைஞர்களுக்கு அடைக்கலங் கொடுத்ததாகவும், தனது உலகத்தமிழர் இல்லத்தில் புதிய புலிகள் அமைப்பு உருவானதைப் பற்றியும், புலிகளின் தலைவர் வே.பிரபாகரனைப் பற்றியும், உலகத்தமிழர் கூட்டமைப்பு மூலமாக ஈழத்தமிழர்களின் வாழ்வுரிமைகளுக்காகக் குரல் கொடுத்து வரும் திரு.பழநெடுமாறனுடன் சென்று, பெருந்தலைவர் எனப் போற்றப்படும் திரு.காமராசரைச் சந்தித்த கதை பற்றியும், முன்னாள் முதல்வர் அண்ணாத்துரை அவர்களின் அரசாங்கத்திற் பொதுப்பணித்துறை அமைச்சராகவிருந்த கலைஞர் கருணாநிதி அவர்கள்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை எதிர்த்து, 'சர்க்காரியா' ஆணைக்குழு முன் வாதாட இலங்கைச் சட்டவல்லுனர் திரு.ஜி.ஜி.பொன்னம்பலத்தின் பெயரை கலைஞரின் நினைவுக்குக் கொண்டுவந்த செய்தியையும் என்னுடன் நினைவு கூர்ந்தார்.

தமிழக முதல்வர் அண்ணாத்துரை அவர்கள் சிறந்த புரட்சிகர எழுத்தாளர், பேச்சாளர், நாடகஎழுத்தாளர், நடிகர் என்பதை அனைவரும் அறிவர். இவரால் எழுதப்பட்ட நாடகங்களை கலை நுணுக்கத்துடன் ஆராய்ந்து பி.எச்.டி பட்டம் பெற்ற இரா.சனார்த்தனம் அவர்கள், தமிழ் இலக்கியத்தில் தனக்கென ஓர் இடத்தை பிடித்துள்ளதால் எங்களுக்குள் இருந்த இலக்கிய-அரசியல் தாகங்கள் எங்களை மிக மிக நெருக்கமாக்கின. நாங்கள் அரசியல்-இலக்கிய இதழ் ஒன்றை வெளியிட முயன்று 'உலகமுதம்' என்னுந் தலைப்பில் 3இதழ்களை வெளியிட்டோம். என்னால் இயன்றளவு கணிசமான தொகைப்பணம் வழங்கப்பட்டிருந்தும் 3இதழ்களுடன் இம்முயற்சி நின்று விட்டது வருத்தத்துக்குரியது. தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினராக 7ஆண்டுகள் பணிபுரிந்த காலத்தில், எம்.ஜி.ஆர் அரசினால் வேலைநீக்கம் செய்யப்பட்ட 300 தமிழ் ஆசிரியர்களுக்கு, எம்.ஜி.ஆருடன் வாதாடி மீண்டும் வேலை வாங்கிக் கொடுத்த நண்பர் சனார்த்தனம் அவர்கள், இலங்கைத் தமிழர் பிரச்சினையில் அதிக ஈடுபாடு கொண்ட காரணத்தால் அமைச்சருக்கும் இணையான மேலவைக் 'கொறடா' பதவியை தானாக விட்டு விலகியவர்.

முன்னாள் தமிழக அமைச்சர் திரு.தமிழ்க்குடிமகன் சிறந்த தமிழாசிரியர், இலக்கிய ஆர்வலர், கவிஞர். 1993இல் தமிழ்ப்பண்பாட்டு இயக்க ஜேர்மன் கிளையினரால் நடத்தப்பட்ட மாநாடொன்றில் இவரைச்சந்திக்கும் வாய்ப்பு நண்பர் சனார்த்தனம் மூலமாக ஏற்பட்டு, என்னால் எழுதப்பட்டு வெளியிடப்பட்ட சிதறல் கவிதைத் தொகுதியை இவரது விமரிசனத்தை எதிர்பார்த்துக் கொடுத்தபோது, சில கவிதைகள் மரபுக் கவிதைகள் வடிவிலும், புதுக்கவிதைகள் வடிவிலும் அமைந்திருப்பதாகவும், 'கத்தரி, கத்தரி' என்னுங் கவிதை சிறுவர்களுக்கு ஏற்ற வகையில் அமைந்திருப்பதாகவும் கூறி இவர்களுக்கான கவிதைகளை எழுதும்படி தனது கருத்தைத் தெரிவித்தார் அமைச்சர். இந்நேரத்தில், இவர்களின் இலக்கியத் தொடர்பை மகிழ்ச்சி தரும் விடயமாகக் கருதுகிறேன். நிற்க.

பாரிசில், 15நாட்களை, எனது வீட்டில் தங்கி மகிழ்ச்சியாகக் கழித்துவிட்டுத் தமிழகம் திரும்பிய அண்ணாவின் தம்பியும், எம்.ஜி.ஆரின் அன்புக்குரியவரும், கலைஞரின் நண்பரும், எனது நண்பருமான திரு.சனார்த்தனம் அவர்கள் 28.02.2014இல், இவ்வுலகைவிட்டு மறைந்தாலும், இவரது கையெழுத்துக்களை பதிவு செய்த இவரது நூல்களும், உலகமுதம் இதழ்களும் என்முன் மறையாது நிற்கின்றன.


கவிஞர் திவ்வியநாதன் அழைக்கும்
உலகத் தமிழர் பேரவைத் தலைவர்
டாக்டர்.இரா.சனார்த்தனம்
மணிவிழா !
19.09.99 (ஞாயிறு) மாலை 4 மணி
இடம்: P.K.M. CINEMA.
7, rue Marx Dormoy, 75018 Paris. (Metro: La Chapelle)
தொடர்புகளுக்கு: 0661150906
அனைவரும் வருக !
Pub

## இரா.ஜனார்த்தனனுக்கு பாரிஸில் மணிவிழா

தமிழக அறிஞர் இரா.ஜனார்த்தனனின் மணிவிழாவைக் கொண்டாட பிரான்ஸில் வாழும் தமிழ் மக்கள் ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்.

கவிஞர் திவ்வியநாதனின் ஏற்பாட்டில் இம்மாதம் 19 ஆம் திகதி மாலை மூன்று மணிக்கு பாரிஸ் லூமார்க்ஸ் டொரோமியில் உள்ள பி.கே.எம். சினிமா மண்டபத்தில் மணிவிழாக் கொண்டாட்டம் நடைபெறும்.

இந்த மணிவிழாவின் போது இரா.ஜனார்த்தனன் எழுதிய 'அறிஞர் அண்ணா நாடகங்கள்-ஓர் ஆராய்ச்சி' எனும் நூலும், தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி, பி.நெடுமாறன், அமைச்சர் சௌமியமூர்த்தி தொண்டமான் ஆகியோருட்பட பல அறிஞர்கள், தலைவர்களின் வாழ்த்துக்கள் அடங்கிய 'அலைகள் 60' எனும் சிறப்பு மலரும் வெளியிடப்படவுள்ளதாக மணிவிழாக் குழு தெரிவித்துள்ளது.

## பிரான்சில் மணிவிழா

கவிஞர் திவ்விய நாதனின் ஆதரவில் இலக்கிய புரட்சியாளர் முனைவர் இரா.சனார்த்தனத்தின் மணிவிழா எதிர்வரும் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிரான்சில் நடைபெறவுள்ளது.


1973ல் தம்பி பிரபாவுடன்


ஈழத்துக் காந்தி தந்தை செல்வா, கலைஞர், அமிர்தலிங்கம், சனார்த்தனம்.


அண்ணா நாடகத்தில் சிவாஜியாக சனார்த்தனம்


சனார்த்தனம், அறிஞர் அண்ணா, துரைமுருகன், செல்வம்


சனார்த்தனம் – புரட்சித்தலைவர்







## என்போன்றோர் நாவினால் என்றென்றும் உன்பெயர் உச்சரிக்கப்படும்

'விழி இழந்தும் வாழலாம்
மொழி அழிந்தால் வாழ்வில்லை
உரிமை இழந்த நாடு
உயிரற்ற வெறும் கூடு

சிங்களம் ஆளும் சீமாட்டி
சிறீமாவின் கொடுமையினால்
சிறகொடித்த பறவைகளாய்
சித்திரவதைக்கு ஆளாகிச்
சீரழிகிறார் நம் நாட்டார்

திராவிடர் வாழப்பாடுபடும்
தி.மு.க கழகம் கரம் வலுத்தால்
தீரும் துயரம் இலங்கையிலே

இலங்கைத் தமிழர் துயர்துடைக்க
சிங்கத் திராவிடத் தோழர்களே
பொங்கி எழுவீர்' எனச்
சங்குமுழங்கியவன் அறிஞன் அண்ணாத்துரை

மங்காத் தமிழின் மதிப்பறிந்த
எங்கள் இதயக்கனியாம் அண்ணாவின்
தம்பியாய், செயல்வீரனாய்
சங்கம் அமைத்துத் தமிழ் வளர்த்த மதுரையருகே
பிணவாடை வீசும் இலங்கைத் தீவினுள்ளே
சிங்கக் கொடிபோர்த்த கொடுங்கோலரின்
கோரப்பற்களுக்கிரையாகும்
இலங்கைத் தமிழரின் இன்னலிற் பங்கேற்க
இலங்கையிற் பிறவாத இலங்கைத்தமிழனானவன் நீ !

இலங்கை நாட்காட்டியின் தைத் திங்கள் பத்தாம்
நாள் 1974 ம் ஆண்டு
இப்போதுமென் மனதிற் பசுமரத்தில் ஆணிபோல்..........
அப்போ உன் தமிழைச் சுவைக்க வந்த என்மனதை
உலுக்க
இலங்கை இனவெறியரின் மனிதவெறிக்குச்
சுவையாயின ஒன்பது உயிர்கள்!
இத்தைத் திங்கள் பத்தாம் நாளை
உலகத் தமிழரின் துக்கநாளாகக் கூவி
இலங்கைத் தூதரகம் முன் தமிழீழக்கொடியேற்றி
ஈழ விதைக்கு உரம் சேர்த்தவன் நீ!

ஈழப் புலிகள் தலைவன் பிரபாகரனை
இலங்கைத் தமிழர் தலைவன் தந்தை செல்வாவை–
உன்
இல்லம் தேடிவந்த பெரியசோதியை
இன்பமுடன் விருந்தோம்பி தமிழகம்
அறியச்செய்தவன் நீ!

இலங்கை இந்திய உறவுக்கும் மேலாக
இலங்கைப் பிரதமர் சிறீமாவின்
இந்திய வருகையை எதிர்த்துக் கைதானவன் நீ!

இந்திய அரசின் பகையைச் சூடியவனாய்
இலங்கை "நேதாஜியின்" எண்ணங்களைச்
சுமந்தவனாய்
இலங்கைத் தமிழனின் இழிவுநிலையை
இந்தியத் துணைக்கண்டத்திற்கப்பாற்
பறைசாற்றியவன் நீ!

இராமேஸ்வரத்திலிருந்து சென்னைக்கு
இலங்கைத் தமிழரின் உயிர்காக்க வேண்டிக்
கால்கடுக்க நடைபயணம் செய்தவன் நீ!
இலங்கைத் தமிழர் தொடர்பின் காரணமாய்
அமைச்சருக்கும்
இணையான உன் பதவியைத் துச்சமென மதித்தவன்
நீ!

இலங்கைத் தமிழரை அடக்கி யொடுக்கும்
இலங்கை அரசை எதிர்த்து
இருபத்தைந்து வருடங்களுக்கும் மேலாக அறப்போர்
புரியும் இரா. சனார்த்தனனே!
இலங்கைத் தமிழர் வரலாற்றில் ஓரத்தியாயம் நீ!

அடக்குமுறை– அட்டூழியம்– அடாவடித்தன
அரசியலால் நாட்டை இழந்து வீட்டை இழந்து
கடல்கடந்த நாடுகளில் வாழும்
என்போன்றோர் நாவினால்
என்றென்றும் உன்பெயர் உச்சரிக்கப்படும்!

18–7–98ல், பிரான்சிலிந்து,
திவ்வியநாதன் செல்வத்துரை (திவ்வியா)
இக்கவிதை இவருடைய மணிவிழா மலர்
'அலைகள் 60'இன் மூலம் வெளியாகியது.

# என்றென்றும் எஸ்.பொ



மேற்காணும் படத்தில் –எஸ்.பொவுடன் திவ்வியநாதன் செல்வத்துரை.

'இலக்கிய விமர்சகர், தமிழறிஞர், பேராசிரியர் சிவத்தம்பி கூறும்பொய்கள் அவரது உடம்பை விடப்பெரியவை. 1947ல், கம்யூனிசப் பத்திரிகையான 'தேசாபிமானியை' விற்ற ஒரே காரணத்துக்காக புனித சம்பத்தாசிரியர் கல்லூரியிலிருந்து வெளியேற்றப்பட்ட நான், தொடர்ந்து யாழ்ப்பாணக்கல்லூரிகளில் கல்விகற்க முடியாத சூழ்நிலையில் வாழ்ந்துவந்தேன். இக்காலப்பொழுதில், சிவத்தம்பியும், கைலாசபதியும் மிகவும் சொகுசாகப் படித்துமுடித்து, பதவிபெறுவதற்காக மட்டும் உடல்நோகாக்கம்யூனிசம்(மார்க்சிசம்) பேசிவந்தார்கள். திரு சிவத்தம்பி அன்றும்சரி, இன்றும்சரி இலக்கியவாதியாகவோ அன்றி அரசியல்வாதியாகவோ வாழ்ந்தது கிடையாது.

இச் சிவத்தம்பியும், கைலாசபதியும் பேராசிரியர்களாகி, பல்கலைக்கழகங்களில், தவறான வரலாற்று ஆவணங்களை மேற்கோள் காட்டிக் கல்விகற்பித்ததன் மூலம் உண்மையை அறியாத பல மாணவர்களை உருவாக்கினார்கள். இவர்களில் சிலர்தான், இன்று, சென்னையில் புலம்பெயர்ந்தோர் இலக்கியத்தைப் பற்றி அட்டகாசமாக முழங்கியவர்கள். இவர்களுக்கும் புலம்பெயர்ந்தோர் இலக்கியத்துக்கும் உள்ள தொடர்பு என்ன? என்பது எனக்குள் ஒலித்துக்கொண்டிருக்கும் கேள்வி. இவ் இலக்கிய விமர்சனப்பேராசிரியர்களின் கைகளில் அதிகாரம் குவிந்திருந்த காலங்களில் சில இலக்கியப்படைப்புக்கள் விமர்சனத்துக் குட்படுவதைத் தவிர்த்து இலக்கிய மோசடி செய்தார்கள் என்பதை இன்றும் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

ஈழத்துத்தமிழ் இலக்கியவரலாற்றில் என்னால் படைக்கப்பட்ட தீ, சடங்கு என்னும் நாவல்கள் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தி தடையத்தைப் பதித்துள்ளதை, கனடா – இலண்டன் – அவுஸ்திரேலியாவில் வாழும் தமிழ்இலக்கிய ஆர்வலர்கள் இவைபற்றிப்பேசுவதை அவதானிக்கக்கூடியநிலையில், ஈழத்துப்படைப்புக்களில், இலட்சத்து ஐம்பதினாயிரம் பிரதிகள் விற்கப்பட்டுள்ள ஒரேயொரு நாவல் சடங்கு என்னும் நாவல் முன்னிலையில் உள்ள நிலையில், மேற்கூறிய பேராசிரியர்களின் ஞானக்கண்களுக்கு இவை படைப்புக்களாகத்தோன்றாதது விந்தையே!

கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக இப்பேராசிரியர்கள் செய்துவந்த இலக்கிய விமரிசன ஊழியத்தினால் ஈழத்துப்படை ப்பிலக்கியங்கள் ஓரளவுக்கு அழிக்கப்பட்டுள்ளன. விமரிசனம் என்னும் பெயரால் இதுவரை காலமும் பட்டியல்தயாரிக் கும்வேலை மட்டுமே நடைபெற்றுள்ளதால், இவ்விமரிசனப்போக்கு திருத்தப்பட்டு உண்மைகள் ஆராயப்பட்டு ஆவணப்படுத்தப் படவேண்டுமென வலியுறுத்துகிறேன்.

என்னுடைய 'வீ' என்னும் சிறுகதைத்தொகுப்பை சாகித்தியமண்டலப்பரிசுக்காக நடுவர்கள் தெரிவுசெய்தபோது, இத்தொகுப்பிலுள்ள 'வீடு' என்னும் சிறுகதை பௌத்தமதத்தை இழிவுபடுத்தும்நோக்கோடு படைக்கப்பட்டுள்ளதாகத் தவறானமுறையில் சிங்களமொழியில் மொழிபெயர்க்கப்பட்டு, இப்படைப்புக்கு நியாயமாகக்கிடைக்க வேண்டிய பரிசைக்கிடைக்காதவாறு செய்தார்கள். எனவே, மொழிமாற்றம் செய்யும்போது கவனமாக நேர்த்தியானமுறையில் மொழிபெயர்ப்புச் செய்யவேண்டிய அவசியத்தை மேற்கூறிய நிகழ்ச்சியின்மூலம் தெரியப்படுத்துகிறேன்.

இருட்டடிப்புக்களுக்கும் மறுப்புக்களுக்கும் நடுவில் எனது படைப்புக்கள் இலக்கியவாசகர்களைச் சந்திக்கும்நிலையில் இருந்ததனால், படைப்பாளி என்றவகையில் சுதந்திரமாக எழுதக்கூடிய சூழ்நிலை எப்பொழுதும் இருந்ததில்லை. மேலும், கம்யூனிசசித்தாந்தத்தை உள்வாங்கிச் செயற்பட்டதனால் என்னைச்சார்ந்த கம்யூனிசத்தோழர்களே பல பத்திரிகை முதலாளிகளுக்கு என்னைக்காட்டிக்கொடுத்தார்கள். இதனால், வீரகேசரி, தினகரன் பத்திரிகைகளில் எனது படைப்புகள் பல பதிவாகாதது மிகவும் வருத்தத்துக்குரிய செய்தியாகும்.

1961ல், தினகரன் பத்திரிகையில் ஆசிரியராக இருந்த திரு.கைலாசபதி ஓய்வுபெற்றபோது, அந்த இடத்தை நிறப்பக்கூடிய நிலையிலிருந்தவன் நான். என்னுடைய நியாயமான கோரிக்கையை திரு.கைலாசபதி ஒப்புக்கொண்டிருந்தார். இதை அறிந்த கொம்யூனிஸ்ட் கட்சித் தோழர்கள் 'தேசாபிமானியில்' என்னால் எழுதப்பட்டு வெளிவந்த கட்டுரைகளைக் காட்டி கிடைத்திருக்க வேண்டிய பதவியைப் பெறமுடியாதவாறு தடுத்தார்கள். இவற்றைப்பார்க்கும்போது எப்போது சுதந்திரமிருந்தது.

→

'தேசாபிமானியில்', போகிறபோக்கிலே என்னும் தலைப்பில் பொக்கன்கணபதி என்னும் புனைபெயரில் தொடர்கட்டுரைகள் எழுதி சமூகநீதிக்கான போராட்டத்தை ஆரம்பித்து தொடர்ந்து போராடிவரும் நான், தமிழ்மொழிமூலமாக என்னை அடையாளப்படுத்துவதைப் பெரிதெனமதிக்கிறேன். தமிழினிது, தமிழே என்மூச்சு, தமிழே என்சகலதுமாக தமிழ்அடையாளத்தை மேலெடுத்துச்செல்கையில், தமிழ்மொழி ஆட்சிபுரியும், சிறிதுசிறிதாக இறைமையை இழந்துகொண்டிருக்கும் தமிழகத்தில் இருந்து வெளிவரும் ஆனந்தவிகடன் என்னும் சிறுசஞ்சிகை, தமிழர்கள் புலம்பெயர்ந்த நாடுகளில் தமிழும் தமிழ் இலக்கியப்படைப்புக்களும் இன்னும் 10 ஆண்டுகளில் அழிந்துவிடும் எனச்சோதிடம் கூறியுள்ள வேளையில், புலம்பெயர் இலக்கியம் புதிய சூழலில் உள்ள பிரச்சினைகளுக்கு முகங் கொடுத்து புதியனவற்றை வரவேற்று படைக்கப்பட வேண்டுமெனக் கருதுகிறேன். என்னுடைய எழுதுகோல் ஈழத்து இலக்கிய சரித்திரத்தை எழுத்தியலினூடாக எவ்வித அடிபணிதலுக்கும் விலைபோகாது தன்னை ஒரு சமூகப்போராளியாக நினைத்துத் தன் கடமையைச் செய்து வருகிறது.

படைக்கப்படும் இலக்கியப்படைப்புக்களில் இறைமையைத்தேடும்போது இலக்கியம் கூர்மைப்படும். கூர்மையான இலக்கியம் படைக்கப்பட வேண்டுமானால் இறைமையை நாடிய போராட்டம் நடத்தப்படவேண்டும். 'தமிழ்பேசும் மக்களின் இறைமையை நாடிய போராட்டத்தை முன்னெடுத்துச் செல்பவர்களுக்கு எனது ஆதரவு எப்போதும் உண்டு.' எனக்கூறும் எழுத்தாளர் எஸ்.பொ என்றழைக்கப்படும் எஸ். பொன்னுத்துரை, 54 வருட தொடர்ச்சி எழுத்தாளர். யாழ்ப்பாணம் நல்லூரில் 04.06.1932இல் பிறந்து, சென்னை அண்ணாமலைப்பல்கலைக்கழகத்திலும், சென்னைக்கிறீஸ்தவக்கல்லூரியிலும் படித்துப் பட்டம்பெற்றவர்.

இலங்கையில், ஊர்காவல்துறை, கம்பளை, மட்டக்களப்பு, கொழும்பு ஆகிய இடங்களில் உள்ள பாடசாலைகளில் ஆசிரியராகக்கடமையாற்றிய இவர், 8 வருடங்கள் நைஜீரியாவில் உள்ள பாடசாலை ஒன்றில் ஆங்கிலஇலக்கியம் கற்பித்துவந்தார். இலங்கையில் உருவாக்கப்பட்ட இனக்கலவரத்தினாற் பாதிக்கப்பட்டு புலம்பெயர்ந்து அவுஸ்திரேலியாவில் வாழ்ந்துவந்த இவர், 2000ம் ஆண்டின் கோடைகாலத்தில் பாரீசுக்கு வந்திருந்தபோது இவருடன் கலந்துரையாட வாய்ப்பு ஏற்பட்டது.

சென்னை, கோடம்பாக்கம் மேம்பாலத்தில் இயங்கிவந்த 'மித்ர' வெளியீட்டகத்தின் நிறுவுனரான இவர், தமிழ்நாட்டு எழுத்தாளர்களான பாரதி–புதுமைப்பித்தன்–மௌனி ஆகியோரின் எழுத்துக்களை அறிந்திருந்ததாகவும், தி.ஜானகிராமனும்–கு.ப.ராவும் தனது போற்றுதலுக்குரியவர்களாக இருந்தார்களெனவும் தோ.மு.சி–தி.க.சி– வல்லிக்கண்ணன்–ஞானி–இந்திராபார்த்தசாரதி–அசோகமித்திரன்–சுந்தரராமசாமி ஆகியோர் தனது நினைவுக்குரியவர்களாக இருந்தார்களெனவும் கூறினார்.

ஈழத்து எழுத்தாளர்களும் இவரது நண்பர்களுமான திரு.டொமினிக் ஜீவா –டானியல்–செ.கணேசலிங்கன் ஆகியோரோடு கருத்து வேறுபாடு கொண்டிருந்த போதிலும் இவர்கள் அனைவரும் என்றென்றும் தனது நண்பர்களுக்கான மதிப்பீடுகளைக் கொண்டிருந்ததாக மேலுங்கூறினார்.

வருடங்கள் பல கடந்தநிலையில் அரசியற்செய்திகளை உள்ளடக்கி இவரால் எழுதப்பட்ட 'மாயினி' என்னும் நாவல், பாரீசில், இலக்கிய ஆர்வலர்களால் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. இவர் அவுஸ்திரேலியாவிலிருந்தபடி ஒலிப்பேழை மூலமாகத் தனது கருத்தையும், இடைவிடாது எழுதிவருவதையும் தெரிவித்திருந்தார்.

'எதிர்காலத் தமிழ் இலக்கியத்தின் ஊற்றுக்கண் புலம்பெயர் இலக்கியவாதிகளிடமிருந்து ஆறாகப்பெருக்கெடுக்கும்' எனக்கூறிய ஈழப்படைப்பாளி என்னுந் தனித்துவத்தோடு இயங்கிவந்த எஸ்.பொ என அழைக்கப்படும் சண்முகம் பொன்னுத்துரை தனது 60ஆண்டுகால உழைப்பைத் தமிழிலக்கிய உலகுக்குத்தந்துவிட்டுத் தனது 82வது வயதில் அவுஸ்திரேலியாவில் மார்கழி மாதம் 2014இல் பிடி சாம்பலானார்.
தமிழ்பேசும்மக்கள் பலசித்தாந்தங்களுக்கும், பலமார்க்கங்களுக்கும் அடிமைப்பட்டிருப்பினும், ஈற்றில் தமிழர்தேசியத்தினூடாகத் தமிழர்கள் என்னும் இனஅடையாளத்தைத் தக்கவைப்பார்களாவென எழுத்தாளர் எஸ்.பொவின் வாழ்க்கை அனுபவங்கள் கேள்வியை எழுப்பியுள்ளன.

இவருடனான கலந்துரையாடலின்போது இவர் வழங்கிய கருத்துக்களின் ஒரு பகுதி 'பாரீஸ் வந்தபோது பேசினார் எஸ்.பொ' என்னுந் தலைப்பில் 31.12.2000இன் வீரகேசரி வாரவெளியீட்டின் இலக்கியச்சாரல் பகுதியில் வெளியாகியது.

திவ்வியநாதன் செல்வத்துரை, காலம் – 07.01.2015, அதிகாலை 1.10

ஒரு நாட்டு மக்களின் பண்பாடு, இயல்பு, பழக்கவழக்கங்கள் முதலியவற்றை அறிந்து கொள்வதற்கு அந்நாட்டில் வழங்கும் பழமொழிகள் பெரிதும் பயன்படுகின்றன. இவ்வடிப்படையில் பிரெஞ்சுமொழியில் வழக்கிலிருக்கும் சில பழமொழிகளைத் தொகுத்து அதற்கான உச்சரிப்பையும், கருத்தையும் கூடியவரை முயன்று உருவாக்கித் தமிழ்மொழியில் தந்துள்ளேன்.

- L'air ne fait pas la chanson - லேர் னு பெப் பா ல ஷோன்சோன்.– வெளித்தோற்றம் ஒருபோதும் உண்மையாகாது. – 'இராகம் ஒருபோதும் பாட்டெழுதாது'
- Après la pluie, le beau temps.- அப்பிறே ல புளூஈ, லு வோ தொம்.–அதிக மகிழ்ச்சி பெரும்பாலும் அடைந்த இன்பத்துக்குள் துன்பத்தைத் தரும்.–'மழைக்குப் பின் வெய்யில்'.
- Beaucoup de bruit pour rien.– வொக்கு டு வ்வுறி பூர் றியாங்.–ஒரு நிகழ்ச்சியின் உள்ளார்ந்த விளக்கங்கள் பெரிய அளவிலான வியப்பை, தோற்றப்பாட்டை உருவாக்கி, பின், தானாகச் சுருங்கியநிலை.– 'பலத்த சத்தங்கள் தேவையற்ற முழக்கங்களாயின.'
- Autant en emporte le vent.- ஓதோங் ஒனொம்போர்த் லு வோங். –பேசும்போது கொடுக்கும் வாக்குகள் விசுவாசமானவையாக இருப்பதில்லை, மேலும் அவற்றை நிறைவேற்றமுடிவதில்லை.–'பேச்சொன்றுமாக செயலொன்றுமாக'
- L'argent n'a pas d'odeur .– லர்ஜோங் ந பா டொடொர்.–முறைதவறிப் பணஞ்சேர்க்க முனைபவர்கள் எவ்வழியாக இருப்பினும் அதனைக் கடைப்பிடிக்கத் தயங்க மாட்டார்கள். –'பணத்துக்கு மணம் இல்லை.'
- Les beaux esprits se rencontrent.– லே வோஸெஸ்பிறி சு றொங்கொந்த்ர். –ஒரு சிந்தனை, ஒரு உண்மை, ஒரு கரு இருவரால் மகிழ்ச்சியுடன் ஒரே நேரத்திற் கூறப்படும் நிலை.– 'உயர்ந்த உள்ளுணர்வுகள் ஒரே நேரத்திற் சந்திக்கும்.'

திவ்வியநாதன் செல்வத்துரை, காலம் – 10.04.2015, காலை 10 மணி

# பிரான்சு நாட்டைச் சேர்ந்த தமிழறிஞர் பிரான்ஸுவா குறோ





மேற்காணும் படத்தில் : தமிழறிஞர் பிறான்ஸுவா குறோவுடன் (François GROS) திவ்வியநாதன் செல்வத்துரை, சிதறல் வெளியீட்டுக் காலம் 20.10.1993

தலித் இலக்கியம் கடப்பாடு, போராட்டம் போன்றவற்றுக்கு முக்கியம் தருவதுடன், உருவத்தை விட உள்ளடக்கத்துக்கு அதிக முக்கியத்துவம் தருகிறது. இலக்கியப்படைப்பை நுணுக்கமாகப் படைப்பதற்கான, செழுமைப்படுத்துவதற்கான காலமும் அவகாசமும் தலித்துக்களுக்கு இல்லை. மராட்டியப்படைப்புக்கள் கருத்தியல் ரீதியில் முக்கியமானவை. இவை வாக்குமூலங்களாகவும், சுயசரிதைகளாகவும், விதந்து பாராட்டி எழுதப்பட்டவைகளாகவும் படைக்கப் பட்டிருந்தாலும், இவற்றைப் பெரிய இலக்கியசாதனைகளெனக் கூறமுடியாது.

தமிழைப் பொறுத்தவரை என்னைப்பாதிக்கக்கூடிய படைப்பைத் தேடுகிறேன். தலித் இலக்கியமாகப் படைக்கப்படும் படைப்புக்கள் வெகுசனஇலக்கியம் (மக்கள் இலக்கியம்) என்னும் நிலைக்குச் சென்றுவிடுகின்றன எனக்கூறும் பிரான்சு நாட்டவரான தமிழறிஞர் திரு.பிறான்ஸுவா குறோ பிரான்சில், லியோன் (Lyon)என்னும் இடத்தில் அமைந்துள்ள லியோன் பல்கலைக்கழகத்தில் பண்டைய பிரெஞ்சு இலக்கியத்தைக் கற்றுக்கொடுப்பதற்கான சிறப்புப்பட்டத்தையும், ஓமேர் காலத்து கிரேக்க இலக்கியத்தில் உயர்கல்விப் பட்டத்தையும், 1957இல், பிரெஞ்சு இலக்கணத்தைக் கற்றுக்கொடுப்பதற்கான சிறப்புப் பட்டத்தையும் பெற்றவர். சமஸ்கிருதத்துடன் ஒப்பீட்டு இலக்கணத்தின் வழியாக இந்திய இலக்கண இலக்கியங்களைக் கற்றறிந்ததுடன் மனிதவியலில் சிறப்புப்பட்டமும் பெற்று அல்ஜீரியா நாட்டில் பிரெஞ்சுக் கல்லூரியொன்றில் கடமையாற்றிய பின்பு அங்கு இராணுவச்செயலகத்தில் நிருவாகிகளில் ஒருவராகச் செயற்பட்டார். ஆபிரிக்கா, மடகஸ்கார் போன்ற இடங்களிலும் மேற்கூறப்பட்ட நிருவாகச் சேவையில் ஈடுபட்டிருந்தார்.

1954இல், பிரான்சு நாட்டின் வெளிநாட்டமைச்சினால் உருவாக்கப்பட்ட பிரெஞ்சுக்கல்விக்கூடத்தில் மற்றுமொரு பிரெஞ்சு நாட்டைச்சேர்ந்த தமிழறிஞர் பிலிஓஸா தலைமையில், 1963இல், பிரெஞ்சு இலக்கண இலக்கியத்தைக் கற்றுக் கொடுப்பதற்காக இணைந்து கொண்டார் பிறான்ஸுவா குறோ. பாண்டிச்சேரித் தொடர்பின் காரணமாக திராவிட மொழியியல் ஆய்வில் வெற்றிபெற்றதுடன் நூற்றாண்டுகளைக்கடந்த மையநகரங்கள், நவீன நகரங்களில் ஆய்வுகளை மேற்கொண்டார்.

தமிழ் மொழியில் எழுதப்பட்ட பழைய இலக்கியங்களான பரிபாடல், திருவள்ளுவரால் எழுதப்பட்ட அறத்துப்பால், காரைக்கால் அம்மையார் பாடல்கள், தேவாரப்பாடல்கள், பெரியபுராணம் ஆகியவற்றை தர்க்க சாத்திரமுறையில் ஆராய்ந்து பிரெஞ்சுமொழியில் வெளியிட்ட பிறான்ஸுவா குறோ அவர்கள் பாரதியையும், பாரதிதாசனையும் நன்கு அறிந்தவர். பன்னாட்டு தமிழ்க்கல்விப் படிப்புக்களின் கல்விக்கூடத்தின் சென்னைக்கிளையின் ஆளுனராகவும், உலகத்தமிழ் ஆராய்ச்சிக் கழகத்தின் துணைத்தலைவராகவும் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

உலகத்தமிழ் ஆராய்ச்சிக் கழகத்தின் துணைத்தலைவராக இருந்த இவர் 'உலகத்தமிழ் ஆராய்ச்சிக் கழகம் என்பது ஒரு காகிதமலர். உலகத்தமிழ் மாநாடுகளின் போது மட்டும்தான் அது மணம் வீசும்' எனக் கூறியிருந்தார்.

உலகத்தமிழ் மாநாடுகள் பல தளங்களில் இயங்குகின்றன. சென்னை மரீனாக் கடற்கரையில் அண்ணாவையும், யசீர் உசேன்னையும் வரவேற்கக் காத்திருந்த கூட்டத்தை எண்ணிப்பார்க்கிறேன். தமிழர்கள் தங்கள் மொழியைக் கொண்டாட விரும்புகிறார்கள். அதில் ஆபத்தொன்றுமில்லை. இயல்பானவிடயம்தான். இதைத்தாண்டி இன்னுஞ்சில கட்டங்கள் உள்ளன. உலகெங்கும் தமிழிற் செயற்படும் அறிஞர்கள், தமிழ்க்கலாச்சாரத்தை அதற்கு முன் விரிவாக அறியாதவர் கள் இந்நேரத்தில் அதனை விரிவாக அறியும் வாய்ப்பைப் பெறுகின்றார்கள். இவ்வறிஞர்கள் ஒன்றுகூடும்போது தமக்குட்

கருத்துப்பரிமாறல்களை ஏற்படுத்திக் கொள்கின்றனர். பார்வையாளர்களும் இவ்வறிஞர்களோடு தொடர்பை ஏற்படுத்திக் கொள்கின்றனர். இம்மாநாடுகள் இதற்கு உதவுகின்றன எனக்கூறலாம். சென்னையில் நடந்த மாநாடொன்றில் எழுத்தாளர் சி.சு.செல்லப்பா என்பவரைச் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. 'எழுத்து' பத்திரிகையின் பிரதிகளையும், 'வாடிவாசல்' குறுநாவலையும் கொடுத்தார். அச்சந்திப்பு தற்காலத் தமிழ் இலக்கியத்துக்குள் நுழைவதற்கு வழியை ஏற்படுத்தி தனக்குத் தந்துள்ளதாகக் கூறியுள்ள பெரியவர் பிறான்ஸுவா குறோவுடன் தொடர்பு ஏற்பட்டு சங்ககால இலக்கியம் பற்றி அறிய வாய்ப்பு ஏற்பட்டது. இக்காலங்களில் என்னால் எழுதப்பட்டு வெளியிடப்பட்ட 'சிதறல்' கவிதைத் தொகுதியை இவரிடம் கொடுத்து இவருடைய கருத்துக்களை எதிர்பார்த்து நின்ற காலங்களை எண்ணிப்பார்க்கிறேன். ஒருநாள், சிதறலில் வெளிவந்த கவிதைகள் பற்றி தனக்கு விளக்குமாறு கூறி ஒருநாள் வகுப்புக்கான நேரத்தை ஒதுக்கித்தந்ததை எண்ணிப்பார்க்கிறேன். சக மாணவர்கள் முன்னிலையிலும், இவர் முன்னிலையிலும் எனது கவிதைகளைப்பற்றி விளக்கவுரை நிகழ்த்த எனக்கு வாய்ப்பு ஏற்பட்டு, நிகழ்ச்சி முடிந்ததும் கவிதைகள் நன்றாக இருப்பதாகவும் புதிய முறையில் அமைந்துள்ளதாகவும், சில இடங்களில் என்னால் புகுத்தப்பட்ட பேச்சுத் தமிழ் தனக்குப் புரியவில்லையெனவுங் கூறி இக்கவிதைகள் போல் நிறைய உள்ளனவா எனக் கேட்டதையும் எண்ணிப் பார்க்கிறேன். இவற்றைப் பிரெஞ்சு மொழியில் மாற்றுவதற்கு, தான் உதவி புரிவதாகக் கூறி முன்வந்தார். என் வேலைப்பளு காரணமாகப் பிற்போடப்பட்டதனால் இதை நடைமுறைப்படுத்த முடியாமற்போனது மகிழ்ச்சியற்ற விடயமாக இருப்பினும், இவரின் தொடர்பையும் இவர் முன்னிலையில் எனது கவிதைத் தொகுதியை சோர்பொன் பல்கலைக்கழக வளாகத்தில் அறிமுகஞ்செய்து வைத்ததையும் எண்ணிப்பார்க்கும் போது எப்போதும் பசுமரத்திலிருந்து பால்வடியும் நிலையைத் தோற்றுவிக்கிறது.

திவ்வியநாதன் செல்வத்துரை, காலம் 06.04.2015, இரவு 10.34

## இந்துக்கோட்பாடு

பசுமையை இழந்து வெறுமையாய் நிற்கும்
பட்டமரங்கள்,
பறிகொடுத்த வாழ்வுக்காய் ஏங்கும்,
தறி நெய் வெண்புடைவை கட்டும்
இந்துப்பெண்கள்.

## பூக்களின் வாழ்வு

பறந்துவரும் வண்டுக்குப்
பற்களைக் காட்டியதாற்
பாழாய்ப்போயின
பூக்களின் வாழ்வு.

## பிரமுகர்

மாலை அணிந்த பிரமுகர்
மக்கள்விரோதி.
மகிழ்ச்சிக் களிப்பில்,

மன்றில், அவ்வையின் வான்கோழியாட்டம்-சிறு
மழைத்தூறல், இளவெய்யிற்காலம்
இப்போ இவர் பக்கம்.

## புடலங்காய்

மலர்முகம்
இதழ்விரியும்
மதிமயக்கும்
மங்காத அருந்ததிகள்
கண்ணீர்சிந்தும்
திருமணச்சந்தையில்
விடலைப்புடலின்
விலை பல இலட்சங்கள்.

## நாணயம்

மடியிற் கனமிருக்கும் போது
மாலை மரியாதை.
மடிதன் கனத்தை இழந்த போது
மதிப்பிழந்த நாணயம்.

திவ்வியநாதன் செல்வத்துரை, காலம் - 1994

## மானம்

மழை, வெய்யில் பாராது
மனிதத் தலை காத்த குடை-தன்
மானங்காக்கச் சிறு துண்டு நூலின்றி
மரணப் படுக்கையில் ஒரே கிடை

## நாகரீக மனிதன்

அலங்காரமின்றி அரையை இலை- குழை மறைத்த
அன்றைய மனிதன் "அநாகரீக மனிதன்".
அலங்காரம் புடைசூழ அரைநிர்வாண
இன்றைய மனிதன் நாகரீகமனிதன்.

## பிணம்

தவறிய உயிருக்கு ஒளிவேண்டித்
தலைக்கருகே குத்துவிளக்கு
பந்தபாசத்தை வலுப்படுத்தச் சுற்றிலும்
பற்றியெரியும் தீப்பந்தங்கள்

## அரிசி

மணவறையில் அறுகரிசி
பிணவறையில் வாய்க்கரிசி

## மிடுக்காய்ப் பறந்த கொடி

மிடுக்காய்ப் பறந்த பலநிறக் கொடி
படுபயங்கரமாய் வாதத் தடையில்
விடுதலைக்காய் களத்தில் தலைவன் இறக்க
எடுப்பாரின்றிக் குப்பைத் தொட்டிக்குள்

## உணவு

தேடிக்
கிடைத்துவிட்டால்
ஏழைக்குத்
தேவாமிர்தம்

## சமத்துவம்

இருளில் இருந்தபோது
இருந்தது சமத்துவம்
இருள் நீங்கியபோது
பறிபோனது அத்தத்துவம்

திவ்வியநாதன் செல்வத்துரை, காலம் - 1994

## விபரமறிந்த புகலிடத்துப் பாட்டனார்

பட்டத்துராணி மாயாதேவி படுக்கைக்குப் போகிறாள். ஒளிர்விடும் நட்சத்திரமொன்று விண்ணிலிருந்து இறங்கி வந்து மாயாதேவியின் வயிற்றில் பூரவும், காலைக்கதிரோன் உதிக்குமுன் பட்டமரங்கள் தளிர்க்கவும், பாழுங்கிணறுகள் ஊறிப்பெருகவும், சுடுகாடு பூத்து மணம் பரப்பவும் கனாக்காண்கிறாள்.

மறுநாட்காலையில், தான் கண்டகனவை அரண்மனைப்பெரியவர்களிடம் கூறுகிறாள். 'நீங்கள் கண்ட கனவின் பயனால் சிறந்த ஆண்மகனைப் பெறுவீர்கள். உங்கள் செல்வமகன் தெய்வீகமகனாவான், சிறந்த மெய்ஞானியாகி உண்மையை வாழ்வாக்கி இம்மண்ணுலகம் முழுவதையும் ஆள்வான்.' என்றனர் அரண்மனைப் பெரியோர்.

இராணிமாயாதேவி கருவுற்றாள். காலங்கள் கடந்தன, ஒருநாட் பகற்பொழுது, உச்சிவெய்யில் தாங்கமுடியாதவளாய் நந்தவனத்தில் நடந்துதிரிந்த களைப்புத்தீர, அங்கு வளரும் அசோகமரத்தின் நிழலில் ஒதுங்குகிறாள். விடையமறிந்த அசோகமரம் தனது தழைகளைத் தாழ்த்தி சிறுவீடு கட்டுகிறது, பூக்களை உதிர்த்துப் பஞ்சணையாக்குகிறது. பக்கத்தில் உள்ள பாறை தன் பங்கிற்கு தன்னைப்பிளந்து ஓடும் அருவியை ஒழுகவிடுகிறது.

பிரசவவேதனை தாங்கமுடியாதவாறு தவிக்கிறாள் மாயாதேவி. அசோகமரம் கட்டியவீட்டினுள் மகப்பேற்றுவலியால் கால்களை அடித்தவாறு திணறுகிறாள். இராணியின்தோழி செய்வதறியாது துடிக்கிறாள். சிலநிமிடங்கள் கழிகின்றன, 'குவா! குவா!' சத்தத்துடன் அழகான ஆண்குழந்தை. தோழி அள்ளிஎடுக்கிறாள், பாறையின் அருவியில் குளிப்பாட்டுகிறாள். குழந்தை அழுகிறது.

பிஞ்சுக்கரங்களை அசைத்தவாறு அழுத குழந்தையைக்கண்ட மாயாதேவி, பெற்றவலி தீரும்வரை 'ச்சு! ச்சு!' எனும் ஓசையை எழுப்பியவாறு மகனின்மேல் பலவிடங்களில் முத்தமிடுகிறாள். இவனின் அழகில் மயங்கிக் கண்ணீர் வடிக்கிறாள்.

செய்தியறிந்த அரண்மனைவாசிகள் அனைவரும் ஓடிவருகின்றனர். குழந்தையைக் கண்ட அரண்மனைப் பெரியோர்கள் 'இது தெய்வீகக்குழந்தை! இது தெய்வீகக்குழந்தை! சந்தேகமேயில்லை இதுதெய்வீகக்குழந்தை' என ஒருவர்பின் ஒருவராகத் தங்களுக்குள் பேசிக்கொள்கின்றனர். 'மூக்கும் முழியுமாக எவ்வளவு அழகான குழந்தையிது, இதுவல்லவா அழகு, இவ்வளவு அழகான குழந்தையைக்காண நாங்கள் கொடுத்து வைத்தவர்கள்தான்' என அரண்மனைப் பெண்கள் பேசிக்கொள்கிறார்கள்.

அழகானகுழந்தையைப் பெற்ற மகிழ்ச்சியில் நாடு விழாக்கோலம் பூண்டுள்ளது. மாநகரவாசல் குலைவாழைகளினாலும், வீதிகள் குருத்தோலைத் தோரணங்களினாலும் அலங்கரிக்கப்படுகின்றன. வேடிக்கை காட்டுவோர் நெருப்பெரியும் வட்டத்தினுள் தாவிப்பாய்கின்றனர். சிலர் வாட்களைச்சுற்றி வித்தை காண்பிக்கின்றனர். சிலர் காலிற் சதங்கை கட்டி ஆடுகின்றனர். சிலர் தலையில் செம்பு வைத்துக் கரகமாடுகின்றனர். வாணவேடிக்கைகள் வானை முத்தமிடுகின்றன. இப்படியாக நாடு விழாக்கோலம் பூண்டுள்ளது.

எதிர்கால மன்னனைக்காண நாடுபோற்றும் வணிகர்கள் தங்கத்தட்டுகளில் பட்டுப்புடவைகள், பலதரப்பட்ட வாசனைத்திரவியங்கள், முத்துமணிமாலைகளுடன் வருகிறார்கள். பல நாட்டுமன்னர்களும் வருகிறார்கள். குழந்தையின் பெற்றோர்கள் குழந்தைக்குச் சித்தார்த்தன் எனப் பெயர் சூட்டி மகிழ்கின்றனர்.

கொண்டாட்டம் மிடுக்கோடு நடைபெறுகிறது. இந்நேரத்தில், ஐம்புலன்களையும் அடக்கி அரசமர நிழலில் தவம் புரியும் அசிதமாமுனிவர் அங்கு வருகிறார். முனிவரைக்கண்டதும் மன்னன்முதல் விருந்தினர்வரை எழுந்துநின்று மரியாதை செய்கின்றனர். மன்னன் தனக்கருகே உள்ள ஆசனத்தில் அமருமாறு முனிவரை அன்புடன் வேண்டுகிறான். பட்டத்துராணி மாயாதேவி குழந்தையைச் சுமந்தவாறு அசிதமாமுனிவரை நோக்கி வருகிறாள். அப்போது அசிதமாமுனி 'தாயே சற்றுநில், இக் குழந்தையை நான் வணங்கவேண்டும்.' இராணி குழந்தையை முனிவரின் காலடியில் வைக்கிறாள். முனிவர் 'அவனே இவன்! சந்தேகமில்லை, இவன் புனிதன், இவன் புத்தன், உண்மை ஒளியால் உலகில் அறியாமை இருள்போக்கிடும் சூரியன், ஆயிரம் ஆண்டுக்கொருமுறை மலரும் மலரிவன். அரசே! இவனைப் பெறுதற்கு என்ன தவம் செய்தனையோ நானறியேன். ஆயினும், உன் உள்ளத்தை உருக்கும் சம்பவமொன்று இவனால் ஏற்படும். மகாதேவி, உன் வாழ்க்கை துன்பமடையும், நீ துன்புறுவாய், நான் வருகிறேன்.' எனக் கூறிச்செல்கிறார்.

வருடங்கள் கடந்து செல்கின்றன. சித்தார்த்தன் வெகுவேகமாக வளர்ந்து வருகிறான். ஒருநாள், அரண்மனை நந்தவனத்தில் உலாவருகிறான். மலர்ந்து மணம் பரப்பும் மலர்களின் வாசனையை நுகர்கிறான். இம்மலர்களின் தேனைக்குடிப்பதற்குக் கருவண்டுகள் வட்டமிடுகின்றன. இவற்றை இரசித்தபடி நடந்து வருகிறான் சித்தார்த்தன். வரும் வழியிலுள்ள தடாகத்தில் அன்னப்பறவைகள் அங்குமிங்குமாக விளையாடுவதைக் கண்டவுடன் மனதைப்பறி கொடுக்கிறான். தடாகத்திலிருந்து சில பறவைகள் உயரப்பறந்து செல்கின்றன. திடீரென ஓர் அன்னப்பறவையின் இறக்கையில் அம்புபட்டுத் தரையில் சுருண்டு விழுகிறது. இரத்தம் பீறிட்டுப்பாய வேதனையில் துடிக்கிறது. சித்தார்த்தன் திரும்பிப்பார்க்கிறான். நண்பனும் உதவியாளனுமான தேவதத்தன் கைகளில் அம்புவில்லுடன் விழுந்தபறவையை நோக்கி ஓடிவருகிறான். இதற்கிடையில், சித்தார்த்தன் விழுந்த பறவையருகே சென்று, பறவையைக் கைகளினால் எடுத்து மார்புடன் அணைத்து, தடவித்தடவி இறக்கையின் மீதிருந்த அம்பினை இழுத்தெடுக்கிறான். அருகிலிருந்த இலைகுழைகளைக் கசக்கிப் பிழிந்து இரத்தம் வடியுமிடத்தில் அப்பி இரத்தக்கசிவை நிற்பாட்டுகிறான். இழுத்தெடுத்த அம்பின் முனையால் தனது முழங்கையில் குத்திப்பார்க்கிறான். 'ஐயோ!' என அலறுகிறான். இரக்கங் கொண்டவனாக மீண்டும் பறவையைத் தடவிக்கொண்டிருக்கும்போது

–தாமதிக்காதே பறவையைக்கொடு! இது எனக்கே உரியது!

–தேவதத்தா! நீ எய்த அம்பினால் பறவை இறக்குமாயின் அது உனக்குச்சொந்தம், நீயே பார்! நிலைமை அப்படியல்ல, இதன் சிறகினிலேதான் அம்பு பட்டுள்ளது, இன்னும் பறவை உயிருடன்தான் உள்ளது. இதனைக்காப்பது எனது கடமை, எனப் பதில்

கூறுகிறான் சித்தார்த்தன்.

–இறக்க நேர்ந்தாலும் உயிருடன் வாழ நேர்ந்தாலும், பறக்கும்பறவை அம்புபட்டு நிலத்தில் வீழ்ந்தால், அது, அம்பை எய்தவனுக்கே சொந்தம். என் அம்புபட்டு வீழ்ந்த இப்பறவையை என்னிடம் கொடுத்துவிடு.

–இல்லையில்லை! பறவை என்பறவை, வீண்பிடிவாதம் வேண்டாம்! இங்கிருந்து போய்விடு.

–இங்கிருந்து போவதா! என்ன கூறுகிறாய், பறவையின்றி வெறுங்கையுடன் எப்படிப்போகமுடியும் ஒரு சத்திரியனால்.

–அப்படியானால், இதற்கு ஒரேயொரு வழி நீதிமன்றந்தான். செல்வோம் வா!

சித்தார்த்தனும் தேவதத்தனும் நீதிமன்றத்தினுள் சந்திக்கின்றனர். நீதிமன்றப்பெரியோர் செய்வதறியாது விழிக்கின்றனர். யாரும் முடிவுகூறத் துணிவில்லாது இருக்கும்போது, புலமைமிக்க புரோகிதர் ஒருவர் 'உயிரைக் கொல்ல முயலும் ஒருவனுக்கு அந்த உயிர்மீது உரிமை கொண்டாட என்ன உரிமை உள்ளது. உயிரைக்காப்பவனுக்கே உயிர்மீது உரிமை உண்டு. வீண் விவாதம் பேசிப்பயனில்லை, பறவையைச் சித்தார்த்தனிடமே கொடுத்து விடுங்கள்.' எனக் கூறுகிறார்.

ஒருயிரைக் காப்பாற்றிய மகிழ்ச்சியில் சித்தார்த்தன் வாழ்ந்து வருகிறான். ஒருநாள், அரண்மனையில்,

-அறிவின் இருப்பிடமே! அமைச்சரே! அசிதமாமுனிவர் கூறியது அத்தனையும் உண்மை. என்மகன், அரண்மனைச் செல்வம், அதிகாரம் அனைத்திலும் ஆசையற்றவனாக இருக்கிறான். சத்திரியனுக்குரிய எண்ணங்கள் அவன் சிந்தனையில் இல்லை. ஆசையை அடியோடு நீக்கி முற்றும் துறந்தமுனிவனாகிக் காட்டையாள விரும்புகிறான். பார்த்தீர்களா என் நிலையை! இந்நாட்டையாள ஒரு வாரிசு இல்லாது தவிக்கிறேன். இதற்கு ஒரு வழி கூறுங்கள்.

–மன்னா! இது ஒரு சிறுநோய். இந்நோய் நீங்க காதலைப்போல் கை கண்டமருந்து இவ்வுலகில் இல்லை. மைந்தனை மங்கையர் வலையில் வீழ்த்தி, காமக்கிளர்ச்சியில் தோய்த்தெடுத்து, மனதுக்குப் பிடித்த மனையாளோடு வாழவைப்பதே சிறந்த வழி.

அரண்மனைப் பெரியோர் அனைவரும் ஒட்டுமொத்தமாக 'ஆம், ஆம், இதுதான் சிறந்தவழி! இதுதான் சிறந்த வழி!' என ஆமோதிக்கின்றனர்.

உலகம் முழுவதிலும் உள்ள அரசகுடும்பப் பெண்களுக்கு சுயம்வர அணிவகுப்பில் கலந்து கொள்ளும்படி மன்னன் அரசாணை அனுப்புகிறான். அரசகுலப்பெண்டீர் அணியணியாக மன்னவன் அரண்மனை நோக்கி விரைகின்றனர். சித்தார்த்தனைக் கண்டு உள்ளம் பூரிப்படைகின்றனர். சிலர் காதல்வசப்பட்டுக் கற்பனைக் குதிரையில் சவாரி செய்கின்றனர். இப்படியாகப் பற்பல உருவங்களில் அழகுப்பதுமைகள்.

யசோதரை என்னும் அழகுப்பதுமை நேருக்குநேராக நிமிர்ந்து நோக்கி வரும்பொழுது சித்தார்த்தன் திடுக்கிட்டு உள்ளம் திகைப்படைகிறான். தன் மார்பிற் கிடந்த மலர்மாலையைக் கழற்றி யசோதரையைத் தன்னுடன் சேர்த்துக் கட்டுகிறான். சித்தார்த்தன் காதல் வயப்பட்டு, இருவர் கண்களும் ஒருவரை ஒருவர் சந்திக்கின்றன, காதல் மொழிபேசிக் கவிபாடுகின்றன. யசோதரையை வாழ்க்கைத்துணையாக ஏற்றுக்கொள்கிறான் சித்தார்த்தன்.

ஒருநாள், சித்தார்த்தன் யசோதரையுடன் அந்தப்புரத்தில் இருக்கிறான். அந்தப்புரத்து அழகியவீணையொன்று பக்கத்தில் இருக்கிறது. மெல்லிய காற்று வீசும்பொழுது அந்த வீணையில் இருந்து கிளம்பும் நாதம் பாடலாக ஒலிக்கிறது. ஒலிக்கும் பாடல் சித்தார்த்தனின் காதில் மட்டுமே விழுகிறது. 'துன்பக்கடலிலே விழுந்து சுழலும் உலகை இன்பக்கரையேற்ற நீ வரவேண்டும். வையகம் முழுவதையும் காக்க நீ வரவேண்டும். துன்பம் நீங்கிட நீ அரசைத் துறந்திடவேண்டும்.' என்னும் பாடல் காதுகளில் ஆழமாகப் பதிகிறது.

மறுநாள், சித்தார்த்தன் பஞ்சணையில் யசோதரையுடன் படுத்திருக்கிறான். முதன்னாள் கேட்டபாடல் மீண்டும் சித்தார்த்தனின் காதுகளில் ஒலிக்கிறது. கவலையில் மூழ்கியவாறு நட்சத்திரங்களைப் பார்க்கிறான். இதுதான் தருணமென எண்ணித்துணிந்தவாறு அதிகாரம், அரண்மனைச்சுகம், அந்தப்புரப்பெண்கள், அகன்றுவிரிந்தநாடு, ஆள், அம்பு, சேனை அனைத்தையும் அரைநொடியில் உதறித்தள்ளி, உண்மையின் ஒளிதேடி, முற்றும் துறந்தமுனிவனாகிக் காட்டுக்குப் போகிறான்.

'அன்று, அதிகாரம், அரண்மனைச்சுகம், அந்தப்புரப்பெண்கள், அகன்றுவிரிந்தநாடு, ஆள், அம்பு, சேனை அனைத்தையும் அரைநொடியில் உதறித்தள்ளி, உண்மையின் ஒளிதேடி, முற்றும் துறந்தமுனிவனாகிக் காட்டுக்குச் சென்ற சித்தார்த்தனெங்கே?'

'இன்று, அதிகாரம், அரசின்சொத்து, சுகம், சுண்டக்காய் நாடு, அடியாட்கள், ஆயுதபாணிகள் அனைத்தையும் அடையும் பொருட்டுத் துறவறம்பூண்ட சித்தார்த்தர்கள் அங்கே, அச்சிறுதீவினுள்ளே' எனக்கூறிப் பெருமூச்சு விட்டவாறு, எரியும் மின்விளக்கின் பொத்தானை அழுத்துகிறார் விபரமறிந்த பாட்டனார் புகலிடத்தில்.

| திவ்வியநாதன் செல்வத்துரை, காலம் : *17–3–2000*, அதிகாலை– *2.30* |
|---|

**14.05.2000இன் வீரகேசரி வாரவெளியீட்டின் சஞ்சிகை 1இல் 'அன்று அனைத்தையும் துறந்த சித்தார்த்தன் இன்று எங்கே?' என்னும் தலைப்பில் சிறுமாற்றத்துடன் வெளியாகியது.**

பிரெஞ்சுப் பழமொழிகள் தொடர்ச்சி….

- Avec un si on mettrait Paris en bouteille.- அவெக் அன் சி ஒந் மெத்திறே பரீ ஒங் வுத்தெய்.–எல்லா ஐயப்பாடுகளுடன் அனைத்தும் சாத்தியமாகும்.–'ஆல் என்னும் மூன்றாம் வேற்றுமை உருபால் பாரிஸ்நகரைப் போத்தலுக்குள் அடைக்கலாம்.'
- A quelque chose malheur est bon.- ஆ கெல்க்கு ஷோஸ் மலோர் ஏ வோம்.– கோபங்கள் ஏற்படுத்தும் நிகழ்ச்சிகளால் இலாபத்தையும் பெறமுடியும், சிறந்த அனுபவங்களையும் பெறமுடியும்.– 'கோபங்கள் இலாபத்தையும் அனுபவத்தையும் தரும்'

# வாசுகி பாய்ந்துவிட்டாள்

– மகளே! காற்றுள்ள போதுதான் தூற்றவேணும். மாட்டனெண்டு சொல்லிப்போடாதை. அம்மா, மாப்பிளை மேற்படிப்புப் படிச்சவராம். இங்கெ இருக்கிற காலங்களிலெ அரசாங்கவேலை பாத்தவராம். இப்ப மூண்டு வருசத்துக்கு முதல் பிரான்சுக்குப் போய் நல்ல வசதியாய் இருக்கிறாராம். சாதகப்பொருத்தம் நல்லாய் இருக்குதாம். ஆனபடியாலெ.......... இது அப்பாவின் தொடக்கவுரை.

– அப்பா! வேண்டாமப்பா! இந்தக்கலியாணத்திலெ எனக்குத் துளிகூட விருப்பமில்லையப்பா. என்னெ வற்புறுத்தாதேங்கப்பா......... இது என்னுரை.

– பிள்ளெ! எங்கடெ சீவியம் சரியான கஸ்ரத்திலெ போகுது. மாரிவந்தால் அப்பாக்கு வருத்தம் வரும். என்ரெ கையிலெ காசொண்டுமில்லெ, அதோடெ உனக்கொரு தங்கச்சி இருக்கிறாள். அவளும் வயசுக்கு வந்து கன வருசங்களாச்சுது. இந்தநேரத்திலெ, வீடுதேடிவாற சீதேவியெ காலாலெ உதைக்கிறது நல்லதில்லெ. நீ படிச்ச பிள்ளெ, அதனாலெ நீ யோசிச்சுப்பார் பிள்ளெ...... இது அம்மாவின் சார்புரை.

– வாசுகி! உன்ரெ குறிப்பெக்குடுத்தனாங்கள், நல்ல பொருத்தமெண்டுதான் எங்கடெ வீடுதேடிவந்து எல்லாம் விசாரிச்சுக்கொண்டுபோயினம். மாப்பிளெ பிரான்சிலெ வேலெ. வயசு இருபத்தெட்டு. நாங்கள் மாப்பிளென்ரெ படமும் பாத்தோம். பறுவாயில்லெ, மாப்பிளென்ரெ தாய், தகப்பன், ஆசிரியர்கள், நல்ல குடும்பம். படிச்சவர்கள். பண்பானவர்கள். தங்களுக்கு படிச்சபொம்பிளெதானாம் வேணும். மாப்பிளெக்கு மூண்டு பெண் சகோதரங்களாம். மூண்டுபேரும் கலியாணம் செய்திட்டினமாம். மாப்பிளெ ஒராள்தானாம் ஆம்பிளெ. நல்ல இடம். பிரச்சனெ இல்லெ. எங்கள் எல்லாருக்கும் விருப்பம். அடுத்தது..... நீ உதயத்துச்செவ்வாய், உனக்கு மாப்பிளெ எடுக்கிறது கஸ்ரம். வயசு போனால் வடிவும் கெட்டுப்போடும். இதெ.... மனசிலெ வைச்சுக்கொண்டு, இந்தச்சந்தர்ப்பத்தெ நழுவவிடாதெ, கலியாணமெண்டால் ஆயிரங்காலத்துப்பயிர், சீதனமா இப்ப கட்டின வீட்டெ தாறதாய்ச் சொன்னோம்..... இது சித்தியின் விசேடவுரை.

– சித்தி! என்ன சித்தி! நீங்கள் படிச்சனீங்கள்தானே சித்தி! எனக்கிப்பெ கல்யாணம் வேண்டாம் சித்தி! நான் போட்டோ கூடப்பாக்கேலெ சித்தி. போட்டோவாலெ, நான் கல்யாணம் பண்ணப்போறாளுடைய மனதெ அறியமுடியுமா சித்தி!? வேண்டாம் சித்தி, காட்டுவாசிகளுக்குக்கூட தங்கடெ துணையெ தெரிவுசெய்யிறத்துக்கு சுதந்திரமிருக்கு சித்தி, எனக்கில்லெயா? அம்மா! நான் பிறந்தநேரமே என்னெக் கொலைசெய்திருக்கலாமே!..... மீண்டும் என்னுரை.

– ஸ்ஸ்ஸ்... பொத்துவாயெ! சுதந்திரம் வேணுமெண்டால் வீட்டெவிட்டு வெளிய போ. நாங்களெல்லாம் குறிப்புப்பாத்து, நாள்பாத்து, போட்டோ பாத்துக் கல்யாணம் பண்ணேலெயா? எங்கடெ தாம்பத்திய உறவு நீடிக்கேலெயா? நாங்கள் பிள்ளைகள் பெறேலெயா? எங்கடெ குடும்பத்திலெ மகிழச்சியில்லெயா? படிச்சிட்டாவாம், பெரிசாப்பேசவந்திட்டா, இவ ஒருத்திக்குத்தான் வாழ்க்கேலெ அக்கறெ. மற்றஒருத்தருக்கும் அக்கறெயே இல்லெயெண்ட நினெப்பு. முடிவெடுத்தது முடிவெடுத்ததுதான்!.... இப்படியாகச் சித்தப்பாவின் அகோரஉரை.

'என்ரெ வாழ்க்கெ கருகிப்போச்சே! ஐயோ அம்மா! ஐயோ அப்பா! என்னெ எல்லாருமாய்ச் சேந்து ஏமாத்திப் போட்டீங்களே! எனக்கு உதவிசெய்ய யாருமே இல்லெயா!' எனக் கண்ணீர் விட்டுக் கதறியழுத வாசுகியின் கதை ஆரம்பமாகிறது. இருபத்தைந்து வயதைப் பூர்த்திசெய்தவள், நடுத்தரக்குடும்பத்தைச் சேர்ந்த தந்தையும், தாயும் ஆரம்பப்பள்ளி ஆசிரியர்கள். இவளது சமுதாய அமைப்பில் பெண்கள் இருக்கும் குடும்பத்தின் நிலை மிகவும் பொறுப்பு வாய்ந்தது. வாசுகி உயர்தரம் விஞ்ஞானப்பிரிவில் கல்வி கற்றவள். கல்வியை மூலதனமாகக் கொண்ட இவள், இவளது நாட்டில் நடந்த அரசியல் ஒடுக்குமுறை, இன அழிப்பு, போர்ச்சூழல் காரணமாக மேற்படிப்பைத் தொடரமுடியாதநிலையில் வீட்டுக்குப்பாரமாக இருந்து வருகிறாள்.

ஒருநாள், <<வாசுகி! இந்தமண் எங்களின் சொந்தமண். ஆக்கிரமிப்பாளர்களின் ஆட்சிக்கு அடிமைப்பட்டு எங்கள் வாழ்வையும், வளத்தையும் இழப்பது முறையல்ல. எங்கள் இனத்தை அடியோடு அழித்துக்கொண்டிருக்கிறார்கள். எங்கள் மூதாதையரின் வேர்பாய்ந்த மண்ணைத் திட்டமிட்ட குடியேற்றத்தின் மூலம் பறித்துக்கொண்டிருக்கிறார்கள். நாங்கள் இதை எதிர்த்துப் போராட வேண்டும். அதனால் எங்களுடன் இணைந்து போராடவாருங்கள்!>> எனப் போராடும் இயக்கம் ஒன்று கேட்டபோது, << எங்கடெ அப்பா ஒரு வருத்தக்காரர். தங்கச்சியின்ரெ எதிர்காலம் என்ரெ கையிலதான் இருக்கு, நான் தொடந்து படிக்கவேணும். என்ரெ படிப்பாலெ எங்கடெ இனத்துக்கு நன்மெ செய்யலாமெண்டிருக்கிறன். அதனாலெ என்னெ வற்புறுத்தாதேங்கோ!>> எனக்கூறி இவர்களுடன் இணைந்து போராட மறுக்கிறாள். ஆனால், இவளது தாயும், தந்தையும் ஆசிரியர்கள் என்ற காரணத்தினால் ஊரில் ஏற்படும் சிறுபிணக்குகளைத் தீர்க்கும் சமாதான நீதிபதிகளாக இயக்கத்தினால் நியமிக்கப்படுகிறார்கள்.

காலங்கள் கடந்து செல்கின்றன. மேற்குறிப்பிட்ட இயக்கத்தின் ஆதிக்கத்துக்குள் இருந்த இவளது கிராமம் சிறீலங்கா அரசபடையின் ஆதிக்கத்துக்குக் கைமாறுகிறது. பல வீடுகள் முற்றுகையிடப்பட்டுச் சோதனைக் குள்ளாகின்றன. பலர் விடுதலைஇயக்கத்தின் பிரதிநிதிகளென முத்திரைகுத்தப்பட்டுக் கைது செய்யப்படுகின்றனர். பல பெண்கள் பாலியல் வல்லுறவினால் துன்புறுத்தப்படுகின்றனர்.

அன்றையபொழுதில், ஆயுதம் தாங்கியவர்களால் இவளது வீடு முற்றுகையிடப்படுகிறது. 'டொக், டொக்' எனப்

பலத்தசத்தத்துடன் கதவு தட்டப்படுகிறது. இராணுவச்சிப்பாயொருவன் கதவு திறக்கப்பட்டவுடன் எல்லோரையும் இடித்துவிழுத்திக் கொண்டு உள்ளே செல்கிறான். தேடுதல்வேட்டை என்னும் பெயரில் வீட்டினுள் இருக்கும் பொருட்களைக் காலால் உதைத்துத் தள்ளுகிறான். பொருட்கள் மீது ஏறி மிதித்து உடைக்கிறான். துப்பாக்கியை நீட்டி எல்லோரையும் குறிபார்த்தபடி முன்னோக்கி வருகிறான். வாசுகி, தங்கை, அப்பா, அம்மா அனைவரும் சேர்ந்து <<ஐயோ! எங்களை ஒண்டும் செய்து போடாதெ, நாங்கள் ஒரு குற்றமும் செய்யேலெ.>> என நடுக்கத்துடன் அழுதுபுலம்புகின்றனர். திடீரென, நீட்டப்பட்ட துப்பாக்கி வாசுகியின் தந்தையை நோக்கித்திரும்புகிறது. <<அடோ! அதிங் பூனெ மாதிறி பெறிசா இறுக்கும் அதிங் என்ன சொல்ல. பு…பு….பு…>> என்று கூறியபடி துப்பாக்கிப்பிடியினால் பெரியவரின் வயிற்றில் இடிக்கிறான். வயிற்றைக் கைகளினால் பொத்தியபடி வலியின் கொடுமை தாங்கமுடியாமல் <<புலி ஐயா! புலி! புலி!>> எனக் கத்துகிறார் பெரியவர். << ஆ….. அதிங் நீதாண்டா, அதிங் நீதாண்டா. >> எனச் சிங்களமொழியின் தொனியில் கொச்சைத்தமிழில் கத்தியபடி மீண்டும் <<நீங் புலி, நீ…ங் புலி>> எனக்கூறியபடி மீண்டும் காலால் உதைக்கிறான். கீழே சுருண்டு கிடந்த பெரியவர் <<ஐயோ! என்னெ அடிக்காதெ, நான் புலியில்லெ, நான் பள்ளிக்கூட வாத்தியார், என்னெ ஒண்டும் செய்துபோடாதெ, இந்தக்கொடுமெயெ கேக்கிறதுக்கு ஆருமே இல்லெயா?>> எனக் கூவியழுகிறார். வீட்டினுள் இருந்து வரும் ஒப்பாரிச்சத்தம் காற்றோடு காற்றாகக் கலக்கிறது. துப்பாக்கிமுனையில் பெரியவரும், மனைவியும் அருகிலுள்ள சிறீலங்கா இராணுவமுகாமுக்குச் சாய்த்துச்செல்லப்படுகின்றனர். அங்கு, மீண்டும் அடி, உதை எனக்கொடுமைப்படுத்தப்பட்டு மூன்று நாட்களின் பின் நிபந்தனையின் பேரில் விடுதலை செய்யப்படுகின்றனர்.

மீண்டும் மறுநாள், அக்கணப்பொழுதில்தான் சூரியன் கண்விழிக்கிறான். நாட்டில் நடக்கும் கொடுமைகண்டு பனிமகள் வடித்த கண்ணீர்த்துளிகள் பச்சைப் புற்களின் நுனிகளின் மேலும், மரம், செடி, கொடிகளின் இலைகளின் மேலும் தூங்குகின்றன. அக்கம்பக்கத்து நாய்கள் இடைவிடாது ‘வள், வள்’ என்று குரைக்க, இராணுவ வண்டிகளின் இரைச்சல் காதைப்பிளக்க கிராமத்துக்குள் வந்து இறங்குகின்றன சிறீலங்கா அரசபடைகளுடன் சேர்ந்து இயங்கும் ஆயுதம் தாங்கிய சிறுகுழுக்கள். இவளது கிராமத்தைச் சுற்றிவளைத்துத் தேடுதல்வேட்டை நடத்துகிறார்கள். இத்தேடுதல்வேட்டையின்போது ஆண்கள், பெண்கள் இருபாலாரும் கைது செய்யப்பட்டுக் கிராமத்திலுள்ள கோயிலின் முன்வைத்து விசாரணை செய்யப்படுகிறார்கள்.

<<யேய்! எங்களுக்கு ஆக்கள் தேவெயெடி, நீ இப்ப என்ன செய்யிறாய் எண்டா எங்களோடெ வாறாய்>> எனக்கட்டளை இடுகிறான் விசாரணையின்போது விசாரணை செய்தவன். <<ஐயோ! என்னாலெ வரமுடியாது. அப்பா வருத்தக்காரன். தங்கச்சி சின்னப்பிள்ளெ. அம்மாவாலெ தனியக்குடும்பத்தெ பாக்கமுடியாது. என்னெ விட்டிடு>> எனக்கெஞ்சிமன்றாடுகிறாள் வாசுகி. இவளது மன்றாட்டத்துக்கும், கண்ணீருக்கும் கிடைத்த பதில் உதையும், மிரட்டலும். மிரட்டலினாலும், உதையினாலும் அதிர்ந்துபோனவள் செய்வதறியாது திகைக்கிறாள்.

சூரியன் மேற்குடன் புணர்ச்சியில் ஈடுபட்டிருக்குங்காலம், பல நாட்களாக வாரிவிடப்படாத நீண்ட கூந்தலையுடைய அழுக்குத்தலை. மீசை, தாடியின் பொருளுக்கு எடுத்துக்காட்டாக கட்டாக முகத்தில் முளைத்திருக்கும் மயிர்கள், தினமும் மதுவெறியில் தள்ளாடும் சிவந்தகண்கள், காதுச்சோணையில் ஓட்டைபோடப்பட்டு அதனுள் மாட்டப்பட்டிருக்கும் தங்கவளையம், வண்டியிற்பூட்டிப் பல வருடங்கள் கடுமையாக வேலைவாங்கிய பின் இறைச்சிக்கடை வியாபாரிகளுக்கு ‘அடிமாட்டுவிலை’ என்று சொல்லப்படும் விலைக்கு விற்கப்படும் செத்தல் எருதுகளின் உடலைப்போன்ற இவரது உடல், அதை மறைப்பதற்கு அணியப்பட்டிருக்கும் கைகளில்லாத சிவப்புநிறப் ‘பெனியன்’, கருக்குமட்டையில் கிளிநடப்பது போல் விழுந்து, விழுந்து நடக்கும் இவரின் தனிநடை, இதற்கு உதவும் இவரது ஒல்லிக்கால்கள் வரை அவிழ்த்து விடப்பட்டிருக்கும் ‘சங்குமார்க் லுங்கி’, ‘பாட்டா’ பாதவணிகள், எந்நேரமும் குண்டுகளைக் கக்குவதற்குத் தயார்நிலையில் இருக்கும் இவருடன் கூடப்பிறந்த கைத்துப்பாக்கி சகிதம் இக்குழுக்களின் தலைவர் விசாரணைக்காகச் சாய்த்துச்செல்லப்பட்டோர் இருந்த இடத்துக்கு வருகிறார். மீண்டும் விசாரணை நடத்துகிறார். விசாரணையின் பின் வாசுகியையும், இன்னும் சிலரையும் விடுதலை செய்கிறார். எஞ்சி உள்ளவர்களைத் தனது இராணுவவண்டியில் அடைக்க, வண்டி கரும்புகையைக் கக்கியவாறு சீற்றத்துடன் கிளம்புகிறது.

இவளது பெற்றோரின் கிராமநீதிமன்றச் செயற்பாட்டை அறிந்த இத்தலைவர், மறுநாட்காலை, வாசுகியைத் தேடி வீட்டுக்கு வருகிறார். இவர் வந்தவேளையில் வாசுகி தனது சித்தியின் வீட்டில் இருக்கிறாள். தனது தங்கை மூலமாக இச்செய்தியை அறிந்த வாசுகி வீட்டுக்குத் திரும்பாமல் பக்கத்துக்கிராமத்தில் இருக்கும் தனது நண்பியின் வீட்டுக்குச் சென்று தலைமறைவாகிறாள்.

நாட்டில் இவள் இருப்பது இவளது உயிருக்கு ஆபத்தென்ற உண்மையை உணரும் பெற்றோர்கள், இவளது எதிர்கால வாழ்க்கையைக் கருத்திற்கொண்டு, பிரான்சில் வாழ்ந்துவரும் தமிழ்வாலிபருக்கு மனைவியாக, ஊரிலுள்ள இவரது பெற்றோருடன் திருமண ஒப்பந்தஞ் செய்து, இவளைப் பிரான்சுக்கு அனுப்ப முடிவு செய்கின்றனர்.

பலநாட்களின் பின்பு, மீண்டும் வீட்டுக்கு வரும் வாசுகியைக் கண்டதும் தாயார் <<பிள்ளெ! உன்னெக் காணாமல் எத்தனெ நாள் என்ரெ பெத்தமனம் துடிச்சுதடி, ஒவ்வொருநிமிசமும் சாப்பிடேக்கெ உன்ரெ நினைவுதான்>> எனக்கூறிக் கட்டிப்பிடித்துக் கதறியழுகிறார். அன்றிரவு, தாய், தகப்பன், சிறியதாய், சிறியதகப்பன் அனைவரும் சேர்ந்து ஆளுக்கொரு கதைகூறி இவளைத் திருமணத்துக்குச் சம்மதிக்க வைக்க முயல்கின்றனர். தனது வாழ்க்கைத்துணையைத் தானே தேர்ந்தெடுக்கவேண்டுமென்ற எண்ணத்துடன் இருக்கும் வாசுகி, தனது அடிப்படை

உரிமைகள் பறிபோவது கண்டு மனம் வருந்தியவளாய் பெற்றோரின் வற்புறுத்தலுக்கு இணங்குகிறாள்.

பயணமுகவர் மூலமாக மேல்நாட்டுப்பயண ஒழுங்குகளை மேற்கொண்ட இவளது தந்தை கலங்கிய கண்களுடன் கையசைத்துப் பிரிந்து செல்கிறார். வாசுகி விமானத்தில் ஏறிக்கொள்கிறாள்.

சிங்கப்பூர்நாட்டுக் கடவுச்சீட்டில் பயணஞ்செய்த வாசுகி ஹொங்கொங் நாட்டு விமானநிலையத்தில் வைத்து குடிவரவு– குடியகல்வுக் கட்டுப்பாட்டாளரால், இவளது கடவுச்சீட்டில் மோசடி நடந்துள்ளதெனக் கண்டுபிடிக்கப்பட்டுக் கைதுசெய்யப்பட்டு, இப்பிரிவுக்குச் சொந்தமான சிறைச்சாலையில் இரண்டுநாட்கள் சிறைத்தண்டனை அனுபவிக்கிறாள். இரண்டுநாட்களின் பின்பு, ஹொங்கொங் நீதிமன்றத்தால் மூன்றுமாதச் சிறைத்தண்டனைக்குள்ளாகிறாள்.

வெளிநாட்டவர் சிறைப்பிரிவில் மூன்றுமாதங்களைக் கழித்த வாசுகி சிறைச்சாலைச் சாப்பாட்டாலும், பெற்றோர்களின் நினைவாலும் சிறைச்சாலையின் நுளம்புக்கடியாலும் தேவையான அளவு நித்திரையின்மையாலும் உருக்குலைந்து எலும்புந்தோலுமாக வெளியேவருகிறாள். வெளியேவந்தவள் பயணமுகவர்மூலம் பிரான்சை நோக்கிப் புறப்படுகிறாள். ஹொங்கொங்கிலிருந்து இவள் ஏறிய விமானம் பாரீசின் புறநகர்ப்பகுதியில் அமைந்துள்ள விமானநிலையத்தை வந்தடைந்தது.

விமானநிலையத்தில் வைத்துப் பிரான்சு நாட்டில் அரசியற்புகலிடங்கோரிய வாசுகியை வரவேற்க இவளது எதிர்காலக்கணவன் இவளது நிழற்படத்துடன் அங்குமிங்கும் ஓடுகிறான். நீண்டதடுமாற்றத்துக்குப் பின் அடையாளங்கண்டுகொண்டவனாக இவளருகிற் சென்று <<நீங்கள் வாசுகிதானே.>> <<ஓம்>> என்று நாணத்துடன் தலையசைக்கிறாள் வாசுகி. இருவரும் எதிர்காலக்கணவனின் வண்டியில் ஏறி பாரீசிலுள்ள கணவனின் வீட்டை நோக்கி வருகின்றனர்.

பயணக்களைப்பினால் நன்றாகத்தூங்குகிறாள் வாசுகி. காலை எழுந்து பார்க்கிறாள். தான் தனிமையில் இருப்பதை உணர்கிறாள். கட்டிலருகே உள்ள மேசையில் ஒரு கடிதமும், சிறுகுறிப்புடன் கூடிய துண்டும் இருக்கிறது. துண்டைப் பிரிக்கிறாள். <<வாசுகி, நான் முக்கிய வேலையாக வெளியிற் போகிறேன், மாலை 4மணியளவில்தான் வருவேன். எழும்பிக் குளித்துவிட்டு, குசினிக்குள் சமையற்சாமான்கள் உள்ளன, சமைத்துச்சாப்பிடவும். உங்கள் வீட்டிலிருந்து பல மாதங்களுக்கு முன் வந்த கடிதத்தை இத்துடன் வைத்துள்ளேன். இப்படிக்கு, வள்ளுவன்.>>

ஊரிலிருந்து வந்த கடிதத்தை ஆவலோடு பிரிக்கிறாள். <<அன்பு மகள் வாசுகிக்கு, அப்பா எழுதிக்கொள்வது, பலநாட்களாக எனது மனம் ஒருநிலையிலில்லை. உன்னைப்பிரிந்து எல்லோரும் கண்ணீர் வடிக்கின்றோம். நீ, கவலையடைய வேண்டாம். உறுதியாயிரு. மீண்டும், இங்கு போர் தொடங்கிவிட்டது. 'பொம்பர்' தாக்குதலால் அளவிடமுடியாத உயிர்ச்சேதம். பல வீடுகள் தரைமட்டம். உலகநாடுகளுக்குத் தெரியாமல் எங்கள் எல்லோரையும் அடியோடழிக்கும் திட்டத்துடன் சிறீலங்கா அரசபடையினர் செயற்படுகின்றனர். பல இடங்களில் உள்ளவர்கள் அகதிகளாக வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்து செல்கின்றனர். நாங்கள் பதுங்குகுழிக்குள்தான் நாட்களைக் கழிக்கிறோம். உணவுப்பொருட்களுக்குப் பலத்த தட்டுப்பாடு. எங்களையிட்டுக் கவலைப்பட வேண்டாம். இப்படிக்கு, அப்பா.>> கடிதத்தைப் படித்த வாசுகி கதறியழுகிறாள். அழுதகளைப்பினாள் மீண்டும் கண்ணயர்ந்து தூங்குகிறாள்.

ஐந்துமணியளவில் வீட்டுக்கதவு பலமாகத் தட்டப்படுகிறது. தட்டப்படும் சத்தங்கேட்டுத் திடுக்கிட்டெழுந்தவள் முன்னால் பிரெஞ்சுக்காவல்துறையினர் நிற்கின்றனர். <<வள்ளுவன் விபத்திற் சிக்கி மரணம், உடல் அருகிலுள்ள மருத்துவமனையிலுள்ளது,>> எனப்பிரெஞ்சு மொழியிற் கூறுகின்றனர். ஒன்றும் புரியாது திகைப்புற்றவளுக்கு, மீண்டும், காவற்துறையைச் சேர்ந்த ஒருவர் தனக்குத் தெரிந்த அரைகுறை ஆங்கிலத்தில் அதனை மொழிபெயர்த்தபடி மேலும் பல கேள்விகளுடன் மருத்துவமனையின் முகவரியைக் குறித்துக்கொடுக்கிறார். முகவரி எழுதப்பட்ட தாளை வாங்கியவள் <<ஐயோ அம்மா! ஐயோ அப்பா! எல்லாருமாய்ச்சேந்து என்னை ஏமாத்திப்போட்டீங்களே! எனக்கு உதவிசெய்ய யாருமேயில்லையா!>> எனக் கதறியழுகிறாள். இவள் கதறியழும் சத்தம் காற்றைக் கிழித்தபடி எதிரொலிக்கிறது….. .

புரியாதமொழி, அறிமுகமில்லா மக்கள் வாழும் புகுந்த இடத்தின் மொழியையும், வாழ்க்கைமுறையையும் அறிந்து கொண்டு, மீண்டும், தனது வாழ்வுக்கான போராட்டத்தை ஆரம்பிக்க வேண்டிய அவசரநிலையில் உள்ள வாசுகி, சிறிது நேரத்துக்குள், உளநலம் பாதிக்கப்பட்டவளாகக் காணப்படுகிறாள். ஆறாம் மாடியில் இவள் தங்கியுள்ள சிறிய அறையின் யன்னல்கள் திறந்திருக்கின்றன. <<அப்பா!, அம்மா! எல்லாருமென்னெ மன்னிச்சுக்கொள்ளுங்கோ!>> என்னுங்கடைசி வார்த்தைகளுடன் திறந்திருந்த யன்னல்வாயிலாக வெளியே பாய்கிறாள். கீழே விழுந்ததும், தலை தரையில் அடிபட்டு வெடித்து இரத்தப்பெருக்கெடுக்கிறது.

சிறிதுநேரத்தில் நாங் – நோங், நாங் – நோங் என்னும் காதைப்பிளக்கும் ஒலியுடன் முதலுதவி மருத்துவவண்டி, தீயணைப்புப்படையினரின் வண்டி, காவல்துறையினரின் வண்டி அனைத்தும் ஒன்றன்பின் ஒன்றாக வந்து சேருகின்றன. முதலுதவிப்பெட்டியுடன் வந்திறங்கிய மருத்துவப்பிரிவினர் கவலை கலந்த முகத்துடன் தலையை அசைக்கின்றனர். வாசுகி இறந்துவிட்டதை உறுதிப்படுத்துகின்றனர். இவளது சிதைந்த உடலுடன் மருத்துவமனை நோக்கி விரைகின்றனர். காவல்துறையினர் கடமையில் சுறுசுறுப்பாக ஈடுபட்டுக்கொண்டிருக் கின்றனர்.

*திவ்வியநாதன் செல்வத்துரை, காலம் – 08.01.2000, பிப 7.00*

# கறை

கருவாலி மரத்தினாற் (chêne) செய்யப்பட்ட வாசற்கதவு தட்டப்படுகிறது. 'டொக் டொக்' என்னும் பலத்த சத்தம் காதை ப்பிளக்கிறது. திடுக்கிட்டெழுந்த திவ்வியனின் மனைவியும், தங்கை புஸ்பாவுங் கதவிற் பொருத்தப்பட்டிருந்த சிறு பூதக் கண்ணாடி மூலம் வெளியில் நிற்பவர்களைப் பார்த்துவிட்டு ''அண்ணா! அண்ணா! இஞ்ச வா!'' எனத் தங்கையும், ''இஞ்ச ஒருக்கா வாங்கோ!'' என மனைவியும் பதைபதைத்தபடி கூப்பிடுகிறார்கள்.

கூப்பிடுஞ்சத்தங் கேட்டுப் பதறியெழுந்த திவ்வியன் கண்ணாடியூடாகப் பார்க்கிறான். நீலநிற மேற்சட்டையும், கறுப்புநிற அரைப்பாவாடையும், ஒழுங்காக வாரிமுடியப்பட்ட கூந்தலுடன், கையில் தோற்பையுடன் வெள்ளைநிறப் பெண்ணும், அவளின் பின்னால் கறுப்பு நிற நீளக்காற்சட்டையும், நீலநிற மேற்சட்டையும் அணிந்து ஒழுங்காக வாரிவிடப்பட்ட தலைமுடியுடன் இரு வாலிபர்களும் நிற்பதைக் காண்கிறான்.

மீண்டும் கதவு பலமாகத் தட்டப்படுகிறது. ''யாரது?'' எனப் பிரெஞ்சு மொழியிற் கேட்கிறான் திவ்வியன். 'ஏய் ஏய்! கதவைத்திற!' என மீண்டும் அப்பெண் பிரெஞ்சு மொழியிற் கூறுகிறாள்.

''மரியா, நான் திவ்வியன் பேசுகிறேன். இங்கே வாருங்கள்.'' எனப்பிரெஞ்சு மொழியில் தொலைபேசி மூலம் மரியாவை அழைக்கிறான். இவன் குடியிருக்கும் மாடிக்கட்டிடத்தின் பெண்காவலாளியின் பெயர்தான் மரியா. இக்கட்டிடத்தினுள் யாரும் சுலபமாகப் புகுந்துவிடமுடியாத நிலையில் இவளையும் தாண்டி இவர்கள் இதற்குள் எப்படி நுழைந்தார்கள் எனக் கேட்பதற்காகவும், இவர்களை வெளியேற்றுவதற்கும் இவரைக் கூப்பிடுகிறான் திவ்வியன்.

வந்த மரியா இவர்களை வெளியேறும்படி பலமாகக் கத்துகிறார். வந்தவர்கள் 'நாங்கள் ஜெகோவாவின் சாட்சியங்கள், என்னும் மதம் பரப்புவதற்கு வந்துள்ளோம்' எனப் பிரெஞ்சு மொழியிற் பதில் சொல்லுவது திவ்வியனின் காதுகளில் விழு கிறது.

இம்மதத்தினரைப் பிரான்சு அரசு மதமாகப் பார்ப்பதில்லை. இவர்கள் எங்கு தமிழர்கள் வசிக்கிறார்களோ, பல நாட்கள் அவர்களைப் பின்தொடர்ந்து அவர்களுடைய வசிப்பிடங்களுக்குச் சென்று இவர்களுடைய மதக்கோட்பாடுகளிற் சில வற்றைக் கூறி ஆட்ச்சேர்ப்பது வழமையான நிகழ்ச்சி. இவர்களின் கைகளுக்குள் அகப்பட்டால், குரங்காட்டி ஆட்டியபடி குரங்கு ஆடுவது போன்ற நிலை ஏற்படும். வந்தவர்களில் ஒருவர் தமிழர் போல் இருப்பதை திவ்வியன் உணர்ந்தான்.

கத்திய மரியா மீண்டுங் காட்டுக்கூச்சல் போட்டு இவர்களை வெளியேற்றுகிறார். வேறு வழியில்லாமல் வந்தவர்கள் வெளியேறுகிறார்கள்.

முதன்னாள் வந்த செய்தியின்படி மறுநாட் காலை, பிரெஞ்சுப்படமொன்றில் துணை நடிகராகப் பங்கேற்பதற்குப் படப் பிடிப்பிற் கலந்துகொள்ள ஆயத்தமாகி அதற்குரிய உடுப்புக்கள் அடங்கிய உடுப்புப்பெட்டியுடன் வீட்டைவிட்டு வெளியே வருகிறான்.

'சடார் புடார்' என இடிமுழக்கம் பிளக்கிறது காதுகளை. மப்பும் மந்தாரமுமான நிலை. சிறிது சிறிதாகத் தூறத் தொட ங்குகிறது மழை. மழையையும் பொருட்படுத்தாது வீதிக்கு வருகிறான் திவ்வியன்.

முதியவர் ஒருவர், தனது இயலாமையால் அடிமேல் அடி வைத்து வீதியைக் கடக்க முயல்கிறார். வேகமாக வந்த மோட்டார்வண்டி பெரியவரைப் பதம் பார்க்கிறது. பெரியவர் தூக்கியெறியப்பட்டு இரத்தஞ் சொட்டச்சொட்ட வீதியில் முடங்குகிறார். சிறிது நேரத்தில் நிரந்தரமாய்க் கண்மூடப்போகும் முதியவரை வழிப்போக்கர்கள் சூழ்ந்து நிற்க, அவசர முதலுதவி மருத்துவப்பிரிவினர் 'ஙாங் ஙோங் ஙாங் ஙோங்' என ஓலமிட்டவாறு அவர்களின் முதலுதவி வண்டியிலிருந்து முதலுதவிப் பெட்டியுடன் இறங்குகின்றனர். காவல்துறையினரின் வண்டியுங் காதடைக்குஞ் சத்தத்துடன் சம்பவம்நடந்த இடத்துக்கு விரைந்து வருகிறது. வண்டியிலிருந்து இறங்கிப் போகும்பாதையைத் தடை செய்கின்றனர் இத்துறையினர்.

மணிக்கூட்டைப் பார்க்கிறான். நெற்றியை விரல்களால் தடவுகிறான். முகத்தைத் தொங்கப்போடுகிறான். மீண்டும் மணிக் கூட்டைப் பார்த்து படப்பிடிப்பிற் கலந்து கொள்ளத் தனக்குத் தரப்பட்ட நேரம் நெருங்கிக் கொண்டிருக்க, பாம்பின் வாயில் அகப்பட்ட தேரை போலான திவ்வியன் காவல்துறையினரை நெருங்கி விடயத்தைக் கூறித் தன்னைத் தடையைக் கடந்து செல்ல அனுமதிக்கும்படி கேட்கிறான். 'பத்துநிமிடங்கள் பொறுங்கள்' எனப் பிரெஞ்சுமொழியிற் கூறி பத்துநிமிடங்களின் பின், இவனது பயணத்தைத் தொடரவைக்கிறது காவல்துறை.

அவசர அவசரமாக 'மேற்றொ'வில் (Métro) (சுரங்கப்பாதைத் தொடர்வண்டி) ஏறிப் படப்பிடிப்பு நடக்கும் இடத்தை அடைய, இயக்குனர் ''என்னய்யா! இவ்வளவு நேரம் தாமதமாக வருகிறீர்கள்!'' எனப் பிரெஞ்சுமொழியிற் கடுகடுக்கிறார். வந்துசேர்ந்தவன் வணக்கத்தைத் தெரிவித்து நடந்ததைக் கூறுகிறான். கோபம் தணியாத இயக்குனர் ''சரி, போய் உடுப்பை மாற்றிக்கொண்டு வாருங்கள்!'' எனக்கூற, அதற்குப் பொறுப்பான பெண்மணி அவனது பெட்டியைத் திறந்து காட்டும்படி கேட்கிறாள். கறுப்புநிற உடைகளைத் தேர்ந்தெடுத்து அவற்றை அணியுமாறு கூற, அவளது கட்டளைக்கு இசைகிறான் திவ்வியன்.

ஏனைய சக நடிகர்களுங் கறுப்புநிற உடையுடன் இருப்பதனால், அன்று, படமாக்கப்படவிருக்குங் காட்சி மரணவீட்டு நிகழ்ச்சியென ஓரளவுக்குப் புரிந்து கொள்கிறான் இவன்.

கடைசிக்கால ஊழியவண்டியிலிருந்து சவப்பெட்டியொன்று இறக்கப்படுகிறது. கறுப்புநிற நீளக்காற்சட்டையும், மெல்லிய நீலநிற மேற்சட்டையும், கறுப்புநிற மேலங்கியும், கறுப்புநிறக் கழுத்துப்பட்டையும் அணிந்த ஆறுபேர் அப்பெட்டியை முன், நடு, பின் என அக்கம்பக்கமாக குலுக்காமல் தாங்கி, இராஜமரியாதையுடன் நடந்து வர, பலநிறப்பூக்கள் அடங்கிய மலர்வளையங்களும், பதினைந்து துணைநடிகர்களும் பின்தொடர ஊர்வலமாகச் சிலுவைகள் நடப்பட்டிருக்கும் இடு காட்டுக்குள் அக்குடும்பத்துக்குச் சொந்தமான கிடங்கு வரைக்கும் செல்கிறார்கள். கத்தோலிக்க மதகுருவானவர் பைபி ளில் இருந்து உள்ளத்தைத் தொட்டு உயிர்நீத்தவரை உயிர்ப்பிக்கும் மிகச்சிறந்த வாசகத்தைப் படித்து, உயிர்நீத்தவர் பெருமைபற்றிய தனதுரையை முடித்துக்கொள்ள, சவப்பெட்டி கிடங்குக்குள் இறக்கப்பட்ட அடுத்த நிமிடம் அனைவரும் ரோஜா மலர்ச்செண்டைப் பெட்டியின் மேற் போட்டுக் கண்களைத் துடைக்குங் காட்சி படமாக்கப்பட்டது.

வேலையை முடித்து நேரத்தைப் பார்க்கும்போது மணிக்கூடு மாலை நான்கு மணியைக் காட்டுகிறது. இருள் சிறிது சிறி தாக வெளிச்சத்தை விழுங்கிக் கொண்டிருக்கிறது. படப்பிடிப்பு முடிந்த இடத்திலிருந்து வீட்டுக்கு வருவதற்குப் பயணஞ்

செய்ய வேண்டிய மெற்றொ நிலையத்தைத் தேடிவரும்போது, இடையில் பன்னிரண்டு வயதுச்சிறுவர்கள் இருவர் திவ்வியனுடன் குறும்பு செய்வதற்காக, இவனை வழிமறித்துச் சண்டைக்கு வருகின்றனர். "ஊத்தை இந்து உன்னுடைய நாட்டுக்குத் திரும்பிப்போ" என பிரெஞ்சு மொழியில் திட்டுகின்றனர். பொறுக்கியெடுத்த குறுணிக்கற்களால் எறிகின்றனர்.

இச்சிறுவர்களின் தாய்-தந்தையர், திவ்வியனைப்போல் பிரான்சில் வந்து குடியேறிய வெளிநாட்டவர்கள். இச்சிறுவர்கள் உரையாடும்போது பேசிய அரபுமொழி தூரத்தில் வந்த இவனது காதுகளில் விழுந்ததனாற் புரிந்துகொள்ள முடிந்தது.

இவர்கள் வாழும் இடத்தில் திவ்வியனைப்போன்ற நிறத்தையுடைய வங்காளிகள், சீக்கியர்கள், பாக்கிஸ்தானியார்கள், இலங்கையர்கள் எனப் பலதரப்பட்ட இந்தியத்துணைக்கண்ட நாடுகளைச் சேர்ந்தவர்கள் வாழ்கிறார்கள் எனப் பின்பு இவனால் தெரிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படுகிறது,

இந்தியத்துணைக்கண்டத்தைச் சேர்ந்த இவர்கள் படிப்பற்றவர்கள், பிரெஞ்சுமொழி பேசத்தெரியாதவர்கள், அசுத்தமான வர்கள் என மேற்கூறப்பட்ட சிறுவர்கள் நினைக்கிறார்கள்.

திவ்வியன் பிரெஞ்சுமொழியில் "தம்பி! நான் இந்த இடத்தில் வசிப்பதில்லை, நான் ஒரு நடிகன், வேலை முடித்து வீட்டுக்குப் போய்க்கொண்டிருக்கிறேன்" எனக்கூறி, இவர்கள் இவனுடன் சண்டைபோடாதவாறு அமைதியாகப்பேசி, சாந்த ப்படுத்தி, இச்சிறுவர்களிடமிருந்து தன்னை விடுவிக்க இவனாற் படாதபாடு படவேண்டியதாயிற்று. "அப்பாடா! பிச்சை வேண்டாம் நாயைப்பிடி" என்று இவன் மனஞ்சொல்லியபடி இவர்களிடமிருந்து விடுபட்டு நேராக மெற்றொவை நோக்கி வருகிறான்.

சிலுவைகள் விதைக்கப்பட்ட இடுகாடு. அருகே சிறு கிறிஸ்தவத் தேவாலயம். முடக்குகள் நிறைந்த ஒழுங்கை. இவை அனைத்தையும் உள்ளடக்கிய இவ்விடம், முன்படமாக்கப்பட்ட இடுகாட்டின் பின்பக்கம். பல மணித்தியாலங்கள் இவ்விடத்தைச் சுற்றிச் சுற்றி வரும் திவ்வியன், இதைவிட்டு வெளியேறுவதற்கு வழிதெரியாமல் போவதும் வருவதுமாகச் சுற்றிச் சுற்றி இதே இடத்திற் நிற்பதை உணருகிறான்.

கரிய உருவம், கருநிறச் சுருள்முடி, கறுப்புநிற உடையுடன் ஒருபெண். பிரான்சின் குடியேற்றநாடான 'மார்த்தினிக்' (Martinique) தீவைச் சேர்ந்த இப்பெண் இவ்விடத்தால் வருகிறார். "அம்மா! மெற்றொ நிலையத்துக்குப் போக வழி தெரியாமல் நிற்கிறேன், போவதற்கு வழி சொல்ல முடியுமா?" எனப் பிரெஞ்சுமொழியிற் கேட்கிறான் திவ்வியன். இவனை ஏறிட்டு முழுசிப்பார்த்த இப்பெண் "இவ்விடத்துக்கு வந்தது இதுவா முதல் தடவை?" எனக் கேட்க, "ஆம்" எனக் கூறிய இவனை முறைத்துப் பார்த்து பின்தொடருமாறு தலையாற் சைகை காட்டுகிறார்.

அவர் வேகமாக நடக்க, அவரின் வேகத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் இடைநடுவில் நடையின் வேகத்தைத் தளர்த்திய போது அப்பெண் மறைகிறார்.

இவன் சமவெளியுள்ள பாதைக்குத் தன் திசையைத் திருப்புகிறான். அது ஓர் ஒழுங்கை. இவ்வொழுங்கையில் இவனையொத்த நிறத்தினர் இருகரையிலும் பலர் ஊத்தை உடப்புக்களுடன், சிலர் வீணீர் வடித்தபடி, சிலர் மது மயக்கத்தில் பல காலம் குளிப்பு, முழுக்கின்றி இருக்கிறார்கள். மணம் இவனது வயிற்றைக் குமட்டுகிறது. சிலர் விசர் பிடித்து வாயில் வந்தபடி திட்டிக்கொண்டிருக்கிறார்கள். ஒருவன் எழுந்து இவனை அடிக்க வர அவனைத் தடுக்கிறான். ஒன்றும்புரியாத திவ்வியன் இரத்தம் உறைந்து போவதுபோல் உணருகிறான்.

திறந்தவெளி. பல படிக்கட்டுக்கள். பெரிய மேடை. இந்தியத்துணைக்கண்டத்தைச் சேர்ந்த வங்காளிகள், சீக்கியர்கள், பாக்கிஸ்தானியர்கள், இலங்கையர்கள் மற்றும், ஆபிரிக்கக்கண்டத்தைச் சேர்ந்த ஆபிரிக்கர்கள் எனப்பலர் படிக்கட்டு களிலும், மேடையிலும் கூட்டங் கூட்டமாக இருந்து கதைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

"மெற்றொ எங்கே! மெற்றொ எங்கே! வெளியே போவதற்கு வழி சொல்லுங்கள்!" எனப் பிரெஞ்சுமொழியில் உரக்கக் கத்திக் கூச்சலிடுகிறான் திவ்வியன். உலகம் அதிர்ந்ததுபோல் இவனை எல்லோரும் அதிர்ச்சியுடன் பார்க்கிறார்கள். உடுப்புப் பெட்டியுடன் ஒவ்வொரு கட்டுக்களையும் தாண்டி வரும்போது தனது இளமைக்கால ஊர் நண்பர்கள் இருவர் ஒரு கூட்டத்தில் இருக்கக் காண்கிறான்.

"குண்டுக்கண்ணா! குண்டுக்கண்ணா!, இம்பாலா! இம்பாலா!" எனப் பெயர் சொல்லிக் கூப்பிடுகிறான். அவர்கள் இவனைப் பார்க்கிறார்கள். ஆனால், அவர்களுடைய முகத்தில் எதுவித அசைவும் இல்லை. கிட்ட நெருங்கிச்சென்று குண்டுக்கண்ணனைத் தட்டி "ஏய்! நான்தான்ரா உங்கடெ திவ்வியன். என்னத்துக்காக இங்கெ இருக்கிறியள்? என்ன இது விசர் ஆஸ்பத்திரியெ?" எனக் கேட்கிறான்.

"என்ன ஆச்சரியமாயிருக்கே! நாங்க ஒன்னெ இங்கெ எதிர்பார்க்கெலெ. நீ ஆளே மாறியிருக்கெ. நாங்க இங்கெ வந்து இரண்டு வருசங்களாகுது. இது ஒரு அரசியல் அகதிமுகாம்" எனத் தமிழ்நாட்டுத் தமிழ்ச் சாயலில் பதில் கூறுகிறான் குண்டுக்கண்ணன். "என்னடா, நீ தமிழ் நாட்டிலெ இருந்தனியெ?" எனத் திவ்வியன் கேட்க, "ஆமா! இந்திய அமைதிப் படெ எங்க நாட்டுக்குள் வரும்போது, நாங்க நாட்டெ விட்டு படகு மூலமா ராமேஸ்வரம் போனோம். பின்னாடி மதுரை யிலெ பதினைஞ்சு வருசம் இருந்தோம். அங்கேதான் நம்ம மதுரை நண்பர்களோடெ பழகி அவங்க மாதிரி பேச ஆரம் பிச்சோம். அதுக்கு பின்னாடி வேலூர் தடுப்பு முகாமிலெ ஆறு வருசம் இருந்தோம். விடுதலையாகி பணங்கொடுத்து திருட்டுத்தனமா இத்தாலி வந்து பிரான்சுக்கு வந்தோம். வரும்வழியிலெ பொலிசிலெ மாட்டி இங்கெ கொண்டந்து விட்டுட்டாங்க" எனக் குண்டுக்கண்ணன் மீண்டும் கதையைக் கூற, "டேய்! திவ்வியன் என்னடா இது பெட்டியோடெ இஞ்செ நிக்கிறாய். நீ பிரான்சிலெ வசதியாய் இருக்கிறதாய்க் கேள்விப்பட்டேன். நீயும் இந்த அகதிமுகாமிலெயோ இருக்கிறாய்?" எனக் கேட்கிறான் தீபன்.

இவனுக்கு தன்னுடைய அன்றைய சோகக்கதையை விளக்கிவிட்டு, இவனுடைய கதையைக் கேட்பதற்குக் காதைத் தீட்டிக்கொண்டு நிற்கிறான் திவ்வியன். பல வருடங்களுக்கு முன், அவுஸ்திரேலியாவில் வாழ்ந்து வருவதாகக் கேள்விப் பட்ட தீபன் திவ்வியனுடைய இளமைக்கால நண்பன்.

"நான் அவுஸ்திரேலியாவிலெ நல்லாய் இருந்தன். தொழிற்சாலையொண்டிலெ வேலெ செய்து கனக்க சம்பாதிச்சன். இலங்கைத் தமிழ்மக்களுக்காக ஆர்ப்பாட்டப்பேரணி ஒண்டு நடந்தது. ஆர்ப்பாட்டக்காறருக்கும், அவுஸ்திரேலியப் பொலிஸ்காறருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டு அடிபிடி நடந்தது. முன்வரிசேலெ கொடி பிடிச்சுக்கொண்டு நிண்டதாலெ பொலிஸ்காறற்றெ வீடியோவிலெ என்ரெ முகம் பதிஞ்சுபோய் விட்டுது. ஊர்வலம் கலைஞ்சுபோய் அடுத்த நாள் என்னெ

த்தேடி பொலிஸ் வீட்டுக்கு வந்து பிடிச்சுக்கொண்டு போய் அஞ்சு நாள் சிறேலெ வைச்சிட்டு நிபந்தனெயோடெ வெளியாலெ விட்டது. பயங்கரவாதத் தடைச்சட்டத்திலெ பொலிஸ் தேடி வாறதாலெ அவுஸ்திரேலியாவ விட்டுட்டு பிரான்சுக்கு வந்து இப்ப இந்த சொறிசிரங்கு பிடிச்ச முகாமிலெ இருக்கிறன்.'' என ஆப்பிழுத்த குரங்குபோலான தீபன் தன் சோகக் கதையைக் கூறினான்.

தீபனின் கதையோடு, கனத்த நெஞ்சோடு முகத்தைத் திருப்பிய திவ்வியன் தன்னுடன் சில நாட்கள் ஓர் அறையில் வசித்த தமிழ் பேசும் இஸ்லாமிய நண்பனான சம்சீரைக் காண்கிறான். "என்ன சம்சீர், என்ன நடந்தது? லண்டனுக்கு போறதாகச் சொன்னீர். ஆனா…… இங்கெ நிக்கிறீர்!"

"இதில பொய் சொல்ல என்ன இரிக்கி. எல்லாம் அல்லா எழுதிவச்சிரிக்கான். களவா பாஸ்போட் செய்திட்டு சீக்கிரமா வெளிக்கிட்டுப் போக, போடா்ல(எல்லை) பிடிச்சி திரிப்பியனுப்பிட்டான். நல்லது நடக்கணுமென நெனெச்சென். நடக் கலெ. அல்லா நெனெச்சிரிந்தா வாழ்க்க இப்பிடியா இருந்திரிக்கும்! எல்லாம் பெயித்து!'' என அல்லாவை நொந்து கொண்ட சம்சீரின் கனத்த நெஞ்சுடன் திசையைத் திருப்பிய திவ்வியன், சிறு தூரத்தில், சக்தி-ரகு-தாசன் மூவரும் மேடையிற் கூடியிருந்து திட்டம் போடுவதை அவதானிக்கிறான். இவர்களைக் காணும்போதெல்லாம் இவனுக்கு 'நரி உப தேசம் செய்யப் புறப்பட்டுவிட்டால், நீ உன் கோழிகளைக் கவனமாகப் பார்த்துக்கொள்' என்னும் முதுமொழிதான் ஞாபகத்துக்கு வரும்.

இவர்கள் மூவரும் பொதுவுடமைவாதிகள், இலக்கியவாதிகள், தலித்துக்களுக்காக முழுமூச்சாகப் பிரான்சிலிருந்து செயற் படுபவர்கள். பொதுவுடமைவாதிகள் தற்போதைய குட்டிப் பூர்சுவாக்களாகச் செயற்படுகிறார்கள். மூவரும் யாழ்ப்பாணத் தவர்கள்.

ரகு என்பவன் சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் எப்படி எப்படியெல்லாம் பணத்தை உறுஞ்ச முடியுமோ, அப்படி அப்படித் தன் வேலைத் திறனைக் காட்டுபவன். இவனுக்கு நிகர் இவனே. பாரிசில் தலித்துக்களுக்காகப் பதியப்படாத கழகம் அமைத்துச் செயற்படுபவன். கருத்துச் சுதந்திரத்துக்காகச் செயற்படுவதாகவும், வன்முறையை எதிர்ப்பதாகவும் கூறிக்கொள்பவன். பிரான்சுக் குடியுரிமை பெற்றவன்.

திடீரென உணர்ச்சி வசப்பட்டெழுந்த ரகுவைக்கண்ட திவ்வியன், " ஏய்! ரகு, ரகு!'' எனத் தொண்டைகிழியக் கத்து கிறான். இவனின் சத்தத்தைக் காதில் வாங்காதவனாய், ஓரத்தில், அங்கு வரிசையாக அடுக்கப்பட்டிருந்த, பிரெஞ்சு அரசுக்குச் சொந்தமான பல கண்ணாடிப் பெட்டிகளை இரும்புக்கம்பியொன்றினால் ஒன்றன்பின் ஒன்றாக, வெறிபிடித்தவன் போல் அடித்து நொறுக்குகிறான். நொறுங்கிச் சிதறுங் கண்ணாடிச் சத்தம் பேரொலியை எழுப்புகிறது.

ரகு தள்ளாடுகிறான். இவன் அணிந்திருந்த நீளக்காற்சட்டையின் பின்பக்கம் ஈரமாகிறது. வலது பக்க மணிக்கட்டு உடைந்து இரத்தம் பீறிடுகிறது. இருளும் தொப்பென வீழ்கிறது.

"கை, கை! இரத்தம், இரத்தம்!'' என அலறி, திவ்வியன் திடுக்கிட்டெழ, கட்டில்மீது அருகே படுத்திருந்த மனைவி ஜானகியும் திடுக்கிட்டெழுந்து இவனது முகத்திற் படிந்திருந்த வியர்வையைத் துடைத்துக் கொண்டிருந்தாள்.

திவ்வியநாதன் செல்வத்துரை, காலம் - 16.11.2014, அதிகாலை 4 மணி

முற்றும்.

## விட்டுப் பிரிஞ்சு உசிர் வாளேன்

கஞ்சிக் கலையங் கொண்டு
காடு மேடு கடந்த பிள்ளெ
முந்தானெய விருச்சுப் போட்டு
முத்து முத்தாய்ப் பேசிடுவோம்

கட்டாந்தரெ நிலமிருக்கு
கைநிறெய விதெயிருக்கு
காளை பூட்ட ஏரிருக்கு
கறுப்புஞ் சிவப்புந் துணையிருக்கு

ஆடி மாசம் பிறந்திருக்கு
தேடி விதெ விதெச்சிருக்கு
காத்தி மாச மழை பெஞ்சு
கால்வாய் நூறு வழிஞ்சோடி
நேற்றுப் பிடிச்ச வறுமெ போக்க
நூறு நூறாய்ப் பொலியவே

பட்ட கடனெக் கட்டிப்போட்டு
பட்டுச் சேலெ வாங்கிவர
பட்டணம் நாம் போய் வந்து
கட்டெப் பிள்ளெ நானுமுன்னெ
கட்டி முத்தந் தந்திடுவேன்

ஓட்டெக் குடிசெயத் திருத்தியதில்
ஓங்காரமாய்க் குடி வைச்சு
சீமாட்டி நானுமுன்னெ
விட்டுப் பிரிஞ்சு உசிர் வாளேன்.

திவ்வியநாதன் செல்வத்துரை, காலம் : 08.02.2000
இரவு: 8 மணி

## மலெயேத்துவேன்

உன்னெ நானுங் கட்டிப்போட்டு
மாய்கிறேனே சின்னத்தங்கம்
பொன்னெ நானும் மதிச்சதனால்
என்னெ நீயும் மிதிக்கிறியே
சாதிசனம் பாக்கையிலே
சந்தி சிரிக்கவைக்கிறியே

ஆண்மூச்சுக்காரி நீ
அடங்காப்பிடாரி நீ
கருநிறக்காடேறி நீ
கருணெயில்லாக் காளியும் நீ

உன் கோவந் தீரும்வரெ
ஊரூராய்ப் பளந்தேடி
வடெ சுட்டுப் படெயல் வைச்சு
இடெயிடெயே உடுக்கடிச்சு
ஊர்த்தேங்காய் நானுடைச்சு
காய்வெட்டிக் குழையடிச்சு
ஊர்த்தமிலிப் பாட்டுக்கட்டி
ஊர் விட்டுன்னெ மலெயேத்துவேன்.

திவ்வியநாதன் செல்வத்துரை, காலம்: 06.05.2002

நாட்டார் இலக்கியம் ஒரு சமூகத்தின் உயிர்த்துடிப்பை எடுத்துக் காட்டுகிறது. இவ்விலக்கியத்துக்கு உலகமக்களின் நடுவே அதிக வரவேற்பிருப்பதை அவதானிக்கலாம். மானிடவியலின் மூலக்கூறுகள் ஊடுருவியிருக்கும் இவ்விலக்கியத்தின் சுவையை மிகமிகச் சிறுவய தில் அறியவாய்ப்பேற்பட்டது. எனது தாயாரின் தந்தையார் வழியாக, எனது தாயாரின் மூலமாக, சுவாமி சின்னத்தம்பியர் (அக்காலத்தில் 98வயதுவரை வாழ்ந்தவர்) என்னுங்கூத்துநடிகர் மூலமாக, கலப்பைப் பொன்னம்பலம் மகன் வீரசிங்கம் மூலமாக, அண்ணாவி கார்த்திகேசர் மூலமாக, கட்டாடியார்கிருஸ்னன் மூலமாக இவற்றுக்குள் என்னைப் பழக்கிக் கொள்ள முடிந்தது. எனது பழையகாலத்துக் கிராமத்தின் நினைவுகளூடாக நாட்டார்பாடல் வகையில் இவற்றை எழுதியுள்ளேன்.

# பாரிஸ் கோழிக்கறி





## 4 பேருக்கு

கோழிக்கறி உருவாக்கமும் செய்முறை விளக்கமும் : திவ்வியநாதன் செல்வத்துரை, காலம் - 20.01.1989

**தேவையான பொருட்கள்**

8 சூப் கரண்டி எண்ணெய். 2 கிலோ கோழி துண்டு துண்டாக வெட்டப்பட்டது. 6 ஏலக்காய். 6 கராம்பு.
5 சென்ரிமீற்றர் கறுவாப்பட்டை. 1 பெரிய வெங்காயம் மெல்லியதாக வெட்டியது. 2 உள்ளிப் பல்லு.
3 சென்ரிமீற்றர் இஞ்சி. 2 நடுத்தரமான விதையெடுத்த பச்சைமிளகாய்கள். உறைப்பை (காரம்) விரும்புவோருக்கு
4 நடுத்தரமான விதையெடுக்காத பச்சைமிளகாய்கள். 1 எலுமிச்சம்பழம். அரைத் தேக்கரண்டி தரமான மஞ்சள்தூள்.
1 தேக்கரண்டி உறைப்பற்ற சிவப்பு மிளகாய்ப் பொடி (தூள்) (Piment douce - Mild chilli powder). 50 கிராம் தேங்காய்ப்பால். 15 சென்ரி லீற்றர் சுடுநீர். தேவையான அளவு உப்பு.

**செய்முறை**

மிக்சர் ஒன்றில் உள்ளி, இஞ்சி, விதைநீக்கிய மிளகாய், எலுமிச்சஞ்சாறு ஆகியவற்றை இட்டு அரைத்து ஒரு கூட்டாக எடுத்து வைக்கவும்.

தேவையான அளவு சட்டியொன்று எடுத்து, அரைவாசி எண்ணெயை விட்டுச் சூடாக்கவும். வெட்டிய கோழித்துண்டுகளை அதனுட் போடவும். கரண்டியொன்றினாற் புரட்டி மூடவும். 10 நிமிடத்துக்குள் அவிந்த கோழித்துண்டுகளையும் அவிந்த நீரையும் வெளியில் எடுக்கவும். மிகுதி எண்ணெயைச் சட்டிக்குள் விடவும். ஏலக்காய், கராம்பு, கறுவாப்பட்டை ஆகியவற்றை அதனுட் கொட்டி 1 நிமிடம் மூடிவிடவும். பின்பு, நறுக்கிய வெங்காயத்தைச் சட்டிக்குட் கொட்டி 3 நிமிடங்கள்வரை மூடிவிடவும். பின்னர், அரைத்து வைத்த கூட்டைக்கொட்டி மஞ்சள்தூளைக் கலந்து கிளறி 2 நிமிடங்கள் அவியவைக்கவும். எடுத்துவைத்த தேங்காய்ப்பாலை சுடுநீரிற் கலந்து சட்டிக்குள் ஊற்றவும். உப்பைப் போட்டு சிறு நெருப்பில் 2 நிமிடங்கள் விடவும். எடுத்து வைத்த கோழியையும், அவிந்த தண்ணீரையும் அதனுட் கொட்டி 20 நிமிடங்கள் சிறு நெருப்பில் அவியவிடவும். தற்போது கறி தயாராகி விட்டது. தேவையான அளவு யாழ்ப்பாணத்துப் பூநகரி மொட்டைக்கறுப்பன் கைக்குத்தரிசிச் சோறு அல்லது தமிழ்நாட்டுப் பொன்னியரிசிச் சோறு அல்லது பஞ்சாப் பசுமதி அரிசிச் சோற்றுடன் கலந்து பசி ஆறவும்.

**பலசரக்குகள்**

| பிரெஞ்சுச் சொற்கள் | பிரெஞ்சு-தமிழ் உச்சரிப்பு | பன்னாட்டு உச்சரிப்பு முறை | தமிழ்க் கருத்து |
|---|---|---|---|
| Ail | அய் | aj | உள்ளி |
| Piment vert | பிமோ வேர் | pimɑ̃ vɛr | பச்சை மிளகாய் |
| Gingembre | ஜஞ்ஜோம்வ்ர் | ʒẽʒɑ̃br | இஞ்சி |
| Poulet | பூலே | pulɛ | கோழி |
| Piment douce | பிமோ டூஸ் | pimɑ̃ dus | உறைப்பற்ற மிளகாய்த் தூள் |
| Curcuma | குர்குமா | Kyrkyma | மஞ்சள் |
| Cannelle | கனெல் | kanɛl | கறுவாப்பட்டை |
| Girofle | ஜிறோவ்ள் | ʒirƆfl | கராம்பு |
| Cardamom | கார்டமொ | Kardamɔ | ஏலக்காய் |
| Lait de Noix de coco | லே டு நுஆ டு கொக்கோ | lɛ də nwa də kƆko | தேங்காய்ப்பால் |
| Riz | ரீ | ri | அரிசி |
| Sel | செல் | sɛl | உப்பு |
| Huile | உய்ல் | yil | எண்ணெய் |
| Onion | ஒய்ன்ஞ்ஞோ | Ɔɲɔ̃ | வெங்காயம் |
| Citron | சித்றோன் | sitrɔ̃ | எலுமிச்சம்பழம் |
| Eau-chaude | ஓ ஷோட் | O ʃod | சுடுநீர் |
| Poivre | புஆவ்ர் | pwavr | மிளகு |
| Cumin | குயுமா | kymɛ̃ | சீரகம் |
| Coriandre | கொறிஓன்ட்ர் | kɔrjɑ̃dr | மல்லி |
| Mustard | முத்தார்ட் | mutard | கடுகு |

# பாரிஸ் வாழைப்பழக்களி



பழக்களி உருவாக்கமும் செய்முறை விளக்கமும் : திவ்வியநாதன் செல்வத்துரை, காலம் - 25.01.1989

## 4பேருக்கு

**தேவையான பொருட்கள்**

வாழைப்பழம் - 5. எலுமிச்சம்பழம் - பாதி. சீனித்தூள் - 120கிராம். தேங்காய்த்துருவல் - 20கிராம்.

தேவையான நேரம் - 08 நிமிடங்கள்

**செய்முறை**

வாழைப்பழத்தை உரித்து வட்டம் வட்டமாக வெட்டவும். ஒட்டாத தட்டையான தாச்சிச்சட்டியொன்றை அடுப்பில் வைத்துச் சிறு நெருப்பில் விடவும். வெட்டிய பழத்துண்டுகளைச் சட்டியினுட் கொட்டி எலுமிச்சம்பழச்சாற்றையும் அதனுடன் சேர்த்து கரண்டி ஒன்றினாற் கிளறவும். 2நிமிடங்களின் பின்பு, எடுத்து வைத்த தேங்காய்த் துருவலையும், சீனித்தூளையும் அதனுட் கொட்டிக் கிளறவும். நெருப்பை அளவாகப் பார்த்துக் கொள்ளவும்.

6நிமிடங்கள் சட்டியினுள் களிப்பருவம் வரும்வரை விட்டு, இரு தடவைகள் கிண்டவும். சட்டியின் அடிப்பாகத்தில் ஒட்டாதவாறு பார்த்துக் கொள்ளவும்.

தற்போது பழக்களி (compote) தயாராகிவிட்டது. ஆறியபின்பு சுவைக்கவும்.

# 10 வகைப் பிரெஞ்சுப் பாற்கட்டிகள் (Fromage )



1. கமொம்வேர் (Camembert) 2.லு ஷேவ்ர் (le chèvre) 3. லு வுறுவ்வி வாஸ்க் (le brebis basque) 4. லு கொந்தே (le comté) 5. லெம்மோன்தல் றாபே (l'emmental râpé ) 6. லு சன்த் நெக்தேர் (le saint-nectaire) 7. லு கன்த்தல் (le cantal) 8. லெம்மோன்த்தல் ஓன் மோர்சோ (l'emmental en morceau) 9. லு றுவ்வுலொஷொன் (le reblochon) 10. லு றொக்போர் (le roquefort)

தினமும் 62சதவிகிதமான பிரெஞ்சுமக்கள் மேற்கூறப்பட்ட முதல்தர 10வகைப் பிரெஞ்சு பாற்கட்டிகளை நுகர்கிறார் கள். இவற்றின் சுவைகள், தனித்தரமான பிரெஞ்சுக் கிராமங்களுக்குரித்தான இவற்றின் தொடர்புகள், உடல்நலத்துக்கான இவற்றின் பயன்பாடுகள் யாவற்றையும் இவை உள்ளடக்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.